## உள்ளடக்கம்

### 24—7—1980


| | பக்கங்கள் (i & ii) |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 705–732 |
| **2. ஒத்திவைப்புத் தீர்மானம்—** | |
| பொறியியல் கல்லூரிகளில் மாணவர்கள் போராட்டம். | 733–738 |
| **3. ஒழுங்குப் பிரச்சினை—** | |
| அந்நியர்கள் பேரவை புறக்கூடங்களுக்கு வருதல். | 739–740 |
| **4. அறிவிப்புகள்—** | |
| (அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி. | 740 |
| (ஆ) மதுரை-காமராஜ் பல்கலைக் கழக பேரவை தேர்தல். | 740–741 |
| (இ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழகப் பேரவைத் தேர்தல். | 741 |
| **5. கவன ஈர்ப்புகள்—** | |
| (அ) அரிசனங்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை சம்பந்தமான தகராறு. | 742–745 |
| (ஆ) சிறுதொழில்வளர்ச்சி நிறுவனம் சி. ஆர். தகடுகள் வழங்குவதை நிறுத்தியது. | 745–749 |
| **6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—** | |
| (அ) பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்த சட்ட முன்வடிவு, 1980. | 749–750 |
| (ஆ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்த சட்ட முன்வடிவு, 1980. | 750 |


128-186A.

7. வரவு—செலவுத் திட்டம் 1980–81 வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)—

| | |
|---|---|
| (அ) கோரிக்கை எண் 21-மீனளம் | 750 |
| (ஆ) கோரிக்கை எண் 35-நுகர்பொருள் வழங்கல். | 750–752 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 753, 823–851 |
| திரு. ப. பொன்னுரங்கம் .. .. | 753–759 |
| திரு. ஆனூர் ஜகதீசன் .. .. | 759–763 |
| திரு. உ. சுப்பிரமணியன் .. .. | 763–768 |
| திரு. த. மாரிமுத்து .. .. .. | 768–772 |
| திரு. ரா. கிருஷ்ணன் .. .. .. | 772–778 |
| திரு. சி. கேசவ ஆதித்தன் .. .. | 778–779 |
| திரு. செ. சிவசாமி .. .. .. | 779–785 |
| திரு. எம். சின்னசாமி .. .. .. | 785–788 |
| திரு. பாபு கோவிந்தராஜன் .. .. | 789 |
| திரு. குமரி அனந்தன் .. .. .. | 789–794 |
| திரு. த. இராமசாமி .. .. .. | 794–797 |
| திரு. அ. ரகுமான்கான் .. .. | 797–805 |
| திரு. என். எஸ். வி. சித்தன் .. .. | 805–810 |
| திரு. வி. கிருஷ்ணமூர்த்தி .. .. | 810–823 |

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். 853–894


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### வியாழக்கிழமை, 1980 ஜூலை 24.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி."

நல்ல முயற்சியுடனும் நிறைந்த அறிவுடனும் இடையறாது பணியாற்றி வந்தால் நாட்டில் குடிமக்கள் உயர்வுடைவார்கள்.

### 1. வினாக்கள்— விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### மத்திய வேளாண்மை பண்ணை, செங்கம்.

* வினா எண் 41. திரு த. வேணுகோபால்; மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) வட ஆற்காடு மாவட்டம் செங்கத்தில் உள்ள மத்திய வேளாண்மை பண்ணை தற்போது எந்தவித பயிர் சாகுபடி பணிகளிலும் ஈடுபடாமலும் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு அதனை எடுத்து நல்லமுறையில் பயிர் சாகுபடி செய்ய நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து.—(அ) இப்பண்ணை மத்திய அரசின்கீழ் இருப்பதால் இது சம்பந்தமாக இந்த அரசிடம் தகவல் ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு த. வேணுகோபால்: தலைவரவர்களே, இந்தப் பண்ணை மத்திய அரசின் நிர்வாகப் பொறுப்பில் இருப்பதால் தகவல் இல்லை என்று சொன்னார்கள். இருந்தாலும் அங்கு பல ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் சாகுபடிக்கு சமன் செய்யப்பட்டு, தற்போது அவை எந்தவிதமான பயனும் இல்லாமல் இருப்பதால் நம்முடைய மாநில அரசு அதை எடுத்து வேளாண்மை சாகுபடி செய்ய நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு பெ. சு. திருவேங்கடம்: தலைவரவர்களே, அங்கே பல ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் எல்லாம் வேலை செய்து கொண்டிருந்தார்கள். இப்போது அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை இல்லை. நிறைய கிணறுகள் எடுத்திருக்கிறார்கள் அங்கே. ஏராளமான ரூபாய் முதலீடு செய்திருக்கிறார்கள். மத்திய அரசு அந்தப் பண்ணையை செயல்படுத்தவில்லை என்றால் மத்திய அரசுக்கு எழுதி, அதை மாநில அரசு தன்னுடைய பொறுப்பில் எடுத்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றாலும் மத்திய அரசு கட்டாயமாகச் செயல்படுத்தவேண்டுமென வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: தலைவரவர்களே, இது பற்றி தகவல் அறிந்து ஆவன செய்யப்படும்.

ஆற்காடு தொகுதியில் சாலைகள்.

*வினா எண் 42. திரு ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) வட ஆற்காடு மாவட்டம் ஆற்காடு தொகுதியில் ஆற்காடு-ஆரணி, ஆற்காடு—செய்யாறு, புதுப்பாடி—இலுப்பை ஆகிய சாலைகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், இதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: (அ) ஆம்.

(ஆ) இச்சாலைகளை மேம்பாடு செய்யும்பொருட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு பாபு ஜனார்த்தனன்: தலைவரவர்களே, இந்தப் பாதை கடந்த 7, 8 ஆண்டுகளாக சரிவர இல்லாமல் பஸ்போக்குவரத்துக்கு மிகவும் தொல்லையாக இருக்கிறது. ஆகவே, விரைவாக அந்தப் பணியை முடிப்பதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த சாலை இப்போது எடுத்துக்கொள்ளப்பட்டு, பணி ஆரம்பிக்கப்பட்டு, நடைபெற்று வருகின்றது. இதற்காக, வந்தவாசி—ஆரணி சாலையை பழுது பார்ப்பதற்காக, 1,23.000 ரூபாயும், ஆற்காடு-திண்டிவனம் சாலையை பழுது பார்ப்பதற்காக 2,13,500 ரூபாயும் இலுப்பை சாலையைப் பழுதுபார்ப்பதற்காக 3,20,000 ரூபாயும் மதிப்பீடு செய்யப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது.



திரு பெ. சு. திருவேங்கடம். தலைவரவர்களே, இங்கே கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சாலைகள் மட்டுமல்லாமல் மற்ற சாலைகளும் வடாற்காடு மாவட்டத்தில் பழுது பார்க்கப்படுவதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதை விரைவுபடுத்த அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா ?

மாண்புமிகு திரு ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, இந்த ஆண்டிலே முயற்சிகள் எடுக்கப்படும்.

கிராமப்புற வீட்டுவசதித் திட்டம்.

*வினா எண் 43. திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் கிராமப்புற கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்கள் மூலம் வழங்கும் கடன்களின் உயர்ந்த பட்ச அளவு ரூ. 3,000 என்பதை ரூ. 5,000 ஆக உயர்த்தும் திட்டம் அரசிடம் உண்டா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: கிராமப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ், கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கங்களின் மூலம் வழங்கப்படும் கடன் தொகை ரூ. 3,000-லிருந்து ரூ. 3,750 ஆக சமீபத்தில்தான் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இதனை மேலும் ரூ. 5,000 ஆக உயர்த்தும் செய்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

திரு வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, கிராமப்புற கூட்டுறவு வீட்டு வசதி சங்கங்களிலிருந்து அதிகமாக தாழ்த்தப்பட்ட மக்கள்தான் கடன் பெறுகிறார்கள். குறைந்த பட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காவது 5,000 ரூபாய் அளவுக்கு உயர்த்திக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: தலைவரவர்களே, எல்லோருக்கும் பொதுவாகத்தான் 3,750 ரூபாய் என்பது.

திரு கு. பா. பழனியப்பன்: தலைவரவர்களே, இந்த கூட்டுறவுச் சங்கங்களில் கடன் பெறுவதற்காகப் போடப்படும் மனுக்களை விரைவிலே பைசல் செய்வதற்கு சட்ட ஆலோசகரை முழுநேர ஊழியராக நியமிக்கும் திட்டம் அரசிடம் உண்டா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி வீடு கட்டுவதற்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடன் வழங்குவது பற்றியது. சட்ட ஆலோசகர்கள் போடுவது பற்றி அல்ல. ஆகவே அந்தக் கடன் சம்பந்தப்பட்ட மட்டிலும்தான் கேள்வி கேட்க வேண்டும்.

திரு கு. பா. பழனியப்பன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கடன் சம்பந்தமாகத்தான் கேட்கிறேன். அந்தக் கடன் மனுக்களை உடனடியாகப் பரிசீலனை செய்து அதைப் பைசல் செய்வதற்கு சட்ட ஆலோசகர்களை நிரந்தர அடிப்படையில் நியமிக்கின்ற வகையில் திட்டம் ஏதாவது அரசிடம் உண்டா என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவ ரவர்களே, அத்தகைய திட்டம் எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு விஜயரெகுநாத தொண்டமான்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கிராமப்புறங்களில் இருக்கின்ற வீடுகள் அடிக்கடி நெருப்பு பிடித்து எரிந்து விடுகின்றன. அதற்கு அரசாங்கம் நிவாரணம் கொடுக்கின்றது. ஆனால் அதுமட்டுமல் லாமல் இந்தக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக அவர்களுக்கும் கடன் கொடுத்து அந்த வீடுகளைக் கட்டுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்.: பேரவைத்தலைவ ரவர்களே, கடனை நாம் கொடுத்துவிடுகிறோம். அவர்களே வீட்டைக் கட்டிக் கொள்கிறார்கள்.

திரு. க. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, கிராம கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்கள் மூலம் கடன் வழங்கிக் கொண்டிருக்கின்றது அரசு. இந்தக் கடன் தொகையைப் பொறுத்தவரையில் அதனை 3,750 ரூபாய்க்கு மேல் உயர்த்துவ தில்லை என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இந்தத் தொகையிலே அரிசனங்களுக்கு மானியமாகக் கொடுக்கிறார் கள். அந்த மானியத் தொகையை ஆரம்பத்திலேயே குறைத்துக்கொண்டு மீதிப் பணத்தைத்தான் கொடுப்பதாகத் தகவல் வருகிறது. இதை அரசு உடனடியாகக் கவனிக்குமா? அப்படிப்பட்ட உத்தரவுகளை மாற்றியமைக்குமா ?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, அப்படி இருந்தால் அது கவனிக்கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: பேரவைத் தலைவரவர்களே கேள்வி கடன் ரூபாய் 3,000-லிருந்து ரூபாய் 5,000-ஆக உயர்த் தப்படுமா என்பது. முன்பு அந்தக் கடன் 5,000 ரூபாயாகத் தான் இருந்தது. சிறிது காலத்திற்கு முன்புதான் அதை 2,400 ரூபாயாகக் குறைத்தார்கள். அதன் பின்னர் அதை 3,000 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். பின்னர் 3,750 ஆக உயர்த்தி இருக்கிறார்கள். 3,750 ரூபாய் என்பது எஸ்டிமேட் தொகைதான். அதிலே 3,000 ரூபாய்தான் கடன். மீதி 750 ரூபாயை அவர்கள் வேலை செய்து கழிக்கவேண்டும்



ஆகவே முன்பு இருந்த மாதிரி இந்தக் கடனை 5,000 ரூபாயாக மாற்றவேண்டும். ஏனென்றால் இது போதுமான தொகை அல்ல. ஆகவே இந்தக் கடனை ரூபாய் 5,000-ஆக உயர்த்து வதற்கு அமைச்சரவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுப் பார்களா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னமாதிரி ரூபாய் 3,750 என்பது வீட்டினுடைய மதிப்பு. அதிலே ரூபாய் 750 தொழிலாளர்களுடைய உழைப்பு என்ற வகையில் 20 சதவீதம் போய்விடுகிறது. மீதம் உள்ள ரூபாய் 3,000-இல் அரிசனங் கள் அல்லாதவர்களுக்கு ரூபாய் 3,000 கடனாகவும் அரிசனங் களாக இருப்பவர்களுக்கு 2,000 ரூபாய் கடனாகவும் ஆயிரம் ரூபாய் மானியமாகவும் கொடுக்கப்படுகிறது. இப்போதுள்ள சூழ்நிலையில் இதற்கு மேல் கொடுப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, இந்தக் கூட்டுறவு வீடு கட்டும் சங்கத்தின் மூலம் கடன் வழங்கப்படுகின்றபோது அதிலே மொத்தம் இவ்வளவு பேருக்கு இவ்வளவு ரூபாய்தான் கடன் கொடுக்கப்படும் என்று வரையறை இருக்கின்றதா? அல்லது விண்ணப்பிக்கின்ற அத் தனை பேர்களுக்கும் கடன் கொடுக்க அரசு உத்தரவிட்டிருக் கின்றதா?

[முற்பகல் 9.10]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலை வர் அவர்களே, விண்ணப்பித்திருக்கும் அனைவருக்கும் பணம் இருக்கும் அளவிற்கு தக்கபடி கொடுக்கப்பெறுகிறது. இத் தனை பேருக்குத்தான் கொடுக்க வேண்டும் என்று சட்டம் ஏதும் இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980-81 ஆம் ஆண்டிற்கு அந்தக் கடன் தொகை உயர்த்திக் கொடுக்கப் பெற்றிருக்கிறது. ஏற்கெனவே 78-79, 79-80 ஆம் ஆண்டுகளில் கடன்பெற்றுக் கொண்டு, வீடுகள் இன்னும் கட்டி முடிக்கப் பெறாத நிலையில் உள்ளவர்களுக்கும் இப்பொழுது உயர்த்தப்பட்டிருக்கும் தொகை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வர் அவர்களே, அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

## கொல்லி மலையில் மூலிகைத் தோட்டமும், மருத்துவ மனையும் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 44—திரு. சீ. சிவப்பிரகாசம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) சேலம் மாவட்டம், கொல்லி மலையில் மத்திய அரசு மூலிகை தோட்டமும், மருத்துவ மனை ஒன்றையும் ஏற்படுத்த முன்வந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே : (அ) மத்திய அரசு, சேலம் மாவட்டம், கொல்லிமலையில் மூலிகைத் தோட்டமும், மருத்துவ மனை ஒன்றையும் ஏற்படுத்த முன் வந்துள்ளதாகத் தகவல் எதுவும் இல்லை. ஆனால் மாநில அரசு அங்கு ஒரு மூலிகைப்பண்ணை அமைக்க உத்தேசித்துள்ளது.

(ஆ) கொல்லிமலையில் வாளவந்தி நாடு என்ற இடத்தில் 5 ஏக்கர் நிலப் பரப்பில் மூலிகைப் பண்ணை அமைப்பதற்கான திட்ட அறிக்கையினைத் தயார் செய்து சேலம் மாவட்ட ஆட்சியாளர் அரசுக்கு அனுப்பியுள்ளார். அந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

டாக்டர் கே. பி. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைத் தோட்டத்தை கொல்லிமலைப் பகுதி யில் அமைப்பதற்கான உத்தேசம் அரசுக்கு இருப்பதாகத் தெரிகிறது. அந்த மூலிகைத் தோட்டத்தை ராசிபுரம் பக்கத்தில் மலைக்கோயில் மேல் உள்ள மூலிகைகளையும் உபயோகப்படுத்திக் கொள்ளும்வகையில் அங்கே ஒரு மூலிகைப் பண்ணையையும், மருத்துவ மனையையும் அமைக்க அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகைப் பண்ணை அமைக்க மலைப்பகுதி யான இடமாக இருக்க வேண்டும். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னவகையில் ராசிபுரத்தைப் பயன்படுத்திக் கொள்ள முடியுமா என்று ஆராயலாம், என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : தலைவர் அவர்களே தமிழகத் தில் வேறு ஏதாவது பகுதியில் மாநில அரசு மூலிகைப்பண்ணையை அமைப்பதாக உத்தேசம் உள்ளதா? உண்டு என்றால் அந்த இடங்கள் என்னென்ன என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, 1979-80ஆம் ஆண்டிலே, 1. சேலம் மாவட்டத்தில் உள்ள கொல்லிமலைப் பகுதி; 2. மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில், அதன் ஒரு பகுதியில்; 3. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருவரங்கம்; 4. மதுரை மாவட்டத்தில் உள்ள வைகை நீர்த்தேக்கத்தின் அருகில்; 5. மதுரை மாவட்டத் தின் பக்கத்தில் சிறுமலைக் குன்றம் ஆகிய இந்த ஐந்து இடங்களில் 1979-80ஆம் ஆண்டில் மூலிகைப் பண்ணைகள் வைக்க வேண்டும் என்று திட்டமிடப்பட்டு ஆராய்ச்சிப் பணிகள் துவக்கப்பட்டிருக் கின்றன. அவைகளை இன்னும் விரிவுபடுத்த இந்தஆண்டு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பெறும்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கில மருந்துகளின் விலைகள் அதிகமாக ஏறியிருப்பதினால், நம் தமிழ் மருத்துவத் துறையில் உள்ளபடி மூலிகைகளை அதிப் மாக உற்பத்தி செய்து எல்லா மாவட்டங்களிலும் மூலிகைக பண்ணைகளையும். மருத்துவ மனைகளையும் அமைத்து எல்லா மக்களுக்கும் இந்த மருத்துவமுறை உபயோகப்படும்படி செய் வதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க முன்வருமா?

மாண்புமிகு. டாக்டர் எச். வி. ஹாண்டே: பேரவைத் தலைவர் அவர்களே, மூலிகை பண்ணையைப் பொருந்தவரையில் அதை, எல்லா மாவட்டங்களிலும் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை. ஏனென்றால் மூலிகைகள் நன்கு வளரக்கூடிய மலைப் பகுதிகளில்தான் மூலிகைப் பண்ணையை அமைக்க முடியும். அப்படிப்பட்ட இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்த இடங் களில்தான் மூலிகைப்பண்ணை அமைப்பதற்கான திட்டம் போடப் பட்டிருக்கிறது. அப்படி அமைந்து அதை விரிவுபடுத்தும் பணியில் அதிகமான அளவில் மூலிகைகளை உற்பத்தி செய்து பயன்படுத்த திட்டங்களைப் போட்டுக் கொண்டிருக்கிறோம். அதன் விளைவாக நிச்சயமாக தமிழ் வைத்தியத்தையும் விரிவு படுத்தும் வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. ப. நெடுமாறன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டிய இடங்களில், சித்தர்கள் வாழ்ந்த பழனி மலை இல்லை. பழனி மலையில் ஏற்கெனவே அங்கிருக்கக்கூடிய ஆலயத்தின் சார்பில் மூலிகைப் பண்ணை வைத்திருக்கிறார்கள். அதையும் விரிவுபடுத்தி அங்கே ஒரு மூலிகை ஆராய்ச்சி பண்ணையையும் நிறுவ அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் இது இல்லாமல் வேறு சில இடங்களில் இந்த மூலிகைப் பண்ணைகளை வைத்துப் பயன் பெறும் வகையில் விரிவுபடுத்தலாம் என்று அரசு ஆராய்ந்து வருகிறது. அப்படி வருகையில் பழனி மலையில்கூட விரிவு படுத்தும் திட்டத்தின் விளைவாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் ஏற்கெனவே இருக்கும் பண்ணையை யும் விரிவு படுத்த ஆராய வாய்ப்பு இருக்கும். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன யோசனையின் அடிப்படையில் அரசு ஆராயும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொல்லி மலையில் எந்தெந்த வகையான மூலிகை கள் கிடைக்கின்றன? என்னுடைய தொகுதியில் இராமாயண காலத்தில் சஞ்சீவி மூலிகை எனது தொகுதி அருகில் உள்ள சிறுமலையிலிருந்து எடுத்துச் சென்றதாகக் கூறுவார்கள். அப்படிப்பட்ட சஞ்சீவி மூலிகை அந்தப் பக்கத்தில் இருப்பதாக அரசுக்குத் தகவல் வந்திருக்கிறதா என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, இல்லை.

## ஆட்டோரிக்ஷாவில் பயணிகள் எண்ணிக்கை.

*வினா எண். 45—திரு. ச. அங்குசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா?

ஆட்டோரிக்ஷாவில் 3 பேர் செல்வதற்கு அனுமதி வழங்க திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆட்டோ ரிக்ஷாக்களில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல அனுமதிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.



திரு. தி. கா. நல்லப்பன் : நகராட்சிகள், கார்ப்பரேஷன் கள் போன்ற இடங்களில் ஓடுகின்ற ஆட்டோ ரிக்ஷாக்கள் பேரூராட்சிகளில், பேரூராட்சி வேண்டுமென்று தீர்மானிக்கப் பட்டால் விஸ்தரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : ஆட்டோ ரிக்ஷாக்களில் எவ்வளவு பேர்கள் பேகலாம் என்பதைப் பற்றியதுதான் கேள்வி, எனவே இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் அதைப் பற்றி யோசிக்க முடியும்.

திரு. ரா. உமாநாத் : இப்போதே பல நகரங்களில் ஆட்டோ ரிக்ஷாக்களில் பெருவாரியாக மூன்று பேர்கள்தான் போய்க்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு முன்பே சொல்லப்பட்ட காரணம் ஆக்சிடெண்ட்ஸ் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். அப்படி மூன்று பேர்கள் ஏறிப் போனதினால் ஏற்பட்ட ஆக்சிடன்ட்ஸ் பற்றி ஏதாவது கணக்கு எடுக்கப் பட்டிருக்கிறதா? அப்படி இல்லை என்று சொன்னால் சைக்கிள் களில் எப்படி டபிள்ஸ் போகலாம் என்பது லீகலைஸ் செய்யப் பட்டிருக்கிறதோ அதேபோல் ஆட்டோரிக்ஷாவிலும் மூன்று பேர்கள் செல்வதை லீகலைஸ் செய்ய விரைவில் முடிவெடுக்கப் படுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மூன்று பேர்கள் போன காரணத்தினால் ஆக்சிடன்ட்ஸ் எவ்வளவானது என்று கணக்கு இல்லை. அதனால் ஆகியது என்பதைத் தனியாக எடுக்க முடியாது. ஆட்களை ஏற்றிச்செல்லாமல் இருக்கும்போதே விபத்துக்கள் ஏற்படுகின்றன. மூன்று பேர்கள் ஏறிய காரணத் தால் ஆகியது என்று சொல்லமுடியாது. இருந்தபோதிலும் அது பற்றிப் பரிசீலிக்கப்படும். இரண்டு பேர்கள் சைக்கிள் களில் போக அனுமதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னால் இரண்டு பேர்கள் அப்படிப் போய்க்கொண்டிருக்கிறார்கள் என்ப தற்காக அல்ல, கீழ்மட்டத்தில் இருக்கக்கூடிய ஏழை மக்கள் அந்த வசதியைப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் அது அனுமதிக்கப்பட்டது. இதனுடைய சூழ்நிலையைச் சிந்தித்து அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. எம். சின்னசாமி : ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்கலாம் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதே போல் டாக்சி யிலும் ஐந்து பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி அளிக்கப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, ஆட்டோ ரிக்ஷாக்கள் பற்றியது.

திரு. அ. செல்வராஜன் : ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்களை ஏற்றிச் செல்வதை நான் எதிர்க்கவில்லை. ஆனால் அதன்படி இரண்டு பேர்களுக்குத்தான் கட்டப்பட்டிருக்கிறது. மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அனுமதி தருவதாக இருந்தால் அந்தப் பெட்டியில் அதிகமாக அதாவது மூன்று பேர்கள் உட்காரக்கூடிய அளவில் வசதியோடு கட்ட அரசு உத்தர விடுமா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : 10—7—1979-ல் புது டில்லியில் நடந்த போக்குவரத்து வளர்ச்சிக் குழுவில் ஆட்டோ ரிக்ஷாவில் 3 பயணிகளை ஏற்றிச் செல்ல மாநில அரசுகள் அனுமதி வழங்கலாம் என பரிந்துரைத்துள்ளது. 1940ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வண்டிகளின் விதிகள், விதி 360-B (1)ன்படி 2 பயணிகளை ஏற்றிச்செல்லும் அமைப்புடைய ஒவ்வொரு ஆட்டோ ரிக்ஷாவிலும் இருக்கையின் நீளம் 120 செ.மீட்டருக்கு மிகாமலும் 90 செ.மீட்டருக்குக் குறையாமலும், அகலம் 41 செ. மீட்டருக்கு குறையாமலும் இருக்க வேண்டும். மேற்கூறிய விதியின் துணைவிதி (2)ன்படி 4 பயணிகளை ஏற்றிச்செல்லும் அமைப்புடைய ஒவ்வொரு ஆட்டோரிக்ஷாவிலும் ஒவ்வொரு பயணிக்கும் பொது வாக வசதியான 41 செ.மீட்டருக்கு குறையாத நீள அகலமுள்ள இருக்கைகள் எதிர் எதிராக செங்கோணத்தில் அமைக்கப் பட்டிருக்கவேண்டும். எனவே அதை வைத்து நடவடிக்கை எடுக்கும்போது, மூன்று பேர்கள் அனுமதிக்கும் நிலை வருமானால், அதற்கான கொள்ளளவை கொடுத்துத்தான் அனுமதிக்கப்படும்.

திரு. ஜி. கே. சுப்பிரமணியன் : ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்கள் போவதால் ஆக்சிடென்ட்ஸ் ஏற்படுவதாகக் கூறப்பட்டது. கர்நாடகாவில் பெங்களூர் ஸிட்டியில் மினி டாக்ஸி என்று மூன்று பேர்கள் போகிற அளவிற்கு ஆட்டோ வடிவத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் ஏதாவது விடுவதற்கான ஆலோசனை அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு உறுப்பினரின் யோசனையை மனதில்கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : சைக்கிள்களில் இரண்டு பேர்கள் செல்லலாம் என்பது அது ஏழை மக்களுக்காகச் செய்யப் பட்ட வசதி என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதுபோல் ஏழை எளியவர்கள் பயன்படுத்தக்கூடிய ஆட்டோ ரிக்ஷாக்களில் மூன்று பேர்களை ஏற்றிச் செல்ல அரசு அனுமதிப் பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அக்கேள்விக்கு ஏற்கனவே அமைச்சர் அவர்கள் பதில் அளித்துவிட்டார்கள்.



## சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர் சேவை கூட்டுறவு சங்கங்கள்.

*கு. கா. வி. எண். 40: திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறிய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சேவை கூட்டுறவு சங்கம் ஒப்புதலளித்த பத்து தவிர மேலும் எத்தனை சங்கங்கள் ஆரம்பிக்க அரசு உத்தேசித்துள்ளது?

(ஆ) எங்கெங்கு எந்தெந்த மாவட்டங்களில் ஆரம்பிக்கப் படும்?

(இ) அதற்கான அரசு பங்குத் தொகை எவ்வளவு அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் ஆ) 1980-81-ல் நிறுவ உத்தேசிக்கப்பட்டிருக்கும் பத்து சங்கங் களைத் தவிர இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள கடலாடி பகுதியில் ஒன்றும் நிறுவப்படும். மேலும் சாத்தூர் பகுதியில் தீ சேவை சங்கங்கள் தாழ்த்தப்பட்டோருக்காக ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளது.

(இ) தீப்பெட்டி தொழிற் கூட்டுறவு சேவை சங்கம் ஒவ்வொன்றுக்கும் அரசின் பங்கு மூலதனமாக ரூ. 25,000-யையும் மூலதனக் கடனாக ரூ. 2 இலட்சத்தையும் அரசு வழங்கும். ஒவ்வொரு சேவை சங்கத்திற்கும், அதனுடைய செயலாளராகப் பணி புரிய அரசின் செலவில் ஒரு பணியாளரை அரசு நிய மிக்கும்.

[முற்பகல் 9.20]

திரு. வேடசெந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய அரசு அறிவித்த வரிச் சலுகையை பயன்படுத்திக் கொண்டு இத் தகைய தீப்பெட்டி கூட்டுறவு சேவை சங்கங்களை விரிவுபடுத்த அரசு உத்தேசித்துள்ளதா? ஆம் எனில், இப்படிப்பட்ட சேவை சங்கங்களை எந்தெந்த இடத்தில் நிறுவ இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, அண்மையில் மத்திய அரசு அறிவித்த வரிச் சலுகையை யொட்டி, கூட்டுறவு விற்பனை சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தீப்பெட்டிகளுக்கு ஒரு குரோசிற்கு ஒரு ரூபாய் 60 காசு என்று மத்திய அரசு வரிச் சலுகை அளித் துள்ளது. அதனை யொட்டி தொழில், வணிக இயக்குநர் நம்

மாநிலத்தில் அந்த கூட்டுறவு பிரிவில் இனிமேல்
தீப்பெட்டி சேவை சங்கங்களின் அமைப்பு பற்றி நிறுவப்படும்
முடிவெடுக்க விரிவான செயற் குறிப்பை அரசிற்கு ஒரு கொள்கை
றார். அதனையொட்டி அரசின் நிதி மற்றும் இதர அளித்திருக்
களையொட்டி வளர்ந்து வரும் தொழிற்சாலைகளின் வசதி
கையை நிறைவேற்ற எவ்வளவு சேவா சங்கங்கள் கோரிக்
அவ்வளவு சங்கங்களை அமைக்க தொழில் வணிக தேவையோ,
அனுமதி அளிக்கலாம் என்றும் மற்றும் இயக்குநருக்கு
சங்கங்களின் எண்ணிக்கையை அரசே தேவையான சேவா
என்றும் ஆலோசனை செய்து கொண்டிருக்கிறது. முடிவு செய்யலாம்
பட்ட பரிந்துரையின்படி 1980-81 ஆம் ஆண்டில் 20 அப்படிப்
கூட்டுறவு சேவை சங்கங்கள் மாவட்ட ரீதியாக தொழிற்
இடங்களில் ஆரம்பிக்க அரசு பரிசீலனை செய்து கீழ்க்கண்ட
கிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் கொண்டிருக்
சங்கங்களும், திருநெல்வேலி மாவட்டத்தில் 12 கூட்டுறவுச்
சங்கங்களும், தஞ்சை மாவட்டத்தில் 5 கூட்டுறவுச்
வட ஆற்காடு மாவட்டத்தில் 1 கூட்டுறவுச் சங்கமும்,
மாவட்டத்தில் 1 கூட்டுறவுச் சங்கமும், கோவை
20 கூட்டுறவுச் சங்கங்களை 22 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் நிதி மாவட்டங்களில்
ஒதுக்கீடு செய்து, 20,000 பேர்களுக்கு வேலை
அளிக்கத்தக்க வகையில் இந்த முயற்சியை அரசு வாய்ப்பு
கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் ஆய்ந்து
களின் மேலான கவனத்திற்கு பார்வைக்கு வைக்கிறேன். அவர்

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே,
அமைச்சர் அவர்கள் விரிவான ஒரு பதிலைத தந்தமைக்கு நான்
எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
தீப்பெட்டித்தொழிலின் அதிகமான எண்ணிக்கை இந்த சிறிய
யிலே சாத்தூருக்கு அடுத்துள்ள கோவில்பட்டியிலே இருக்கிறது. கோவில்பட்டி
கடந்த ஆண்டு அதிகமான லைசன்ஸ் பெற்று, சிறிய உற்பத்தி
யாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களை பதிவு செய்யவேண்டுமென்று
கேட்ட நேரத்திலே, ஒன்றுதான் பதிவு செய்யப்படும் என்று
சொல்லி. பலருடைய கோரிக்கை மறுக்கப்பட்டது.
காரணமாக அன்றைக்கு லைசன்ஸ் வாங்கியிருந்தாலும், அதன்
பொருள்களை விற்பனை செய்ய முடியாமல், மூலப்
நடத்த முடியாமல் இருக்கிறார்கள். அந்தத்தொழிலை
சொல்லும்போது திருநெல்வேலி மாவட்டக்திற்கு 5, அமைச்சர் அவர்கள்
மாவட்டத்திற்கு 12 என்று கூறினார்கள். முகவை
மாவட்டத்திற்கும் அதிகமாக இந்தச் சங்கங்களை திருநெல்வேலி
கொடுக்கவேண்டும். காரணம், ஏற்கெனவே பதிவு செய்து
ருக்கிறார்கள், மேலும், இந்த சிறிய சிறிய லைசன்ஸ் பெற்றி
அனுமதி வழங்கினால், வேலைவாய்ப்பு உற்பத்தியாளர்களுக்கு
மாவட்டத்திற்கு 12 என்று இருப்பதை போல் ஏற்படும். ஆகவே, முகவை
லும், 10 வது நெல்லை மாவட்டத்திற்கு.... இல்லாமற் போனா

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்விக்கு வாருங்கள்,
இப்போது வேண்டுகோள் வேண்டாம்.



திரு. சோ. அழகர்சாமி : நெல்லை மாவட்டததில், கோவில்
பட்டியிலே இந்த சிறிய தீப்பெட்டித் தொழிற்சாலைகளுக்கு
லைசன்ஸ் கொடுத்து, சங்கம் பதிவு செய்யப்படாமல் இருப்ப
தால், 50 பேர்களுக்கு மேல் சேர்ந்து ஒரு சங்கத்தைப் பதிவு
செய்ய வேண்டுமென்று கேட்டால், பதிவு செய்து கொடுக்க
அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அரசினுடைய செயற்குறிப்பில் இருக்கும்
விவரத்தைத் தந்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய
மேலான யோசனையை மனதில் கொண்டு உரிய தக்க நட
வடிக்கை எடுக்கப்படும்.

திரு. பி. ஜி. நாராயணன் : அமைச்சர் அவர்கள் அறிவித்த
சேவா கூட்டுறவு சங்கங்களைத் தவிர நடப்பு ஆண்டில்
தமிழக அரசு வேறு சேவா சங்கங்களைத் துவக்க உத்தேசம்
இருக்கிறதா? ஆம் எனில் விளக்கம் அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : ஏற்கனவே பதது
சேவா கூட்டுறவு சங்கங்களை ஆரம்பிக்க முடிவு செய்ததோடு
இந்த ஆண்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலாடி பகுதியில்
அரசு பங்கு மூலதனம் 25,000 ரூபாய். அவர்கள் மூலதனம்
இரண்டு லட்சம் என்ற வகையில் சேவா சங்கங்கள் இயங்க
வேண்டுமென்று நிபந்தனையுடன் நிறுவ ஆணை பிறப்பிக்கப்
பட்டிருக்கிறது. சாத்தூரில் இரண்டாவது முயற்சியாக முற்றி
லும் அரிசனங்களுக்காக 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மூன்று
சேவா சங்கங்களை நிறுவ செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில்
உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. ஏ. சாகுல் ஹமீது : நெல்லை மாவட்டத்தில் ஐந்து
கூட்டுறவுச் சங்கங்களை ஆரம்பிக்க இருபபதாக அமைச்சர்
அவர்கள் சொன்னார்கள். அவற்றில் ஒன்றை கடைய
நல்லூரில் ஆரம்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி : ஏற்கனவே பத்து
சேவா கூட்டுறவுச் சங்கங்களை அமைக்கலாம் என்று அரசு
பரிந்துரை செய்திருக்கிறது. அப்படி பரிந்துரை செய்த அந்த
பத்து ஊர்களில் திருநெல்வேலி மாவட்டத்திலே மூன்று பகுதி
களுக்கு அனுமதி அளிக்க பரிந்துரை செய்திருக்கிறது. அவை
திருநெல்வேலி நகர், விளாத்திக்குளம் பகுதி புதூர், மாண்புமிகு
உறுப்பினர் கேட்ட கடையநல்லூர் பகுதி ஆகியவற்றில்
கூட்டுறவுச் சங்கத்தை ஏற்படுத்த பரிந்துரை செய்யப்பட்டிருக்
கிறது. மேலும் ஏழு இடங்களில் சிவகெங்கை, ஸ்ரீபெரும்
புதூர் மற்றும் ராஜபாளையம், வத்திராயிருப்பு, பழனியில்

ஒட்டன்சத்திரம், வேடசந்தூர், தொப்பம்பட்டி பகுதி, உசிலம்பட்டி பகுதி வல்லத்தூர், பெரியார் மாவட்டத்தில் ஒரு இடம், கோவை மாவட்டத்தில் ஒரு இடம் ஆக பத்து இடங்களில் துவக்கப்பட இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கடையநல்லூர் உட்பட பத்து இடங்களில் துவக்க அரசு பரிந்துரை செய்துள்ளது.

திரு. ச. பாலகிருஷ்ணன் : பெரியார் மாவட்டத்தில் எந்த இடத்தில் அமைய இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பெரியார் மாவட்டத்தில் எந்த இடத்தில் என்பது அரசின் ஆய்வில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் ஊரில் அமைக்கப்படுமா என்று துணை வினாக்கள் கேட்க ஆரம்பித்தால் 234 உறுப்பினர்களும் கேள்வி கேட்க வேண்டிய நிலை ஏற்படும்.

திரு. மு. அம்பிகாபதி : தஞ்சை மாவட்டத்தில் இத்தகைய சிறு தொழில் துவங்க கலெக்டர் முருகராஜ் அவர்கள் முயற்சி எடுத்தார்கள். மன்னார்குடியில் அப்படி ஒன்று அமைக்கப்பட வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறதா? அதைச் செய்ய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மன்னார்குடி பகுதியில் இருக்கும் சிறு தீப்பெட்டி தொழில் உற்பத்தியாளர்களிடத்தில் இருந்து மனு வந்திருக்கிறது. நிச்சயமாக அனுதாபத்தோடு மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பரிசீலனை செய்யும்.

## பள்ளிகளில் நன்கொடை வசூலித்தல்.

*கு. கா. வி. எண். 41 திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

பள்ளிகளில் நன்கொடை வாங்கும் திட்டத்தைத் தடை செய்யும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தமிழ்நாடு அங்கீகரிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் கட்டுப்பாடு சட்டம் 1973 மற்றும் விதிகள் 1974-ன்படி சிறப்பு மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர இதர கட்டணங்களோ நன்கொடைகளோ தனியார் பள்ளிகளில் வசூலிக்கக்கூடாது. மேலும் சிறப்பு மற்றும் அனுமதிக்கப்பட்ட கட்டணம் தவிர எந்தவிதமான நன்கொடையும் வசூல் செய்யக்கூடாது என்று கடுமையாக



அறிவிக்குமாறு கல்வி அலுவலர்களுக்கு ஒவ்வொருஆண்டும் துவக்கத்திலேயே பள்ளிக் கல்வி இயக்குநரால் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. இதைத்தவிர நன்கொடை வாங்கும் திட்டத்தைத் தடை செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில்லை.

[முற்பகல் 9.30]

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, படிக்கின்ற மாணவர்கள் பாதிக்கப்படுகிற அளவில் நன்கொடை வாங்கும் பள்ளிகள் அனுமதியை ரத்துசெய்துவிட அரசு நடவடிக்கை எடுக்குமா? அதில் ஏதேனும் சிக்கல் உள்ளதா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, மாணவர்களைச் சேர்க்கிறபோது நன்கொடை வசூலிக்கின்ற பள்ளிகள் எச்சரிக்கப்படுகின்றன என்பதோடு அதைப் பற்றி புகார் வருகின்ற பொழுது அரசு விசாரித்து அவர்கள் வசூலிக்கின்ற நன்கொடைப் பணத்தை நாம் தருகின்ற கிராண்டிலிருந்து கழிக்கின்ற ஒரு முறை இப்போது இருந்து வருகிறது. அதைத்தான் அரசு தற்சமயம் பின்பற்றி வந்திருக்கிறது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நன்கொடை வாங்கும் பள்ளி நிர்வாகிகளைத் தண்டிக்கத் தனியாக ஏதேனும் சட்டம் இயற்றப்படுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, இந்த நன்கொடை வசூலிக்கிறவர்கள் என்கிற புகார் இன்றைக்கு மட்டுமல்ல, பல ஆண்டு காலமாக இந்த மாமன்றத்திலே இதற்கு முன்னாலே பல தடவைகள் நாம் அதைப்பற்றிப் பேசியிருக்கிறோம். அரசும் இப்போது இருக்கின்ற சட்டத்தின் கீழ் என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்றாலும் இன்றைக்கு மாணவர்கள் பக்கத்திலே இருக்கிற பள்ளிகளில் சேர விரும்புகிற மாணவர்கள் இப்படி நன்கொடை கேட்கிற காரணத்தாலே, தர முடியாதவர்கள் அந்தப் பள்ளியிலே சேர முடியாதது மட்டுமல்ல, தூரத்தியுள்ள பள்ளிகளிலே சேரவேண்டியிருக்கிறது அல்லது பள்ளிக்கூடத்திற்கே போக முடியாத நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். நம்முடைய அரசின் நோக்கம் எல்லாக் குழந்தைகளும் படிக்க வேண்டும் என்பதுதான். அதற்கு ஊறு விளைவிக்கின்ற வகையில் அரசினுடைய நோக்கத்தைத் தோல்வியடையச் செய்கிற முறையிலே இந்தக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆகவே இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்க விரும்புகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர் களே, பள்ளிகளில் நன்கொடை வாங்குகிற பிரச்சினை ஒரு சிக்கலான பிரச்சினை. ஹையர் செகண்டரி பள்ளிகளிலே பெற்றோர் சங்கங்களின் சார்பிலே 15 ஆயிரம் தொகை கட்ட வேண்டுமென்று அந்த அந்த ஊர்களிலே அப்படி நன்கொடை தரவேண்டுமென்று அரசே விரும்புகிற காரணத்தினால் பெற்றோர் சங்கங்களின் சார்பில் பணத்தைப் பெற்று அரசுக்குக் கொடுக்கிறார்கள் அவ்வாறு இல்லாமல் அரசே நன்கொடை கொடுக்கிற பணியை மேற்கொண்டால் பெற்றோர் சங்கங்கள் மூலமாக வாங்குகிற பிரச்சினை இராது. ஆகவே அரசே அவ்வாறு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர் களே, பள்ளிக்கூடங்களில் நன்கொடை வசூலிப்பதை அறவே தடுப்பது என்பது இன்றைய தினம் உள்ள சூழ்நிலையில் நடக் காது என்பது மட்டுமல்ல, தேவையாகவும் இருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் மேல்நிலைப் பள்ளிகளிலே வசூலிக்கப் படுகிற நன்கொடை பற்றிக் குறிப்பிட்டார்கள். நான் கூறுகிற போது மாணவர்கள சேர்க்கப்படுகிறபோது பணம் தந்தால் தான் அந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்வோம் என்று சொல்வது தவறு என்று இந்த அரசு கருதுகிறது. பொதுவாக ஒரு பள்ளிக்கு நன்கொடை தருவதில் தவறு இல்லை. இன்றைக்கு இருக்கின்ற நிதி நிலைமையில் அரசே பணம் தந்து நடத்தக் கூடிய நிலைமை இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள், பள்ளிக்கூடங்களிலோ அல்லது கல்வி நிறுவனங் களிலோ பொதுவாக நன்கொடை வசூலிப்பது என்பது தவறு அல்ல. அது மட்டுமல்ல, பெற்றோர் சங்கம் என்பது அந்தப் பணியிலே ஈடுபட்டு வருகின்ற ஒன்றுதான். மேல்நிலைப்பள்ளி களில் 25 ஆயிரம் ரூபாய் தொகை கட்டவேண்டுமென்று ஒரு நிபந்தனையை வைத்திருக்கிறோம். அதன் காரணமாக பொது மக்களிடத்திலே அதைப்பற்றி ஒரு அக்கறை ஏற்பட்டிருக் கிறது என்பது மட்டுமல்ல, பள்ளிக்கூடங்களுக்கும் பெற்றோர் களுக்கும் குறைந்த பட்சத் தொடர்பாவது இப்போது ஏற்பட்டி ருக்கிறது.

அது இல்லையென்றால் தாலுக்கா அலுவலகத்தைப்போல, அதிகாரியைப் போல தலைமை ஆசிரியர் நடக்கவும், பெற்றோர் அந்த இடத்திற்குப் போகும் பொழுது ஏதோ பொதுமக்களைப் போல சம்பந்தம் இல்லாத இடத்திற்குப் போவதுபோன்ற உணர்வு ஏற்படும். 25,000 ரூபாய் தர வேண்டுமென்று வைத்திருப்பது நல்ல பலனைத் தந்திருக்கிறது. அது மட்டுமல்ல, மேல்நிலைப் பள்ளிக்கு மட்டும் நிபந்தனை போட்டு விட்டோம் என்று சொன் னால் அது தவறு, பல்லாண்டுக் காலமாக இருந்து வருகின்ற, ஆரம்பப்பள்ளி என்றாலும், உயர்நிலைப்பள்ளி என்றாலும், கல்லூரி என்றாலும், பொதுமக்கள் சார்பாக எவ்வளவு கொடுக்



கிறீர்கள் என்ற கேள்வியைத்தான் கேட்கிறார்கள். பாலி டெக்னிக்காக இருந்தாலும் சரி, எத்தனை கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே தவறு அல்ல.

திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு தலைவரவர்களே, பல்லாண்டுக் காலமாக வந்திருக்கின்ற புகார் என்று சொன்னார் கள். அப்படிக் கட்டுப்படாத தனியார் பள்ளிகள் மீது அரசாங் கம் கொடுக்கும் கிராண்டைத் தடை செய்ய இந்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, இந்த நன்கொடை வாங்குகிறார்கள் என்ற இந்தப் புகார் விசாரிக்கப்படுகின்ற பொழுது நிரூபிக்கப்படுமேயானால் நிச்சய மாக அந்த மானியத்தை நிறுத்த அரசு விரும்புகிறது. ஆனால் மானியத்தை நிறுத்துவதன் பின் விளைவுகள் என்னவென்றால், அத்தனை மாணவர்களும் படிக்க முடியாத நிலைமையும், அத்தனை ஆசிரியர்களுக்கும் வேலையில்லாத நிலைமையும் ஏற்படுகின்றது. ஆகவே, இப்படி சிக்கல் இருப்பதால் நாம் அதிகப்பட்சமாக அதிகாரத்தைப் பயன்படுத்தாமல் ஓரளவு எச்சரிக்கையாக நடந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, இதிலே ஒரேயடியாக மானியத்தை நிறுத்தினால் பள்ளிக்கூடம் மூடப்படும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவரவர்களே, பள்ளியின் முன்னேற்றத்திற்காகப் பள்ளிக் கட்டிடம் கட்டுகிறார்கள் என்ற காரணத்தைக் காட்டி சில பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் அதிக மான நன்கொடைகளைப் பெற்றோர்களிடமிருந்து பெறுவதன் காரணமாக இலாபகரமான தொழிலாக இதை நடத்திக்கொண்டி ருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு கூட இருக்கிறது. எனவே, பெற்றோர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, இப்பொழுது இருக்கின்ற சட்ட விதிமுறைகள் இடம் கொடுக்கவில்லை என்றாலும் கூட, வருகின்ற ஆண்டுகளிலேயாவது, இப்படிக் கேட்டுக்கொண்டிருக்கின்ற நபர்கள்மீது துரித நடவடிக்கையை எடுத்து பெற்றோர்களைக் காப்பாற்றுவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு தலைவ ரவர்களே, இப்பொழுது இருக்கின்ற சட்டத்தின் மூலமாக நடவடிக்கை எடுக்கும்பொழுது நிலைமைகள் இப்படி இருந்து கொண்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக மைனாரிட்டி பள்ளி என்ற விவகாரம் வேறு இருக்கிறது. அவர்களைக் கட்டுப் படுத்த, இருக்கின்ற அதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப்போல இதற்கென்று ஒரு தனியான நடவடிக்கையை முயற்சிக்கலாமா என்று பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. ரா. உமாநாத்: தலைவரவர்களே, கடுமையாக எச்சரிக்கப் பட்ட பிறகும் இப்படி வசூல் செய்யப்படுகிறது என்று ஏராளமாக புகார்கள் பெற்றோர்களிடமிருந்து வந்து கொண்டிருக்கின்றன. முக்கியமான கோர்சஸ் ஆகிய Bv.Sc., Agriculture Engineering, MSc., போன்றவைகளிலெல்லாம் அண்ணாமலை யூனிவர்சிட்டியில் பெருந்தொகை வாங்கப்படுவதாகவும், பி.டி.எஸ்.-க்கு 30,000 ரூபாய் மற்ற முக்கியமான சப்ஜெக்டுகளுக்கு அதற்குத் தகுந்த புரப்போர்ஷனேட்டாக 60,000 ரூபாய் வரையில் வாங்குவதாக வும், கரஸ்பான்டென்ஸ் கோர்ஸ் எக்சாமினேஷனுக்கு ஹால் டிக்கட் வாங்குகின்றவர்களிடமிருந்துகூட கோல்டன் ஜுபிலிக் காக என்று 500 ரூபாய் கம்பல்ஷனாக வாங்குவதாகக் கூறுகிறார் கள். இப்படிப்பட்ட முறை வந்திருப்பதாக ஏராளமான * * * பெற்றோர்கள் எனக்கு எழுதியிருக்கிறார்கள். அதில் கலெக்டிங் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டிருப்பதாகவும் சொல்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பர்ட்டிகுலராகக் குற்றச் சாட்டுகள் சொல்வதாக இருந்தால் தனியாக வேறு விவாதத் திலே கொண்டு வர வேண்டும், கேள்வி நேரத்திலே ஒரு பல்கலைக் கழகத்தைப் பற்றிச் சொன்னார்கள். அதில் யார் வாங்கு கிறார்கள், எவர் வாங்குகிறார்கள் என்று டீடெயில்ஸ்க்குப் போனால் கேள்வி நேரத்தில் எப்படிச் சரியாக இருக்கும்? அதனால், ஸ்பெசிஃபிக்காகக் கேட்பதாக இருந்தால் கேளுங்கள்; பர்சனாலிட்டியைக் கொண்டு வந்தால் தகராறு வரும்.

திரு. ரா. உமாநாத்: பெயரை வேண்டுமானால் விட்டு விடுங்கள். ஒரு இம்பார்ட்டன்ட் சிண்டிகேட் மெம்பர் கலெக்டிங் ஏஜண்டாக நியமிக்கப்பட்டதாகவும் வந்திருக் கின்ற புகார்கள் பற்றி விஜிலன்ஸ் ஏஜன்ஸி மூலமாகவோ அல்லது மற்ற ஏஜன்ஸிகள் மூலமாகவோ விசாரித்துக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவ ரவர்களே. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மாணவர் களைச் சேர்ப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டி ருக்கிறார்கள். அவர்கள் திடீரென்று கேட்டிருந்தாலும் கூட, அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைப் பற்றி நாம் இங்கே இரண்டு மூன்று நாட்களாகப் பேசிக் கொண்டிருப்பதால் ஒரு விவரத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த ஆண்டு முதல் மாணவர்களைச் சேர்க்கின்ற குழுக் களில் அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர் இருக்க வேண்டுமென்று அரசு தன்னுடைய கருத்தைத் தெரிவித்திருக்கிறது.

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



திரு. ப. நெடுமாறன்: பேரவைத் தலைவரவர்களே, பள்ளி களிலும், கல்லூரிகளிலும் நன்கொடை வாங்குவது என்பது இன்றியமையாதது என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள், ஆனால், அட்மிஷன் நேரத்தில், குறைந்தபட்சம் ஒரு மூன்று மாத காலத்திற்காவது எந்தப் பள்ளியிலும், கல்லூரியிலும் எவ்வித நன்கொடையும் பெறக்கூடாது என்று தடுக்க அரசாங் கம் முன்வருமா?

[முற்பகல் 9-40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு உத்தரவு இருக்கிறது. மாணவர் களைச் சேர்க்கின்ற நேரத்தில் நன்கொடை வசூலிக்கக் கூடாது என்கிற ஒரு உத்தரவு இருக்கிறது. அதற்கு மேல், சர்க்காரு டைய அனுமதியைப் பெற்று நன்கொடை வசூலிக்கலாம் என்று நாம் உத்தரவு போட்டிருக்கிறோம்.

டாக்டர் கே. பி. இராமலிங்கம்: தலைவர் அவர்களே, மாணவர்களிடம் நன்கொடை பெறாமலும், தமிழக அரசிடம் மானியம் பெறாமலும், அதே நேரத்தில் தமிழர்களின் கலாச் சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பாதிக்கின்ற வகையிலே சில தனியார் பள்ளிகள் நடந்து வருகின்றனவே, அவைகளைக் கண்காணிக்க அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதி லிருந்து நான் தெரிந்துகொள்வது, அவர் குறிப்பிடுகிற பள்ளிகள் நர்சரி பள்ளிகள் என்று நினைக்கிறேன். அவர்கள்தான் மாண வர்களிடம் நன்கொடை பெறாமலும், அரசாங்கத்திடம் நன் கொடை பெறாமலும் நர்சரி பள்ளிகளை நடத்திக்கொண்டிருக்கி றார்கள். அந்த நர்சரி பள்ளிகளை ஒழுங்குபடுத்துவதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு விரிவான அறிக்கையைத் தந்திருக்கிறது. அதை ஆராய்ந்து, நர்சரி பள்ளிகளை ஒரு கட்டுக்கோப்புக்குள் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அப்பள்ளிகளில் ஆங்கிலத்தில் சொல்லி தருகிற காரணத்தால், மக்களிடத்திலே புரியாத மோகம் நர்சரி பள்ளிகளின்மீது இருக்கிறது. அரசாங்கம் அத்தகைய பள்ளிகளை நடத்தாத காரணத்தால், அல்லது அரசாங்கம் அப்பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்காத காரணத்தால், வேறு வழியில்லாமல், அப்பள்ளிகளுக்கு நிறையப் போகிறார்கள், மாண்பு மிகு உறுப்பினர் சொன்னதை அரசு கவனிக்கும்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பூவிருந்தவல்லியில் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் அரிசன மாண வர்களிடம் 'மிசல்லேனியஸ் ரிசிட்' என்ற பெயரில் பணம் வசூலிக்கப்படுகிறது. பெற்றோர் ஆசிரியர் கழகம் என்ற பெயராலும் பணம் வசூலிக்கப்படுகிறது. அப்படி கொடுக்காத

மாணவர்களெல்லாம் பள்ளியிலிருந்து வீட்டிற்கு அனுப்பப்படுகிறார்கள். ஏற்கெனவே கொடுக்கப்பட்ட ரசீட்டுகளை நான் வைத்திருக்கிறேன். இது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்பொழுது என்னுடைய கவனத்திற்கு அந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அது மிகவும் கண்டிக்கத்தக்க ஒன்றுதான். அரசினர் மேல்நிலைப்பள்ளியில் இத்தகைய போக்கு இருப்பதும், அதிலும், தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அதைத்தர முடியாத நிலைமையிலே அனுமதி மறுக்கப்படுவதும் வன்மையாகக் கண்டிக்கதக்கது மட்டுமல்ல, இந்த அரசு தேவையான நடவடிக்கைகளை நிச்சயமாக எடுக்கும்.

திரு. கெ. சொக்கலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பள்ளிகளிலே நன்கொடை வாங்கப்படுவதைப் பற்றியும், அதன்பேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால், கல்லூரி விடுதிகளிலே அதாவது, ஏழை மாணவர்கள் தங்கிப் படிக்கின்ற அரிசன விடுதிகளிலும் இப்படிப்பட்ட நன்கொடைகள் வசூலிக்கப்படுவது, அமைச்சருக்குத் தெரியுமா? அமைச்சரவர்கள் அதைத் தடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு தலைவரவர்களே, அரிசன விடுதிகள் என்னுடைய துறையின்கீழ் வருவதில்லை.

## தமிழ்நாடு சட்ட உதவி, ஆலோசனைக் குழு.

கு.க.வி. எண் 42—திரு. செ. செம்மலை: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர்— கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) இலவச சட்ட ஆலோசனைக் குழு (Free Legal Aid Committee) 30—6—1980 முடிய நடத்தி முடித்திருக்கும் வழக்குகள் எத்தனை?

(ஆ) அதற்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

(இ) முடிக்கப்படாமல் இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(ஈ) அந்த குழுவின் சேவையை விளக்க அரசு எடுத்துவரும் நடவடிக்கை என்ன?



மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: (அ) தமிழ்நாடு மாநில சட்ட உதவி மற்றும் ஆலோசனைக் கழகம் நிறுவப்பட்ட நாளிலிருந்து அதாவது 7—4—1977 முதல் 30—6—1980 வரை நடத்தி முடித்திருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை 12,082.

(ஆ) இலவசச் சட்ட உதவி மற்றும் ஆலோசனை வழங்கும் பணிக்காக அரசு 7—4—1977 முதல் 30—6—1980 முடிய செலவிட்ட தொகை ரூ. 10,65,553.

(இ) முடிக்கப்படாமல் இருக்கும் வழக்குகளின் எண்ணிக்கை 3,073.

(ஈ) அரசு இக்குழுவின் சேவைகளை விளக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது:—

(i) 7,000 விளம்பரச் சுவரொட்டிகள் தயாரிக்கப்பட்டன.

(ii) 1,500 சிலைடுகள் தயாரிக்கப்பட்டு திரையரங்குகளில் திரையிடப்படுவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக வழங்கப்பட்டுள்ளன.

(iii) அதிக அளவு சுற்றோட்டம் உள்ள பலவித தமிழ் சஞ்சிகைகளில் சுருக்கமான அறிக்கைகள் வெளியிடப்பட்டன.

(iv) தமிழரசு இதழில் இக்குழுவின் தலைவரால் எழுதப்பட்ட (ஆங்கிலம் & தமிழ்) கட்டுரை ஒன்று வெளியிடப்பட்டது.

(v) இக்கழகத்தை பற்றிய தகவல்கள் சட்டங்கள், விதிமுறைகள், சுற்றறிக்கைகள் ஆகியவைகள் அடங்கிய புத்தகம் ஒன்று இக்கழகத்தால் தயாரிக்கப்பட்டு அரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டு இக்கழகத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலோசனைக்குழுவின் மூலமாக வழக்குகளை நடத்தும் வழக்கறிஞர்கள், வழக்குகள் முடிந்த பிறகுதான் தாக்கல் செய்வதற்கான தொகை மற்றும் பீஸ் ஆகியவற்றை கிளைம் செய்து பெற்றுக்கொள்ளும் நிலை இருக்கிறது. பொதுவாக இந்த கழகத்தில் இடம் பெற்றிருப்பவர்கள் இளம் வழக்கறிஞர்கள். எனவே அவர்களுக்கு உதவுகிற வகையில் குறைந்தபட்சம் வழக்குகளைத் தாக்கல் செய்ய ஆகும் தொகையையாவது அவர்களுக்கு முன்பணமாகக் கொடுக்க அரசு முயலுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் தனி அக்கறை எடுத்துக் கொள்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே. வழக்குகளைத் தாக்கல் ஆகின்ற செலவைப் பொருத்தவரை அதை இந்த உதவிக்கழகமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. வழக் கறிஞர்களுக்கு இந்தப் பொறுப்பு விடப்படவில்லை. அவர் களுக்குத் தனியாக ஊதியம் வழங்கப்படுகிறது.

திரு. எம். சின்னராஜ்: தலைவர் அவர்களே, இந்தச் சங்கம் சொசைட்டி ஆக்டின் கீழ் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு இருப்பதால் பார்ட்டிகளை ஆஜர் செய்ய கட்டாயப்படுத்த முடியாத நிலை இருக்கிறது. எனவே இந்த சங்கத்தை சொசைட்டி ஆக்டின் கீழ் இருப்பதை மாற்றி, ஒரு ஸ்டாடுடரி பாடியாக மாற்றி அந்த அமைப்பின் கீழ் கொண்டுவர இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஏழை எளிய மக்கள், வசதி அற்றவர்கள் போன்றவர்களுக்கு உதவ வேண்டும் என்ற நோக்கத்தோடு அமைக்கப்பட்ட இந்த அமைப் பிற்கு மனமுவந்து வழக்கறிஞர்கள் வரவேண்டும். கட்டாயப் படுத்தி அதிகமாக அதில் நாம் பணியைப் பெறமுடியாது என்று கருதுகிறேன். ஆனால் இலவசமாக மனமுவந்து அவர் களாகவே வருகின்ற இந்த முறையில் வெற்றி நல்ல முறையில் நடைபெற்று வருகிறது என்பதை கண்கூடாகக் காண்கிறோம்.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவர் அவர்களே, இந்த இலவச சட்ட ஆலோசகர் என்ற முறையிலே இப்போது இருக்கும் முறையை நிறுத்தி, ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் இலவச சட்ட ஆலோசகர் ஒருவரை அரசங்கமே நியமித்தால், பொறுப்புணர் வோடு அவர்கள் வழக்குகளை நடத்த உதவியாக இருக்கும். அதுமட்டும் அல்ல. வழக்கை இலவசமாக நடத்திக் கொடுப் பவர்கள் ஒரு நம்பிக்கையோடு கொடுப்பார்கள் என்று கருது கிறேன். வேலையில்லாத் திண்டாட்டத்தில் அதிகமான வழக் கறிஞர்கள் இருப்பதாலே அவர்களுக்கும் வேலைவாய்ப்பு கிடைக் கும் நிலைமை உருவாகும். ஆகவே அரசாங்கமே இலவ்ச சட்ட ஆலோசகர்களை நிரந்தரமாக பணியில் நியமிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இலவச சட்ட ஆலோசனைக் குழு, ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதிபதிகள் இராமகிருஷ்ணன், என். கிருஷ்ணசாமி ரெட்டியார் ஆகியவர்களின் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் இயங்கி வருகிறது. அதில் மாற்றம் தேவையில்லை என்று அரசு கருது கிறது.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, இலவச வழக்குகள் இன்றைக்கு 12,000க்கும் மேற்பட்டவை பைசல் செய்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த



[திரு. என். பழனிவேல்]

இலவச வழக்குகளை நடத்த மிகவும் திறமை இல்லாதவர்கள் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே திறமையான வழக்கறிஞர்கள் இலவச வக்கீல்களாக நியமிக்கப்படுவார்களா? அவர்களுக்கு என்று ஒரு அலுவலகத்தை வைத்து—அவர்கள் எங்கே இருக்கிறார்கள் என்று கூட தெரியவில்லை—அவர்கள் இங்கே தான் இருக்கிறார்கள் என்று மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் அந்த ஆலோசகர்களை நியமிக்குமா? திறமையான வழக்கறிஞர் களை உள்ளூர் வழக்கறிஞர்களை நியமிப்பார்களா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, பழனிவட்டத்தில் இலவச சட்ட உதவி, மற்றும் ஆலோசனைக் கழகத்தின் வட்டக் குழு 1978 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாளிலிருந்து செயலபட்டுவருகறது,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் விவாதம், விளக்கம் எல்லாம் இல்லை. கேள்விகள்தான் கேட்க லாம், அமைச்சர் பதில் சொல்லாம். நீங்கள் உட்காருங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, பழனியில் இல்லாத காரணத்தால் அதனுடைய நிலையைப்பற்றி அருமை சட்டமன்ற உறுப்பினருக்குத் தெரியவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சென்னையிலேயே உயர்நீதி மன்றத்தில், இன்றைக்கு எந்தப் பகுதியிலே எடுத்துக் கொண்டா லும் இந்த இலவச சட்ட உதவிக் குழுவிலே யார் இருக்கிறார்கள் என்பதைப் பார்த்தால் சட்டப்படிப்புப் படித்து 3 மாதம் 4 மாதம் ஆனவர்கள்தான் அல்லது 6 மாதங்கள் ஆகியவர்கள் தான் இருக்கிறார்கள், அந்தப் பேனலில் யார் இருக்கிறார்கள் என்று அமைச்சரவர்கள் இங்கே சொன்னால் தெரிந்துகொள்ள வசதியாக இருக்கும். அதை அமைச்சர் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேனலிலே இருப்பவர் கள் எல்லாம் சிறப்பானவர்களா இல்லையா என்றெல்லாம் கேட்கக்கூடாது. வக்கீலுக்குப் படித்த உறுப்பினர் இன்னொரு வழக்கறிஞரைப் பற்றிய குறை சொல்லக்கூடாது.

[முற்பகல் 9-50]

திரு. அ. ரகுமான்கான் : தலைவர் அவர்களே, வழக்கறிஞர் களை நான் குறைவாகச் சொல்லவில்லை. ''பேனல் ஆப் லீகல் அட்வைசர்ஸ்'' போடுகிறபோது வக்கீல்கள் சீனியர்களாக இருக்கவேண்டும். அல்லது, அனுபவம் பெற்றவர்களாக இருக்க

[திரு. அ. ரகுமான்கான்]

வேண்டும். ஆனால் படித்து விட்டு வந்த 3 மாதம் ஆகியவர்
கள் தான் அதிலே இருக்கிறார்கள். அதனால் தான் அந்தப்
பனல் குறித்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர்
அவர்களே வழக்கறிஞர்கள் 'A', 'B' என இரு பட்டியல்களாகப்
பிரிக்கப்பட்டுள்ளார்கள். 'A' பட்டியலில் உள்ள வழக்கறிஞர்கள்
வழக்கறிஞர்கள் சங்கத்தில் மூன்றாண்டு கால அனுபவம் பெற்
றிருக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (குறைந்த
பட்சம் 5 ஆண்டு காலம் வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்கள் சங்
கத்தில் பயிற்சி பெற்றிருக்க் வேண்டுமென்ற வரையறை முன்பு
இருந்தது). இது தவிர 'B' பட்டியலிலுள்ள வழக்கறிஞர்கள் இல
வசமாக ஆலோசனை நல்கும் முதுநிலைத் வழக்கறிஞர்கள் ஆவர்.

திரு. எல். இளையபெருமாள் : சபாநாயகர் அவர்களே,
வழக்கறிஞர்கள் கேஸ் நடத்துவதற்கு முன்கூட்டியே பணம்
கொடுக்காததால் கேஸ் எடுக்கமாட்டேன் என்று சொல்வதாகச்
சொல்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் முன்கூட்டியே பணம்
கொடுக்க முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே,
இலவச ஆலோசனைக் குழுவில் இருப்பவர்களிடமிருந்து இப்
படிப்பட்ட புகார் வருவதற்கு இடமில்லை. அப்படி வருமா
னால், கண்டிப்பாக அது பரிசீலிக்கப்படும்.

திரு. ந. குலசேகரபாண்டியன் : பேரவைத் தலைவர் அவர்
களே, இந்த சிறப்பான அமைப்பைப் போலவே ரோட்டரி சங்கங்
கள் கூட 'ப்ரீ லீகல் எய்டு டு பூர்' என்ற அமைப்பின்கீழ் அருமை
யான வழக்கறிஞர்களைக் கொண்டு பணியாற்றி வருகின்றன.
அதை அரசு ஊக்குவித்து, பாராட்டியது உண்டா அல்லது
அரசின் கவனத்திற்கு ஏற்கனவே இது வந்துள்ளதா
என்பதை அறிய விரும்புகிறேன். இப்படிப்பட்ட பொதுநலச்
சங்கங்களை அரசு ஊக்குவிப்பதன் மூலம் அந்தப் பணி சிறப்பாக
நடைபெறும் அல்லவா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது
பற்றிய தகவல் என்னிடத்தில் இல்லை. அதுபற்றி அறிந்து
நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இலவச
சட்ட ஆலோசனைக் குழுவில் இலவசமாக வழக்குகளை நடத்து
கின்ற வழக்கறிஞர்கள், சட்ட நிபுணர்கள் இருக்கின்றார்களா
என்பதை அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, இலவசமாக வழக்குகளை நடத்துகின்ற வழக்கறிஞர்கள் அந்தக் குழுவில் இருக்கின்றார்கள். யார் யார் என்ற குறிப்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்தத் தகவல் தர முடியும்.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, மிகக் கடுமையான கிராமங்களில் உள்ள வறுமைக் கோட்டின்கீழே உள்ள மக்களுக்குத்தான் அந்தக் குழுவின் உதவி தேவைப்படுகிறது. அதைப் பற்றி பூரணமாக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மக்களுக்குத் தெரிகிறவகையில் போதிய விளம்பரம் செய்வதற்கும், அவர்களுக்கு உதவி செய்வதற்கும் அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களின் உணர்வுகளின் அடிப்படையில் தான் அந்தக் குழு செயல்பட வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அந்த அடிப்படையில் அதற்கு அதிகமான விளம்பரம் தருவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. அதற்காகத்தான் நிதி ஒதுக்கத்தில் விளம்பரம் மற்றும் இதர செலவுகளுக்காக என்று ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் எண்ணம் ஈடேறுகின்ற வகையில் அது நடைமுறைப்படுத்தப்படும்.

## கிராமப்புற வீட்டு வசதித் திட்டம்.

கு. கா. வி. எண். 43. திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்திற்காக கூட்டுறவு சங்கங்கள் மூலமாக 1980 ஜூன் மாதம் முடிய அரசு வழங்கிய கடன் தொகை எவ்வளவு?

(ஆ) அதில் கட்டப்பட்ட வீடுகள் எத்தனை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதி திட்டத்தின்கீழ், அரசு, ஆயுள்காப்புறுதி மற்றும் பொது காப்புறுதிக் கழகங்களிடமிருந்து பெற்ற நிதியுதவியைக் கொண்டு 1980 ஜூன் திங்கள் முடிய, தலைமைச் சங்கம், பிரதமச் சங்கங்களுக்கு, வீடுகள் கட்ட கடனாக வழங்கியுள்ள தொகை ரூ. 16.43 கோடி;

(ஆ) 29,041 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு விட்டன, 16,767 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.

திரு. து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவர் அவர்
களே, அந்தச் சங்கங்களின் மூலம் அரசு கொடுத்த பணம்
ஏறக்குறைய 14 கோடி ரூபாய் என்று சொல்கிறார்கள். ஆனால்
அந்த அளவிற்கு வீடுகள் கட்டப்படவில்லை. கடன் வாங்கிய
பணத்தில் வீடுகளைக் கட்டிக்கொள்ளாமல், வேறு விதத்தில்
அதைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்ற புகார் அரசுக்கு
வந்துள்ளதா? வாங்கிய கடன்களும் திரும்பத் தரப்படவில்லை
என்பது அரசுக்குத் தெரியுமா? இந்தத் திட்டத்தின் மூலம்
அரசே வீடுகள் கட்டி, அந்த ஏழைகளுக்குத் தந்தால், கடனைத்
திருப்பாவிட்டால் அந்த வீடுகள் அரசுக்குத் சொந்தமானதாக
அரசின் அசெட்டாக இருக்கும் என்பதாலும், அந்தப் பணத்
தைத் திருப்பிச் செலுத்திவிட்டால் அந்த வீடு தனக்கே சொந்த
மாகும் என்கிற எண்ணம் அந்த மக்களுக்கு ஏற்பட்டு கடனைத்
திருப்பித் தருகின்ற முறையில் வருவார்கள் என்பதாலும், அரசே
அந்தக் கடன் தொகை தருவதற்கு பதிலாக, வீடு கட்டிக்கொடுக்
கும் திட்டம் கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன குறைகள்,
முறைகேடுகள் எதுவும் அரசுக்கு இதுவரை வரவில்லை. இப்
போதும் அந்த வீடுகளை தங்களுக்குச் சொந்தம் என்ற உணர்
வோடுதான் கட்டுகிறார்கள். ஏனென்றால் கொடுப்பது கடன்தான்.
மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் ஏற்
கெனவே ஒரு கேள்வியில் 5,000 ரூபாயாக உயர்த்திக் கொடுக்
கப்படுமா என்று கேட்டார்கள். அவர்களுக்கும் சேர்த்து இப்
போது பதில் சொல்கிறேன். ஹீல் ஏரியாவில்' மலைப் பகுதி
களில் வாழும் மக்களுக்கு 5,000 ரூபாய் தருகிறோம்.

திரு. தி. கா. நல்லப்பன்: தலைவரவர்களே, ஏற்கெனவே
ஒரு கேள்விக்குப் பதில் சொல்லும்போது பணம் இருக்கின்ற
வரையில் கொடுக்கிறோம் என்று சொன்னார்கள். இப்போது
எந்த மாதத்தில் அந்த கிராமியக் கூட்டுறவு வீடுகட்டும் சங்கங்
களுக்கு பணம் கொடுக்கப்படுகிறது என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: தலைவரவர்
களே, 'அப்பக்ஸ்' சங்கத்திற்கு முன்னதாகக் கொடுக்கப்
படுகிறது. அங்கிருந்து கீழே இருக்கின்ற பிரைமரி சங்கங்களுக்கு
தேவைக்கு ஏற்ப வழங்குகிறார்கள். தேவையான பணத்தை
பிரைமரி சங்கம் ஒரே தடவையில் வாங்கிக்கொண்டு போகிறது.
ஆனால் அதை ஒரே தடவையில் வீடு கட்டுகிறவர்களுக்கு
கொடுப்பதில்லை; 3 தவணைகளில் பிரித்து கொடுக்கிறார்கள்.

திரு. து. புருஷோத்தமன் : தலைவரவர்களே, அமைச்சர்
பதில் சொல்லும்போது 16 கோடி ரூபாய் கடனாகத் தந்திருப்
பதாகச் சொன்னார்கள். அதிலே கட்டியிருக்கின்ற வீடுகள்



ஏறத்தாழ 22,000 தான். வாங்கிய கடன் பணத்திலிருந்து வீடு
கட்டாமல் அதை வேறு எதற்கோ பயன்படுத்துகிறார்கள் என்ற
புகார் வந்திருக்கிறதா? இதுவரை திருப்பி செலுத்தாதவர்கள் எத்
தனை பேர்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்
களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற புகார் இது
வரை அரசுக்கு வரவில்லை. கடன் வாங்கியவர்கள் 6 மாதத்
திற்கு ஒருமுறை பணம் கொடுத்தால் போதும். எங்கெங்கே வீடு
கட்டப்படவில்லை என்ற தகவல் இப்போது என்னிடம் இல்லை.

திரு. வ. சத்தியமூர்த்தி: தலைவரவர்களே, இந்த கிராமிய
கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தில் அரிசனங்களுக்கு 1,000
ரூபாய் மானியமாகவும், மீதி வட்டியில்லாத கடனாகவும்
வழங்கப்படுகிறது; மற்றவர்களுக்கு வட்டி வசூலிக்கப்படுகிறது.
சுமார் 5,000 ரூபாய் கடன் பெற்றால் 20 ஆண்டு காலத்தில்
11,000 ரூபாய் திருப்பி செலுத்த வேண்டியிருக்கிறது. இந்த
வீட்டுவசதி சங்கத்தில் நூற்றுக்கு 90 பேர்களுக்குமேல் அரிசன
மக்கள்தான் கடன் பெற்று வீடு கட்டுகிறார்கள் என்ற தகவல்
இருக்கிறது. ஆகவே, இந்த கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி
சங்கங்களை அரிசன கிராமிய கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்கள்
என்று மாற்றியமைத்து, மற்றவர்களுக்கு வேறு கூட்டுறவுச்
சங்கங்களை அமைக்கும் திட்டம் அரசிடம் உண்டா? என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : தலைவரவர்
களே, அரிசனங்களுக்கு வீடு கட்ட என்று தனியாக திட்டம் இருக்
கிறது. இது ஏழை எளிய மக்களுக்கு, குடிசைகளில் வாழும்
மக்களுக்கு என்று இருப்பதால் அரிசன மக்கள் என்று இதிலே
பிரித்துப் பார்க்க முடியாது. எல்லோரும் பலனடைய வேண்டும்
என்பதுதான் அரசின் எண்ணம். இருக்கிற புள்ளிவிவரங்களைப்
பார்க்கும்போது அரிசனமக்கள் அதிகமாகப் பயன் பெற்றிருக்கிறார்
கள். 30—6—1980 வரையில் கட்டி முடிக்கப்பட்ட 29,041
வீடுகளில் 21,481 வீடுகளில் அரிசனங்கள் இருக்கிறார்கள்.
16,767 வீடுகள் பல்வேறு நிலைகளில் கட்டப்பட்டு வருகின்றன.
அவற்றில் 12,705 வீடுகள் அரிசனங்களுக்கு உரியவை. எனவே
அரிசனங்கள் இரு வகையிலும் பயன்பெற்று வருகிறார்கள்.
இருவகையிலும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை என்ற
காரணத்தால் இந்தத் திட்டத்தை தொடர்ந்து நடத்துவது
நல்லது என்று கருதுகிறோம்.

திரு. எஸ். சிவராமன் : தலைவரவர்களே, இந்த கிராமிய
கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக வழங்கப்படும் கட
னுக்கு அரிசனங்களுக்கு மட்டும் வட்டியை தள்ளுபடி செய்கிறார்
கள். ஆனால் ஏழை எளிய மக்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர்
நிலம் வைத்திருக்கிறவர்கள் கடன் வாங்கினால் அதற்கு

வட்டி வசூல் செய்யப்படுகிறது. அவர்களுக்கும், அரிசனங்களுக்கு வட்டியை தள்ளுபடி செய்வதுபோல, வட்டி தள்ளுபடி செய்யப் படுமா? என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 10.00]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலை வரவர்களே, ஆண்டுக்கு 4,200 ரூபாய்க்கு குறைவான வருமானம் உடையவர்களுக்குத்தான் இந்த சலுகை அரிசனங்களுக்கு சலுகை காட்டவேண்டும் தரப்படுகின்றது. சனங்களுக்கு வட்டி கிடையாது. என்பதற்காக அரி களுக்கு வட்டி உண்டு. அரிசனங்களோடு அரிசனங்கள் அல்லாதவர் வாழ்கிறோம் என்று சொல்லக்கூடிய சேர்ந்து வீடு கட்டி களுக்கும் வட்டி உண்டு. அரிசனங்கள் அல்லாதவர்

திரு. சோ. அழகர்சாமி : பேரவைத் தலைவரவர்களே, இப்போது 29,041 வீடுகள் கட்டி இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். எங்கள் வட்டாரத்தை எடுத்துக்கொண்டால் இந்தக் கடனைப் பெற்று அவர்களாகவே சொந்தமாக கட்டு வதால் நல்ல வீடுகளாகக் கட்ட முடிந்திருக்கின்றது. காண்ட் ராக்ட் முறையிலே இந்தமாதிரி நல்ல முறையிலே வீடுகள் கட்ட முடியாது என்பதை அமைச்சரவர்களும் அறிவார்கள். ஆகவே இந்தக் கடன் தொகையை கொஞ்சம் அதிகமாக உயர்த்தி அதிக மான வீடுகள் கட்டுகின்ற வகையிலே அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். ஆகவே இந்தக் கடனை ரூபாய் 5,000 ஆக உயர்த்து வதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : வருகிற ஆண்டில் அதிகமாக வீடுகளைக் கட்டுவதாக முடிவு எடுத்திருக்கிறோம். ஆகவே அப்போது தொகை கொஞ்சம் ஏறும். ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்படுகின்ற கடன் தொகையை அதாவது 3,750 ரூபாயை 5,000 ரூபாயாக உயர்த்துவது என்பதைப் பொறுத்த வரையில் நிதியாதாரத்தைப் பொறுத்து பரிசீலனை செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

---

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## ஒத்திவைப்புத் தீர்மானம்.

### பொறியியல் கல்லூரிகளின் மாணவர்கள் போராட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கோவை தொழில் நுட்பக் கல்லூரி, காரைக்குடி அழகப்பா கல்லூரி, சேலம் பொறியியற் கல்லூரி, மதுரை தியாகராசர் என்ஜினியரிங் கல்லூரி மாண வர்கள் போராட்டம் குறித்தும், அதனால் அக்கல்லூரிகள் மூடப் பட்டுள்ளது குறித்தும் அதனால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்தும் விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டு திருவாளர்கள் மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், எம். அப்பாதுரை, சோ. அழகர்சாமி, பொ. உத்திராபதி, இரா. கருப்பையா, ப. பொன்னுரங்கம், ஏ. டி குலசேகர், கு. ரமணி, என். வரதராஜன், கே. எம். தங்கமணி கவுண்டர், செ. சிவசாமி ஆகியோர் தீர்மானங்கள் கொடுத்துள் ளனர். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, மிக முக்கிய மான ஒரு பிரச்சினையைத் தங்களது கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் ஒவ்வொரு வரும் கொடுத்துள்ளவை முக்கியமான பிரச்சினைதான். இப்போது வந்திருப்பது மாணவர்கள் பிரச்சினை. முன்பு வேறொன்றை எடுத்துக்கொண்டபோது மாணவர்கள் பிரச்சினை மிகவும் முக்கிய மானது என்று சொன்னீர்கள். இப்போது இதை எடுத்துக் கொண்டிருக்கும்போது வேறு ஒரு பிரச்சினையை முக்கியமான பிரச்சினை என்று சொல்கிறீர்கள். ஆகவே ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சினை முக்கியமானதாக இருக்கும். அமருங்கள்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, இன்றைக்குத் தமிழகத்தில் பல்வேறு கல்லூரிகள் மூடப்பட்டிருக் கின்றன.

திரு. அ. ரகுமான்கான் : தலைவரவர்களே, நான் சொல் கின்ற பிரச்சினையைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுகிறேன்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பார்லிமெண்டிலே கூட பட்ஜெட் கூட்டத்தின்போது ஒத்திவைப்புத் தீர்மானங்கள் எடுத்துக் கொள்ளப்படுவதில்லை. ஆனால் நாம் பட்ஜெட் கூட்டத்தின்போது ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இதுவே அதிகம். ஆகவே ஒரு ஒத்திவைப் புத் தீர்மானத்திற்குமேல் அதிகப்படுத்துவது என்பது முடி யாது.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் தமிழகத்தில் பல்வேறு கல்லூரிகள் மூடப்பட்டிருக் கின்றன. இது அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றது. இவ்வாறு மூடப்பட்டிருப்பது சரியல்ல என்ப தால்தான் அதிகமான மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தை இங்கே கொடுத்திருக்கிறார்கள். மாணவர் கள் சில கோரிக்கைகளை எழுப்பியவுடன் காரைக்குடி அழகப்பா கல்லூரியின் பிரின்சிபால் கல்லூரியை மூடிவிட்டு காணாமல் போனதாகச் சொல்கிறார்கள். கோவை தொழில் நுட்பக் கல்லூரியாக இருந்தாலும் சரி, காரைக்குடி அழகப்பா கல்லூரி யாக இருந்தாலும் சரி, சேலம் பொறியியற் கல்லூரியாக இருந் தாலும் சரி, மதுரை தியாகராசர் என்ஜினியரிங் கல்லூரியாக இருந்தாலும் சரி எந்தக் கல்லூரியாக இருந்தாலும் மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் இன்றைக்கு காலவரம்பற்ற உண்ணாவிரதம் கடற்கரை சாலையில் உடற் பயிற்சி ஆசிரியர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். தமிழகத்தில் பல கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. மாணவர்களு டைய கல்விக்கு அபாயம் ஏற்பட்டிருக்கின்றன என்பதை உணர் கிறோம். அதனால்தான் இவ்வளவு அதிகமான உறுப்பினர்கள் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட்டு மாணவர்கள் கல்வி பெற கல்லூரிகள் உடனடியாக திறக்கப்பெற அரசாங்கம் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற முறையில் விவாதிக்க இன்றைய அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப்பிரச்சனை கோவை, திருச்சியைச் சேர்ந்த பொறியியற் கல்லூரி 2ஆம் ஆண்டு படிக்கிற மாணவர்கள் மத்தியில் தான், அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்கிற வகையில் ஏற் பட்டுள்ளது. அதற்குக்காரணம் பிளஸ் 2 படித்து விட்டு முத லாண்டு என்ஜினியரிங் கல்லூரியில் சேருகிற மாணவர்கள் 4 வது ஆண்டு இறுதியிலும், ஏற்கெனவே பி. யூ.சி. படித்து விட்டு, 5 ஆண்டுகள் என்ஜினியரிங் படித்த மாணவர்களும், இவர்கள் 1,500 பேர்கள், அவர்கள் 1,500 பேர்கள் என்று சேர்ந்து மொத்தம் 3000 பேர்கள் சேர்ந்து வெளியில் செல்கிறபோது ஜாப் ஆப்பர்சூனிட்டி இல்லாமல் போய்விடும் என்ற அச்சம் தான் அந்தக் கிளர்ச்சியை தூண்டிவிட்டிருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

ஐந்து வருஷம் என்ஜினியரிங் படிப்பு என்பதை 4 வருஷமாக குறைத்திருக்கிறீர்கள். பிளஸ் 2 கொண்டு வந்ததால் அப்படி ஆக்கி யிருக்கிறீர்கள். அது நியாயமாகக் கூட இருக்கலாம். பிளஸ் 2 நல்லதுதான் என்று எங்கள் துணைத் தலைவர் பொதுச் செய



லாளர் பேராசிரியர் அவர்கள் கூட அன்று கோடிட்டுக் காட்டி யிருக்கிறார்கள். பிளஸ் 2 நல்ல திட்டம் தான், ஆனால் பி.யூ.சி ஆசிரியர் பாதிக்கப்படுகிறார்கள். They are idling and they are paid என்ற கருத்து நிலவுகிறது, என்றெல்லாம் கோடிட்டு காட்டியிருக்கிறார்கள்.

அதேபோன்று இப்பொழுது பி.யூ.சி. படித்த மாணவர்கள் தாங்கள் பாதிக்கப்படுவோம் என்ற அச்சத்திற்கு ஆளாகியிருக் கிறார்கள். ஜாப் ஆப்பர்சூனிட்டி வாய்ப்பு இல்லாமல் போய் விடும் என்ற அச்சத்தில்தான் இதில், இரண்டாம் ஆண்டு படிக்கும் மாணவர்கள் மட்டும் அல்ல, முதலாண்டு, மூன்றாவது ஆண்டு, 5-வது ஆண்டு, நான்காவது ஆண்டு மாணவர்களும் கலந்துக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் இருக்கக் கூடிய பிற கல்லூரி மாணவர்களும், அதாவது என்ஜினியரிங் கல்லூரி என்றில்லாமல் அனைத்துக் கல்லூரி மாணவர்களும் இதில் கலந்துக் கொள் வதற்கு முன்பாக இதில் ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய குறிக்கோள்.

அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால், 5 ஆண்டு என்ஜினியரிங் கோர்ஸ் படித்து டிக்ரி வாங்கிச் செல்கிற மாணவர் களுக்கும் 6 மாதகாலத்திற்கு அவர்களுக்கு மட்டும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். பிளஸ் 2 படித்து விட்டு 4 வருடம் என்ஜினி யரிங் படித்து வருகிற மாணவர்களுக்கு ஒரு 6 மாத காலத்திற்கு வேலை வாய்ப்பினை தள்ளி போட வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச்னைதான் என்றாலும் ஆரம்பத்திலேயே சீர் தூக்கிப் பார்த்து முறையாகச் செய்திருந் தால் இதைத் தடுத்திருக்கலாம். அதை விவாதிக்கிற முறையி லும், அது குறித்து அனைத்து தலைவர்களின் கருத்து அறிய வேண்டிய முறையிலும் இந்த அவையின் மற்ற அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, அழகப்பா கல்லூரி நம் தமிழகத்தில் ஒரு பிரக்யாதி வாய்ந்த முக்கியமான கல்லூரி. அங்கே 1,500 மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த மாணவர்கள் தங்களுடைய நியாயமான கோரிக்கைகளை நிர்வாகிகளுக்கு முன்னால் வைக்கிற நேரத்தில் அதைப்பற்றி எந்தவிதமான கவனமும் செலுத்தாமல் அவர்களுக்கு மோசமான முறையில் பதிலைச் சொல்லும் போது அதைத் தாங்கமுடியாமல் அல்லது தங்களுடைய பிரச்சினையை தீர்க்க முடியவில்லை என்ற முறை யில் தங்களுடைய கோரிக்கையை அரசு அதிகாரிகளிடம் தெரிவிக்கிற அடிப்படையில் 1,500 மாணவர்களும் தாசில்தார் அலுவலகம் சென்று தெரிவித்து விட்டு திரும்பி வருவதற் குள்ளாக கல்லூரியை மூடிவிட்டார்கள் என்று கூறு கிறார்கள்.

ஒத்திவைப்புத் தீர்மானம்

[திரு. கு. ரமணி] 

[முற்பகல் 10-10]

இப்படிப்பட்ட நடவடிக்கைகள் எப்படி சரியாகும். மாண
வர்களிடையே க்ரூப்புகளை உண்டாக்கி அவர்களிடையே
சண்டையை உண்டாக்குகிற வேலையை தூண்டிவிடுகிறார்கள்
நிர்வாகத்தினர் என்று சொல்கிறார்கள். மாணவர்களிடையே
நல்லதொரு சமாதானமான நிலை ஏற்பட வேண்டும் என்று
முயற்சி செய்யும்போது இப்படிப்பட்ட நிலை ஏற்படுமானால்
அதுவேலியே பயிரை மேய்கிற கதையாக மாறுகிறது. மாணவர்
களுக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே சண்டையை தூண்டி
விட்டு தகராறு நடக்கிறது என்று சொல்லப்படுகிறது. கல்லூரி
நிர்வாகம் அதிலும் குறிப்பாக கல்லூரி முதல்வரின் நடவடிக்
கைகள் ரொம்ப மோசமானதாக, ஆட்சேபிக்கத்தக்க வகையில்
இருப்பதாக எல்லா பக்கங்களிலிருந்தும் சொல்லப்படுகிறது. இந்த
கல்லூரியின் பெருமையை உத்தேசித்துத்தான் இதை ஒரு
பல்கலைக்கழகமாக ஆக்க வேண்டும் என்ற ஆலோசனையும் ஒரு
பக்கம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த சமயத்தில்
இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டுள்ளதன் காரணமாக
மாணவர்களின் படிப்பு முடங்கப்பட்டுக் கிடக்கிறது. ஒரு
பதட்டமான நிலை ஏற்படக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்
கிறது. அதே போல் கோவையில் உள்ள கல்லூரியிலும் ஏற்
பட்டிருக்கிறது. எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் அவர்கள்
அதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். ஆகவே அதைப் பற்றி நான்
விளக்கிச் சொல்ல விரும்பவில்லை. தனியார் கல்லூரிகளில்
உள்ள நிர்வாகத்தினரின் மோசமான நடவடிக்கைகள் காரண
மாக மாணவர்களிடையே ஒரு அதிருப்திகரமான நிலை
ஏற்பட்டுள்ளது. ஆகவே, அப்படிப்பட்ட நிலைகளைச் சமா
ளிக்கவும், தகுந்த நடைமுறைகளை நாம் உருவாக்கவும் இந்த
அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இது பற்றி
விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

***திரு. கே. எம். தங்கமணி கவுண்டர்** : பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைய தினம் வருங்கால சமுதாயத்தை உருவாக்கு
கிற பெரும் பணியில் நாற்றங்கால் பயிராக இருக்கிறவர்கள்
மாணவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை யாராலும்
மறுக்க முடியாது. அதிலும் பொதுவாக மாணவர்கள் எல்லாம்
எடுக்கிற துறைகளில் பொறியியல் என்பது மிக முக்கியத்துவம்
வாய்ந்த துறை என்பதை எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள்.
அந்தத் துறையில் இன்றைய தினம் மாணவர்கள் எல்லாம்
ஒன்றாகச் சேர்ந்து சில முக்கியத்துவம் வாய்ந்த கோரிக்கை
களை வைத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அதனால்
இந்த காரைக்குடி அழகப்பா கல்லூரி மூடப்பட்டு அதன்
விளைவாக தமிழ்நாடு முழுவதும் கல்வி நிலையங்கள் மூடப்
படுகிற ஒரு சூழ்நிலை மாணவர்கள் இயக்கத்தினால் வருமோ
என்ற அச்சம் இன்றைய தினம் வந்து கொண்டிருப்பதன்
காரணமாக உடனடியாக சட்ட மன்றத்தின் இதர அலுவல்
களை ஒத்தி வைத்து இது பற்றி விவாதிக்க வேண்டும் என்று
கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்** : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, ஹையர் செகண்டரி வகுப்புகள்
துவங்கி, அவர்கள் அந்தத் தேர்வை முடித்து இப்போது புதிதாக
என்ஜினியரிங் கல்லூரியில் அனுமதிக்கிற இந்த ஆண்டில் இப்படிப்
பட்ட ஒரு பிரச்சினை உருவாகியிருக்கிறது. அவர்களுக்கு இந்த
நான்கு வருட பட்டப் படிப்பு என்பது பல்கலைக் கழகமும் அகில
இந்திய தொழில் நுட்ப கல்வித் துறையில் இருக்கிற அந்தக் குழுவும்
சேர்ந்து எடுத்த முடிவிற்கேற்ப இன்றைக்கு இந்தியா முழுவ
தும் கொண்டு வரப்பட்டிருக்கிற ஒரு திட்டம் தான். இந்த
நான்காண்டு பட்டப்படிப்பு. அதன் தொடர்பாகத் தான் இந்தப்
பிரச்சினை உருவாகி இன்றைய தினம் இந்த ஒத்திவைப்புத்
தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. ஆகவே பிரச்
சினையை நமது அரசாங்கம் எடுத்த புதிய பாட திட்டத்தின்
கீழ் அதன் விளைவாக வந்திருந்தாலும், அரசாங்கம் இது
போன்ற பிரச்சினைகளைத் தீர்க்க தயாராயிருக்கிறது என்று
மட்டும் கூறி நடைபெற்ற சம்பவத்தைப்பற்றி ஒன்றைக்
குறிப்பிட விரும்புகிறேன்.

மாண்புமிகுபேரவைத் தலைவர் அவர்களே, பொறியியல் கல்
லூரிகளில் ஐந்து ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பு இந்த ஆண்டி
லிருந்து நீக்கப்பட்டு, மாற்றி அமைக்கப்பட்ட நான்கு ஆண்டு
பொறியியல் பட்டப் படிப்பு புகுத்தப்பட்டுள்ளது. இதனை
எல்லாப் பொறியியல் கல்லூரிகளைச் சார்ந்த இரண்டாம் ஆண்டு
பட்டப் படிப்பு மாணவர்கள் எதிர்க்கிறார்கள். இவ்வாண்டு
துவங்கும் நான்கு ஆண்டு பொறியியல் பட்டப் படிப்பில்
சேரும் மாணவர்களும் தற்பொழுதுள்ள 5 வருட பட்டப்
படிப்பில் இரண்டாம் ஆண்டு மாணவர்களும் ஒரே சமயத்தில்
(1984-ல்) பொறியியல் பட்டப் படிப்பை முடித்து வெளி
யேறுவார்கள் என்றும், இது அவர்களுடைய வேலை வாய்ப்
பினை பெருமளவு பாதிக்குமெனவும் கூறியுள்ளனர். எனவே,
அவர்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள நான்கு ஆண்டு
பொறியியல் பட்டப் படிப்பில் ஆறுமாத கால பயிற்சி முறை
புகுத்தப்பட வேண்டுமெனவும், அதனால் புதிய மாணவர்கள்
தங்களோடு ஒன்றாக பட்டப் படிப்பினை முடிக்க மாட்டார்
கள் என்றும் கூறியுள்ளனர். அவ்வாறு செய்ய இயலவில்லை
யென்றால், இந்த புதிய முறை பொறியியல் பட்டப் படிப்
பினை ஆறுமாத காலம் தாழ்த்தி ஆரம்பிக்கலாம் என்றும்,
அதனால் இந்த வருடத்தில் ஒரு பருவ கால (செமிஸ்டர்)
படிப்புத்தான் அவர்களால் முடிக்கப்படும் என்றும், எனவே
அவர்கள் தங்களுடன் இணையாக பட்டப் படிப்பினை முடிக்க
முடியாது என கூறியுள்ளனர். மேற்கண்ட கோரிக்கையினை
வலியுறுத்த பொறியியல் கல்லூரி இரண்டாம் ஆண்டு மாண
வர்கள் வேலை நிறுத்தம் மேற் கொண்டுள்ளனர்.
மேலும் கோவை அரசினர் பொறியியல் கல்லூரி மாணவர்கள்

18-7-1980 அன்று போக்குவரத்தைத் தடை செய்தனர் என்றும்,
அதனால் 200 மாணவர்களை போலீசார் தலையிட்டு காவலில்
வைக்க நேர்ந்தது எனத் தகவல்கள் கிடைத்துள்ளன. காவல்
துறை அதிகாரிகளை கலந்து ஆலோசித்து நிலைமை மிக
மோசமாக போவதைத் தவிர்க்கவும் கல்லூரியின் முதல்வர்
18-7-1980-லிருந்து அக்கல்லூரியை மூடியுள்ளார். மேலும்
அக்கல்லூரியினை 28-7-1980 முதல் படிப்படியாக திறக்க
உத்தேசித்துள்ளார். இதைப் போலவே சேலம் அரசினர் பொறி
யியல் கல்லூரி மாணவர்கள் வேலை நிறுத்தத்தை மேற்
கொண்டுள்ளனர். அம்மாணவர்களில் ஒரு சாரார் கையில்
சிகப்பு நிறக் கொடியுடன் ரயில்வே தண்டவாளத்தை நோக்கி
புகை வண்டியினை நிறுத்த முயற்சித்தனர். மாவட்ட
ஆட்சியாளரின் பரிந்துரைக்கேற்ப அந்தக் கல்லூரியும்
22-7-1980-லிருந்து மூடப்பட்டுள்ளது.

இப்பிரச்சினை குறித்து கோவை தொழில் நுட்ப கல்லூரி,
அழகப்ப செட்டியார் பொறியியல் கல்லூரி, காரைக்குடி
மற்றும் மதுரையிலுள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரி
களிலும் மாணவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இப்பிரச்சினைக்கு தீர்வு காண விரைவில் வகை செய்யப்
படும். ஏற்கனவே தொழில் நுட்ப கல்வி இயக்குநரின்
அறிக்கைப்படி இந்த நான்கு ஆண்டுப் பட்டப் படிப்பில்
இவ்வாண்டு சேரும் மாணவர்கள் அவர்களது செமிஸ்டர்
தேர்வில் ஒரு பகுதியை பிப்ரவரி-மார்ச்சு மாதத்திலும்
மற்றொரு பகுதியை ஆகஸ்ட்-செப்டம்பர் மாதத்திலும் எழுது
வார்கள். அதன்படி பார்த்தால் ஆறு மாத காலம்
தள்ளி வைத்து நடத்துவதற்கும், அதை மாணவர்
வர்களுக்கு அறிவிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
இந்த முடிவினை அனைத்து பொறியியல் கல்லூரி மாணவர்
களுக்கும் தெரிவிக்கும்படி அனைத்து பொறியியல் கல்லூரி
முதல்வர்களும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். ஆகவே,
இன்று, மாணவர்களுடைய கோரிக்கையினை ஏற்கின்ற
நிலையிலே, அவர்கள் வேலை நிறுத்தத்தை கைவிட்டு
தங்களுடைய படிப்பைத் தொடர வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு, இதைப் பற்றி மேலும் விவாதிக்க வேண்டிய
அவசியமில்லை என்ற காரணத்தால், இந்த சபை ஒத்தி
வைக்கத் தேவையில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு கல்வி
அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற
அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க
வேண்டிய தேவை இல்லையென்ற காரணத்தினால், இதற்கு
இசைவு மறுக்கப்படுகிறது.





## 3. ஒழுங்குப் பிரச்சினை

### அந்நியர்கள் பேரவை புறக் கூடங்களுக்கு வருதல்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> பாய்ன்ட் ஆப் ஆர்டர், மாண்பு
மிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏ.ஐ.டி.யு.சி. தலைவரும்,
எங்கள் தலைவருமான திரு. கே.என். சுந்தரம் அவர்கள் வந்திருக்
கிறார்கள். நம்முடைய காவலர்கள் அவரை அவமானப்
படுத்துகின்ற முறையில் . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. கே. என். சுந்தரம்
அவர்களை எனக்கும் தெரியும், உங்களுக்கும் தெரியும். ஆனால்
வருகிறவர்கள் யார் யார் என்பது காவலர்களுக்கு தெரிந்திருக்க
நியாயமில்லை. இந்தச் சபையைச் சுற்றி ஓரளவிற்குத் தான்
இடம் இருக்கிறது. பார்லிமென்டைப் போல் இங்கே சென்ட்ரல்
ஹால் இல்லை. உறுப்பினர்களைத் தவிர பேரவை மண்டப
அமைப்புக்குள் யாரையும் அனுமதிக்கக் கூடாது என்று நாங்கள்
காவலர்களுக்கு கட்டளையிட்டிருக்கிறோம். இல்லாவிட்டால்
எல்லோரும் உள்ளே வருவார்கள். இதை எல்லோருக்குமே
பொதுவாக எல்லா உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும்
உள்பட சொல்கிறேன். தங்கள் தங்களுக்கு வேண்டியவர்களை
அவர்கள் தங்களது கட்சி அறையிலே சந்திக்கலாம் : அல்லது
தங்களது அலுவலகத்தில் சந்திக்கலாம். பேரவைக்கு அழைத்து
வந்து விடுகிறபோது இதுபோன்ற பிரச்சினை எழும். எனவே
உறுப்பினர்கள் அனைவரும், கட்டுப்பாடாக யாரையும் இங்கு
அழைத்து வராது பேரவைத் தலைவருடன்ஒத்துழைக்க வேண்டும்.

<u>திரு. மு. அம்பிகாபதி :</u> சட்டையைப் பிடித்து இழுக்க
வேண்டிய நெசசிடி என்ன ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மன்னிக்கவும், அது சரி
யல்ல. திரு. கே. என். சுந்தரத்தை எனக்குத் தெரியும். உறுப்
பினர்களைத் தவிர வேறு யார் இங்கே வந்தாலும் கட்டுப்பாட்டுக்
குள் அடங்கிதான் இருக்க வேண்டும். காவலர்களும் தொழிலாளர்
கள்தான் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும்.

[முற்பகல் 10-20]

<u>திரு. இரா. கருப்பையா :</u> அமைச்சரை சந்திக்க வேண்டு
மென்று வருகிறார்கள் ; இங்கு வரக்கூடாதா ?

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சர்களைச் சந்திக்க
வேண்டுமென்றால் அவர்களது அறைக்குச் சென்று சந்திக்க
வேண்டுமே தவிர, பேரவை மண்டபத்திற்குள் வந்து சந்திக்கக்
கூடாது. இப்படி வருகிறவர்களை பேரவையின் 'லாபி'க்குள்
அனுமதித்தால் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பாதுகாப்புக்
கொடுப்பது இயலாது.

திரு. மு. அம்பிகாபதி : வருகிறவர்களை எப்படிச் சொல்லி அனுப்புவது ? பேசிக் 'பிரின்சிபிள்'—அனுமதிக்கப்படுவ தில்லை என்பதையும் நயமாக எடுத்துச் சொல்லுகிற முறை வேண்டாமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழில் நளினமாகப் பேசுவது எப்படி, வல்லமையாகப் பேசுவது எப்படி என்றெல்லாம் சொல்லிக் கொடுக்கலாம் ; காவலர்கள் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதற்குத் தேவையானால் பாடம் கற்றுக்கொடுக் கலாம்.

## 4. அறிவிப்புகள்.

### (அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு கள் திருத்தம் ஏதுமின்றி ஒப்புதல் அளித்துள்ளதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது :—

1. 1980ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1980).

2. தமிழ்நாடு 1980ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முனவடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 19/1980).

3. தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் திருத்தம் சிறப்பு விதித்துறைகள் திருத்தச் சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 20/1980).

### (ஆ) மதுரை-காமராஜ் பல்கலைக்கழகப் பேரவை தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதுரை—காமராஜ் பல் கலைக் கழகப் பேரவையில் (Senate) இச்சட்டப் பேரவையின் சார்பில் உறுப்பினர்களாக இருந்த (1) எஸ். பாலகிருஷ்ணன், (2) வீ. எம். சுப்பிரமணியம், (3) என். தனசேகரன், (4) அ. இரகுமான்கான் ஆகியோரின் பதவிக்காலம் 17-5-1980 ஆம் நாளுடன் முடிவடைவதால், பல்கலைக்கழகப் பேரவையில் ஏற் பட்டுள்ள நான்கு வெற்றிடங்களுக்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து நால்வரைத் தேர்ந் தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு மதுரை-காமராஜ் பல்கலைக்கழகம்



கோரியுள்ளது. பல்கலைக் கழகத்தின் விதிமுறைப்படி பகுதிவாரி அடிப்படையில் (Proportional representation) இத்தேர்வு நடை பெறுவதில்லை.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 29-7-1980 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் சட்ட மன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 30-7-1980 புதன்கிழமை மாலை 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1-8-1980 வெள்ளிக்கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது நான்கு இடங்களுக்கு மேற்படுமாயின் 2-8-1980 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையே, சென்னை கோட்டையில் இருக்கும் பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

### (இ) பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகப் பேரவை தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக்கழகப் பேரவைக்கு ஒரு உறுப்பினரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு பேரறிஞர் அண்ணா பல்கலைக் கழகம் கோரியுள்ளது.

எனவே வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 29-7-1980 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்களைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத் தாள்கள் 30-7-1980 புதன் கிழமை மாலை 3 மணிக்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 1-8-1980 வெள்ளிக் கிழமை மாலை 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது ஒரு இடத்திற்கு மேற்படுமாயின் 2-8-1980 சனிக்கிழமை காலை 9 மணிக்கும் பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையிலிருக்கும் குழுக்கள் கூடும் அறையில் வாக்கெடுப்புநடைபெறும்.

## 5. கவன ஈர்ப்புகள்.

### அரிசனங்கள் சுடுகாட்டிற்குச் செல்லும் பாதை சம்பந்தமான தகராறு.

திரு. இரெ. இராசமாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாயூரம் வட்டம் மாந்தை கிராமத்திலுள்ள அரிசனங்களுக்கும் நன்னிலம் வட்டம் செருதலைக்குடி கிராமத்திலுள்ள அரிசனங்களுக்கும் பிணம் செல்லும் பாதை சம்பந்தமான தகராறு குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், மாயூரம் வட்டத்தில் உள்ள மாந்தை என்ற கிராமம், நன்னிலம் வட்டத்தில் உள்ள செருதலைக்குடி என்ற கிராமத்தை ஒட்டியுள்ள கிராமமாகும். இக்கிராமங்களில் அரிசன கிறித்துவர்கள் வசிக்கின்றனர். மாந்தை கிராமத்தைச் சேர்ந்தவர்கள், நாட்டாறு, வாஞ்சியாறு ஆகியவற்றுக்கு இடையே உள்ள இடுகாட்டிற்கு, பிரேதங்களை எடுத்துச் செல்வது நீண்ட காலமாகவே வழக்கத்தில் இருந்து வருகின்றது. இடுகாட்டிற்குச் செல்வதற்கு, செருதலைக்குடி கிராமத்தை ஒட்டியுள்ள சர்வே எண் 207-ல் உள்ள நிலத்தின் வழியாகச் செல்ல வேண்டும். இந்த நிலம் வாஞ்சியாறு இடுகாட்டுப் பாதைப் புறம்போக்கு என்று பாகுபடுத்தப்பட்டுள்ளது. சமீப காலமாக இருசாராருக்கும் இடையே இடுகாட்டுப் பாதை சம்பந்தமாக மனவேறுபாடுகள் ஏற்பட்டதன் காரணமாக செருதலைக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள், சர்வே எண் 207-ல் உள்ள நிலத்தில் செடிகளை வளர்த்து வேலியமைத்து விட்டனர். மாந்தை கிராமத்தில் யாரேனும் உயிரிழக்கும் சமயங்களில் இப்பகுதியில் பதட்ட நிலைமை உருவாகி, அதிகாரிகள் தலையிட்டு, பிரேத ஊர்வலம், சர்வே எண் 207-ல் உள்ள நிலத்தின் வழியாகச் செல்ல ஏதுவாக, வேலியை அகற்றி ஏற்பாடு செய்ய வேண்டியுள்ளது. இந்தச் சிக்கலுக்கு நிரந்தர வழிகாண, செருதலைக்குடி கிராமத்தினர் போட்டிருந்த வேலியை இருமுறை, பொதுப்பணித் துறை அதிகாரிகள் அகற்றியுள்ளனர். ஆனால், மீண்டும் வேலி போடப்பட்டுள்ளது. கடந்த 23–6–1980 அன்று வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் தலையிட்டு வேலியை நீக்கி, பிரேத ஊர்வலம் ஒன்று செல்ல ஏற்பாடு செய்தனர். அதன் பிறகும் வேலி அமைக்கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக பொதுப்பணித் துறையைச் சேர்ந்த உதவிப் பொறியாளர், நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். இப்பிரச்சினைக்கு நிரந்தரமான முடிவுகாண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது நிலைமை அமைதியாக உள்ளது.

திரு. இரெ. இராசமாணிக்கம் : முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ள அறிக்கையைப் படித்துப் பார்க்கும்போது இந்தத் தகராறு நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிறது என்பது





தெரிய வருகிற உண்மையாகும். நீண்ட நாட்களாக நடைபெற்று வருகிற இந்தத் தகராறு இதுவரை சுமுகமான முறையில் தீர்த்து வைக்கப்படாமல் தொடர்ந்து இந்தத் தகராறு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது 3—3—1980 அன்று ஆரம்பமான தகராறு ஆகும். இரண்டு அரிசனப் பகுதிகளிலும் வசிக்கின்ற அவர்கள் கிறித்தவ வகுப்பைச் சேர்ந்தவர்கள். அவர்கள் செருதலைக்குடி கிராம எல்லையில், பொதுப்பணித்துறை எல்லையில் பத்து அடி தூரம் பிரேதம் செல்லுவதாகவும் அதன் வழியாகச் செல்லக்கூடாது என்றும் செருதலைக் குடியைச் சேர்ந்தவர்கள் தடுத்து வருகிறார்கள். மாந்தை அரிசனத் தெருவிலே உள்ளவர்கள் செல்லக்கூடிய அந்தப் பாதை சுடுகாட்டிற்குச் செல்லக்கூடிய பாதைப் புறம்போக்கு என்று பாகுபாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முறையிலே அவர்கள் அந்தப் பாதைவழியே செல்கிறார்கள். செல்கிறபோது கிட்டத்தட்ட 4 மாத காலமாக அடிதடி தகராறுகள் ஏற்படுகின்றன. பிரேதங்கள் அந்த வழியிலே செல்கிறபோது தகராறுகள் ஏற்பட்டு அதன் காரணமாக பிரேதத்தை அவர்கள் பாதையிலேயே போட்டுவிட்டு ஓடுகிறார்கள். அதற்குப் பிறகு தகவல் அதிகாரிகளுக்குத் தரப்பட்டு அவர்கள் வந்து, போலீசாரை வைத்துக்கொண்டு அந்தப் பிரேதத்தை எடுத்து புதைத்து இருக்கிறார்கள். அந்த சுடுகாட்டுப் பாதைப் புறம்போக்கிலே யார் அத்துமீறி ஆக்கிரமிப்புச் செய்தாலும் அவர்களை அப்புறப்படுத்தி அந்த இடத்தைக் காலி செய்து கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை. அதிகாரிகள் வேலியை அகற்றியதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. மீண்டும் அவர்கள் அந்த வேலியைப் போட்டு இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகள் தொடர்ந்து ஏற்படாமல் இருக்கக்கூடிய முறையிலே அந்தப் பாதையிலே யார் ஆக்கிரமிப்புச் செய்து இருந்தாலும் உடனே அகற்றிட அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ? அங்கே உடனடியாக ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்படுவதற்கும், தகராறுகள் இனிமேல் அப்பகுதி மக்களிடையே ஏற்படாமல் இருக்கக் கூடிய வகையிலேயும் அந்தப் புறம்போக்கு பாதையை காலி செய்து உடனடியாகக் கொடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட அந்த நிலம் வாஞ்சியாறு இடுகாட்டுப் பாதைப் புறம்போக்கு என்று பாகுபடுத்தப்பட்டு உள்ளது. ஆகவே அந்தப் பாதையிலே பிரேதத்தை எடுத்துச் செல்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது. செருதலைக்குடியைச் சேர்ந்தவர்கள் அந்தப் பாதையைத் தடுக்கின்ற முறையிலே வேலியைப் போட்டிருந்தார்கள். அவர்கள் போட்டிருந்த வேலியை இருமுறை, பொதுப்பணித் துறையினர் அகற்றியுள்ளார்கள். ஆனால் மீண்டும் வேலி போடப்பட்டுள்ளது. கடந்த 23—6—1980 அன்று வருவாய்த் துறை மற்றும் காவல் துறை அதிகாரிகள் தலையிட்டு வேலியை நீக்கி, பிரேத ஊர்வலம் ஒன்று செல்ல ஏற்பாடு செய்தனர். அதன் பிறகும் வேலி அமைக்

கப்பட்டுள்ளது. இதன் தொடர்பாக பொதுப்பணித் துறையைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் நன்னிலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார். அதைப்பற்றி நடவடிக்கை எடுக்க காவல் துறையினர் முயற்சித்து வருகிறார்கள். இரு கிராமத் தாருக்கும் சுமுகமான ஒரு ஏற்பாடு செய்ய வருவாய்த் துறை அதிகாரிகள் முயற்சி செய்தனர். செருதலைக்குடி கிராமத்தைச் சேர்ந்தவர்கள் போட்ட வேலியை அவர்கள் அகற்றியுள்ளனர். மீண்டும் வேலியைப் போட்டுள்ளார்கள். இதன் தொடர்பாக பொதுப் பணித் துறையைச் சேர்ந்த உதவிப் பொறியாளர் காவல் துறையிலே புகார் கொடுத்ததன் அடிப்படையிலே அந்தப் புகாரின் மீது காவல் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். இதற்குக் காரணமாக இருக்கிறவர்கள் மீது காவல் துறையினர் சட்டப்படி நடவடிக்கை எடுப்பார்கள், இப்படிப்பட்ட நிலைமை ஏற்படுகிறபோது மீண்டும் அவர்கள் செய்வார்களேயானால் அவர்களுக்கு உரிய தண்டனையை பெற்றுத்தருகிற முறையிலே காவல் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. இரா. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, அவை முன்னவர் அவர்கள் தெரிவித்ததிலிருந்து செருதலைக்குடியைச் சேர்ந்தவர்கள் தான் அத்துமீறல் செய்துகொண்டிருக்கிறார்கள் என்பது நன்றாகத் தெரிகிறது. இருந்தாலும் இரண்டு கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் காவல் துறையினர் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அநியாயம் செய்தவர்கள் மீது மட்டும் வழக்கைத் தொடர்ந்து, தவறு செய்யாதவர்கள் மீது போடப் பட்டிருக்கிற வழக்கை வாபஸ் பெறவேண்டிய நடவடிக்கைகளை உடனடியாக அரசு எடுத்துக் கொள்ளவேண்டும். ஆக்கிரமிப்பை அதிகாரிகள் அகற்றியிருக்கிறார்கள். அப்படி அதிகாரிகள் அப்புறப்படுத்தியிருந்தாலுங்கூட அவர்கள் மீண்டும் வேலியைப் போட்டு இருப்பது மட்டுமல்ல, மாந்தை கிராமத்தைச் சேர்ந்தவர்கள்தான் அந்த வேலியை உடைத்தார்கள் என்று அவர்கள் மேல் யாதாஸ்து போட்டு இருக்கிறார்கள், அதன் காரணத்தினால் மாந்தை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீது போலீசார் வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள், அந்த வேலியைப் போட்ட பிறகு அதை பொதுப் பணித் துறை அதிகாரிகள் தான் வெட்டினார்கள் என்று சொன்னதற்குப் பிறகும் அந்த வழக்கு இருந்துகொண்டிருக்கிறது. இப்படித் தவறான அடிப்படையிலே தவறான பிராது காவல் நிலையத்திலே கொடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படிப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, உடனடியாக அந்தப் புறம்போக்கு நிலத்திலே உள்ள பாதையைக் காலிசெய்ய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாந்தை கிராமத்தைச் சேர்ந்தவர்கள் அந்தப் புறம்போக்குப் பாதை நிலத்தின் வழியாக பிரேதத்தை எடுத்துச் செல்வதற்கு உரிமை படைத்தவர்கள். அந்த உரிமையின் அடிப்



படையில் புகார் செய்யப்பட்டிருக்கிறது. காவல் துறையினர் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருப்பதாக அவர்கள் சொன்னார்கள். எந்த அடிப்படையிலே இரண்டுபேர்கள்மீதும் வழக்குத் தொடரப் பட்டிருக்கிறது என்ற தகவல் நமக்குத் தெரியாது.

[முற்பகல் 10-30.]

அதை வழக்குகள் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

மற்றொரு வழக்கு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த வழக்கிலும் நீதி மன்றத்திலே நியாயம் பெற வேண்டுமே தவிர, அந்த வழக்கை விடுவதா, எடுத்துக் கொள்வதா என்பதைப் பற்றி இங்கேயிருக்கின்ற நிலைமைகளில் செல்ல முடியாது. உரிமையைக் காப்பாற்றுவதற்காகப் புகார் செய்யப் பட்டது. அதன் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

வழக்குகளைப்பற்றித் தனியாக அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தாலும், வழக்கு மன்றங்களிலே நீதி பெறுகின்ற நிலை வருகிறபொழுது அதற்குரிய நியாயம் கிடைக்கும்.

ஆ. சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சி. ஆர் தகடுகள் வழங்குவதை நிறுத்தியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து, திருவாளர்கள் ஏ. டி. குலசேகர், மா. சின்னராஜ், கே. ரமணி ஆகியோர் ஒரு அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை குறித்துக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். இப்பொழுது திரு ஏ. டி. குலசேகர் அவர்கள் அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்கள்.

திரு. ஏ. டி. குலசேகர்: தலைவரவர்களே, ''சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) சி. ஆர். தகடுகள் வழங்குவதை நிறுத்திவிட்டதால், சிங்காநல்லூர் மற்றும் கோவை கிழக்குப் பகுதியிலுள்ள சிறுதொழில் பிரிவுகள் மூடப்படும் நிலைமையில் இருப்பதும், அவைகளில் பணிபுரியும் தொழிலாளர்களது அச்சம் குறித்த.' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஊரகத் தொழில்அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, மாநிலத்தில் எஃகு, மேசை, நாற்காலி போன்ற பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள 220 சிறுதொழில் பிரிவுகள் சிட்கோ நிறுவனத்திடம் மூலப்பொருட்களுக்காக பதிவு செய்துள்ளன

இவைகளின் சி. ஆர். (Cold Rolled) தகடுகளின் தேவை ஆண்
டொன்றுக்கு 17,050 டன்களாகும். ஆனால் இவ்வாண்டிற்கு
மைய அரசு ஒதுக்கியுள்ள அளவு 6,250 டன் சி. ஆர்.
தகடுகளாகும். ஆனால் இவ்வாண்டின் முதல் காலாண்டில் இந்திய
எஃகு அதிகாரகுழுவிடமிருந்து பெறப்பட்ட அளவு 103 டன்களே
ஆகும். மிகக் குறைந்த அளவே சி. ஆர். தகடுகள் வரப்பெற்ற
தால் எஃகு மேசை நாற்காலி போன்ற பொருட்கள் தயாரிக்கும்
சிறுதொழில் பிரிவுகளின் தேவையை தமிழ்நாடு சிறுதொழில்
வளர்ச்சி நிறுவனத்தினால் (சிட்கோ) பூர்த்தி செய்ய முடிய
வில்லை.

இந்த தொழில் பிரிவுகள் சி. ஆர். தகடுகள் பற்றாக்
குறையினால் உற்பத்தித்திறனில் 60 முதல் 75 சதவீதம்தான்
உற்பத்தி செய்கின்றன. இவைகள் மற்ற மாநிலங்களின் வெளிச்
சந்தையிலிருந்து பொருட்கள் பெறுகின்றன எனத் தெரிகிறது.
ஆனால் எந்த ஒரு தொழில்பிரிவும் மூடப்படவில்லை.

மின்சார வெட்டின் காரணமாக ஒருங்கிணைந்த உருக்குத்
தொழிற்சாலைகளில் முதல் காலாண்டில் உற்பத்தி குறைந்த
அளவில் இருந்ததினால், குறைந்த அளவே தகடுகள் அனுப்ப
முடிந்தது. என்று இரும்பு, எஃகு கட்டுப்பாட்டு அலுவலகத்தின்
அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள். மேலும் உற்பத்தி பெருகி
யதும், சி. ஆர். தகடுகள் அதிக அளவில் அனுப்புவதாக
உறுதியளித்துள்ளனர். ஆகஸ்ட் மாதத்திற்குள் நிலைமையில்
முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநிலத்
திற்கு அதிக அளவில் இரும்பு, எஃகு பொருட்கள் ஒதுக்கீடு
வேண்டுமென்று மைய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. ஏ. டி. குலசேகர்: பேரவைத் தலைவரவர்களே,
1980 ஏப்ரல் முதல் தற்போது வரை சி. ஆர். தகடுகள் சிட்கோவி
னால் வழங்கப்படவில்லை. அதனால், ஸ்டீல் பர்னிச்சர் உற்பத்தி
யாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டும், பல்லாயிரக்கணக்கான
தொழிலாளர்கள் வேலையிழந்தும், தொழிலாளர்கள் பெரிதும்
பாதிக்கப்பட்டும் இருக்கின்றனர். அரசாங்கம் அந்தத் தொழி
லாளர்களுக்கு நிதி உதவி செய்யவும், சி. ஆர். தகடுகள் உடனடி
யாகக் கிடைக்கவும் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவ
ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனப்படுத்தியபடி
அந்தப் பிரச்னை இன்றைக்கு சிங்காநல்லூர், கோவை கிழக்கு
போன்ற பகுதிகளில் இன்றைக்கு நிலவி வருகிறது. அரசு அதிலே
கவனம் செலுத்தி தக்க ஏற்பாடுகளை இன்றையதினம் செய்து
கொண்டு வருகிறது.



நடப்பு ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அளவு 29,000 டன்கள் என்றாலும் கூட நாடு முழுவதும் மொத்த ஒதுக்கீடான 5,70,000 டன்கள் ஒதுக்கீட்டில், மொத்த ஒதுக்கீட்டில் 5 சதவீதம் தான். தமிழ்நாட்டிலுள்ள சிறுதொழில்களின் எண்ணிக்கையும் அவைகளின் உற்பத்தி அளவினையும் கணக்கிட்டுப் பார்க்கின்றபொழுது தமிழ்நாட்டின் தேவை மொத்த ஒதுக்கீட்டில் 10சதவீதம் ஆகும். இதனால் இந்தக் குறைந்த ஒதுக்கீடு பெறும் பிரச்னையாக இருக்கின்ற காரணத்தினாலே, சிங்காநல்லூர் கோவை கிழக்கு போன்ற பகுதிகளிலே, அந்தப் பகுதிகளிலே இருக்கின்ற சிறு தொழில் செய்கின்ற அந்த நண்பர்களுக்குப் போதிய உதவிகளைச் செய்ய முடியவில்லை என்றாலும் கூட, இதுபற்றி மைய உருக்கு அமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களிடமிருந்து ஒரு நேர்முகக் கடிதம் விரைவில் அனுப்பபடும். ஏற்கனவே இதுபற்றி 40,000 டன்கள் இம்மாநிலத்திற்கு ஒதுக்குமாறு சிட்கோ, மைய அரசையும், இரும்பு எஃகு கட்டுப்பாடு அலுவலரையும் கேட்டுக்கொண்டிருக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு எம். சின்னராஜ்: பேரவைத் தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உள்ள சிறுதொழில்களின் எண்ணிக்கை, அவற்றிற்குத் தேவைப்படும் மூலப்பொருட்கள், அதற்குமத்திய அரசாங்கம் செய்யும் ஒதுக்கீடு பற்றிய விவரத்தையும், அதேபோல் கோவை மாவட்டத்திலும், தமிழ்நாட்டிலும் உள்ள வார்ப்படத் தொழில்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும், அதிலே கோவைக்கு எவ்வளவு தேவைப்படுகிறது, மூலப்பொருட்களுக்கு மத்திய அரசை நம்பி எவ்வளவு தொழில்கள் இருக்கின்றன என்பதையும் அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் இந்த அறிக்கையிலே அந்தத் தொழில் நடத்துபவர்கள் வெளி மாநிலங்களிலேயிருந்து இந்த மூலப்பொருட்களை வாங்கித் தொழிலை நடத்தி வருகிறார்கள் என்று கூறப்பட்டிருக்கிறது. அப்படி வாங்குவதால் அந்தப் பொருட்களின் விலை பல மடங்கு உயருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, வெளி மாநிலங்களுக்கு அவர்களுக்குத் தேவைப்படும் அளவிற்கு மேல் மத்திய ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா? அப்படி ஒரு நிலை இருப்பதால் தானே வெளி மாநிலங்களிலிருந்து நமக்குக் கிடைக்கிறது. ஆகவே மத்திய அரசாங்கம் இந்த மூலப்பொருட்களை விநியோகிப்பதில் ஏதாவது முறைகேட்டிற்கு ஆட்படுத்தப்பட்டிருக்கிறதா என்பதை அமைச்சரவர்களின் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு தலைவர் அவர்களே, கோவை, சிங்காநல்லூர், கோயமுத்தூர் கிழக்கு போன்ற பகுதிகளில் 101 சிறு தொழிற்சாலைகள் இன்றைக்கு இயங்கிகொண்டிருக்கின்றன. அவைகளுக்குத் தேவைப்படும்

சி. ஆர். தகடுகள் மாதம் ஒன்றுக்கு 2,800 டன்கள். அவைகளில்
பணிபுரியும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 1,050. அவைகளில்
உற்பத்திக் குறைவினால், 1—4—1980 முதல் தகடுகள்
வனத்தால் சி.ஆர். தகடுகளை விநியோகிக்க சிட்கோ நிறு
ஏற்கனவே, மாண்புமிகு உறுப்பினர் இயலவில்லை.
யதைப்போல், மாநில அரசு மைய அரசோடு ஒருவர் கவனப்படுத்தி
அதிக அளவு ஒதுக்கீட்டைப் பெறமுயன்று தொடர்புகொண்டு
என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கொண்டிருக்கிறது
கொண்டு வரவிரும்புகிறேன். மேலான கவனத்திற்குக்

<u>திரு. கு. ரமணி :</u> தலைவரவர்களே,
வைத்துள்ள அறிக்கையில் தகடுகளின் தேவை அமைச்சரவர்கள்
17,050 டன்களாகும் என்று போடப்பட்டிருக்கிறது. ஆண்டொன்றுக்கு
கோவைக்கு மட்டும் தானே ? இது
வேண்டுமென்று இப்பொழுது கோவைக்கே 30,000 டன்
வருகிறது. ஆனால், மைய அரசு சொல்லப்பட்டதிலிருந்து தெரிய
டன் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒதுக்கியுள்ள அளவு 6,000
அத்தாரிட்டி நமக்குக் கொடுத்தது, அதிலே, ஸ்டீல்
டன் என்றும் இருக்கிறது. கடைசியிலே, 103
விவரங்களில் தெரிவிக்கப்பட்டதற்கும், அப்படியானால், இந்தப் புள்ளி
வித்ததற்கும் ஏன் இவ்வளவு வித்தியாசம் அமைச்சரவர்கள் தெரி
வேண்டும். என்பதை தெளிவாக்க

தமிழகம் முழுவதும் மேஜை, நாற்காலிகள் போன்று, எல்லா
குடும்பங்களிலும் உபயோகப்படுத்துவதற்கு,
களை உற்பத்தி செய்து வளர்ந்து வரக்கூடிய இந்த சாதனங்
தேவையான மூலப்பொருள் கிடைக்காமல் இந்தத் தொழில்,
ருக்கிறது. தமிழ் நாட்டிற்கு மிகக் குறைவாக நசிந்து கொண்டி
ருப்பதால், அதை அதிகப்படுத்த கோட்டா ஒதுக்கீயி
வடிக்கைஎடுத்தது; என்ன முன்முயற்சி தமிழக அரசு என்ன நட
நடவடிக்கை எடுத்து அதைப் பெறப் எடுத்து, எந்த முறையிலே
தொழிற்சாலைகளின் தேவை முழுவதையும் போகிறார்கள். அந்தத்
நடவடிக்கை மேற்கொள்ளப் பெறுவதற்கு என்ன
விரும்புகிறேன். போகிறார்கள் என்பதை அறிய

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு
தலைவர் அவர்களே, நடப்பு ஆண்டிற்கு
29,000 டன்கள். அதில் முதல் 14 ஒதுக்கியிருப்பது
5,740 டன்னில், 1,050 டன்கள்தான் ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட
இதுபற்றி சம்பந்தப்பட்ட கிடைக்கப்பெற்றுள்ளது.
டத்திலே, அது அதிகாரிகளிடத்திலே, மைய அரசி
தொடர்புகொண்ட சம்பந்தப்பட்ட அந்த
உற்பத்திக் நேரத்திலே, மின்சார அமைச்சகத்திலே
நிறைவேற்ற குறைவாக இருக்கிறது. வெட்டு காரணமாக,
அலுவலர் இயலவில்லையென்று இன்றைய ஒதுக்கீட்டை
தெரிவித்துள்ளார். இரும்பு எஃகுச் சட்டுப்பாடு
உற்பத்தி பெருகியதும் அதிக



அளவு அனுப்புவதாக உறுதி அளித்துள்ளார். ஆகவே ஆகஸ்ட்
மாதத்திலே, நல்ல முறையில் முன்னேற்றம் ஏற்படும் என்று
எதிர்பார்க்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னதைப்
போல், சம்பந்தப்பட்டவர்களிடம் முதலமைச்சர் கடிதம்
மூலமாகவும், மற்றும் அலுவலர் மூலமாகவும் அதிக அளவு
வேண்டுமென்று தொடர்பு கொண்டுள்ளார். நமக்குத் தேவை
40,000 டன்கள். ஆனால், 29,000 டன்கள்தான் ஒதுக்கியிருக்கி
றார்கள். என்றாலும், 29,000 டன்களிலும் 5,700 டன்கள்
தான் முதல் 3 மாதத்திற்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அதில்கூட
1,050 டன்தான் நமக்கு வந்திருக்கிறது. எனவே, அவைகளை
யெல்லாம் மனதிற்கொண்டு நல்ல முயற்சியை அரசு எடுத்துக்
கொள்ளும் என்பதைச் சொல்ல விரும்புகிறேன். ஆகஸ்டு
மாதத்தில் அந்த முயற்சியால் நல்ல முன்னேற்றம் ஏற்படும்
என்று சொல்லவிரும்புகிறேன்.

<u>திரு. ஏ. டி. குலசேகர் :</u> பேரவைத் தலைவர் அவர்களே,
சி. ஆர். தகடுகள் சிட்கோ மூலம் கிடைக்காத காரணத்தாலே,
வெளி மார்க்கெட்டிலே வாங்க முடியாத காரணத்தாலே,
மூடப்பட்டுள்ள தொழிற்சாலைகளுக்கு அரசாங்கம், சி. ஆர்.
தகடுகளைக் கடனாகக் கொடுத்து, தொழிற்சாலைகளை மீண்டும்
நடத்திட ஆவன செய்ய, கடன் கொடுக்கும் எண்ணம் அரசுக்கு
உண்டா என்று கேட்க விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> தலைவர்
அவர்களே, சி. ஆர். தகடு கிடைக்கவில்லையென்பது தான்
பிரச்னை, கிடைக்காத நிலையிலே கொடுக்க இயலவில்லை.
அப்படியிருக்கும் போது, ஆலைகளுக்குக் கடன் கொடுக்கின்ற
பிரச்னையே எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர்
அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### அ. பயிரிடு குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> பேரவைத்
தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு பயிரிடும்
குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச்
சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி
கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

[1980 ஜூலை 24

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

ஆ. புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1980.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் பயிரிடும் குத்தகைதாரர்கள் குத்தகை பாக்கிகள் (நிவாரணம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[முற்பகல் 10.40]

வரவு செலவுத் திட்டம், 1980-81—வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண். 21—மீனளம்.

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல்.

கோரிக்கை எண். 21.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரையின் மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 21-மீனளம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,16,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெறவேண்டும்.''



1980 ஜூலை, 24]

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 21-மீனளம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,16,60,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. உ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, பல ஊர்களில் உள்ள ( Ice plant ) நஷ்டத்தில் நடைபெறுவது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 21 மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,16,60,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவர் அவர்களே, கடலில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டம் அமுல் படுத்தாமலிருப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டு தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின் கீழ்ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,16,60000,-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

திரு. செ. சிவசாமி: தலைவர் அவர்களே திருப்பாலைக்குடியில் மீனவர்களுக்கு புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வலைகள் சப்ளை செய்ததை நிறுத்தி வைத்திருப்பது பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

'மானியக் கோரிக்கை எண். 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ . 3,16,60,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.''

கோரிக்கை எண் 35.

மாண்புமிகு டாக்டர். இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநரின் பரிந்துரையின்மேல், நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன.

''மானியக் கோரிக்கை எண். 35—நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,24,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.

திரு. பெ. சு. திருவேங்கடம் : தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க', நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 35-நுகர் பொருள் வழங்கல்'' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,24,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. கே. எம். தங்கமணி : தலைவர் அவர்களே, 'திண்டிவனம் தொகுதி பாதிரிராப்புலியூர் கிராமத்தில்(மைலம்) அமுதம் அங்காடி திறப்பது குறித்து விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண். 35-நுகர்பொருள் வழங்கல்'' என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,24,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

திரு. என். வரதராஜன் : தலைவர் அவர்களே, 'அரிசி, பருப்பு, மண்ணெண்ணை, சமையல் எண்ணை, கண்ட்ரோல் துணி, சீனி, போன்ற அத்தியாவசியப் பொருட்களை கட்டுப்படுத்தப்பட்ட நியாயமான விலையில் மக்களுக்குக்கிடைக்க மாநில அரசு, மத்திய அரசிடம் பெற மனியம்வேண்டியது பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

' மானியக் கோரிக்கை எண் 35-நுகர் பொருள் வழங்கல்'' என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,24,18,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, ''நெல்லுக்கு ரூ. 150 குவிண்டாலுக்கு நிர்ணயம் செய்யவேண்டும் என்பது பற்றி விவாதிக்க'' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

''மானியக் கோரிக்கை எண் 35-நுகர் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 5,24,18,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன.





மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளம் பற்றிய விளக்கக் குறிப்புகளும், நுகர் பொருள் வழங்கல் பற்றிய விளக்கக் குறிப்புகளும், உணவு நிலைமை பற்றிய கொள்கைக் குறிப்புகளும் பேரவை முன் வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நடவடிக்கை குறிப்பிலே இணைத்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன். £

திரு. ப. பொன்னுரங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் நம்முடைய நிதி அமைச்சர் அவர்களால் வைக்கப்பட்டிருக்கிற மீனளம், நுகர்பொருள் ஆகிய மானியங்கள் மீது நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை வைத்திட விழைகிறேன்.

தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து வாதங்கள் முடிந்து, அவை முன்னவர் அவர்கள் பதில் அளிக்கின்ற நேரத்தில், தேர்தல் நேரத்தில் தந்த வாக்குறுதிகளை நீங்கள் நிறைவேற்றவில்லை என்ற குற்றச்சாட்டை பல் வேறு எதிர் தரப்பில் இருந்து தலைவர்களும் மற்ற உறுப்பினர்களும் வைத்த நேரததில். ஊட்டச்சத்துக்கு 150 ரூபாய் வறுமைகளும் கோட்டின்கீழ் உள்ளவர்கள் 5 கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ இனாம் தருவது போன்ற கோரிக்கைகளை எல்லாம் நிறைவேற்றவில்லை என்று வாதத்தை வைத்த நேரத்தில் அவை முன்னவர் அவர்கள் அவர்களுக்கே உரித்தான வாத வல்லமையால், மிக சாமர்த்தியமாக அண்ணாவை துணைக்கு அழைத்தார்கள்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

நான் அவர்களை மெத்த பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஹெல்த் மினிஸ்டர் அவர்கள் கூட இங்கே அவர்களுடைய மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் அளிக்கிற நேரத்தில் வருத்தம் தெரிவித்தார்கள். வேதனைப்பட்டார்கள் நான் எதிர் தரப்பில் இருந்தபோது எதையெதையோ எடுத்து வைத்தேன். ஆனால் ஆளும் தரப்பில் வந்த பினனாலே தான் "அட்மினிஸ்ரேடிவ் எக்ஸ்பீரியன்ஸ்'' பைனான்சியல் பொசிஷன்'' ஆகியவற்றையெல்லாம் பார்க்கின்ற போது அப்படிச் சொன்னவற்றையெல்லாம் செய்ய முடியாமல் இருக்கிறதே என்று வேதனையோடு தெரிவித்துக்கொண்டார்கள்.

---

[£854, 872-ம் பக்கங்களில் இணைப்பு I, II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.]

அதைப்போன்று தான் பேரறிஞர் அண்ணா அவர்களும் நிர்வாகத்தில் இல்லை. உலக அரசியலை அறிந்தவர்கள், நாட்டிலே நாகரிகமான அரசியல், தெளிவான அரசியல், பாமரரும் புரிந்துகொள்ளும் அரசியல் உருவாக்கித் தந்தவர், இன்னும் சொல்லப்போனால். உங்களையும் எங்களையும் உருவாக்கியவர். அப்படிப்பட்ட அண்ணா அவர்கள், அத்தகைய பேரறிஞர் அண்ணா அவர்கள் நிர்வாகத்தில் இல்லை. ஆகையால் மக்களுக்குச் செய்யவேண்டும் என்ற உணர்வில் அத்தனை மக்களுக்கும் நன்மை செய்யவேண்டும் என்ற உணர்வில் தேர்தல் அறிக்கையில் அல்ல, தேர்தல் காலத்தில் அந்த வாக்குறுதியைச் சொன்னார்கள் வெளியீட்டைச் செய்தார்கள். படி அரிசித் திட்டம் அறிவித்தார்கள். அதைச் சாதகமாக அவை முன்னவர் அவர்கள் பயன்படுத்திச் சொன்னார்கள். அண்ணா அவர்கள் படியரிசி போடுகிறேன் என்று சொன்னார்கள். இங்கே வந்தபின் அது முடியவில்லை. முனிசிபாலிட்டிக்குப் போடலாமா என்று பார்க்கிறேன் என்று பார்த்து, அதுவும் முடியவில்லை என்று அறிந்தபின், சென்னைக்கும், கோவைக்கும் போடலாம் என்று பார்க்கிறபோது, அனைவருக்கும் முடியாது என்று அறிந்து, ஒரு குறிப்பிட்ட வருமானத்தில் உள்ளவர்களுக்குப் போட்டார்கள். அதனுடைய அர்த்தம் என்னவென்றால், உணர்வுக்கு உருவம் அளித்தார்கள் என்று அவை முன்னவர் அவர்கள் கோடிட்டு காட்டினார்கள்.

நான் இந்த நேரத்தில் மெத்தப் பணிவோடு அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் 9 ஆண்டுகாலம் நிர்வாகத்தில் இருந்தவர்கள். இந்த மாநிலத்தின் நிதி நிலை உங்களுக்குத் தெரியும். நீங்கள் பொதுச் செயலாளராக இருந்து தான் தேர்தல் அறிக்கையை இந்தச் சட்டமன்றத் தேர்தல் போது தயாரித்து வெளியிட்டு இருக்கிறீர்கள். அது மட்டுமல்ல, 2½ ஆண்டுகாலம் நீங்கள் ஆட்சி செய்து இருக்கிறீர்கள். அந்த வகையிலும் இந்த மாநிலத்தின் நிதி நிலை தெரியும். அப்படித் தெரிந்து இருந்தும் வேண்டுமென்றே மக்களை ஏமாற்ற, பொது மக்களை ஏமாற்ற இப்படிப்பட்ட அறிக்கையை தந்துவிட்டு, இங்கே வந்து அண்ணா அவர்களைத் துணைக்கு அழைத்துக்கொள்வது நியாயம் அல்ல என்பதை மெத்தப் பணிவோடு நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் புள்ளி விவரத்தில், என்னைப் பொறுத்தவரையில் சொல்லப்போனால், நல்ல புலி, இல்லை என்று மறுக்க முடியாது. அவர் நான் மேடைகளில், மாநாடுகளில் அவர் பேச்சை 20—25 ஆண்டு காலமாக கேட்டு அறிந்தவன், அது மட்டுமல்ல அவர் எழுதிய எழுத்துக்களை நான் கூர்ந்து படித்து இருக்கிறேன். ஏனெனில் அப்படிப்பட்டவர்கள் அவர் பேரில் வைக்கபபடுகின்ற மானியக்





கோரிக்கைகளில் வருகின்ற புள்ளி விவரங்களில் எப்படி புத்தகத்திற்குப் புத்தகம் முரணான புள்ளி விவரங்களைக் காட்டுவதாக அமைந்து இருக்கிறது என்பதை மெத்தப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

நான் சொல்வதை அவை முன்னவர் அவர்கள் குறித்துக் கொள்ளவேண்டும். 1980-81-ம் ஆண்டுக்கான பட்ஜெட் வைக்கிறபோது தமிழகத்தில் உள்ள மீனவ கிராமங்களின் எண்ணிக்கை 214 கிராமங்கள். இந்த மீனவர்களுக்காக நன்மை செய்ய இருப்பவர்கள், குறிப்பாக எத்தனை கிராமங்கள், எத்தனைக் குடும்பங்கள் என்பதைத் தெரிந்துவைத்து இருந்தாலே தான் சீரான முறையில் நன்மை செய்ய முடியும். அந்த எண்ணிக்கையே உங்களுக்குச் சரியாகத் தெரியவில்லை. அப்படி இருக்கிற நிலையில் நீங்கள் மீனவ நண்பனாக ஆகப்போவதாகச் சொல்கிறீர்கள். அதற்காகத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். 1980-81ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையை அவை முன்னவர் அளிக்கிறபோது மீனவ கிராமங்களின் எண்ணிக்கை 214 என்று சொல்லியிருக்கிறார்கள் இது 2-ம் தேதி. ஆனால் 23-ம் தேதி வருகின்ற பாலிசி நோட்டில் 240 கிராமங்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது, இந்த அதிகப்படியான 26 கிராமங்கள் இந்த 22 நாட்களில் திடீரென்று வந்துவிட்டதா அல்லது புரட்சித்திட்டம் ஏதாவது போட்டீர்களா என்பதை தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 10.50]

இந்த அளவுக்கு முன்னுக்குபின் முரணான புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறீகள்.

அதுமட்டுமல்ல, நீங்கள் மனளத்தின்மீது மானியம் கோரியிருக்கிறீர்கள். இங்கே ரூ. 3,16,60,000 கேட்டிருக்கிறீர்கள். இங்கே எந்த அளவுக்கு தொகை கேட்கிறீர்களோ அந்த அளவுக்குத்தான் நீங்கள் செலவழிக்க முடியும்; ஆகவே அனைத்து இடங்களிலும் இதே தொகை தான் வரவேண்டும். இந்தத் தொகையைத்தான் நீங்கள் செலவிட முடியும். இந்த அறிக்கையிலே நீங்கள் கேட்டிருப்பது 3,16,60,000 ரூபாய். ஆனால் இந்த ஆண்டு பட்ஜெட் மெமரண்டத்தில் இருப்பது 3,16,70,000 ரூபாய், இந்த 10,000 எங்கிருந்து வந்தது? இதை இந்த அவையினுடைய அனுமதி இல்லாமல் நீங்கள் செலவிட போகிறீர்களா என்ற கேட்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொன்று, சப்ளிமெண்டரி என்று அடுத்து கொண்டு வருவீர்களோ என்னவோ எங்களுக்குத் தெரியாது. ஆனால் புள்ளிவிவரம் இவ்வளவு மோசமாக இருக்கிறது. 'ஃபிஷரீஸ் பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில்' இந்தத் தொகை 4,14,47,000 என்று கொடுக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி

ரூபாய் ஏறியிருக்கிறது. இந்த அவையின் அனுமதி வாங்காமல்
நீங்கள் இந்த ஒரு கோடி ரூபாயை செலவு செய்யப்போகிறீர்களா
என்று கேட்க விரும்புகிறேன்.

நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். நம்
முடைய அவை முன்னவர் அவர்கள் துருவித் துருவி பார்ப்பதில்
வல்லவர். அவருக்குத் துணையாக மத்திய அரசாங்கத்தை
அழைக்கக்கூடும். அதுவும் எங்களுக்குத் தெரியும். ஆனால்
அந்த அளவுக்கு இந்த அறிக்கையில் தெளிவாகச் சொல்லாமல்
எங்கோ ஒரு மூலையில் சொருகியிருப்பதாக நீங்கள் சொல்ல
லாம். துருவிப் பார்த்தால் அதிகாரிகள் சொல்வார்கள்.
இப்படி முன்னுக்குப்பின் முரணான புள்ளிவிவரங்களைத் தருவது
சரிதானா, முறைதானா என்று அவை முன்னவர் அவர்களை
கேட்க விரும்புகிறேன்.

இனி வருகின்ற பட்ஜெட்டில், டிமாண்டில் எல்லாம்
எங்களுடைய பேராசிரியர் சொல்வது மாதிரி— சரியாக,
முன்னுக்குப்பின் முரண்பாடு இல்லாமல், முறையாக, ட்ரான்ஸ்
லேஷன் எல்லாம் கூட சரியாக இருக்கக்கூடிய அளவுக்கு அவை
முன்னவர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

தலைவரவர்களே, அடுத்து ஒன்று, நம்முடைய மீனளத்
துறை அமைச்சர் அவர்கள் இந்த மானியத்திற்கு 3,16,60,000
ரூபாய் கேட்டிருக்கிறார்கள். இதை யாருக்காக கேட்கிறார்
கள்? ஏழை கட்டுமர மீனவர்கள் வாழ. இருக்க குடிசை
இல்லாமல், உடுக்க உடை இல்லாமல், தலையிலே தேய்க்க
எண்ணெய்க்கு வழியில்லாத அரசாங்கத்தின் உதவியை ஆவ
லோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிற அந்த ஏழை மீனவர்
களுக்கு இந்த மானியமா என்றால் இந்த 3,16,60,000
ரூபாயில் பாதியாவது செய்திருக்கலாம். அதுகூட இல்லை.
1/4 பங்கு செய்திருக்கலாம் அல்லது 1/5 பங்காவது செய்திருக்க
லாம். செய்திருக்கிறார்களா என்றால் இல்லை. இந்த
3,16,60,000 ரூபாயில் நிர்வாகச் செலவுக்கு மட்டும்— வித்தவுட்
மெட்டீரியல்ஸ் அண்ட் இக்கிப்மெண்ட்ஸ் 2,88,00,000-ஐ நீங்கள்
எடுத்துவிடுகிறீர்கள். 2,88,00,000-ஐ எடுத்துவிட்டு மிச்சமா
வது சென்று சேருவதற்கு ஆவனச் செய்யப்படுகிறதா என்றால்
அதுகூட இல்லை. சில நேரங்களில் இந்த கார்ப்பரேஷனுக்குத்
தந்து விடுகிறீர்கள்.

அது எந்த கார்ப்பரேஷன் தெரியுமா? மீனவனின் கழுத்தைப்
பிடித்து நெரித்துக்கொண்டிருக்கிற, அவனுடைய மென்னியை
நெரித்துக்கொண்டிருக்கிற 'ஃபிஷரீஸ் கார்ப்பரேஷனுக்கு' தந்து
உதவுகிறீர்கள். கடைசியாகப் பார்த்தால் இந்த மானியத்தி
னாலே மீனவனுக்கு அவன் கட்டுமர மீனவனாக இருந்தாலும்
சரி அல்லது லாஞ்ச் மீனவனாக இருந்தாலும் சரி-ஒரு பைசா





கூட ஆதாயம் உண்டா என்றால் என்னைப் பொறுத்தமட்டில்
இல்லை என்றுதான் நான் சொல்வேன். கேட்டிருக்கும்
பணம் அனைத்தும் நிர்வாகத்திற்கு அல்லது கார்ப்பரேஷ
னுக்குத் தான்; மீனவனுக்கு அல்ல. இந்த வகையிலே இந்த
மானியம் உருப்படாத ஒன்றாக இருக்கிறது என்பதை சுட்டிக்
காட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, உங்களுடைய பாலிசி நோட்டில் நீங்கள் சொல்லி
யிருக்கிற பாலிசிக்கு வருகிறேன். பெரும் தலைவர் காமராஜர்
காலத்தில், காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் விசைப்படகு கொண்டு
வரப்பட்டது. அப்போது வந்தது எல்லாம் ஹை பவர் விசைப்
படகு அல்ல. எல்லாம் லோ பவர் விசைப்படகுதான்.
20 எச்.பி., 16 எச்.பி., 24 எச்.பி., 30 எச்.பி. என்று குறைந்த
ஹார்ஸ் பவர் உள்ள போட்டுகள்தான் காங்கிரஸ் ஆட்சிக்
காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அன்றைக்கு 'ட்ராலிங்'
கிடையாது, கில்நட்தான் 20 ஆண்டுகளுக்கு முன்னால் கொண்டு
வரப்பட்டது. காரணம் அதை 'ட்ரால்' பண்ணமுடியாது.
அப்படியே டிரால் பண்ணுவது என்றாலும் அதாவது சிறிய
படகான அந்த பி.பி. என்று சொல்லப்படுகின்ற பேப்லோ
போட்டாக இருந்தாலும ஐ.பீ. என்று சொல்லப்படுகின்ற
இல்லுயூஷன் போட்டாக இருந்தாலும் அவற்றை வைத்துக்
கொண்டு டிரால் பண்ணுவதால் தான் அவர்களால் அதிக
தூரம் செல்ல முடியவில்லை. எனவே கட்டுமரத் தொழி
லாளிக்கும் விசைப்படகு காரர்களுக்கும் கட்டாயம் சர்ச்சை
ஏற்படுகின்றது. காரணம் அவர்களால் 10 பாவம், 15 பாவம்
மேக்சிமம் ஜப்பான் இன்ஜினாக இருந்தால் 20 பாவம்தான்
போக முடியும். ஆகவே அவர்கள் கட்டுமரக்காரர்கள் எங்கே
நின்று பிடிக்கிறார்களோ அந்தக் கரையோரம்தான்
நின்றுகொண்டு மீன் பிடிக்கவேண்டிய அவல நிலை இருக்கின்றது.
இதனால் சர்ச்சை ஏற்படுகின்றது. இப்படிப்பட்ட சிறிய
படகு முன்பு காமராஜர் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.
இன்ட்ரோடக்ஷன் அவ்வளவுதான், ஆகவே அதைக் குறை
சொல்லவில்லை. குறைந்த ஹார்ஸ் பவர் உடைய
போட்கள் அவை. அவற்றிலே துணியை காய வைப்பது
போல் வேஷ்டியைக் காய வைப்பதுபோல் இழுத்து கட்டி
விடுவார்கள். தேட் ஸ் கால்ட் கில்நட். அப்படிப்பட்ட
படகுகளை 25 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகம் செய்தார்கள்.
ஆனால் நமது காலம் இப்போது விஞ்ஞானம் வளர்ந்திருக்கின்ற
காலம். அப்ராப்ரையேட் டெக்னாலஜி எல்லாம் உருவாக்கி
இருக்கின்றோம் என்று சொல்லுகின்ற இந்த அரசின் ஆட்சியிலே,
நீங்கள் பின்னோக்கிச் சென்று இருக்கிறீர்கள். ஆனால் எங்க
ளுடைய தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள்
இவ்வாறு குறைந்த ஹார்ஸ் பவராக இருக்கின்ற காரணத்தால்
தான் கட்டுமரத் தொழிலாளிக்கும் விசைப் படகுக்காரர்களுக்
கும் சர்ச்சை வருகின்றது என்பதை தீரத் தெரிந்து, சிந்தித்து

எஸ். டி. பி. என்ற போட்டை அதாவது 32 அடி நீளம் உள்ள போட்டை கொண்டு வந்தார்கள். அதனுடைய ஹார்ஸ் பவர் 66, 50 பாவம் போகக்கூடிய திறன் கொண்டது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** சீக்கிரம் முடியுங்கள், 20 பேர் பேச வேண்டி இருக்கிறது.

**திரு. ப. பொன்னுரங்கம் :** ஆகவே கலைஞர் அவர்கள் காலத்தில்தான் விசைப் படகுக்காரர்களுக்கும் கட்டுமரக் காரர்களுக்கும் சண்டை வரக்கூடாது என்பதற்காக 32 அடி நீளம் உள்ள 50 பாவங்கள் செல்லக்கூடிய விசைப் படகினை ஏற்படுத்தினார்கள். அவ்வாறு தகராறற்ற முறையிலே உரு வாக்கினார்கள். இதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

அடுத்து கலைஞர் ஆட்சிக் காலத்தில் கட்டுமர மீனவர் களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும், அதிலே பெருவாரியான கட்டுமர மீனவர்களுக்கு, லோன் சொசைட்டி மூலமாக லோன் தரப்பட்டது. அதாவது வாளிக்குகளுக்கு பயன்படுகின்ற நைலான் நூல் சப்சிடி. காஸ்டிலே விநியோகிக்கப்பட்டது. அந்த மாதிரி இப்போது விநியோகிக் கிறீர்களா என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இப் போது இரண்டு இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருக்கிறீர்களே, ஒரு கட்டு மரத்திற்கே 10 ஆயிரம் ரூபாய் ஆகுமே. இப்போது கிட்டதட்ட 5 இலட்சம் 6 இலட்சம் மீனவர்கள் இருக்கிறார்களே, இந்த நிலையில் நீங்கள் ஒதுக்கி இருக்கின்ற 2 இலட்சம் என்பது 20 கட்டுமரங்களைக் கட்டுவதற்கா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே நீங்கள் ஒதுக்குகின்ற நிதி போதுமான தல்ல என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து 1977-78-ல் இரண்டு ரெஸ்க்யூ வெஸ்ஸல்ஸ் 10 இலட்சம் ரூபாயில் வாங்குவதாகச் சொல்லி இருந்தீர்கள். நான் அவை முன்னவர் அவர்களிடத்திலே கேட்டுக் கொள்கி றேன். 1977-78-லே 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கி இருந்தீர்களே, அந்த மீனவர்களைக் காப்பாற்றும் படகு வாங்குவதற்கென்று. அந்த விசைப் படகுகள் எங்கே இருக்கின்றன என்பதை அருள் கூர்ந்து கண்டுபிடித்துத் தாருங்கள் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

[முற்பகல் 11.00]

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடைசியாக ஒரு விஷயம், கார்ப்பரேஷன் நடத்துகிற விசைப் படகு கட்டும் இடங்கள் 4 இருக்கின்றன. சென்னை யிலே இரண்டும், நாகப்பட்டினத்திலே ஒன்றும், இராமநாதபுரம் மாவட்டத்திலே மண்டபத்திலே



ஒன்றுமாக நான்கு இடங்கள் இருக்கின்றன. அந்த 4 இடங் களில் வேலை செய்கிற தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்கள். எந்த நேரத்தில் வேண்டுமானாலும் அவைகளை மூடிவிடலாம் என்ற அச்சத்திற்கு ஆளாக்கப்பட்டி ருக்கிறார்கள். இந்த ஆண்டு கட்டப்பட வேண்டிய படகுகள் இவ்வளவு என்று ஒவ்வொரு வருஷமும் கொடுக்க வேண்டும். அப்படி கொடுக்கப்பட்ட பிறகு படகுகள் கட்டும் வேலையினை நிறுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவைகள் மூடப்படும் என்று சொல்லி, அதனால் அவர்கள் அச்ச நிலைக்கு ஆளாகி யிருக்கிறார்கள். அந்த அச்ச நிலையினை போக்க வேண்டும். நீங்கள் உருவாக்கிய அமுதம் போன்ற அங்காடிகளை எல்லாம் இப்போது நீங்களே மூடிக்கொண்டு வருகிறீர்கள். (மணியடிக்கப் பெற்றது) மூடுவிழா நடத்துவதிலே உங்களைவிட வல்லவர்கள் யாரும் இருக்க முடியாது என்று சொல்லி என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

***திரு. ஆனூர் ஜகதீசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு-மனளத் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய தாழ்மையான கருத்துக்களைத் தெரிவித்துக்கொள்ள விருமபுகிறேன்.

மாண்புமிகு முதல்வர் புரட்சி தலைவர் அவர்களுடைய மூன்றாண்டு கால ஆட்சியில் அரிசிப் பஞ்சம் எதுவும் இல்லாமல், வெளிச் சந்தையில் எல்லாப் பருவ காலத்திலும் ஒரே சீரான விலையில் சௌகரியமாக இன்றைக்குக் கிடைத்துக் கொண்டிருக் கிறது. ஒரு காலத்தில் வெள்ளையன் ஆட்சிக்குபபின் சுதந்திரத்திற்குப்பிறகு ஏறத்தாழ 4, 5 ஆண்டுகள் அரிசிப் பஞ்சம் தமிழ்நாட்டை அலைக்கழித்துக் கொண்டிருந்ததை நாம் மறந்திருக்க முடியாது.

அதைப்போல 1974-75-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும் இதே போன்று, அரிசிப் பஞ்சம் தலை விரித்தாடியது. அந்த நேரங்களில் எல்லாம் அரிசி கிடைக்காது கிராமப்புறங்களில் ஏழ்மை நிலையில் இருக்கிற மக்கள், தாழ்த்தப் பட்ட மக்கள் கடலைப் புண்ணாக்கையும் பனைவெல்லத்தை யும் தின்ற நிலைமையையும் நாம் மறந்து விடமுடியாது.

அதேபோல வள்ளிக் கிழங்கையும், புளியங்கொட்டையையும் மாவாக அரைத்து சாப்பிட்ட நிலைமையை நாம் மறந்துவிட முடியாது. அந்த நேரத்திலே தான் அமைச்சர் ஒருவர் கூட உடலுக்கு சத்தான உணவு எலிக்கறி, அதைச் சாப்பிடலாம் என்று கூட சொன்னார்கள். அந்த நிலைமைகள் எல்லாம் இப்பொழுது மாறிவிட்டிருக்கிறது. மாறாக எல்லா நேரங் களிலும் எல்லாப் பருவங்களிலும் அரிசி சீரான விலையிலே கிடைத்துக்கொண்டிருக்கிறது. இன்றைக்குக்கூட சாதாரண மக்கள் உபயோகப்படுத்திக் கொள்கிற புழுங்கல் அரிசி கிலோ 2 ரூபாயிலிருந்து 2¼ ரூபாய் வரை மிகச் சுலபமாக கடை வீதி களிலே கிடைக்கிறது.

நம்முடைய தமிழகத்திலே உணவு நிலைமை சீராக இருக்கிறது. நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஏறக்குறைய ஆண்டு ஒன்றுக்கு ரேஷன் கடைகள் மூலமாக 2 லட்சம டன் அரிசியை விநியோகித்துக் கொண்டிருக்கிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக வேலைக்கு உணவுத் திட்டத்தின்கீழ் ஏறக்குறைய 75 ஆயிரம டன் அரிசியைக் கொடுத்திருக்கிறது. அதே போல வெள்ள நிவாரணப்பணிகளுக்காக 4 ஆயிரம் டன அரிசியை இன்றைக்கு நாம் கொடுத்திருக்கிறோம். அது மட்டும் அல்லாமல், எந்த நேரத்திலும் இல்லாத அளவிற்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே, கெனியா, கியூபா, பெரு, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளுக்கு நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக 55 ஆயிரம் டன் அரிசியை ஏற்றுமதி செய்து நம்முடைய பெருமையை நிலைநாட்டியிருக்கிறது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்.

அது மட்டுமல்லாமல் இவ்வளவையும் செய்த அரசு வீடு புகுந்து கொள்ளை அடிப்பது போல் கட்டாய கொள்முதலை செய்யவில்லை. இதற்கு முன்னாலே எல்லாம் அது பூஜை அறையாக இருந்தாலும் சரி, குளியல் அறையாக இருந்தாலும் சரி எங்கெங்கே அரிசி இருக்கிறது என்று செய்தி வருகிறதோ அங்கே எல்லாம் புகுந்து கொள்முதல் செய்த காலம் இருந்தது. அது மட்டுமல்ல அந்த நேரத்தில் செங்கல்பட்டு போன்ற வெளியூர்களிலிருந்து சென்னைக்கு அரிசி கடத்திக்கொண்டு வரப்பட்டது. சர்க்கார் அதிகாரிகள் அங்கே சென்று அதைத் தடுக்கிறபோது, அந்த சர்க்கார் அதிகாரிகளை கடத்தல்காரர்கள் தாக்கினார்கள். செங்கல்பட்டிலே ஒரு நேரத்திலே இப்படி தடுக்கச் சென்ற சர்க்கார் வெட்டியானை அங்கேயே அடித்துக் கொலை கூட செய்தார்கள் என்பதை நாம் எல்லாம் அறிந்திருக்கிறோம்.

ஆனால் அதற்கு மாறான நிலை இன்று இருந்துகொண்டிருக்கிறது. வர்த்தகர்கள், அரிசி ஆலைச் சொந்தக்காரர்கள் மீது லெவி விதித்து கெடுபிடி செய்து வசூல் செய்து வந்தார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இன்று இல்லை என்பதை மக்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். இன்று கெடுபிடி இல்லை, கொள்முதல் விரயம் இல்லாத சேமிப்பு சீரான விநியோகம் இவற்றின் மூலமாக உணவு சம்பந்தப்பட்ட வகையில் புரட்சித் தலைவரின் அரசு சிறப்பான சாதனையைப் புரிந்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது.

இந்த துறை சம்பந்தமான சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நகரங்களில், கிராமங்களில் பல பேர்களுக்கு குடும்பக் கார்ட் அட்டைகள் கிடைக்காமல் இருக்கின்றன. எந்த ஒரு குடும்பத்திற்கும் குடும்பக் கார்ட் இல்லை என்று சொல்கிற அளவிற்கில்லாமல் அனைத்து நபர்களுக்கும் உணவுப் பங்கீட்டு அட்டை தரப்படவேண்டும்.





நியாயவிலைக்கடைகள் ஏற்படுத்தியிருக்கிறோம். தமிழ் நாட்டைப்பொறுத்த வரையில் 16,000 இடங்களில், ரெவன்யூ கிராமம் என்ற அடிப்படையை வைத்து 150 பேர்கள் இருந்தால் போதும் இது ரெவன்யூ கிராமம் என்று சொல்லி நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட வேண்டும் என்று அரசு அறிவித்தது. ஆனால் இரண்டு தெருக்களைகொண்ட ரெவன்யூ கிராமங்கள் இருக்கின்றன. அப்போது இந்த இரண்டு தெருக்களில் 15 பேர்கள் இருந்தாலும் கூட இரண்டு தெருக்களிலும் இரண்டு நியாயவிலைக் கடைகள் ஏற்படுத்தியிருக்கிறோம். அதனால் ஏற்படுகிற விளைவு என்னவென்றால் கொடுக்கப்படுகிற பொருள்கள் விலைக்குப் போகாமல் வாங்குவதற்கு ஆள்கள் இல்லாமல் மக்கிப் போய் சேதாரமுற்றுக் கிடப்பதை அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும். ஆகவே குறைந்த பட்சம் 500 பேர்களாவது இருந்தாக வேண்டும் என்ற வரையறையை வகுத்துக்கொண்டு நியாயவிலைக் கடைகளைத் திறப்பது பற்றி அரசாங்கம் மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மண்ணெண்ணை வியாபாரம் செய்கிற கைவண்டிக்காரர்களுக்கு நகரங்களில் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் கொடுக்கப்படுகிறது. அதை மாற்றி குறைந்த பட்சம் 150 லிட்டராவது கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட தலைநகரங்களில் வியாபாரம் செய்யக் கூடிய கைவண்டிக்காரர்களுக்கு நாள் ஒன்றுக்கு குறைந்த பட்சம் 100 லிட்டராவது கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்ந்து அரிசி விலை ஏறாமல் இப்போதுள்ளதுபோல கட்டுப்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோதுமை உற்பத்திச் செலவைவிட நெல்லிற்கான உற்பத்தி செலவு அதிகம். இதை விவசாய மக்கள் நன்றாக உணர்ந்து அதை அரசுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். எனவே நெல்லின் கொள்முதல் விலையை குறைந்தபட்சம் ரூ. 150 என்றாக்கினால் தான் விவசாயிகள் நிம்மதியாக இருக்கமுடியும் என்று கூறிக் கொண்டு, வருவாய்துறை அதிகாரிகளுக்கு (டி.டி.எஸ்.ஓ., டி.எஸ்.ஓ.) எனது நன்றியையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மீனளம் சம்பந்தமாக ஒரு சில வார்த்தைகள் கூறி எனது உரையை முடிக்கிறேன். எனது குடும்பம் பரம்பரையாக சைவக் குடும்பம். ஆனால் என்னைப் பொறுத்த வரையில் மீன் இல்லாமல் சாப்பாடு பிடிக்கவில்லை. அதே நேரத்தில் இன்று ஆட்டுக்கறி விலை கிலோ விற்கு ரூ.20-க்கு மேலாகிறது. அதேபோல் வெள்ளாட்டுக்கறி வேண்டும் என்று கேட்டால் ரூ. 22 விலை சொல்கிறார்கள். கோழி இறைச்சி அரைக் கிலோ ரூ. 15-க்கு மேலாகிறது. ஆகவே இந்த நிலையில் மீன் வளத்தைப் பெருக்கினால், மீன் உற்பத்தியைப் பெருக்கினால் நாட்டு மக்களின் உணவுப் பொருள் தேவையை நிரப்ப முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்நாட்டு மீன்வளத்தைப் பொறுத்தவரையில் இந்தியதுணை
கண்டத்திலேயே ஐந்தில் ஒரு பங்கு நம் தமிழகத்தில் கிடைக்கிறது
என்று சொல்கிறார்கள். எனவே உள்நாட்டு மீன் வளத்தை
நாம் நிச்சயமாக பெருக்கித்தீரவேண்டும். இன்றைக்கு
கல்கத்தாவிலிருந்து வஞ்சநம், வௌவால், மடவை போன்ற
பெரிய மீன்கள் சென்னைக்கு வந்துகொண்டிருக்கிறது.
ஹோட்டல்காரர்கள் அதைத்தான் வாங்கிக்கொண்டிருக்கிறார்
கள். தமிழ்நாட்டில் 150 கிலோ மீட்டர் தூரம் கடற்கரை
இருக்கிறது. ஆகவே மீன்வளத்தைப் பெருக்கிக்கொள்ள
வேண்டும்.

தமிழநாட்டில் நம் தேவைக்கு அதிகமாகக் கிடைக்கிற மீனை
கருவாடாக்கி, பதப்படுத்தி அதை பாதுகாப்பான முறையில்
விஞ்ஞான முறைப்படி கட்டப்பட்ட கோடவுன்களில் வைப்பதற்
கான நல்லதொரு திட்டத்தை ஏற்படுத்தித்தரவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய கடன்களை இந்த அரசு சென்ற தடவை நாற்பது
கோடி ரூபாய் அளவிற்கு ரத்து செய்தது. இந்த நிதிநிலை அறிக்
கையில் அறுபது கோடி ரூபாய் அளவிற்கு விவசாயிகள் கடன்களை
தள்ளுபடி செய்திருக்கிறது. அதேபோல் நீரோடு போராடி ருசி
மிக்க உணவுப்பொருளை வழங்கிக் கொண்டிருக்கிற மீன்வர்கள்
வாங்கி இருக்கும் நீண்ட காலக் கடனாக ஒரு கோடி ரூபாய்
பெற்றிருக்கிறார்கள். அவர்களின் ஏழ்மை நிலை கருதி, அவர்
களது இல்லாமையைக் கருதி அந்தக் கடன்களை இந்த அரசு
ரத்து செய்ய வேண்டும் என்று கனிவோடு அருள்கூர்ந்து கேட்டுக்
கொள்கிறேன்.

[முற்பகல் 11-10]

விசைப் படகுகளுக்கு கட்டுப்பாடு "திட்டத்தைக் கொண்டு
வரவேண்டும். மீன்வர்கள் வீடுகள் 7,500 ரூபாயில் கட்டப்
பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, இன்றைக்கு அவர்கள்
அதிலே வாழ்கின்ற நேரத்திலே மழைக் காலங்களிலே ஒழுக்கல்
ஏற்பட்டு அதனால் சேதாரம் ஏற்படுகிறது. எனவே, இந்த
3 அங்குல காங்கிரீட் ஆர்.சி.க்கு மேல் சதுர ஓடு பரப்பினால்,
ஒழுகாது. இதை உடனடியாக செய்ய வேண்டும் என்று அரசைக்
கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனவர்களுக்கு வலைக்காக நைலான் நூலை அரசு
சகாய விலையில் தருகிறது. அப்படி என்னுடைய பகுதியிலே
கூட பலருக்கு கொடுக்கப்பட்டது. ஆனால், அதற்கு முன்
பணமாக 2,000 ரூபாய் கட்ட வேண்டும் என்று சொல்லப்படு
கிறது. அப்படி கொடுக்க இயலாதவர்கள், சென்னையிலே
இருக்கின்ற பெரிய வியாபாரியான பஞ்சநாதன் போன்ற
வர்களிடம் அந்த பணத்தைக் கடன் வாங்கி கொடுக்கிறார்கள்.





பின்னால், இந்த நைலான் நூல் வருகின்ற போது, சம்பந்தப்
பட்ட மீனவர்களுக்கு 100, 200 என்று கொடுத்துவிட்டு, மீதப்
பணத்தை அப்பேர்பட்ட தனவந்தர்கள் எடுத்துக்கொள்கிறார்
கள்.

இரால் ஏற்றுமதியின் மூலம் நாட்டின் வளம் பெருகி இருக்
கிறது. உள்நாட்டிலே அப்பேர்பட்ட மீன் வளர்க்க
சாத்தியக் கூறுகள் இருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே
செங்கற்பட்டிலே உள்ள கொளவாய் ஏரியிலே ஒரு பெரும் பகுதி
கிடைக்கிறது. தண்ணீர் வற்றாத ஒரு பகுதியை தடுத்து இறாவில்
குஞ்சு வளர்ப்புக்கு அபிவிருத்தி செய்தால், அதன் மூலம் நல்ல
பலன் பெறமுடியும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல்,
ஆங்காங்கே கோல்ட்ஸ்டோரேஜ் கட்டிடங்கள் கட்டிக் கொண்டி
ருக்கிறார்கள். புதுப்பட்டினம் குப்பத்தில் 2 லட்சம் செல
வில் அதற்கான தளவாடங்கள், கட்டடங்கள் கட்டப்பட்டு
இன்றைய அளவிலே வீணாக இருக்கிறது. பல ஆண்டுகளாக
அது பயனில்லாமல் இருக்கிறது.

அதேபோல், மீனவர்கள் வாழ்கின்ற பகுதி மணற்பாங்காக
இருக்கிறது. அவர்கள் பகுதிகளுக்குச் செல்வதற்கு போக்கு
வரத்துக்கான சாத்தியக்கூறுகள் இல்லை. நான்கு வீல்
ஜீப்பிலேதான் செல்ல முடியும். எனவே அப்பேர்பட்ட இடங்
களுக்கு நல்ல பாதை வசதி செய்து கொடுக்கவேண்டும்.

அதிலும் குறிப்பாக என் தொகுதியில் புதுப்பட்டினம்
ஒய்யாலி குப்பம் ஒரு தாழ்ந்த பகுதியாகும், அங்கு சாலை
அபிவிருத்தி செய்ய வேண்டும். அது கடற்கரை ஓரத்தில்
இருக்கின்ற பகுதியாக இருக்கிறது. செய்யாலி குப்பத்தில்
கடந்த 3 ஆண்டுகளாக அப்பகுதியில் 94 வீடுகள் கடலரிப்பால்
மூழ்கி விட்டது. அரசாங்க அதிகாரிகள் வந்து பார்வையிட்டு
விட்டுச் செல்கிறார்களே தவிர, இதுவரை எந்தவிதமான
நடவடிக்கையும் எடுக்கவில்லை. அதையும் நல்ல முறையிலே
செய்யவேண்டும்.

சதுரங்கப்பட்டினத்திலே புயல் பாதுகாப்பு இல்லம் ஒன்றை
யும் அவசியம் கட்டித்தர வேண்டும் என்று கேட்டுக்கொண்டு
விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. உ. சுப்பிரமணியன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்
களே, மீனளத்தைப் பொறுத்தவரை தமிழ் நாட்டிலே நல்ல
வாய்ப்பு உண்டு. இந்தியா அதிகமான கடற்கரை நீளமுள்ள
தேசம். அதிலே தமிழ் நாட்டிலே 1,000 கிலோ மீட்டர் தூரம்
கடற்கரை இருக்கிறது. உள்நாட்டு நீர்நிலை $3\frac{1}{2}$ லட்சம் ஹெக்
டேர் தண்ணீர் வசதி உள்ளதாக இருக்கிறது. நாட்டில் மொத்த
அளவில் $18\frac{1}{2}$ சதவீதம் கடலிலே இருந்தும், உள்நாட்டு நீர்நிலை
களிலே இருந்தும் $18\frac{1}{2}$ சதவீதம் பெறப்படுவதாகத் தெரிகிறது.

[திரு. உ. சுப்பிரமணியன்] [1980 ஜுலை 24

பொதுவாகவே இது நல்ல வருமானம் வரக்கூடிய துறை. எனவே,
இதிலே, இன்னும் அதிக கவனமும், அக்கறையும் செலுத்த
வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை. அப்போது பெரிய
அளவில் லாபம் ஈட்ட முடியும். அதிகமான மக்கள் பயன்
பெறலாம்.

இத்துறையிலே உள்ள சில குறைபாடுகளை சுட்டிக் காட்ட
விரும்புகிறேன். மண்டபத்திலுள்ள பயிற்சி நிலையத்தில் போது
மான சார்ட் இல்லை. அதற்கு நல்ல வசதிகளை செய்து
கொடுத்தால்தான், அங்குள்ளவர்கள் நல்ல பயிற்சியை பெற
முடியும். அப்படி அவர்களுக்கு பயிற்சி முடிந்தவுடன் அவர்
களுக்கு சலுகை அளித்து, கடன்களை தவணை முறையில்
செலுத்துவதற்கு ஏற்பாடு செய்தால், அவர்களுக்கு நல்ல பயன்
ஏற்படலாம். இதனால் அவர்கள் வாழ்க்கை நிச்சயமாக முன்
னேற முடியும். தவிர, இப்படி பயிற்சி பெற்றவர்களை விசைப்
படகுகளிலே வேலைக்கு அமர்த்த வேண்டுமென்ற ஒரு நிபந்
தனையை ஏற்படுத்தினால், அவர்களுக்கு கூடுதலான
வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதையும் நான் சொல்லிக்
கொள்ள ஆசைப்படுகிறேன்.

சர்க்கார் கொடுக்கின்ற விசைப் படகுகளின் விலை அதிகமாக
இருக்கின்ற காரணத்தினால், தனியார் துறையிலே கிடைக்
கின்ற படகுகளை வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. உதாரண
மாக, 32 அடி நீளமுள்ள ஒரு படகைச் செய்வதற்கு அரசுத்
துறையில் 1,85,000 ரூபாய் ஆகிறது. அந்த அளவிலே விற்கப்
படுகிறது. ஆனால், தனியார் துறையிலே ரூ. 1,30,000 தான்
ஆகிறது என்று சொல்லப்படுகிறது. இதிலே அரை லட்சம்
ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. அரசுத் துறையிலே கடன்
வாங்குகின்றவர்களை நிர்ப்பந்தப்படுத்தி இதை வாங்கச்
சொல்கிறார்கள். மீதி விற்கப்படாமல், நாகப்பட்டினம்,
மண்டபம், போன்ற படகுத் துறைகளில் இருக்கின்றன.
இந்த நிலையைப் போக்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை
எடுக்க வேண்டும். குறிப்பாக, இதைப் பற்றி விசாரித்தபோது,
துறையிலே ஏற்படுகின்ற செலவுகள், அதிகாரிகளின் சம்பளம்
போன்றவைகளை எல்லாம் இதிலே சேர்ப்பதால், விலை கூடுகிறது
என்று சொல்கிறார்கள்.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் தலைமை]

இந்தக் குறைபாடுகள் எல்லாம் சொல்லப்படுகின்றன. அதை
யெல்லாம் களைந்தால் நிச்சயமாக தேக்கம் இல்லாமல் விற்க
வாய்ப்பு இருக்கும். மீனவர்களுக்கு சிறு இயந்திரத்தை வாங்கிக்
கொடுத்தால் கட்டுமரக்காரர்களுக்கும் நாட்டுப் படகுக்காரர்
களுக்கும் உதவி செய்ததாக இருக்கும். முன்னால் மீன்
வளத்துறை அமைச்சர் அவர்கள் ஜப்பான் சென்று வந்து



1980 ஜுலை 24] [திரு. உ. சுப்பிரமணியன்]

அதற்கான முயற்சிகளைச் செய்து கொண்டிருப்பதாகச் சொன்
னார்கள். அது எந்த அளவில் உள்ளது என்று தெரிந்து கொள்ள
விரும்புகிறேன்.

மண்டபத்தில் ஃபிஷ் மீல் பிளாண்ட் இருக்கிறது. நல்ல
முறையில் தயார் செய்யப்படுகிறது. விற்பனை செய்ய சரியான
முறை இல்லாமல் தேக்க நிலை ஏற்படுகிறது. அதனுடைய
விலை விதிகம். இதுபற்றித் தமிழ்நாட்டு மக்களுக்கு அதிகமாக
விளம்பரப்படுத்தப்படவில்லை. அரியானா, பஞ்சாப் பகுதி
மக்களுக்கு விநியோகத்துக்குச் செல்லுகிறது. ஃபிஷ் மீல்
பிளாண்டை தமிழ்நாட்டு மக்களுக்குப் பயன்படும் வகையில்
செய்ய வேண்டும்.

தமிழ் நாட்டின் பல இடங்களில் ஐஸ் பிளாண்ட் வைத்திருக்
கிறார்கள். தஞ்சை, மேட்டூர் தவிர மற்ற இடங்களில்
எல்லாம் நஷ்டக் கணக்கு கொடுக்கிறார்கள். ஐஸ் செய்ய மூலப்
பொருள் தண்ணீர்தான். தண்ணீரைக் கொண்டு செய்கிற
ஐஸை விற்க சரியான முறை கையாளப்படவில்லை என்ற கார
ணத்தால் நஷ்டம் ஏற்படுகிறதா அல்லது வேறு வகையில் நஷ்டம்
ஏற்படுகிறதா? தனியார் துறையில் ஐஸ் பிளாண்ட் வைத்திருப்
பவர்கள் மிக அதிகமான லாபத்தை அடைகிறார்கள் என்றும்
தெரிய வருகிறது. அதையும் விசாரித்து லாபகரமாக வரக்
கூடிய வகையில் அமைக்க வேண்டும். இதிலே நடைமுறையில்
உள்ள தவறுகளைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இரா
மேசுவரத்தில் ஐஸ் பிளாண்ட் இருக்கிறது. தண்ணீரை எடுக்கும்
கிணற்று நீர் உப்பாக இருக்கும் காரணத்தால் உபயோகம்
இல்லை. டவுனில் இருந்து நல்ல தண்ணீரைக் கொண்டு வந்து
ஐஸ் பிளாண்டை நடத்தினால் லாபகரமாக இருக்கும்.

அடுத்து அரசுத் துறையில் ஃப்ரிசிங் பிளாண்ட் இருக்கிறது.
இறால்மீன்களைப் பதப்படுத்தி வைக்கிறார்கள். இது எல்லா
இடங்களிலும் தனியார் துறைக்கு குத்தகைக்கு விடப்
பட்டிருக்கிறது. வேறு மாநிலத்தவருக்குக் குத்தகைக்கு விடப்
பட்டிருக்கிறது. தமிழ் நாட்டு மக்களுக்குப் பயன்படவில்லை
என்ற நிலை ஏன் இருக்கிறது என்று ஆராய வேண்டும். இனி
யாவது வருங்காலத்தில் அரசுத் துறையில் ஃப்ரிசிங் பிளாண்டை
நடத்தி தமிழ் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்பை அதிகமாகக்
கொடுத்து ஊக்குவிக்க வேண்டும்.

தஞ்சை கருந்தட்டாங்குடியில் ஃபிஷ் ஃபார்ம் இருக்கிறது.
இது நல்ல முறையில் இயங்குகிறது. அதைப் போல் எல்லா
மாவட்டங்களிலும் கொண்டு வந்தால் மாவட்டங்களிலுள்ள பல
நீர் நிலைகளிலும் அதிகமான மீன்களை உற்பத்தி செய்ய வாய்ப்
பாக இருக்கும். இராமநாதபுரம் மாவட்டத்தில் அதிகமான
கண்மாய்களும், ஏரிகளும் இருக்கின்றன. பெருவாரி
யான அளவில் மீன்களை உற்பத்தி செய்து நாட்டு மக்களுக்குப்
பயன்படுத்த வழிவகை செய்ய வேண்டும்.

இரால் அந்நியச் செலாவணியைச் சம்பாதிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. ஆனால் அதற்குரிய மதிப்பு கொடுக்கப்பட வில்லை. தமிழ்நாட்டு கடற்கரையில்தான் அதிகப்படியான அளவில் தரமான இரால் கிடைப்பதாகச் சொல்லப்படுகிறது. தைவான், சைனா, போன்ற இடங்களிலிருந்தெல்லாம் பல்லாயிரக் கணக்கான மைல்களில் இருந்து வந்து திருட்டுத் தனமாக பிடித்துச் செல்லுகிறார்கள். அதை நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று நினைக்கும்போது வருத்தம் ஏற்படுகிறது. இதை நல்ல முறையில் பயன்படுத்த 'டீப் சீ பிஷிங்'—ஆழ்கடல் மீன் பிடிப்பை ஊக்குவிக்க அரசுத் தரப்பில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும். தற்போது இரண்டே இரண்டு டிராலர்கள் தான் இருக்கின்றன. அதுவும் கூட விஜயவாடா பக்கத்தில் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். கரையிலிருந்து வெகு தூரம் சென்று மீன் பிடிக்க மீனவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் டிராலர்களை அதிகப்படுத்த வேண்டும்.

செயற்கை முத்தைப் பொறுத்தவரை தூத்துக்குடியில் நல்ல முறையில் செய்கிறார்கள். ஆனால் அதை விரிவாக்கவில்லை. கமர்ஷியல் பேசிசில் அதிகமான அளவுக்கு உற்பத்தி செய்து விற்பனை செய்யப்படவில்லை என்பது குற்றச்சாட்டு. ஜப்பானில் செயற்கை முத்துக்கள் உற்பத்தி செய்து நல்ல முறையில் விற்பனை செய்வதாகச் சொல்லுகிறார்கள். ஃபிஷ் ஃபார்ம் டெவலப்மெண்ட் ஏஜன்சி' தஞ்சையில் இருக்கிறது. அதை எல்லா மாவட்டங்களுக்கும் கொண்டு வரவேண்டும்.

[முற்பகல் 11-20]

தனியார் துறையிலே இரால் வளர்க்கும் பண்ணைக்கு அரசு உதவி அவ்வளவாக இல்லை. அவர்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. உதாரணமாக, தஞ்சை மாவட்ட கடற்கரையிலே பல தனியார்கள் இரால் வளர்ப்புப் பண்ணைகள் அமைத் திருக்கிறார்கள். அரசாங்கம் அவர்களை ஊக்குவிப்பதற்குப் பதிலாக இவர்கள் சில கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள். உப்புத் தண்ணீரை பம்பு மூலமாக அவர்கள் எடுக்கிறார்கள். ஆனால் பி.டபிள்யூ.டி. துறையினர் அப்படி எடுக்கக்கூடாது என்று சொல்கிறார்கள். தடை செய்கிறார்கள். அல்லது வரியைப் போடுகிறார்கள். இந்தக் குறையை நாங்கள் அங்கே சென்ற போது பார்த்தோம். இப்படி நடைமுறைக்கு ஒவ்வாத பல கஷ்டங்கள் இருக்கின்றன. அதை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டியது அரசினுடைய கடமை. அவர்கள் பழைய தண் ணீரை வெளியேற்றி விட்டு புதிய தண்ணீரை பம்பு செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. அதற்கு வசதி செய்து கொடுக்க வேண்டும். அதைப் போலவே தனியார் இரால் வளர்ப்புப் பண்ணைகளுக்கு மின்சாரக் கட்டணத்தில் சலுகைகளைக் கொடுத்தால் அவர்களை ஊக்குவிப்பதாக அமையும். அதையும் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



அடுத்து, லேண்டிங் ஜட்டிஸ், மீன்பிடி படகுகள் துறை கட்டுகிற வேலை பூர்த்தியாகாமல் இருக்கிறது. உதாரணத் திற்கு கோடிக்கரையிலே அந்த வேலை மிகவும் சாவகாசமாக நடந்து கொண்டிருக்கிறது. சமீபத்திலே கொச்சின் சென்று நாங்கள் பார்த்தபோது அங்கே பெரிய லேண்டிங் ஜட்டிஸ் நூற்றுக்கணக்கான படகுகள் ஒரே நேரத்திலே ஆயிரக்கணக்கான கிலோ மீன்களோடு வந்து இறங்கி போவதற்கு சாத்தியம் இருக் கிறது. இதைப் போல தமிழ் நாட்டிலேயும் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக சர்வீஸ் சென்டர்களைப் பொறுத்தவரையிலே ஒன்று பரங்கிமலையிலே இருக்கிறது. நாங்கள் சென்று பார்த்த போது அங்கே மெஷனரி பாதி இறக்கப்பட்ட நிலையிலே இருக் கிறது. பெட்டிகள் பாதி திறக்கப்பட்டும், பாதி திறக்கப் படாமலும் இருக்கின்ற ஒரு அவல நிலைமையைப் பார்க்கிற போது சர்க்கார் பணம் எவ்வளவு விரயமாகிறது என்பது தெரிகிறது. அவர்களைக் காரணம் என்ன என்று கேட்டால் படகுச் சொந்தக்காரர்கள் வரவில்லை. தனியார்களிடம் சர்வீஸ் சென்டர்கள் இருக்கின்றன. அங்கே போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அரசுத் துறையிலே உள்ள சர்வீஸ் சென்டருக்கு வருகின்ற மார்க்கம் கடல் மண் மேடிட்டு இருக்கிறது என்றும் சரியாக இல்லை என்றும் சொல்கிறார்கள். கடலி லிருந்து இதற்கு வர முடியாத அளவிலே இடைஞ்சலாக இருக்கிற ஒரு இடத்தை இதற்காக ஏன் தேர்ந்தெடுத்தார்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

கடலிலிருந்து மிக அருகாமையில் மீனை பிடிப்பதற்கு வசதியிருக்கிறது. நீண்ட தூரம் சென்று மீன்களைப் பிடித்தால்—விரைவாக சரைக்கு —அழுகக் கூடிய பொருளாக இருப்பதால்—பெரிய படகுகளுக்கு வர முடியவில்லை, ஆகவே அரசு நடுத்தர பெரிய படகுகளுக்கு எல்லாம் ரெப்ரிஜிரேட்டர் பெஸிலிட்டிஸ், குளிர்ப்பதன சாதனம் செய்து கொடுக்க வேண்டும். ஏனென்றால் சைனா, கொரியா, ஜப்பான் போன்ற நாடுகளிலிருந்து இங்கே பல நாட்கள் மீன்களைப் பிடித்து பல நாட்கள் கழித்து அங்கே கொண்டு போகக் கூடிய அளவுக்கு அவர்களுக்கு குளிர்பதன சாதன அமைப்புகள் இருக்கின்றன. ஆகவே நம்முடைய மீனவர் களுக்கும் படகுகளிலே ரெப்ரிஜிரேட்டர் பெஸிலிடிஸ் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மீன்வள ஆராய்ச்சித் துறைக்கும், மீன்வளத் துறைக்கும் போது மான கோஆர்டினேட்டட் புரகிராம், இணைப்புத் திட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் கண்டுபிடிக்கிற உண்மை களை அமல் செய்வதற்கான வாய்ப்பு இல்லை. அதையெல் லாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்திலே காரங்காடு என்ற இடத்திலே 40 ஏக்கர் நிலம் எடுத்து கூட்டுறவு முறையிலே பண்ணை அமைப்பதாக சொன்னார்கள். ஆனால் அங்கே சென்று பார்த்தால் அங்கே இருக்கின்ற முள்ளுப் பத்தையைக்கூட நீக்கவில்லை என்ற நிலைமை தான் இருக்கிறது. எப்போது செய்யப் போகிறார்கள்? மீனவர்களிடமிருந்து ஷேர் எல்லாம் வாங்கி சொஸைடி அமைத்து அது ஏட்டளவிலே தான் இருக்கிறதே தவிர நடைமுறைக்குக் கொண்டு வரப்படவில்லை. உடனடியாக அதைச் செயல்படுத்தவேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

இராமநாதபுரத்திலே வாலி நோக்கம் திட்டம் என்ற திட்டம் கொண்டுவரப்பட்டது. அது மிகவும் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது. மிகப் பின் தங்கிய பகுதி என்பதால்தான் இப்படிப்பட்ட திட்டங்கள் அங்கே கொண்டுவரப்படுகின்றன. ஆனால் கால தாமதம் செய்வதால் அந்த நோக்கமே நிறைவேறாமல் போய் விடுகிறது. அரசாங்கம் இதையெல்லாம் கவனிக்கவேண்டும்.

மண்டபத்திற்குப் பக்கத்திலே குருசடி தீவு என்ற தீவு இருக்கிறது. அது ஆராய்ச்சி மாணவர்களையும், பிற நாட்டினர்களையும் கவரக்கூடிய வகையிலே இருக்கிறது. அதைச் சுற்றிலும் விநோதமான உலகத்திலேயே வேறு எங்கும் கிடைக்காத ஜீவ ஜந்துக்கள் இருக்கின்றன. போக்குவரத்து வசதியில்லாத ஒரு தீவாக இருக்கிறது. அங்கே இருக்கின்ற மீன் காட்சி சாலை மிகவும் பின்தங்கிய நிலையிலே ஒழுகக்கூடிய நிலையில், இடிந்து விழக்கூடிய நிலைமையில் இருக்கிறது. இங்கே போதுமான அளவுக்கு ஜாடிகள் கூட கிடையாது. அதையும் அரசு கவனிக்க வேண்டும்.

வீராணம், பெரியகுளம், வாலாஜா ஏரி போன்ற இடங்களிலே சர்க்கார் தரப்பிலே மீன் வளர்க்கப்படுகிறது. ஆனால் பொதுமக்களுக்குத் தெரியாமல் அது ஏலம் விடப்படுகிறது. இவ்வளவு பெரிய நல்ல வருமானம் வரும் இடத்திலெல்லாம் பொதுமக்களுக்குச் சரியாக விளம்பரம் செய்யப்பட்டால் அரசுக்குக் நல்ல வருமானம் வரும் நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே மட்டும் பேசி சிவில் சப்ளைஸ் பொறுத்தவரையில் என்னுடைய கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் பேசுகின்ற காரணத்தால் அதைப்பற்றி ஏதும் சொல்லாமல் இத்துடன் விட்டு விடுகிறேன். வணக்கம்.

<u>திரு. த. மாரிமுத்து</u>: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நடந்து கொண்டிருக்கின்ற இந்த உணவு மானியக் கோரிக்கையிலே கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றமைக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.





வெள்ளையர்கள் ஆண்ட காலம் முதல் உணவுப் பஞ்சங்கள் ஏற்பட்டு வெளியிலிருந்து உணவு தானியங்கள் இறக்குமதி செய்யப்பட்டு உணவு தட்டுப்பாடுகள் சமாளிக்கப்பட்டிருக்கின்றன.

1967 இல் தமிழகத்தில் பேரறிஞர் அண்ணா ஆட்சி ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களிலே நாட்டில் கடுமையான அரிசிப் பஞ்சம் நிலவியதும் ஒன்று எனப் பேசப்பட்டதும் உண்டு.

1966 ஆம் ஆண்டு இறுதியில் படி அரிசி 7 ரூபாய், 8 ரூபாய் விற்றது நாமறிந்ததாகும். பகிரங்க மார்க்கட்டில் கூட அரிசி கிடைக்காமல் மக்கள் பட்ட அவதி கொஞ்ச நஞ்சமல்ல.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதும், படி அரிசித் திட்டம் கொண்டு வந்து நிறைவேற்றியதையும் பசுமைப் புரட்சிகு வித்திட்டதையும் நாடு பாராட்டியதை நாம் மறக்க முடியாது.

அரிசி விலை கட்டுப்படுத்தப்பட்டது. அரிசிப் பஞ்சம் தணிந்தது. அண்ணாவும் மறைந்தார். இந்த நாட்டு மக்கள் ஆறாத் துயரில் மூழ்கினார்கள்.

வந்தார் கலைஞர். வந்தது பஞ்சமும். தமிழகத்தில் மீண்டும் உணவுத் தட்டுப்பாடு. அரிசிக்கு மக்கள் ஆலாய்ப் பறந்தார்கள்.

படி அரிசித் திட்டமும், பசுமைப் புரட்சியும் பலனளிக்கவில்லை. படி அரிசி மீண்டும் 10 ரூபாய் ஆயிற்று.

1977-லே தேர்தல். எங்கள் இதய தெய்வம் தமிழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுக்குத் தமிழ்த்தாய் முடிசூட்டி மகிழ்ந்தது. வந்தார் புரட்சித் தலைவர் மறைந்தது அரிசிப் பஞ்சம். நல்லவர்கள் மகிழ்ந்தார்கள். நல் இதயங்கள் வாழ்த்துக் கூறின.

இரவு பகல் மழை. இயற்கையின் சீற்றம். நாடு வெள்ளக் காடாக மாறியது. வயல் இருந்த இடம் தெரியவில்லை. வாய்க்கால் போன இடம் தெரியவில்லை. அரசு எந்திரங்கள் முடுக்கி விடப்பட்டன. புரட்சித் தலைவர் அவர்களின் அரசு போர்க்கால நடவடிக்கைகளைப் புயல் நிவாரணங்களை மேற்கொண்டது.

வெள்ளத்தால் வீடிழந்த மக்களுக்கும், பாதிக்கப்பட்ட விவசாய மக்களுக்கும் வெள்ள நிவாரணங்களை அளித்து வெற்றி பெற்றார் எங்கள் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள்.

வெள்ளத்திற்குப் பின்னும் விவசாயம் நசுங்கி விடவில்லை. விலைவாசி ஏறிவிடவில்லை. வீரமகன் வெற்றிக்கொடி நாட் டினார்.

வெளிநாடுகளுக்கு அரிசி ஏற்றுமதி. இதைவிட வேறென்ன சாட்சி வேண்டும் !

ஆயினும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசுக் காலத்தில் எல்லாப் பகுதி மக்களும் இந்த இன்பத்தை முழுமையாகப் பெற்றிடவில்லை என்பதையும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய குளத்தூர் தொகுதி மிகவும் வறட்சிப் பகுதி யாகும். எங்களுடைய மக்களுக்கு விவசாயத்தைத் தவிர வேறு வழி இல்லை.

விக்கிரமாதித்தன் கதைதான். நாடாறு மாதம்; காடாறு மாதம் என்பார்களே அதுபோல என்னுடைய தொகுதி மக்கள் விவசாயத்திலே ஈடுபடுகின்ற ஆறுமாதம் போக மீதமுள்ள ஆறு மாதம் ஓடியாடி உழைக்கத் தயாராய் இருந்தும், மாற்றுத் தொழில் வேறு ஏதுமின்றி முடங்கி கிடக்கிறார்கள். அந்த ஆறு மாத வாழ்வுகூட மழை பெய்யாவிட்டால் நடைபெறாது. மானம் பார்த்த பூமிதான் குடிநீருக்குக்கூட மக்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். ஆகவே, புதிய புதிய நீர்ப்பாசன முறை களைப் புகுத்திட வேண்டுகிறேன். காவிரியாற்றுத் தண்ணீர், காவிரியாற்றுத் தண்ணீர் என்று காலம் காலமாய் வேண்டுகோள் விடுத்துக் கொண்டிருக்கும் எங்கள் மக்கள் காதிலே நல்ல சேதி பரவிட வேண்டும். இந்த நல்லவர் ஆட்சியிலே அதை நாங்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றோம்.

1965 இல், மறைந்த அமைச்சர் மாண்புமிகு திரு. இராமையா அவர்கள் காலத்திலே கொடுக்கப்பட்ட அடமான நிலங்களுக்கு இன்னமும் பட்டா வழங்கப்படாத நிலையிலிருப்பதைச் சுட்டிக் காட்டுவது என்னுடைய நீங்காத கடமையாகும். என்னுடைய தொகுதியில் மட்டும் நூற்றுக் கணக்கான ஊர்களில் இந்த நிலைமை உள்ளது.

உணவு உற்பத்தித் திட்டங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த அரசு, பட்டா கிடைக்காததனாலே அரசு உதவிகளைப் பெற முடியாத நிலை. பட்டா மாற்றங்கள் தாமத தப்படுவதாலே அரசு கடன்களைப் பெற முடியாத நிலை.

சாதாரண விவசாயி நன்மை பெற முடியாததற்குக் கார ணம் வட்டக் கர்ணமும் மணியக்காரர்களும்தான். கடவுளைக் காட்டிலும் கர்ணம் வலிமை படைத்தவர் என்பதை நான் கண் கூடாகக் கண்டிருக்கிறேன்.



ஆகவே, கர்ணம், மணியக்காரர்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது கட்டாயமாக மாறுதல் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கர்ணம், மணியக்காரர்களை முழு நேர ஊழியர் களாக்கி சர்வீஸ் கமிஷனில் அப்பாயின்ட்மெண்ட் செய்தால் ஒழிய கர்ணத்திடம் சாதாரண குடிமக்கள் நன்மை பெறுவது என்பது காளை மாட்டிடம் கறக்க முயலும் பாலாகும்.

ரெவின்யூ போர்டையே கலைக்க முடிவு எடுத்துள்ள இந்த அரசு கர்ணங்களுடைய கொடுமைகளுக்கும் ஒரு முடிவு கட்டும் என்று மக்கள் பெரிதும் எதிர்பார்க்கிறார்கள் என்பதைப் பணி வோடு தெரிவித்துக் கொள்கிறேன.

1975-ல் தமிழகத்தில் கோதுமையின் விற்பனை அளவு 4.80 இலட்சம் டன்களாக இருந்தது, 1979-ல் கோதுமையின் விற்பனை அளவு 8,500 டன்களாகக் குறைந்தது ஒன்றே மாண்பு மிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு நல்லாட்சி என் பதற்கு எடுத்துக்காட்டு.

நல்லாட்சி புரிந்து கொண்டிருந்த இந்தஆட்சியைத்தான் நடு அரசு கலைத்தது. 2 ரூபாய் 85 காசுக்கு வெளியிலே விற்றுக் கொண்டிருந்த சர்க்கரை, ஆட்சி கலைக்கப்பட்ட ஆறு வாரத்திற் குள்ளேயே விலை ஆறாக உயர்ந்ததை நாம் அறிவோம்.

விலைவாசி உயர்வுக்கு மாநில அரசு மட்டுமல்ல; மத்திய அரசுக்கும் பங்கு உண்டு. மத்திய அரசு பின்பற்றும் நிதிக் கொள்கை, நாணயப் புழக்கம், வங்கி தரும் நிதி உதவி, ஏற்றுமதி இறக்குமதிக் கொள்கைகள், மாநிலங்களுக்கு இடையே ஏற் படும் பொருட்களின் நடமாட்டம், போக்குவரத்துச் செலவுகள், ரயில்வேக்களின் வாய்ப்புகள், டீசல் பெட்ரோல் விலை உயர்வு ஆகிய இவைகளால்தானே பெரும்பாலும் விலைவாசி ஏறுகிறது? இதற்கு யார் பொறுப்பு? மத்திய அரசுக்குப் பெரும்பங்கு உண்டு அல்லவா?

இவைகளுக்கும் மீறி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர் களுடைய அரசு, அரிசி, சர்க்கரை, கம்பு, கேழ்வரகு, சோளம், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், உப்பு, புளி, மிளகாய், சிமிட்டி, விறகு போன்ற இன்றியமையாப் பொருட்களின்மீது விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி, நுகர் பொருள் வாணிபக் கழகம், நியாய விலைக்கடை, சிறப்பு அங்காடி ஆகிய இவைகளின் மூலம் மக்களுக்குத் தட்டுப்பாடு இன்றி விநியோகம் செய்து வரு வதைப் போற்றிப் பாராட்டாமல் இருக்க முடியாது. இந்த அரசை நாடு போற்றுகிறது; நல்லவர்கள் உள்ளம் பாராட்டு கிறது.

[திரு. த. மாரிமுத்து] [1980 ஜூலை 24

[முற்பகல் 11-30].

இப்படியாக புயல்வெள்ள சேதாரங்களுக்கு நிவாரணம் அளித்
தும் புன்மனம் கொண்டோர்களால் தூண்டிவிடப்பட்ட
போராட்டங்களைச் சமாளித்தும் ஆலை அதிபர்கள் நீதிமன்றங்
களில் தொடர்ந்துள்ள வழக்குகளை ஒட்டி கூடுதல் விலைகளைத்
தருவதனால் ஏற்படும் இழப்புகளை மத்திய அரசு ஈடு செய்யா
மல் இருந்தும் மத்திய அரசு கோதுமைக்கு ஆதரவு தருவதைப்
போல் நெல்லுக்கும் கொள்முதல் விலையைக் கூடுதலாகத் தரும்
படி இந்த அரசு கோருவதை மத்திய அரசு ஏற்காமலிருந்தும்
விவசாயப் பெருங்குடி மக்களுடைய சிரமங்களை உணர்ந்துள்ள
மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு விவசாயப்
பெருங்குடி மக்களுடைய கடன் சுமைகளைக் குறைத்தும் தமிழ்
நாட்டில் கட்டாயக் கொள்முதலோ, வர்த்தகர்கள்மீது லெவி
யோ அரிசி, நெல், நடமாட்டத் தடைகளோ இன்றி வர்த்தகத்
தில் சுதந்திரச் சூழ்நிலையை உருவாக்கி விலைவாசிகளைக் கட்
டுப்படுத்தி உற்பத்தியாளர், நுகர்வோர் நலன்காத்து கையிருப்பும்
வைத்துக்கொண்டு 50,000 டன்கள் பச்சரிசியையும் 5,000
டன்கள் குறுவையையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து
தமிழனின் பெருமையை உயர்த்திய மாண்புமிகு புரட்சித் தலை
வர் அவர்களுடைய ஆட்சியின் செயல்திறம் கண்டு நாங்கள்
பெருமைப்படுகிறோம், பெருமிதம் கொள்கிறோம். ஆகவே,
தமிழகத்தில் உணவு நிலைமை சீராக, சிறப்பாக இருப்பதற்கு என்
இதயங்கனிந்த வணக்கங்களை பாராட்டுக்களை, மாண்புமிகு
புரட்சித் தலைவர் அவர்களுடைய பொற்பாதங்களிலே சமர்ப்
பித்து இந்த மானியக் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்து வாய்ப்
பளித்த மாமன்றத் தலைவரவர்களுக்கு மீண்டும் நன்றி தெரிவித்து
அமர்கிறேன்.

வாழ்க பேரறிஞர் அண்ணாவின் புகழ் வாழ்க! வாழ்க
மாண்புமிகு புரட்சித் தலைவர்!!

திரு. ரா. கிருஷ்ணன்: பேரவைத் மாற்றுத் தலைவரவர்
களே, இன்று விலைவாசியைத் தீர்மானிப்பதில் மத்திய அரசின்
கொள்கையும் நடைமுறையும் முக்கியப் பொறுப்பாகும் என்ற
உண்மையைத் தெளிவாக இந்தக் கொள்கை விளக்க உரையில்
குறிப்பிட்டிருப்பது மிக வரவேற்கத்தக்கது. அது உண்மையு
மாகும். ஆனால், இந்த அதிகாரத்தை மாநிலங்களும் பெற
வேண்டுமென்று வலியுறுத்துவது அவசியம் என்று நான்
வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். பொதுவாக, விலை
வாசியைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், மொத்த
வியாபாரத்தை அரசே ஏற்று நடத்தினால்தான் விலையைக்
கட்டுப்பாட்டுக்குக் கொண்டு வரமுடியும் என்று சொல்ல
விரும்புகிறேன்.



1980 ஜூலை 24] [திரு. ரா. கிருஷ்ணன்]

சிவில் சப்ளைஸ் மூலமாக, வியாபாரத்தைக் கட்டுப்படுத்த
இயலுகிறது என்று இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது
உண்மை என்றாலும், எந்த அளவிற்குக் கட்டுப்படுத்த முடி
கிறது, எந்த அளவிற்கு வியாபாரம் செய்ய முடிகிறது என்பது
தான் பிரச்னை. ஆகவே, வியாபாரத்தை அதிகம் பரவலாக்க
விரிவாக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் சப்ளை மூலமாகவும், கூட்டுறவுச்
வியாபாரத்தை, அரசு நடத்துகிறது. 17,000 நியாய
சங்கங்கள் மூலமாகவும் விட்டோம் என்று சொல்கிறார்கள்.
விலைக் கடைகள் திறந்து விலைக் கடைகள் மூலமாக அந்தப்பகுதி
ஆனால், 17,000 நியாய விலைக் கடைகள் என்பதுதான் பிரச்னை. அந்
மக்களுக்குப் பலன் கிடைக்கிறதா என்பதுதான் பிரச்னை. அந்
மக்களுக்குப் பலன் கிடைக்கிறதா பல பொருள்கள் கிடைப்பதில்லை.
தக் கடைகளுக்குப் போனால், பல பொருள்கள் கிடைப்பதில்லை.
அவசியப் பண்டங்களான, அரிசி, பருப்பு, மண்ணெண்ணெய்,
சமையல் எண்ணெய் போன்றவைகள் எப்பொழுதும் கிடைக்கும்
வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இங்கே நான்
குறிப்பிட விரும்புகிறேன்.

இங்கே, இந்த பாலிசி நோட்டிலே, அரிசியைப் பொறுத்த
வரையில், மே மாதத்திலிருந்து அக்டோபர் மாதம்
வரையில் விலை கூடுகிறது என்றும் சொல்லப்பட்டி
ருக்கிறது. ஒரு கிலோ அரிசிக்கு 25 காசுதான் உயர்
ந்திருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால்,
இன்றைக்கு ஒரு கிலோ அரிசி 75 பைசாவுக்கு மேல்
உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்து பத்திரிகையில்கூட 4 நாட்
களுக்கு முன் திருச்சி மாவட்டத்திலே மணச்சநல்லூர் என்ற
கிராமத்திலே, சமீப காலத்தில் ஏறியுள்ள நெல்லின் விலை, 4, 5
ஆண்டுகளில் இந்த அளவு ஏறியதே கிடையாது என்று குறிப்பிடப்
பட்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கத்திடம் கையிருப்பு இல்லை
யெனில், அரசாங்கமே ஆட்டம் காணுகின்ற நிலை கடந்த
காலத்தில் ஏற்பட்டதை நாம் நிச்சயமாக மறந்து விட முடியாது
என்று சொல்ல விரும்புகிறேன்.

1979 டிசம்பர் மாதத்தில் சர்க்கரைக்கு ஏற்பட்ட அந்தத்
தட்டுப்பாட்டின் காரணமாக, இந்த அரசு எந்த அளவு திணறி
யது என்பதையும் மறந்து விட வேண்டாம். ஆகவே, சர்க்கரை
போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் கையிருப்பு தாராளமாக
இருக்க வேண்டியது மிக அவசியம் என்பதை நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

அடுத்து கார்டு விநியோகம். இன்றைக்கு கார்டு விநியோ
கத்தில் பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. யாராவது கார்டு வாங்க
வேண்டுமென்றால், அதிகமாகச் சிரமப்படுகிறார்கள். உண்மை
யிலே, வறுமையின் காரணமாக கார்டுகளை அடகு வைப்பதும்
உண்மைதான். ஆனால், புதிய கார்டுகளை உடனடியாக வழங்க

வேண்டியது அவசியம். இந்தச் சூழ்நிலையிலே தனியார் கடை
களிலே 500, 1,000 கார்டுகளை வாங்கி வைத்திருப்பதும் உண்டு.
அவர்கள் அதிக விலைக்கு ஒப்பன் மார்க்கெட்டில் விற்கிறார்கள்
அதை. இப்படிப்பட்ட முறைகேடுகள் அதிகமாக நடைபெறு
கின்றன.

இந்த நியாய விலைக் கடைகள் ஒவ்வொரு குக்கிராமத்திலும்
இல்லை. ஆனால் இருக்கின்ற நியாய விலைக் கடைகளில், 2
கிலோமீட்டர் தூரத்திலேயுள்ள குக்கிராமத்தைச் சேர்ந்தவர்
களும் வந்து பொருள்களை வாங்க வேண்டிய நிலையிருப்பதால்
ஒவ்வொரு குக்கிராமத்திலும் பிராஞ்சுகளை ஏற்படுத்த வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கலப்படக்காரர்கள், பதுக்கல்காரர்கள் நிறைய
இருக்கிறார்கள் (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் (திரு. சி. வி.
வேலப்பன்) : ஒவ்வொருவருக்கும் 7 நிமிடங்கள் தான் கொடுக்
கப்பட்டிருக்கிறது. நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டும்.

திரு. ரா. கிருஷ்ணன் : குறிப்பாக பதுக்கல்காரர்களும்,
கடத்தல்காரர்களும், நாட்டில் சமூக விரோத சக்திகளாக இருக்
கிறார்கள். அவர்களைக் கண்டு பிடிப்பதே சிரமமாக இருக்
கிறது. காரணம் அவர்கள் மிகவும் வசதி படைத்தவர்களாக
இருக்கின்றார்கள். பல இடங்களிலே மஞ்சளத்தி இலைளது
டீ யில் கலப்படம் செய்கிறார்கள். சிறு சிறு கற்களை அரிசி
யிலும் அந்தி மந்தார விதையை, மிளகிலேயும் கலப்படம் செய்
கிறார்கள். அதேபோல கரம்பை மண்ணை உளுந்திலேயும், புளி
யங்கொட்டையை பவுடராக்கி காப்பிப் பவுடரிலும் கலக்கிறார்கள்
செங்கல்பொடியை மிளகாய்ப் பொடியில் கலப்படம் செய்து
விற்கின்றார்கள். எண்ணெயில் கலப்படம் செய்கின்ற நிலைமை
யும் இருக்கின்றது. இந்தக் கலப்படம் காரணமாக, கண்கள்
பாதிக்கப்படுகின்ற நிலை இருக்கிறது. இதய நோய் வருவதாக
வும் மருத்துவர்கள் சொல்லுகிறார்கள் இவர்கள் மேல் என்ன
நடவடிக்கை எடுக்கப்படுகிறது? சென்றமாதம் கூட 1½ கோடி
ரூபாய் பெறுமானமுள்ள பாம் ஆயில் பிடிக்கப்பட்டிருக்கிறது.
அதை யார் யார் பதுக்கி வைத்தார்கள் என்ற பெயரைச் சொல்
லக் கூடிய நிலையில் கூட இல்லை. அப்படிப்பட்டவர்களைப்
பிடித்து அவர்கள் பெயர்களை விளம்பரப் படுத்த வேண்டும்.
தற்போது ஓட்டல்களிலே விளம்பரப்படுத்துவதைப்போல
இவர்களையும் விளம்பரப்படுத்தவேண்டும். அவர்களுக்கோ
அவர்களுடைய குடும்பத்திற்கோ எந்தவிதமான லைசன்சும்
கொடுக்கக்கூடாது.



மேலும் இந்த மாதிரி குற்றங்களைப் புரிவதற்கு பைன் அல்லது
இம்பிரிசன்மென்ட் என்று சட்டத்தில் இருக்கிறது. அதை
மாற்றி பைன் என்பதை சட்டத்தில் இருந்து நீக்கி, இம்பிரிசன்
மென்ட் என்று மட்டும் போடவேண்டும்.

இப்போது தனியார்களைப் பொறுத்தவரையில் அவர்
களுக்கு வங்கிகள் மூலமாக ஏராளமாகக் கடன் கிடைக்கின்றது.
அந்தக் கடன்களை வாங்கி அவர்கள் பதுக்கல் நடவடிக்கைகளில்
ஈடுபடுகிறார்கள். ஆகவே பதுக்கல்கள் வளர்வதற்கு வங்கி
களும் ஒரு காரணமாக இருக்கின்றன. அப்படிப்பட்ட சூழ்நிலை
வளராமல் இருப்பதற்கு வங்கிகள் கடன் கொடுப்பதைக் கட்டுப்
படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்த விலைப் பட்டியல் கடைகளில் கட்டாயம்
வைத்திருக்கவேண்டும் என்று இருக்கிறது. அப்படி வைக்காவிட்
டால் நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி விற்கக்கூடிய
அந்தப் பொருளிலே விலை போட்டிருக்கிறார்கள். அதிலே
ரூ. 4.00 என்று இருக்கிறது. அதிலேயே எக்ஸ்குலுசிவ் ஆப்
லோக்கல் டாக்சஸ், என்று போடுகிறார்கள். அவர்களைக்
கேட்டால் 4.25க்குத்தான் தருவோம் என்று சொல்கிறார்கள்.
அது லோக்கல் டாக்ஸ் என்று சொல்கிறார்கள். அப்படிப்பட்ட
நிலையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து டீசல் தட்டுப்பாடு ஏராளமாக இருக்கின்றது. அது
எசன்சியல் காமோடிடி ஆக்டில் வராமல் இருப்பதால் நடவ
டிக்கை எடுக்க முடியவில்லை. எனவே டீசல் தட்டுப்பாட்டை
நீக்கி டீசல் சுலபமாகக் கிடைக்கும்வகையில் ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து போதுமான அளவுக்குக் கோடவுன்கள் இல்லை
என்று சொல்கிறார்கள். கோடவுன்கள் இல்லாததால் பொருள்கள்
எல்லாம் சேதமடைகின்றன. ஈரம் தங்கி ஸ்டாக்குகள்
எல்லாம் மேலும் சேதமடைகின்றன. அதைப் போக்குகின்ற
வகையில் நிறைய கோடவுன்களை ஏற்பாடு செய்து தர வேண்
டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஷார்ட்டேஜுகளைப் பொருத்தவரையில் இந்தப்
பகுதிகளிலே வேலை செய்யக்கூடிய அடித்தளத்திலே வேலை
செய்யக்கூடிய ஊழியர்கள் மீது ரெக்கவரி நடவடிக்கை எடுக்கப்
படுகிறது. எப்.சி.ஐ. லே இந்த ஷார்ட்டேஜைப் பொருத்தவரை
யிலும் 3% கொடுக்கப்படுகிறது. ஆனால் சிவில் சப்ளைஸ் கார்ப்
பரேஷனைப் பொறுத்தவரையிலும் 1% தான் கொடுப்பதாகச்
சொல்லப்படுகிறது. 200, 300 ரூபாய் சம்பளம் வாங்கும் சாதாரண
தொழிலாளர்களுக்கு ஷார்ட்டேஜ் போட்டால் அவர்கள்
மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். அரசு இதைக் கவனத்தில்

எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரிசி யைப் பொறுத்தவரையில் தனியார் கடைகளில் விற்கப்படுகிற அரிசிக்கும் சிவில் சப்ளைஸ் கடைகளில் விற்கப்படுகிற வித்தியாசம் இருக்கின்றது. இது வெள்ளையாக இல்லை. இதற்கு என்ன காரணம் சொல்கிறார்கள் என்றால் டபுள் பாயில் செய் திருப்பதால்தான் இப்படி இருக்கிறது என்று சொல்கிறார்கள்.

[முற்பகல் 11-40]

அதைக் கண்காணிப்பதற்காக குவாலிட்டி மேனேஜர், அசிஸ் டென்ட் குவாலிட்டி மேனேஜர், குவாலிட்டி இன்ஸ்பெக்டர், என்று அதிகாரிகள் எல்லாம் இருந்தாலும் அதைப் ப்ராசஸ் செய்வதில் கோளாறுகள் வருவதைத் தடுக்க வேண்டும் என்று நான் கூறிக் கொள்கிறேன்.

அதைப்போலவே நெல்லைப் பொறுத்தவரையில், கொள் முதல் விலையை ரூ. 124 என்று உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி இருப்பது வரவேற்கத் தக்கது. இப்போது உரம் போன்ற பொருள்களின் விலை கூடி இருப்பதால் விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்படாத அளவிற்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று மத்திய அரசாங் கத்தை வலியுறுத்துவார்கள் என்று நம்புகிறேன்.

சீனியைப் பொறுத்தவரையில், இரட்டை விலை இருப்பதால் தான் ஊழல், பதுக்கல் போன்றவைகள் உள்ளன. இது மத்திய அரசாங்கத்தின் கொள்கை என்றாலும், அதை மாற்று வதற்கு மாநில அரசாங்கம் தகுந்த நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சர்க்கரையைப் பொறுத்தவரையில், கிராமங்களில் மாதம் ஒன்றுக்கு 1 கிலோ கொடுப்பது என்பதை 2 கிலோ என்று உயர்த்த வேண்டும். அந்த 1 கிலோ கூட முறையாகக் கிடைப்பது இல்லை. பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக வழங்கப்படும் சர்க் கரையை கூட்டுறவு சங்கத் தலைவரோ அல்லது மற்றவர்களோ சேர்ந்து கொண்டு, அதை எல்லா இடங்களிலும் விற்காமல் அதில் ஊழல் நடந்து இருப்பதை அறிகிறேன்.

உதாரணமாக, மதுரை மாவட்டத்தில் அய்யலூர் என்ற கிராமத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் இருந்து 5 சர்க்கரை மூட் டைகள் கைப்பற்றினார்கள் என்ற தகவல் வந்து இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலைகளை மாற்றியமைக்கவேண்டும்.

சிமெண்ட் பர்மிட் உண்மையிலேயே விற்கப்படுகிறது. அதிலே உள்ள ஊழல் அகற்றப்பட வேண்டும்.





கன்ட்ரோல் துணியைப் பற்றி இந்த அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கன்ட்ரோல் துணி கூட்டுறவுத் துறை மூலமாக சிவில் சப்ளைஸ் மூலமாக விநியோகித்து, ஊழல் இல்லாத அளவிற்கு செய்ய வேண்டும். விலைகள் கட்டுப் படுத்தப்படுமானால், மாநில அளவிலே, வட்ட அளவிலே கொள் முதல் கமிட்டிகள் இருக்க வேண்டும். இப்போது ஸ்டேட் லெவ லில் பர்சேசிங் ஆபீசர் என்று ஒருவர் இருக்கிறார். அவர் இஷ் டத்திற்குத்தான் கொள்முதல் செய்கிறார்கள். ஆகவே, அதைக் கண்காணிக்க பல்வேறு அரசியல் கட்சிகளைக் கொண்ட பல்வேறு மட்டங்களில் இருக்கக்கூடிய, குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

பதுக்கலைக் கண்டுபிடிக்கவும், விநியோகத்தைக் கண் காணிக்கவும் கேரளாவில் மாதர்குழு ஏற்படுத்தப்பட்டு இருக் கிறது. அதைப்போலவே இங்கேயும் இளைஞர்கள் அமைப்பு கள், அல்லது அரசியல் கட்சிகளைக் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் குறைந்த பட்ச அதிகாரத்தைக் கொண்டாவது அமைக் கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஹோட்டல்களைப் பொறுத்தவரையில், விலைகள் கட்டுப் படுத்தப்படும் என்று ஏற்கனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நேற்றைக்கு முன் தினம் பத் திரிகையில் பார்த்தபோது, அந்த ஓட்டல் அதிபர்கள் அந்தப் பண்டங்களின் விலையைக் குறைக்க முடியாது என்று சொல்லி யிருக்கிறார்கள். ஓட்டல் பண்டங்கள் என்று சொல்கிறபோது, இட்லி, வடை, தோசை போன்றவற்றைத்தான் நாம் பார்க் கிறோம். அதே நேரத்தில், அசைவ ஓட்டல்களில் விலைகள் தாறுமாறாக ஏறியிருக்கின்றன. அதையும் குறைக்கவேண்டும். ஸ்வீட் ஸ்டால்களைப் பொறுத்தவரையில், அங்கே விற்கப்படும் ஸ்வீட்டின் விலை அதிகமாகப் போய் இருக்கிறது. 20 ரூ. என்ற அளவிற்கு விற்ற இனிப்புப் பண்டங்கள் இன்றைக்கு 50—60 ரூ. என்ற அளவிற்கு விற்கப்படுகிறது. அதையும் கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக, பஸ் ஸ்டாண்ட், கோர்ட் போன்ற இடங்களில்—மற்றும் முக்கியமான இடங்களில் உணவுப் பொட்டலங்கள் குறைந்த விலையில் விநியோகிப் பதற்கு அரசு முன் வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விறகு விலை அதிகம் ஆகிவிட்டது. ஆகவே, அரசாங்கமே கூப்பு கான்ட்ராக்ட் எடுத்து அதை விநியோகிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, மீனவர்களைப் பொறுத்தவரையில், அவர்
களுக்குப் பாதுகாப்பு இல்லை. பல நேரங்களில் கடலில் இறந்து
விடுகிற நிலைமையேற்படுகிறது. ஆகவே, மீனவர்களுக்கு இன்
ஷூரன்ஸ் ஸ்கீம் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன். இதேபோன்று கட்டுமர மீனவர்களுக்கும், மோட்டார்
படகு மீனவர்களுக்கும் பல நேரங்களில் தகராறு ஏற்பட்டு
இருக்கிறது. அதைப் போக்குவதற்கு நிரந்தரமான ஏற்பாடு
செய்ய வேண்டும்.

அதைப்போன்று, தமிழ் நாட்டில் 3 இடங்களில் குறிப்பாக
நாகப்பட்டினம், சென்னை, மண்டபம்—போன்ற இடங்களில்
உள்ள பிஷரீஸ் போட் கட்டுவதற்கான தொழிற்சாலைகள் இருக்
கின்றன. ஒவ்வொரு ஆண்டும் அதனை மூடப்போகிறோம்
என்று அங்கே இருக்கும் அதிகாரிகள் சொல்கிறார்கள். ஆனால்
சென்ற ஆண்டு இந்த அமைச்சரவையிலே இருந்த முன்னாள்
அமைச்சர் அந்தத் தொழிற்சாலையை மூட மாட்டோம் என்று
வாக்குறுதி கொடுத்தார்கள். இப்போதும் அப்படிப்பட்ட
வாக்குறுதியைக் கொடுக்கவேண்டும் என்று கூறிக் கொள்கிறேன்.
(மணியடிக்கப்பட்டது).

*__திரு. சி. கேசவ ஆதித்தன் :__ மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, உணவு, மீனளத் துறை மானியக் கோரிக்கை
களில் பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்காக முதற்கண் நான்
நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று புரட்சித் தலைவர் ஆட்சியில் உணவுப் பஞ்சம் இடை
யாது. இந்த நாட்டிலே வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருந்தபோதும்
உணவுப் பற்றாக்குறை ஏற்படவில்லை; தன்னிறைவு பெற்றி
ருந்தது. இப்போதும் தன்னிறைவு பெற்றிருக்கிறது. மக்களு
க்கு அத்தியாவசியமான பொருட்கள் நியாய விலையில் கிடைக்
கச் செய்ய ஆங்காங்கே சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் கடை
கள் ஏற்படுத்தியிருக்கிறோம். ஆனாலும் இதில் வேலை செய்
கிறவர்கள் கிராமப்புறங்களில் ஒழுங்காகச் செயல்படவில்லை.
சில கிராமங்களில் 3 மைல் தூரம் வரையில் நடந்துசென்று
பொருட்களை வாங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதனால்
பொதுமக்கள் மிகவும் அவதிப்படுகிறார்கள். உதாரணத்திற்குச்
சொல்ல வேண்டுமானால் எனது தொகுதியில் காயாமொழி,
செம்மரிக்குளம் போன்ற கிராமங்களில் இந்த நிலை இருக்
கிறது. எனவே அந்த விற்பனைக் கடைகளை சிறிய கிராமங்
களிலும் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறுமைக் கோட்டிற்குக் கீழே எவ்வளவு ஏழைக் குடும்பங்கள்
வாழ்கின்றன என்று துல்லியமாகக் கணக்கு எடுத்து, ஒரு குடும்
பத்திற்கு ஒரு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி தினந்தோறும் கொடுக்க
ஏற்பாடு செய்ய வேண்டும்.





திருச்செந்தூரில் இந்த கார்ப்பரேஷன் கடை மூலம்
ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மட்டுமே மண்ணெண்ணெய்
விற்பனை செய்கிறார்கள். அதனால் வேலைக்குச் சென்று
மாலையில் வீட்டுக்குத் திரும்பும் ஏழை எளிய மக்கள்,
கூலி வேலை செய்கின்றவர்கள் மண்ணெண்ணெய் வாங்க
முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அப்படிப்பட்ட
இடங்களில் இரவு 9 மணி வரையில் மண்ணெண்ணெய் வழங்க
ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, திருச்செந்தூர் பகுதியில் சுமார் 20 மைல்
தூரம் வரை கடற்கரை இருக்கிறது. புன்னக்காயல், அமலிநகர்
போன்ற கடற்கரை கிராமங்களில் ஏழை மீனவர்கள் மீன்பிடித்
தொழில் செய்து வருகிறார்கள். அவர்கள் எல்லாம் நாட்டுப்
படகு வைத்து, கரையோரம் மீன்பிடித்து வாழ்க்கை நடத்தி வரு
கிறார்கள். ஆனால் வீரபாண்டியன் பட்டினத்தில் இருப்பவர்
கள் பணக்கார மீனவர்கள். அவர்களும், கேரளத்திலுள்ளவர்
களும் சென்னையிலுள்ளவர்களும்கூட அங்கே வந்து, அவர்கள்
சொந்த விசைப்படகுகளில் அல்லது விசைப்படகுகளை வாட
கைக்கு அமர்த்திக் கொண்டு வந்து, அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி
செய்யும் இரால் மீன்களைப் பிடிக்கிறார்கள். அதனால் ஏழை
மீனவர்கள் பாதிக்கப்படுகின்ற காரணத்தால் அவர்களுக்கும்
பணக்கார விசைப்படகுக்காரர்களுக்கும் அடிக்கடி கலவரம்
ஏற்படுகிறது. எனவே விசைப்படகுக்காரர்கள் நிரந்தரமாக
அந்தப்பகுதிக்கு வரக்கூடாது என்று தடை செய்து, ஏழை மீனவர்
கள் இந்த இரால் மீன்களைப் பிடிக்க வசதி செய்து கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குலசேகரன்பட்டினத்தில் சில காலத்திற்கு முன்பு இருந்த
ஒரு துறைமுகம் தற்போது செயல்படாமல் இருக்கிறது. மீனவர்
களின் நலனைக் கருதி, அந்தத் துறைமுகத்தை மீன்பிடி துறை
முகமாகச் செயல்படச் செய்ய வேண்டும் என்றும் திருச்செந்
தூரில் மீன் பதனிடும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்
டும் என்றும் கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்
கிறேன்.

*__திரு. செ. சிவசாமி :__ மாண்புமிகு தலைவரவர்களே, தமிழ்
நாட்டில் குளச்சல் முதல் கும்மிடிப்பூண்டி வரை 600 மைல் நீளத்
திலும் கடல் எல்லை சுற்றிலும் 200 மைல் அகலத்திலும் உள்ள
நீண்ட பெரிய கடற் பகுதியை இயற்கை நமக்குக் கொடுத்திருக்
கிறது. இதில் கிடைக்கும் பலவகைப்பட்ட மீன்கள், சங்கு, முத்து,
கடல்பாசி, இதைச் சார்ந்துள்ள பழங்குடி மக்களாகிய பரதர்
கள் என்ற மீனவர்கள், இதைச் சார்ந்த தொழில்கள் பற்றியும்
இந்த செல்வங்களை நாட்டின் வளர்ச்சிக்கு எப்படிப் பயன்படுத்து
வது என்பது பற்றியும் நாம் ஆராயவிருக்கும் இந்த நேரத்தில்
சில கருத்துக்களை கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.

[திரு. செ. சிவசாமி] [1980 ஜூலை 24

மீன் பிடிப்பதைப் பொறுத்தவரையில் கரை ஓரத்தில்தான்
இதுவரை பிடித்துக்கொண்டிருக்கிறோம். ஆழ் கடல் மீன்
பிடிப்பதைப்பற்றி நாம் அதிகமாகச் சிந்திப்பதில்லை. அதற்குத்
திட்டமிட வேண்டும்; மத்திய அரசின் உதவியையும் நாட வேண்
டும். அப்படியானதால்தான் இப்போது இருப்பதைக் காட்டி
லும் அதிகமாக மீன்களைப் பிடிக்க முடியும்.

பிறநாடுகளிலிருந்து இங்கே வந்து நமது மீன் செல்வத்தை
இன்றைக்குக் கொள்ளையடித்துச் செல்கிறார்கள். ஜப்பான்,
சீனா, தைவான போன்ற நாடுகளிலிருந்து வந்து "மோட்டார்
ஷிப்' என்று சொல்லப்படுகின்ற ட்ராலர்களை வைத்து, பெரு
மளவில் நமது கடல் செல்வங்களைக் கொள்ளையடித்துச் செல்
கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்த நம்மிடம் உரிய சாதனம்
இல்லை. கடற்படையிடம் தெரிவித்தால், அவர்கள்
கள்ளிக்கோட்டையிலிருந்துதான் வரவேண்டுமென்ற சூழ்நிலை
தற்போது இருக்கிறது.

[முற்பகல் 11-50]

ஆகவே இந்த நிலைமையை மாற்றி நம்முடைய பகுதியிலே
இருந்து மீன்களைக் கொள்ளை அடித்துச் செல்வதைத் தடுத்து
நிறுத்தக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். கடற்படை
யைப் பொறுத்தவரையில் மிகச்சிறிய நாடான இலங்கை கூட
கடல் எல்லையில் கடற்படை பாதுகாப்பைக் கொடுக்கின்றது.
அவர்களுடைய எல்லையிலே யார் சென்றாலும் அவர்கள் தடுத்து
நிறுத்தப்படுகிறார்கள். ஆனால் அதே நேரத்தில் நாமும் அவ்
வாறு பாதுகாப்புக் கொடுத்து நம்முடைய மீனவர்களுக்கு
உதவி செய்யாததன் காரணத்தால் நம்முடைய மீனவர்களுக்குப்
பாதுகாப்பு இல்லை என்பதைச் சொல்லிக் கொள்ளக் கடமைப்
பட்டிருக்கிறேன்.

அடுத்து டாட்டா, ஈ.ஐ.டி. பாரி கம்பெனி, ஷாவாலஸ்
போன்ற கம்பெனிகள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான ஏற்பாடு
களைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அவ்வாறு ஆழ் கடலில்
மீன் பிடிக்க ஏற்பாடுகளைச் செய்வதைப் பொறுத்தவரையில்
அதை அரசாங்கமே நேரடியாகக் கவனித்து அதை தனியார்
களுக்குக் கொடுப்பதை நிறுத்தி கூட்டுறவு முறையிலே, ஆழ்
கடலில் மீன் பிடிக்க வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்
டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பாதுகாப்பு ஷெல்டர்களை அதிகமான அளவிலே
கடலோரங்களில் கட்டுவதாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.
ஆனால் அவை போதுமானதல்ல, அதிகமான அளவிலே ஷெல்
டர்கள் கட்டிக்கொடுக்கவேண்டும். அவ்வாறு ஷெல்டர்கள்
இல்லாததன் காரணத்தால் பல கஷ்டங்கள் ஏற்படக்கூடிய சூழ்
நிலை இருக்கின்றது.



1980 ஜூலை 24] [திரு. செ. சிவசாமி]

அடுத்து தொண்டி, திருப்பாலைக்குடி, கோட்டைப்பட்டினம்
சென்னை போன்ற இடங்களில் பதப்படுத்தும் நிலையங்களை
ஏற்படுத்துவதற்கு விரிவான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க
வேண்டும்.

அடுத்து ஒவ்வொரு மீனவர்களுக்கும் லைஃப் பெல்ட்டுகள்
கொடுக்கலாம். ஒவ்வொரு பகுதியிலும் ரிலே செய்யும் சாதன
மும், ரிசீவ் செய்யும் சாதனமும் ஏற்படுத்திக் கொடுத்தால் மீன
வர்களுக்கு ஆபத்து வரக்கூடிய காலங்களில் அதாவது புயல் ஏற்
படக்கூடிய காலங்களில் அவர்களுக்குத் தகவல் கொடுக்கின்ற
வகையிலே மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆகவே அப்படிப்
பட்ட தகவல் கொடுக்கின்ற சாதனங்கள் பொருத்தப்பட
வேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து மீனவர்களுக்கு நல்ல வலைகள் கொடுக்க ஏற்பாடு
செய்யலாம். எங்களுடைய திருப்பாலைக்குடி போன்ற இடங்
களிலே ஏற்பட்ட புயலுக்குப் பிறகு கடந்த 6—11—1979
அன்று வலைகள் கொடுப்பதாகச் சொல்லப்பட்டு இப்போது
வரை அந்த வலைகள் சப்ளை செய்யப்படவில்லை. மேலும்
மீனவர்களுக்கு வலைகளை வழங்குவதைப் பொறுத்தவரையில்
411 பேர்களுக்குக் கொடுப்பதாகக் கேள்விப்பட்டேன். இப்
போது 411 பேர்களுக்கு 200 ரூபாய் கொடுப்பதாகக் கேள்விப்
பட்டேன். இது சரியான முறை அல்ல. மேலும் இவ்வாறு
கொடுப்பதைக்கூட திருப்பாலைக்குடியிலேயே கொடுத்தால் நல்லது
ஆனால் இராமநாதபுரத்திற்குச் சென்றுதான் வாங்க வேண்டி
இருக்கின்றது. ஆகவே மீனவர்கள் அலைக்கழிக்கப்படுகிறார்கள்
என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திலே ஒரு ஆராய்ச்
சிப் பிரிவு ஏற்படுத்தப்படவேண்டும். கோவை பல்கலைக் கழ
கத்திலே இப்படி ஒரு ஆராய்ச்சிப் பிரிவு இருக்கின்றது. அதே
போன்று மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்திலும் ஒரு
ஆராய்ச்சிப் பிரிவு ஏற்படுத்தப்படவேண்டும். குரு சடை தீவு
முக்கியமான ஒரு ஆராய்ச்சிப் பிரிவு இருக்கக்கூடிய தீவாகும்.
நீண்ட நெடுநாட்களாக அதாவது பிரிட்டிஷ் காலத்திலிருந்து
அந்தத் தீவிலே ஆராய்ச்சி நடந்துகொண்டிருக்கின்றது. இந்தி
யாவின் பல பகுதிகளிலிருந்து மட்டுமல்லாமல் பல கீழ் நாடுகளில்
இருந்துகூட மாணவர்கள் அந்தத் தீவுக்கு வந்து பலவிதமான
ஆராய்ச்சிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் அப்
படி வருகின்ற மாணவர்கள் அங்கே காட்டுக்குள்ளே தங்கி
இருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு தங்கும் வசதி கிடை
யாது. ஆகவே அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று
கேட்டுக்கொண்டு அந்த ஆராய்ச்சிப் பிரிவுகளையும் அதிகப்
படுத்தி மீன் வளத்தைப் பெருக்குவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து மீனவர்கள் கஷ்டப்பட்டு பிடித்த மீன்களின் பெரும் பகுதி பலன் தனியார்களுக்கு, தனிப்பட்ட முதலாளிகளுக்குப் போய் விடுகின்றது. தனிப்பட்ட முதலாளிகள் கடலோரத்தில் லாரி களை வைத்துக்கொண்டும் வேன்களை (Va ) வைத்துக்கொண் டும் கடலிலிருந்து வரக்கூடிய மீன்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிக் கொண்டு சென்று அதிக விலைக்கு விற்று கொள்ளை லாபம் அடிக்கிறார்கள். ஆகவே அந்த லாபம் அத்தனையும் மீனவர்களுக்குச் சேரும் முறையிலே அரசாங்கம் பர்சேசிங் சென்டர்ஸ் ஏற்படுத்த வேண்டும். அப்படிச் செய் தால் அந்த லாபம் மீனவர்களுக்குப் போய்ச் சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து மீனவர்களுக்கு இன்சூரன்ஸ் திட்டத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

அடுத்து மண்டபம் போன்ற இடங்களிலே ஐஸ் ப்ளான்டை ஏற்படுத்தக் கொடுக்க வேண்டும். அப்படி ஒவ்வொரு சென்டர் களிலும் ஐஸ் ப்ளான்ட் ஏற்படுத்தினால் மீன்கள் கெட்டுப்போய் அதனால் மீன் பிடித் தொழில் பாதிக்கக் கூடிய நிலையைத் தவிர்க்க முடியும். இவ்வாறு பாதிப்பு ஏற்படுவதால் அவர் களுக்குக் கிடைக்கக்கூடிய லாபம் குறைகின்றது. ஆகவே ஒவ்வொரு சென்டரிலேயும் ஐஸ் ப்ளான்ட் கட்டுவதற்கு வேண் டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து வாலிநோக்கத்தில் மத்திய அரசின் உதவியோடு 28 லட்ச ரூபாய் முதலீட்டில் மீன் பிடி மாதிரிக் கிராமம் துவக்க விருப்பதாக ஒரு திட்டம் இருந்தது. அது இப்பொழுது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அந்த மாதிரி கிராமத்தை (மாடல் கிராமம்) பொருத்த வரையில் வேகமாக முடிவு எடுத்து திட்டத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து இந்தக் கடலோரப் பகுதிகளில் வாழ்கிற நாட்டுப்படகுக் காரர்களுக்கும், இயந்திரப் படகுக்காரர்களுக்கும் எப்போதும் சண்டை சச்சரவு. இத்தகைய நிலைமை சென்னை, கோட்டைப் பட்டினம், ராமேஸ்வரம், மண்டபம் போன்ற இடங்களில் அடிக் கடி ஏற்படுகிறது. அந்த நிலை அரசாங்கத்தின் கவனத்திற்கு முன்பே கொண்டு வரப்பட்டு, நாட்டுப்படகுக்காரர்கள் வாரத் தில் 4 நாட்களும், இயந்திரப்படகுக்காரர்கள் 3 நாட்களுமாக மீன் பிடித்துக் கொள்ளவேண்டும் என்று உத்தரவு இடப் பட்டிருக்கிறது. ஆனால் அந்த உத்தரவுகள் சரிவர அமுல் நடத்தப்படாததினால்தான் இத்தகைய சண்டை சச்சரவுகள் ஏற்படுகின்றன என்று தெரிகிறது. ஆகவே அதை சரியானபடி அமுல் நடத்த நடவடிக்கை எடுத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.





அடுத்து போட்டுகள் செய்யும் தொழிற்சாலைகளை அதிக அளவில் விரிவுபடுத்த வேண்டும். மண்டபத்தில் ஒரு போட்டு தொழிற்சாலை இருக்கிறது, அதை இன்னும் நல்ல முறையில் விரிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்த கடல்பாசியை எடுத்துக் கொண்டால், கடல்பாசி உணவுப் பொருளாகவும், உரமாகவும், மருந்துப் பொருள்கள் உற்பத்தி செய்யவும் உபயோகப்படுகிறது. அதிலிருந்து பல சாயப் பொருள்கள் கூட கிடைக்கின்றன. கீழக்கரையில் இத் தகைய கடல்பாசிகளை எடுத்து உலர வைத்து பதப்படுத்தி பவுடராக ஆக்குவதற்கு பம்பாய்க்கு அனுப்புகிறார்கள். அங்கே அது பவுடராக்கப்பட்டு, சாயப்பொருள் தொழிற்சாலையில் சாயப் பொருளாக மாற்றுகிறார்கள். அந்தச் சாயப் பொருள்கள் திரும்பவும் இங்கே எடுத்து வரப்படுகின்றன. அதற்கு இங்கே ஏகப்பட்ட கிராக்கி இருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் லாபம் வரக்கூடிய தொழில் இது. ஆகவே அத்தகைய சாயப் பொருள் தொழிற்சாலை ஒன்றினை, எங்கெங்கே கடல்பாசி கிடைக் கிறதோ அங்கங்கே நிறுவுவதற்கு அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மண்டபத்திலே மீன் மாவு உற்பத்தி செய்யும் தொழிற்சாலை இருக்கிறது. அது மிக குறைந்த அளவில் தான் உற்பத்தி செய்து கொண்டிருக்கிறது. அந்த மாவை அதிகமான அளவில் உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடியில் 5 லட்சம் ரூபாய் செலவில் கருவாடு கிடங்கு ஒன்று நவீன சாதனங்களுடன் உருவாக திட்டமிடப்பட்டுள்ள தாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதை விரைந்து சீக்கிர மாக உருவாக்க நடவடிக்கை எடுத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று தூத்துக்குடியின் பக்கத்தில் கோரல் ராக்ஸ் என்று சொல்லப்படுகிற பொருள் கிடைக்கிறது. அது மருந்து களுக்கு மிகவும் உபயோகப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே அதற்கான தொழிற்சாலையை நிறுவி, சம்பந்தப் பட்ட பொருள்களை அபிவிருத்தி செய்து அந்த மருந்துப் பொருள் களை மேலும் மேலும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

மண்டபத்தில் வைகை கடலிலே கலக்கக் கூடிய இடத்தில் சுண்ணாம்பு பாறைகள் அதிகமாக இருக்கின்றன. அந்தக் காரணத்தினால் அங்கேயே இராமநாதபுரம் மாவட்டத்தி லேயே அதற்கான சிமெண்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை

அமைக்க வேண்டும். நூற்றுக்கணக்கான மைல் வெளியே எங்கேயோ எடுத்துச் சென்று தொழிற்சாலை அமைப்பதற்கு பதிலாக இராமநாதபுரம் மாவட்டத்திலேயே அதற்கான தொழிற்சாலையை அமைத்து, அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து கண்மாய் மீன்பாசியை எடுத்துக் கொண்டால், 50, 60 ரூபாய்க்கு சீப்பாக கண்மாய் மீன்பாசி குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, பல ஆயிரக்கணக்கான ரூபாய்களை கொள்ளை அடிக்கிறார்கள். அரசாங்கத்திற்குக் கிடைக்க வேண்டிய வருவாயை அவர்கள் அடித்துக் கொண்டு போகிறார்கள். 18,000 ரூபாய் அளவிற்கு கொள்ளை அடித்திருக்கிறார்கள். அதற்கு எந்தவிதமான கணக்கும் கிடையாது. நான் எற்கெனவே இதைப் பற்றியெல்லாம் விரிவாக அரசுக்கு எடுத்துச் சொல்லி எழுதியிருக்கிறேன். ஆனாலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. அரசுக்கு வரக்கூடிய வருவாய் வீணாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதை உங்களுக்குக் கவனப்படுத்த விரும்புகிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பற்றி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில் திருப்பாலைக்குடியில் கடல் கொந்தளிப்பில் ஏற்பட்ட நஷ்டத்திற்கு நிவாரணமாக 1,53,000 ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருந்தது. 411 பேர்களுக்குத்தான் விநியோகிக்கப்பட்டிருக்கிறது. அவைகள் சரியாக விநியோகிக்கப்பட வேண்டும். சேங்ஷன் செய்யப்பட்ட மொத்தப் பணமும் அவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படவேண்டும்.

அடுத்து திருப்பாலக்குடியில் 250 வீடுகள் மீனவர்களுக்கு கட்டிக் கொடுக்க வேண்டும் என்று சாங்ஷன் செய்யப்பட்டன. அதில் 40 வீடுகள்தாம் கட்டப்பட்டுள்ளன. பிராக்ரஸ்ஸே கிடையாது. எல்லா வீடுகளையும் கட்டி முடிக்க அதற்கு மேல் ஏற்பாடு செய்யவேண்டும்.

அடுத்து கடற்கரை ஓரங்களில் போக்குவரத்திற்காக ரோடு போடவேண்டும். கடந்த புயல் காலத்தில் மீனவர்களுக்கு அதிகமாக நஷ்டம் ஏற்பட்டதன் காரணமே கடலோரப்பகுதியில் போக்குவரத்திற்கான பாதை போடப்படாததே. அங்கே ஒரு 50 அடி தூரத்திற்கு எந்தவித இடையூறும் இல்லாமல், எந்தவித ஆக்ரமிப்பும் இல்லாமல், போக்குவரத்திற்கென்று பாதை போடப்பட வேண்டும். அப்படிப் போட்டால்தான் போக்குவரத்து சரியாக நடைபெறும். இல்லாவிட்டால் மீனவர்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.



அடுத்து திருப்பாலைக்குடியில் மீனவர்களுக்கு படகு கட்ட லோன் வழங்கப்பட்டது. அதில் ஒரு பங்கை மீனவர்களும், இரு பங்கை அரசும் கொடுக்க வேண்டுமென்று திட்டமிடப்பட்டு கிட்டத்தட்ட 65 பேர்களுக்கு அப்படி லோனுக்கான சேங்ஷன் செய்யப்பட்டது.

[நண்பகல் 12-00]

15 பேர்களுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. பாக்கி 50 பேர்களுக்கு கொடுக்கப்படவில்லை. ஒவ்வொருவரும் தங்கள் பங்குத் தொகையைக் கட்டி முடித்த பிறகும் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படவேண்டிய லோன்கள் இன்றுவரை கொடுக்கப்படவில்லை. (மணியடிக்கப்பட்டது) சங்குத் தொழிலை எடுத்துக் கொண்டால் இன்றைக்கு சங்கு ஒன்று 1.25 என்று விற்கிறது. கடலில் சங்குகள் எடுப்பதில் எந்தவித கண்ட்ரோலும் இருக்கக்கூடாது. கண்ட்ரோல் இருப்பதால் லஞ்சம் தாண்டவமாடுகிறது. ஆகவே எல்லோருக்கும் ப்ரியாக சங்குகள் எடுக்க அனுமதி வழங்கவேண்டும்.

(மணியடித்து அடுத்த உறுப்பினர் அழைக்கப்பட்டார்).

<u>திரு. எம். சின்னசாமி :</u> மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்துள்ள உணவு மானியக் கோரிக்கையின் மீது என் உணர்வுகளை வெளியிட வாய்ப்பினை உருவாக்கித் தந்த உங்களுக்கு எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

உணவுத் துறையானது மிக மிக முக்கியமான துறையாகும். ஓர் அரசின் மீது நாட்டு மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பது இந்தத் துறையின் மூலமாகத்தான். உணவுத் துறையை சரியாக நிர்வாகம் செய்யமுடியாமல் போன காரணத்தால் உணவுத் துறைக்கே உணவாகிப் போன அரசுகள், அமைச்சர்களின் வரலாறுகள் நிறைய உண்டு. உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்று சொன்னால் 1967-ம் ஆண்டு விலைவாசி கட்டுப்படுத்தப்படாமல் இருந்த காரணத்தால்தான் அன்றைக்குத் தமிழகத்தில் மிகப் பெரிய ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதேபோல் தனி ஒருவனுக்கு உணவு இல்லை எனில் இந்த ஜகத்தையே அழித்து விடுவோம் என்று தேசிய கவி பாரதி பாடினான். அந்தப் பாரதியின் புரட்சி வாசகத்தின் பொருளை பூர்ணமாக புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான் இன்றைக்கு புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சி நாட்டுமக்கள் நலன் கருதி விலைவாசிகளைக் கட்டுப்படுத்தி நாட்டு மக்கள் மத்தியில் நல்ல பெயரோடும் புகழோடும் ஆட்சி நடத்தி வருகிறது. கிராமப்புற மக்கள்,

குறிப்பாக ஏழை எளிய மக்கள் விலைவாசியின் வேதனையை உணர்ந்த அம்மக்கள் இன்று இந்த ஆட்சியைப் பாராட்டிப் போற்றுகிறார்கள்.

படி அரிசி விலை எட்டு ரூபாய் என்று ஏற்று வந்த காலம் போய் இன்று மகராஜன் எம். ஜி. ஆர். வந்தார், மழை பொழிந்தது என்றெல்லாம புகழ்ந்து வயிறார உண்கிறார்கள் கிராம மக்கள். ஏழை எளிய மக்கள். கிராம மக்கள் இன்றைக்கு இந்த ஆட்சியைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். நகரத்தில் இருக்கிற ஏழை மக்களும் இந்த ஆட்சியைப் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

உணவுத்துறை பொறுப்பேற்றிருக்கிற மாண்புமிகு நாவலர் அவர்கள் தொகுத்துத் தந்திருக்கிற இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் பாராட்டத்தக்க, புகழத்தக்க, போற்றத்தக்க பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. ஒரு காலத்தில் அரிது அரிது அரிசியைப் பார்ப்பது அரிது என்றும் அதிலும் நாற்றமில்லாத அரிசியைப் பார்ப்பது அரிது என்றும் இருந்தது. அந்தக் காலக் கட்டத்தில் மக்களை வைத்திருந்த அரசுகள் இருந்தன. அந்த அரசாங்கங்கள் எல்லாம் இன்று காலாவதியாகிப் போய் விட்டன. இன்றைக்கு அரிசியைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் திருப்திகரமான நிலை உள்ளது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாக நியாயமான விலைக்குக் கிடைத்து வருகிறது. சாதாரணமாக சிறிய நடுத்தர மக்கள் பயன்படுத்தி வருகிற புழுங்கல் அரிசி கிலோ ஒன்றுக்கு ரூ. 1-90-ல் இருந்து ரூ. 2-20 வரை விற்கப்படுவதாக கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப் பட்டிருக்கிறது. இது உள்ளபடியே வரவேற்கத் தக்கது. அடுத்த மூன்று மாத காலம் அறுவடை இல்லாமலிருப்பினும், வெளிச் சந்தையில் ஏதாவது குறைந்துபோனாலும் கூட பொது விநியோக முறையில் தேவையை சமாளிக்க போதுமான கையிருப்பு அரசின் கைவசம் உள்ளது என்று இந்த விளக்கக் குறிப்பில் கொடுக்கப் பட்டிருப்பது இந்த அரசின் சாதனையைக் காட்டுகிறது. இந்த அம்சம் வரவேற்கத்தக்கதொரு அம்சமாகும்.

கடந்த காலங்களில் கொள்முதலினால் தமிழ்நாட்டில் கஷ்டப் பட்ட விவசாயிகள் ஏராளம். இன்றைக்கு தமிழகத்தைப் பொறுத்தவரை கட்டாயக் கொள்முதல் கிடையாது. அரிசி அறவை ஆலைகள் மீதோ, வர்த்தகர்கள் மீதோ லெவி கிடையாது. இந்த நிலைமை உள்ளபடியே எல்லோரும் பாராட்டத்தக்க ஒன்று. நெல் வர்த்தகத்தில் சுதந்திரமான சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறது, இந்த அரசு. அதே சமயத்தில் அரிசி விலையைக் கட்டுப்படுத்தி, உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் நலன்களை ஒருங்கே காத்து, பொது விநியோக முறையை தேவைக்கு ஏற்பத் திறமையாகச் செயல்படுத்தக் கணிசமான கையிருப்பு வைத்திருப்பது இந்த அரசு உணவு முறையில் ஆற்றியுள்ள சிறப்பான சாதனை என்பதை நாம் பாராட்ட வேண்டும்.



அதேபோல், நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயிப்பது மாநில அரசு அல்ல. மத்திய அரசுதான். அதே நேரத்திலே, நெல்லாக இருந்தாலும், கோதுமையாக இருந்தாலும், மத்திய அரசு நியமித்துள்ள விவசாய விளைபொருட்கள், விலைவாசிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில்தான் இந்த விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. அதன்படி, மத்திய அரசாங்கம் கோதுமைக்கு கொடுக்கின்ற விலையைவிட, நெல்லுக்கு குறைவான விலையைத்தான் கொடுக்கிறது. இது தவிர, கோதுமைக்கு மானியம் கொடுக்கிறார்கள். ஆனால், அதே சமயத்தில் நெல்லுக்கு நல்ல விலை கொடுக்க மறுக்கிறார்கள். மத்திய அரசு, மாநில அரசைப் பொறுத்தவரை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு தான் நடந்து வருகிறது. இது நமக்கு மெத்த வருத்தத்தைத் தருகிறது. இதை மாற்றிக்கொள்ள வேண்டும். இந்த மனப்பான்மை மிகவும் கண்டிக்கத் தக்கதாகும். கோதுமைக்கு கொடுப்பதைப் போலவே, அந்தச் சலுகையை நெல்லுக்கும் கொடுக்கவேண்டும் என்பதை மத்திய அரசுக்கு இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரவேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். மத்திய அரசின் இந்தப் போக்கு தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுக்கு ஊறு விளைவிக்கும் ஒன்றாகும். கோதுமையைச் சாப்பிடுகிறவர்களும் இந்தியர்கள் தான்; அரிசியைச் சாப்பிடுகிறவர்களும் இந்தியர்கள்தான். ஆகவே மத்திய அரசாங்கம் இப்படி ஒரு கொள்கையை வைத்திருப்பது கண்டிக்கத்தக்கதாகும்.

அதுபோல், மண்ணெண்ணெயைப் பொறுத்தவரை மாதம் ஒன்றுக்கு நகராட்சிப் பகுதிகளில் 6 லிட்டர் என்றும், நகரியம், நகரப் பஞ்சாயத்துக்களில் 5 லிட்டர் என்றும், கிராமப் பகுதிகளில் 3 லிட்டர் என்றும் கொடுக்கப்பட்டு வருகிறது. இதை ஓரளவுக்கு உயர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதிலேயும் குறிப்பாக, கிராமப்புறங்களிலே வசிக்கின்றவர்களுக்கு ஓரளவுக்கு உயர்த்த வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், மண்ணெண்ணெயை கைவண்டியிலே வைத்து, அதையே நம்பி சிலர் வியாபாரம் செய்கிறார்கள். அந்த சிறிய தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற வகையில், அவர்களுக்கு ஏற்கெனவே கொடுத்து வந்த அளவை அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதன் மூலம் அவர்களையும் காப்பாற்ற வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், சமையல் வாயு விநியோகம் செய்கின்ற அதிகாரம் பொறுப்பு மாநில அரசுக்கு இல்லை. மாநில அரசுக்கு மாற்றித் தர வேண்டுமென்று மைய அரசினை மாநில அரசு வற்புறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் இதிலே பங்கீட்டு முறை சீர்படும் என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[திரு. எம். சின்னசாமி] [1980 ஜூலை 24

அடுத்து, ஓட்டல். அதிபர்கள் உணவுப் பண்டங்களின்
விலையை உயர்த்தியிருக்கிறார்கள். இது உள்ளபடியே கவலை
தருவதாக உள்ளது. ஓட்டல் அதிபர்கள் நம்முடைய உணவு
அமைச்சர் அவர்கள் வேண்டுகோளை புறக்கணித்த செய்தியை
பத்திரிகைகளிலே நாம் பார்த்தோம். எனவே, உணவுப் பண்டங்
களின் விலையைக் குறைப்பதற்கு கடுமையான சட்டத்தைக்
கொண்டுவர வேண்டும். குறிப்பாக, ஏழைமக்கள் பாதிக்காத
வகையில் இட்டிலி, தோசை, காபி, டீ, ஜனதா சாப்பாடு போன்ற
வைகளின் விலைகளைக் குறைப்பதற்கு தகுந்த உத்தரவிட
வேண்டுமென்று நான் இந்த சந்தர்ப்பத்தில் உணவுத் துறை
அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். நாம் இன்
றைக்கு விலைவாசியை ஏற்றக்கூடாது, குறையுங்கள் என்றால்,
அதே நேரத்திலே அவர்கள் அதன் தரத்தைக் குறைத்து விடுவார்
கள். அதையும் நாம் கவனிக்க வேண்டுமென்று நான் இந்த
சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். எனவே, இந்தத் துறை
இதிலே கொஞ்சம் கடுமையான உத்தரவைப் போடவேண்டும்.
இந்த உத்தரவை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு
அனுப்பி, தமிழகம் எங்கும் விலையைக் குறைக்க வேண்டுமென்று
இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

சில வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கும் நோக்கத்தோடு
உணவுப் பொருள்களை பதுக்கி வைத்து, அதிக லாபம் சம்பாதிக்
கிறார்கள். அதனால் அரசாங்கத்திற்கு கெட்ட பெயர் வந்து
விடுகிறது. அதனால் நாட்டு மக்கள் அரசாங்கத்தை தவறாக
எண்ணுகிறார்கள். அப்படிப்பட்ட உணவுப் பதுக்கலைத் தடுப்
பதற்காக தனியாக ஒரு கண்காணிப்பு படை அமைக்கப்பட்டிருக்
கிறது. அந்த கண்காணிப்பு படை இன்னும் முனைப்பாக செயல
படுவதற்கும், வேகமாக செயல்படுவதற்கும் இந்த அரசாங்கம்
தகுந்த உத்தரவிட வேண்டும். அதே நேரத்தில், இந்த உணவுப்
பண்டங்களின் அன்றாட விலை, கணக்கு போன்றவைகளை
அவர்கள் ஒழுங்காக வைத்திருக்கிறார்களா என்பதையும் இந்த
படை கண்காணிக்க வேண்டும்.

[பிற்பகல் 12-10]

அப்படி ஆணையை மீறுகிற வியாபாரிகளை பிராசிக்யூஷன்
செய்து பிடிக்க தகுந்த உத்தரவு இடவேண்டுமென்று கேட்டுக்
கொண்டு தமிழகத்தைப் பொறுத்தவரை உணவு நிலைமை சரியாக
இருக்கிறது. நாட்டு மக்களுடைய உணவுப் பண்டங்கள் விலை
ஏறிவிட்டது என்ற நிலைமை இல்லை. எல்லோரும் உணவுத்
துறையைப் பொறுத்தவரை பாராட்டும் நிலைமை இருக்கிறது.
ஆகவே விலைவாசிகளை ஏற்றிவிடாமல் கட்டுப்பாட்டில் வைத்
திருக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உணவு மானியக் கோரிக்
கையை வரவேற்று, பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு
நன்றி தெரிவித்து விடைபெற்றுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.



1980 ஜூலை 24]

திரு. பாபு கோவிந்தராஜன்: பாயின்ட் ஆப் ஆர்டர். உறுப்
னர் அவர்கள் பேசும்போது இட்டிலி விலை, வடை விலையைக்
றைக்கவேண்டுமென்று சொன்னார்கள். என்ன விலைக்குக்
காடுக்கிறார்கள், என்ன விலைக்குக் கட்டுபடியாகும் என்று
சால்ல வேண்டும் அல்லவா? கோவாப்பரேட்டிவ் மூலம் நீங்கள்
சால்லுகிற விலைக்கு உணவுப் பண்டங்களைத் தயாரித்து
ட்டல் நடத்திப் பாருங்கள். ஊருக்கு இளைத்தவன்
பிள்ளையார் கோயில் ஆண்டி என்று உங்களுக்கு ஓட்டல்காரன்
நானா கிடைத்தான்? இப்படிப் பேசுவதில் என்ன அர்த்தம்
இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அமைச்சர்
அவர்கள் பதில் கூறும்போது விளக்கமாகக் கூறுவார்கள்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணை நாயகர் அவர்
களே, கட்டுமர மீனவர்கள் வாழ்க்கையினைப் பற்றி இந்த வரவு-
செலவுத் திட்டத்தின்மீது நடைபெற்ற முதல் விவாதத்திலேயே
நான் விசைப் படகுக்காரர்கள் எந்த வகையில் கட்டுமர மீனவர்கள்
வாழ்க்கையில் பெரிய பாதிப்பை உண்டாக்குகிறார்கள் என்ப
தனை எடுத்துச் சொல்லியிருந்தாலும் அதனை மீண்டும் நினை
வூட்டிக் கொள்வதோடல்லாமல் மூன்று மைல்களுக்கு அப்பாலே
தான் அவர்கள் மீன் பிடிக்க வேண்டுமென்று, காலை ஆறு
மணிக்குப் போகிறவர்கள் மாலை ஆறு மணிக்குத திரும்பிவிட
வேண்டுமென்றும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவு
செய்தல் வேண்டும். அது அரசு ஆணையாக இருப்பதோடல்லாமல்
சட்டமாக சட்டமன்றத்தின் மூலம் நிறைவேற்ற வேண்டு
மென்று பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இரண்டாவது, புயல் வெள்ளங்களால் பாதிக்கப்படுகிற கட்டு
மர மீனவர்களுக்குக் கொடுக்கப்படுகிற உதவிகள் உடனடியாகக்
கொடுக்கப்படவில்லை என்று சொல்லுகிற புகார்கள் அதிகம்.
இதிலே இதனை அமைச்சர் அவர்கள் கவனித்து ஆவன செய்தல்
வேண்டும்.

மீனவர்கள் வாழ்க்கையில் அவர்களுடைய முன்னேற்றம் அவர்
களுடைய குழந்தைகளைப் பொறுத்து, குழந்தைகளின் படிப்பைப்
பொறுத்து, படிப்படியாக அவர்கள் உயர்வதைப் பொறுத்து
அமைகிறது. அந்த மீனவக் குழந்தைகளுக்கு 'சென்ட்ரல் இன்ஸ்
டிடியூட் ஆப் பிஷரிஸ் டெக்னாலஜி' என்று சொல்லுகிற அந்தப்
பயிற்சிக் கல்லூரியில் மிக அதிகமான இடத்தை ஒதுக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். கப்பற்படை போன்ற துறை
களிலே மீனவக் குழந்தைகளுக்கு சலுகைகள் வழங்கப்பட
வேண்டும். அதன் மூலம் அவர்களுடைய வாழ்விலே நலம் சேர்ப்
பதற்கு வழி காணவேண்டும்.

அதைப்போல் கொந்தளிக்கின்ற கடல்தான் அவர்களுக்கு ஆதிகமாகத் தென்படுகிற ஒன்று. ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்கள் தவிர மற்ற மாதங்களில் ஏதாவது ஒரு தொல்லை கடலோரத்தில் வாழ்கிற மீனவர்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கும் காரணத்தாலே அவர்களுடைய வலை, கட்டுமரம் போன்றவைகளை இன்ஷியூர் செய்து ஈட்டுத் தொகை வழங்குவதற்குரிய வழிவகைகளை காண அரசாங்கம் முன் வந்தால் அவர்களுடைய வாழ்வில் ஒளி பிறக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்கள் என்று சொல்லுகிறபோது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக அறிவார்கள். தொழிலின் அடிப்படையில் வந்த பெயர்களிலே மற்றப் பெயர்கள் எல்லாம் மங்கியும், மறைந்தும், திரிந்தும் போகிற நேரத்தில், மீன் பிடித்து வாழ்கிற மீனவர் என்ற பெயர் மட்டும் ஆதியில் இருந்ததுபோல் இருப்பது கண்டு பெருமைப்படுகிறேன் நான். பெயரளவில் ஆதியில் இருந்தது போல் அவர்களுடைய வாழ்வும் கூட ஆதியில் இருந்தது போல் இருந்து கொண்டிருக்கிறது என்பதைப புரிந்து கொண்டாக வேண்டும்.

நேற்றுக்கூட நிறையக் குப்பங்களுக்கு நான் சென்று பார்த்து வந்தபோது எண்ணூர் தெர்மல் ஸ்டேஷன் பக்கத்தில் இருக்கிறது. ஆனால் அதன் சுவரை ஒட்டி இருக்கும் குப்பத்திற்கு மின்சாரம் கிடைக்கமாட்டேன் என்கிறது. அதைப்போல்தான் எண்ணூர் மின்நிலையத்திலிருந்து வெளியே வருகின்ற சாம்பல் கலந்த சுடு நீரும் மற்றப் பெரிய தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகின்ற விஷ நீரும் பக்கிங்காம் கால்வாயில் விழுகின்ற காரணத்தினாலே, அந்தக் கால்வாயிலே மீன்பிடித்து பிழைத்துக் கொண்டிருந்தவர்கள் வாழ்வு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறது : மீன்கள் செத்து மிதக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1967-ல் கொடுக்கப்பட்ட கடன்கள் இன்னும் சில குப்பங்களிலே வசூலிக்கப்பட முடியாத நிலை இருக்கிறது என்றால் நான் அதிகாரிகள் பேரில் தவறு சொல்ல மாட்டேன், காரணம் அதைக் கொடுக்கமுடியாத நிலையில் மீனவர் சமுதாயத்தினர் இருக்கிறார்கள். 1967-க்குப் பின்னாலே இன்னும் அவர்களுக்குக் கடன் கொடுக்கப்படவில்லை, காரணம் என்னவென்றால், கடன் வசூலிக்கப்படவில்லை என்று காரணங் காட்டி அவர்களுக்குக் கடன் மறுக்கப்படுகிறது. விவசாயிகளுக்கும் பொற்கொல்லர்களுக்கும் கடன்களை ரத்து செய்ததைப்போல் இந்தக் கூட்டுறவு சங்கங்களின் மூலமாக சிறுசிறுதொகையாகக் கொடுக்கப்பட்டதையெல்லாம் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

குமரி மாவட்டத்திலே தொடங்கி சென்னை வரையில் பார்த்தால் பல பல இடங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாகச் சொன்னால் எனது தொகுதியிலே நல்ல தண்ணீர்





திருச்சிராங்குப்பம், புது
ஓடைக்குப்பம், லட்சுமிபுரம் குப்பம், போன்ற இடங்களிலே
நகர் குப்பம், திருவொற்றியூர் குப்பம் அளவுக்கு கடல் அலை
கரைகளிலே நுரைகள் தென்படுகின்ற தொங்கிக்கொண்
அடித்து அதனுடைய அலைகள் கூரைகளிலே வெண்மையாகக்
டிருக்கின்றன. கிராமங்களிலே பனி நீரை வெண்மையாகக்
காணக்கூடும். ஆனால் கடல் நீரை கூரைகளிலே என்பதை
காணுகிற அளவுக்கு ஓரங்களுக்குக் கடல் வந்துவிட்டது
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

நான் மிகுந்த எச்ச
அதைப்போல் ஒன்றிரண்டு செய்திகளை சொல்ல விரும்பு
ரிக்கையோடும் அதே நேரத்திலே அன்போடும் காரணம் வேண்டு
கிறேன். எச்சரிக்கை என்று சொன்னதற்குக் வந்துவிடக்
மென்றே நான் குறிப்பிடுகிறேன் என்ற எண்ணம் அன்பு
கூடாது என்பதற்காக அந்தச் சொல்லைப் பயன்படுத்தி, நல்ல
என்று சொல்வதற்குக் காரணம், நீங்கள் அதைச் செய்து சொல்லை
பெயர் வாங்கவேண்டுமென்ற காரணத்தினால் அந்தச் கொள்கிறேன்.
யும் பயன்படுத்தினேன் என்பதைத் தெரிவித்துக் சொன்னதற்கும்
1977-ல் மீனளத் துறை அமைச்சர் இங்கே சில செய்திகளை
இப்போது இருப்பதற்கும் இடையே இருக்கிற கொள்கை குறிப்பு
நாம் ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்திலே இந்தக் சரியாகக் கவனித்துத்
களை தயாரிக்கிற நேரத்திலே அவைகள் நிலை ஏற்பட்டது
தயாரிக்கப்பட்டிருந்தால் ஏன் இந்த மந்த 1977ஆம் ஆண்டிலே
என்பதற்கு விளக்கம் தரவேண்டும். ஒன்று, இருக்கிறது,
கொள்கை விளக்கக் குறிப்பிலே அறிவிக்கப்பட்டு ஆட்சிக்கு வந்த
இந்த அரசாலேயே அறிவிக்கப்பட்டிருக்கிறது, கன்னியாகுமரி மாவட்
ஒரு மாதத்திலே அறிவிக்கப்பட்டிருக்கிறது 200 இலட்சம் ரூபாய்
டத்திலே சின்ன முட்டம் என்ற இடத்தில் என்று, 200 லட்சம்
செலவில் மீன்பிடி துறைமுகம் கட்டப்படும் அமைப்பதற்கு நாங்கள்
ரூபாய் செலவிலே மீன்பிடி துறைமுகம் கேட்டு இருக்கிறோம்
மத்திய அரசாங்கத்தை வேண்டி அனுமதி குறிப்பிலே கூட மத்திய
என்று சொன்னார்கள். ஆனால் இந்தக் என்று சொன்
சர்க்காரிடமிருந்து அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது மத்திய அரசாங்கம்
னால் இந்த இரண்டாண்டு காலமாக சொன்னால் அவர்கள்
தள்ளிக்கொண்டு வருகிறதா? இல்லை என்று அவர்களுடைய
தள்ளாத வகையிலே நாம் அவர்களை நெருங்கி விரும்புகிறேன்.
அனுமதியைப் பெறவில்லையா என்று கேட்க

சொல்லியிருக்கிறார்கள், இராம
அடுத்து இன்னொன்றையும் என்ற இடத்தில் 28
நாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம் கிராமம் ஒன்றை
லட்சம் ரூபாய் செலவிலே மாதிரி மீன்பிடி அதற்கு மத்திய அரசு
நாங்கள் தொடங்குவதற்கு இருக்கிறோம். ரூபாய் ஒதுக்கிவிட்டது
எங்களைக் கேட்டுக்கொண்டு 28 இலட்சம் கொள்கைக் குறிப்
என்று சொல்லியிருக்கிறார்கள். 1977-ல் இப்போது என்ன
பிலே அப்படிச் சொன்ன அரசு இதே அரசு இடத்திலேயும்
சொல்கிறது என்றால் வாலிநோக்கம் என்ற இடத்திலேயும் அந்த
தஞ்சை மாவட்டத்திலே பழையாறு என்ற அரசு 11 லட்சம்
நற்காரியங்களைச் செய்வதற்கு .தமிழ்நாடு

ஒதுக்கியிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். தமிழ்நாடு
அரசு 11 லட்சம் ஒதுக்கியிருப்பது, அந்த 28 லட்சத்திற்கு அடுத்த
படியாகவா அல்லது அதற்கு மேலாகவா அல்லது மத்திய அரசாங்
கம் அந்த 28 லட்சத்தைக் கொடுக்கவே இல்லையா, அதற்குரிய
விளக்கங்களை மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் கொடுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பங்கீட்டுக் கடைகளைப்பற்றி நான் இங்கே சொல்லவேண்டும்.
ஆயிரம் கார்டு வைத்திருக்கிற பகுதிக்கு 1 கடை என்ற விகிதத்தி
லாவது அரசாங்கம் கடைகளை ஏற்பாடு செய்யவேண்டும். நேற்று
ஒரு இடத்திற்கு நான் சென்றபோது காலையிலே 8 மணிக்கு
எண்ணூர் பகுதியிலே, ஏறத்தாழ 10 ஆயிரம் பேர்கள் வசிக்கிற
இடத்திலே ஒரே ஒரு கடைதான் இருக்கிறது. வந்தவர்கள் இரவு
8 மணிக்கு நான் பார்த்தபொழுது அந்த கியூவிலேயே நின்று
கொண்டிருந்தார்கள். வேலையாட்களை வைத்திருக்கிறவர்கள்
வேலைக்குப் போகலாம் வேலையாட்கள் இல்லாத, வேலைக்குப்
போகிறவர்கள் என்ன செய்வார்கள் என்ற சிந்தனை அரசாங்கத்
திற்கு வரவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
அடுத்து இதன் தொடர்பாக ஒன்று, யாருக்காவது ரேஷன் கார்டு
இல்லை என்று சொன்னால்—அதை தொலைத்துவிட்டாலோ
அல்லது வேண்டுமென்று கேட்கிறபோதோ அதை நிரூபிக்கிற
பொறுப்பு அவர்கள் கேட்பது 'ஜென்யூன்' உண்மை என்ற தன்
மையை நிரூபிக்கிற பொறுப்பு அவரிடம் விடப்படுகிறது.
அவரிடம் விடப்படுவது மிகக் கடினமான காரியம். அரசாங்க
அதிகாரிகளே அதைக் கண்டுபிடித்து, அது சரியா என்று முடி
வெடுக்க வேண்டும்.

[பிற்பகல் 12-20]

அதைப்போலத்தான், பங்கீட்டுக் கடைகளிலே வழங்கப்
படும் பொருள்களின் அளவில் குறைவு, நிறையில் குறைவு என்று
பல புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதை, எதிர்பாராத
விதமாகச் சோதனை செய்து நீங்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, உணவுத் துறை, மீனளத்துறை ஆகிய
இரண்டு துறைகளையும் அமைச்சர் பார்ப்பதாலும், இரண்டும்
உணவுப் பொருட்களாக இருப்பதாலும் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். இங்கே முத்தைப் பற்றிச் சொல்லுகின்ற நேரத்
தில், முத்தைச் செயற்கையாகச் செய்யும் முயற்சி வெற்றி பெற்
றிருப்பதாகச் சொல்கிறார்கள். அதை விரிவு படுத்தி செயற்கை
முத்து தயாரிப்பதை ஆரம்பிக்க வேண்டும். ஜப்பான் போன்ற
நாடுகளிலே செயற்கை முத்தைத் தயாரிக்கின்ற முயற்சி மகோன்
னதமாக இருக்கிறது.





அதைப்போல, சங்குத் தொழிலிலே போதுமான கவனம் செலுத்தப்படவில்லை. நக்கீரர் காலத்திலே சொல்லுவார்கள்:

'' சங்கறுப்பது எங்கள் தொழில்
சங்கரனாருக்கு ஏது தொழில் ''

என்று ஒரு வரி வருவதாகச் சொல்வார்கள். ஆக, சங்கு அறுத்துத் தொழில் புரிந்து கொண்டிருந்தது தமிழ்நாட்டிலே தொன்மையான தொழிலாக இருந்தாலும் இப்பொழுது அது இல்லாத தொழிலாகக் காட்சியளிக்கின்ற அளவிற்கு மங்கி, மறைந்து போய்க் கொண்டிருக்கிறது. பழம் புகழ் அதற்கு வர வேண்டுமென்று சொல்கின்ற அளவிலே சங்குத் துறையிலே கவனம் செலுத்த வேண்டும்.

சுண்ணாம்புச் சிப்பிகளைப் பொறுத்தவரையில், தற்பொழுது சிமெண்ட் கிடைக்காத நிலையிலே, நல்ல சுண்ணாம்பு சிப்பிகளை எடுத்துப் பயன்படுத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மீனளத் துறையைப் பொறுத்தவரையிலே, மக்களுக்கு அதிகமான வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று சொல்லும்பொழுது உயிருக்கு ஆபத்து வருகின்ற பொழுது செய்ய வேண்டிய நிலையை சொல்லுகிறேன். சென்ற மாதம் 23-ஆம் தேதி ராசு என்பவர் கடல் அலையால் மோதுண்டு குப்பத்தில் இறந்து விட்டார். அவர் இறந்தது என்னுடைய தொகுதி என்பதற்காக மட்டுமல்ல, மனிதாபிமான உணர்ச்சியினாலும் நானும் போய்ப் பார்த்து வந்தேன். இறந்து ஒரு மாதத்திற்குப் பிறகுதான் ஸ்டான்லி மெடிகல் காலேஜிலிருந்து அவருடைய பிரேத பரிசோதனைச் சான்றிதழ் வந்திருக்கிறது. செத்துப் போனால், இதனால் செத்துப் போனார் என்று சொல்லுகின்ற சான்றிதழ் கிடைத்திருக்கிறது. போலீஸ் மூலம் கிடைக்க ஒரு மாதகாலம் ஆகியிருக்கிறது. இனி வில்லேஜ் முன்சீபிடமிருந்து ஒரு சான்றிதழ் வாங்க வேண்டும் ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடமிருந்து ஒரு சான்றிதழ் வாங்கவேண்டும், இப்படி ஒவ்வொருவரிடமிருந்தும் அவர்கள் வாங்க வேண்டும் என்றால் என்ன நிலைமை ஏற்படும்? மீன் பிடிக்கும் தொழிலாளி அவர் இறந்த பிறகு, அவர் இறந்த அன்றிலிருந்து அந்தக் குடும்பத்திற்கு வருமானம் போய் விடுகிறது; குழந்தை குட்டிகள் தொல்லைக்கு ஆளாகி விடுகிறார்கள்; வறுமையிலே வாடி விடுகிறார்கள். முதன் முதலாக, ஒருவர் இறந்து விட்டால் போலீசிற்குப் புகார் வருகிறது. போலீசார் பிரேத பரிசோதனைக்கு அனுப்புகின்ற நேரத்தில், உடனே அந்த மருத்துவக் கல்லூரியிலே சொல்லி, அல்லது ஆஸ்பத்திரியிலே சொல்லி உடனே சான்றிதழ் வாங்க வேண்டும், உடனே வில்லேஜ் முன்சீபிடம் சான்றிதழ் வாங்க வேண்டும்; உடனே ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் சான்றிதழ் வாங்க வேண்டும். அதை அவர்கள் அரசுக்கு

அனுப்பி, இதையெல்லாம் அரசு பரிசீலித்து, உடனடியாகப் பாதிக்கப்பட்ட அந்தக் குடும்பத்தாரைக் கூப்பிட்டு, அந்தப் பணத்தைக் கொடுக்கும் வகையிலே மிக விரைவில், ஒரு வாரகாலத்திற்குள்ளாகச் செய்யும் அளவிற்கு இந்த முயற்சிகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதன் மூலம் ஏழை மீனவர்களை இழந்து பரிதவிக்கக் கூடிய அந்த மக்களுக்கு ஓரளவு ஆறுதல் கிடைக்கும் என்று கூறி, பங்கீட்டுத் துறையையும் செம்மைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

திரு. த. இராமசாமி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, மீன்வளத் துறை, உணவுத் துறை மானியங்களில் பேசுவதற்கான வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் மீன் துறையிலே 2,500-க்கும் அதிகமான விசைப்படகுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்ற குறிப்பை இந்தப் புத்தகத்திலே தெரியப்படுத்தியிருக்கிறார்கள். இராமேஸ்வரம், மண்டபம், பாம்பன் உள்ளடங்கிய இராமேஸ்வரம் தொகுதியைப் பொறுத்தமட்டில் ஆயிரத்திற்கும் குறையாத அளவிற்கு விசைப் படகுகள் இன்றைக்குத் தொழில் செய்து கொண்டிருக்கின்றன. ஆனால் விசைப் படகுக்காரர்களுக்கு அந்தப் பகுதியில் ஏராளமான தொல்லைகள் சமீபகாலமாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டில் நாட்டுப் படகுக்காரர்களுக்கும், விசைப்படகுக்காரர்களுக்கும் சச்சரவு என்ற பிரச்னை அங்கே கிடையாது. சிலசில பிரச்னைகள் அப்படி வந்தாலும்கூட அவர்களுக்குள்ளேயே சுமுகமாக முடித்துக் கொள்வார்கள். எனவே, அந்தப் பிரச்னை அங்கே அந்த அளவில் இல்லை. ஆனால் 1974 ஆம் ஆண்டு இந்திய நாடு இலங்கைக்குக் கச்சத் தீவை விட்டுக் கொடுத்ததன் காரணமாக அந்தப் பகுதியிலே வாழும் மீனவர்கள் இன்றைக்கு ஏராளமான தொல்லைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள். இலங்கை கடற்படையினால் எடுக்கப்படும் நடவடிக்கைகளைப்பற்றி இந்த நேரத்தில் சொல்வது என்னுடைய தலையாய கடமை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர்கள் சொல்லும் காரணங்கள் என்னவென்றால், இந்திய நாட்டு மீனவர்கள்—தமிழ்நாட்டு மீனவர்கள் கச்சத் தீவுக்குள்ளே வந்தார்கள், அதனால் எதிர்த்து வந்தோம் என்ற குற்றச் சாட்டை சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இப்பொழுது 60-க்கும் அதிகமான படகுகளைப் பிடித்துச் சென்றிருக்கிறார்கள். கடந்த மார்ச் 6-ஆம் தேதியன்று ஆர். எம். 325 என்ற ஒரு போட்டை, தங்கச்சிமடம் என்ற பகுதியில், தனுஸ்லாஸ் என்பவருக்குச் சொந்தமான ஒரு போட்டை, மூழ்கடித்திருக்கிறார்கள். கேட்டதற்கு, எல்லை மீறியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள், 1974-லிருந்தே நாம் சொல்லிக்கொண்டு



வருகிறோம். நமது மீனவர்கள், நமது எல்லைக்குள்ளே மீன் பிடித்தாலும், அவர்களை இழுத்துச் சென்று மூர்க்கத்தனமாக அடித்து, கேட்டால் எல்லைக் கோட்டைக் கடந்து வந்தார்கள் என்று சொல்கிறார்கள். நமது மீனவர்களை கேட்போமானால், நமது எல்லைக்குள்ளே தான் இருந்தோம். இழுத்துச் சென்று, மூர்க்கத்தனமாக அடித்திருக்கிறார்கள் என்று கண்ணீரோடு இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் நாளுக்கு நாள் புகார் மனுக்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிற நிகழ்ச்சி வளர்ந்து கொண்டிருக்கிறது. தனது போட்டை இழுத்துச் சென்று மூழ்கடித்துவிட்டார்கள் என்று தனுஸ்லாஸ் புகார் கொடுத்துங்கூட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆனால், இலங்கை மீனவர்கள் இராமேஸ்வரம் வரை வந்து மீன் பிடித்துச் செல்கிறார்கள். அவர்களைக் கேட்பதற்கு நாதியில்லையென்ற அளவிற்கு அத்துமீறி வருகிறார்கள்.

அதோடு அல்ல. இலங்கையிலிருந்து பிளாஸ்டிக் பொருள்களை கடத்தல் மூலமாகக்கொண்டு வந்து, இங்கே விற்றுவிட்டு, இங்கிருந்து மலிவாகக் கிடைக்கக்கூடிய பொருள்களை இலங்கைக்கு எடுத்துச் சென்று விற்றுவிடுகிறார்கள். இரவு காலங்களில் இந்த பிளாஸ்டிக் பொருள்கள் கடத்தல் தொழில் அன்றாடம் நடைபெறுகிறது. மத்திய அரசால்கூட அந்தக் கட்டுப்படுத்த முடியவில்லை. சுங்க இலாகா அதிகாரிகள் ஒருசில வழக்குகளைத்தான் பிடிக்கிறார்கள். ஆகவே, கடத்தல் தினந்தோறும் ரெகுலராக நடக்கிறதுஎன்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். ஆகவே, நமது மீனவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையில் கடற்படையினர் உதவிக்கு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே, நமது மீனவர்களை, நமது எல்லைக்குள்ளே இருப்பவர்களை, இலங்கை படகுக்காரர்கள் இழுத்துச் சென்று மூர்க்கத்தனமாக அடிப்பதை இனிமேலாவது தடுக்க வேண்டும்; அரசு அதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும். மத்திய அரசு தான் முடிவெடுக்க வேண்டுமென்று நிலைவிருந்தாலும் அடிபடுபவர்கள் தமிழக மீனவர்கள், இராமேஷ்வரம் பகுதிமீனவர்கள். ஆகவே, அதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. டி. கோசல்ராம் அவர்கள் கூட மக்களவையிலே இதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். இராமேஸ்வரம் பகுதியிலே உள்ள மீனவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற தொல்லைகளை அவர்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, சம்பந்தப்பட்டவர்கள், மீனவர்களுக்குப் பாதுகாப்பு தர வேண்டும். அவர்கள் தங்கள் தொழிலை அச்சமின்றி செய்ய உதவியாக இருக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், தொழிலுக்குப் போகின்ற மீனவர்கள், திசைமாறிப் போவதன் காரணமாகவும், காற்று அழுத்தத்தின் காரணமாகவும், இயந்திரக் கோளாறு காரணமாகவும் வெகு

தூரத்திற்குப் போய் விடுகிறார்கள். காணாமல் கூடப் போய் விடுகிறார்கள். மற்ற மீனவர்கள் அவர்களைத் தேடிப் போகிற நிலை ஏற்படுவதில்லை. அங்கிருந்து மீன் துறை இயக்குநருக்கு தகவல் அனுப்பப்பட்டு, அவர் ஹெலிகாப்டர் அனுப்புகிறார். இது போவதற்குள் அந்தப் படகு எங்கேயாவது அமிழ்ந்து விட்டிருக்கும். ரூ. 1 இலட்சம் செலவு செய்து ஒரு ஹெலிகாப்டரை அனுப்புகிறார்களே, அந்த ஹெலிகாப்டர் இதுவரையில் ஒரு மீனவரையாவது தேடி பிடித்துக் கொடுத்ததாகத் தகவல் இல்லை. ஆகவே, மீனவர் மீன்பிடிக்கச் செல்லும் பகுதிகளில் இரண்டு வேகமான விசைப்படகுகளை எப்பொழுதும் நிறுத்தியிருக்கவேண்டும். மீனவர்கள் காணாமல் போய்விட்டனர் என்று தகவல் வந்தால், அவர்களைத் தேடிக் கண்டு பிடிக்கின்ற முயர்சியிலே அந்த விசைப்படகுகளை ஈடுபடுத்த வேண்டும். ஆகவே மீனவர்களுக்கு உதவுகின்ற வகையிலே, அந்தந்தப் பகுதிகளில், காணாமல் போனவர்களைத் தேடிக்கண்டு பிடிப்பதற்கென்று, விசைப் படகுகளை வைத்திருக்க வேணடுமென்று கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

1953 ஆம் ஆண்டு, 1964 ஆம் ஆண்டு, 1978-ஆம் ஆண்டு ஆகிய ஆண்டுகளிலே அடித்த புயலின் காரணமாக, ஏழை மீனவர்களுக்கு வழங்கிய கடன் தொகையை, அவர்களின் நிலையை அறிந்து, ஆய்வு செய்து, கட்ட முடியாத நிலையிலிருக்கிற மீனவர்கள்து கடன்களையெல்லாம் ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்கெனவே, ரூ. 40 கோடி சலுகைகளை நமது அரசு அறிவித்திருக்கிறது. தற்போது, விவசாயிகளது ரூ. 60 கோடி கடனை ரத்து செய்திருக்கிறோம். அந்த ஏழை மீனவர்கள வாங்கிய கடன் சுமார் $1\frac{1}{2}$ கோடியிருக்கலாம். அவர்களால் திருப்பிக் கட்டமுடியாத நிலை இருக்குமானால், அந்தக் கடனை ரத்து செய்ய வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மண்டபத்திலேயிருக்கிற மீனவர் பயிற்சி நிலையம் 1964-லே ஆரம்பிக்கப்பட்டது. இதுவரையில் அதில் பயிற்சி பெற்று வந்தவர்கள் 800 பேர்கள். பயிற்சிக் காலம் 8 மாதங்கள். அந்தப் பயிற்சிக் காலத்திலே அவர்களுக்கு வழங்கப்படுகிற உதவித்தொகை ரூ. 50. அதில் படித்து விட்டு வருபவர்களுக்கு வேறு எந்தவிதமான சலுகைகளும், வேலை வாய்ப்பும் இல்லாத காரணத்தாலே, இன்றைய தினம் பயிற்சி பெற யாரும் முன்வராத சூழ்நிலையிருக்கிறது.

[பிற்பகல் 12-30]

இனிமேலாவது அந்த உதவித் தொகையை ரூ. 50 லேயிருந்து 100 ரூபாயாக உயர்த்தி அப்படிப்பட்ட மீனவர்களுக்கு போட்டுகள்—படகுகளை வழங்கி அவர்கள் தொழில் செய்ய வழிவகை செய்யவேண்டும். அப்படிச் செய்தால்தான் அந்த மீனவர்





பயிற்சி நிலையம் சீரும் சிறப்புமாக இருக்க முடியும். அதை கவனத்தில் எடுத்துக்கொண்டு காரியமாற்றவேண்டும் என்று விரும்புகிறேன்.

அதைப் போலவே ராமேஸ்வரம் பகுதியில் உள்ள மீனவர்கள் தங்கள் தொழிலை நடத்துவதற்கு போதுமான அளவுக்கு டீசல் கிடைக்கவில்லையென்று புகார் செய்கிறார்கள். தற்போது ஒரு மாதத்திற்குக் கொடுக்கப்படுகின்ற டீசலை வைத்து, 10 நாளைக்குத்தான் தொழில் செய்யும் சூழ்நிலை இருக்கிறது. அவர்கள் கள்ளச் சந்தையிலே வாங்குகிற நிலை இருக்கிறது. அப்படி அவர்கள் கள்ளச் சந்தையிலே வாங்கினால் அவர்களுக்கு நிச்சயமாக கட்டுப்படி ஆகாது. அவர்கள் வாங்கிய கடனைக்கூட மீன் துறைக்கு செலுத்த முடியாத நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட அவல சூழ்நிலையை அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த டீசல் அந்தப் பகுதியிலே தட்டுப்பாடு இன்றி கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மண்டபத்திலே ஒரு ஐஸ் பிளான்ட் இருக்கிறது. அந்த ஐஸ் பிளான்ட் உற்பத்தியாக்கும் அத்தனை ஐஸ்களையும் மொத்த வியாபாரிகளுக்கு கொடுக்கும் நிலை இருக்கிறது. சிறு வியாபாரிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். மொத்த வியாபாரிகள் அவர்களிடத்திலே இருந்து வாங்கி, அதிக விலை வைத்து சிறு வியாபாரிகளுக்கு விற்கும் நிலை இருக்கிறது. எனவே இந்த நிலையைப் போக்கி, சிறு வியாபாரிகளுக்கும் ஐஸ் கிடைக்கின்ற நிலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மண்டபத்திலே ஒரு மீன் தூளாக்குகிற நிலையம் இருக்கிறது. அதில் அரசு கவனம் செலுத்தினால் ஏராளமான லாபம் கிடைக்கும். அந்த மீன் தூளாக்கும் நிலையத்தை எடுதது விடவேண்டும் என்று சிலர் முயற்சி எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள் அதை அரசு கவனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து உணவுத் துறையைப் பற்றி ஒரு வார்த்தையைச் சொல்ல ஆசைப்படுகிறேன். தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் உணவுத் துறையில் தமிழகம் தன்னிறைவோடு விளங்கிகொண்டு இருப்பதை யாரும் மறுக்க முடியாது. கடந்த 3 ஆண்டுகளில் அரிசித் தட்டுப்பாடே இல்லை என்கிற அளவுக்கு ஏழை எளிய மக்களுக்கு வழங்கிய புரட்சித் தலைவர் சீரோடும் சிறப்போடும் இந்தத்துறையை நடத்தி வருவதை மனநிறைவோடு மக்கள் வாழ்த்திக்கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்லி, வாய்ப்பு தந்த தலைவருக்கு நன்றியைக் கூறி என் உரையை நிறைவாக்குகிறேன்,. வணக்கம்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு இந்த மாமன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் என்னுடைய பேச்சினுடைய முதல் கட்டத்திலேயே ஒரு கருத்தை வலி யுறுத்த விரும்புகிறேன். விலைவாசியைக் குறைப்பதுதான் எங்கள் கட்சியின் கொள்கை என்று நம்முடைய முதலமைச்சர் எங்கே பார்த்தாலும் இப்போது வலியுறுத்திக் பேசிக்கொண்டு வருகிறார்கள். அதுமட்டுமல்ல, சட்டமன்ற தேர்தல் நடை பெற்றபோது அந்தத் தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலே எல்லாம் கலந்து கொண்டு பேசியபோது அவர்கள் சொன்னார்கள். இன்றைக்கு விலைவாசிகள் எல்லாம் உயர்ந்திருக்கின்றதே, இதற்குக் காரணம் என்ன தெரியுமா? இன்றைக்கு அரிசி விலை உயர்ந்திருக்கின்றது. அதற்கு என்ன காரணம் தெரியுமா? சர்க்கரை விலை உயர்வுக்குக் காரணம் என்ன தெரியுமா? தேங்காய் விலை உயர்ந்திருககிறதே அதற்கு என்ன காரணம் தெரியுமா? அதற்கெல்லாம் என்ன காரணம் என்றால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழ கத்தினுடைய ஆட்சியைக் கலைத்ததுதான் என்று ஆளுங்கட்சிக் காரர்களும் முவதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள்.

இன்றைக்கு ஆட்சிப் பொறுப்புக்கு வந்தாகிவிட்டது. இன் றைக்கு நான் எதிர்க்கட்சியின் சார்பாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகக் கேட்கிறேன். நீங்கள் ஆட்சிக்கு வந்த பின்னால் சர்க்கரை விலை குறைந்து விட்டதா? எண்ணை விலை குறைந்து விட்டதா? பருப்பு விலை குறைந்து விட்டதா விறகு விலை குறைந்துவிட்டதா? மாறாக, ஆளும் கட்சியைச் சேர்ந்த உங்கள் கட்சியைச் சேர்ந்த உறுப்பினரே கூறுகிறார், நான் சைவ சாப்பாடு சாப்பிடுகிறவன், ஆனாலும் கறி சாப்பாடு சாப்பிட ஆர்வம் இருக்கிறது. இப்போது அதனுடைய விலை அதிகமாக இருப்பதால் என்னால் அந்த எண்ணத்தை ஈடேற்றிக் கொள்ள முடியவில்லை என்று அவரே ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்து இருக்கிறார்கள்.

ஆனால், ஒன்றை நீங்கள் மறந்துவிடக் கூடாது. திராவிட முன்னேற்றக் கழகம் இந்தத் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது, நீங்கள் என்ன செய்தீர்கள். உண்ணாவிரதப் போராட்டம் நடத்தினீர்கள். இன்றைய முதலமைச்சர் அவர் களும் அன்றைக்கு உண்ணாவிரதம் இருந்தார்கள். விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மாநில சர்க்கார் தான். கருணாநிதி தான் என்று இன்றைக்கு ஆளும் கட்சியாக இருப்பவர்கள் சொல்லி, உண்ணாவிரதம் இருந்தார்கள். முதல்வர் அவர்களின் துணைவியாரும் அன்றைக்கு உண்ணாவிரதம் இருந்தார்கள். அந்த உண்ணாவிரதத்தின் போது, மத்திய அரசாங்கம் தான் விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் என்று அன்றைக்குச் சொல்ல வில்லை. ஆனால், அன்றைக்கு உங்கள் ஆட்சி கலைக்கப்பட்ட உடனே விலைவாசி ஏறியதற்குக் காரணம் மாநில சர்க்கார் என்று சொல்லிவிட்டீர்கள். இப்போது ஆட்சிக்கு வந்து





விட்டீர்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள்? விலைவாசி ஏற்றத்திற்கு மத்திய அரசு தான் காரணம் என்று சொல் கிறீர்கள். நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன், இது இரட்டைப் போக்கு இல்லையா? இரட்டை வாதம் இல்லையா? இதற்கு நம்முடைய நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் பதில் சொல்ல வேண்டாமா? பதில் சொல்வார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேப்போலவே, இன்னொன்றையும் மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக இந்தச் சபையின் கவனத்திற்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமீபத்தில் திருவொற்றியூரில் ஒரு சம்பவம் நடைபெற்று இருக்கிறது. ஜூன் மாதம் 20-ம் தேதி நடைபெற்று இருக்கிறது. $2\frac{1}{4}$ லட்சம் மதிப்புள்ள பாம் எண்ணை பதுக்கப் பட்டது பிடிக்கப்பட்டு இருக்கிறது. மீண்டும் அதே பகுதியில் அதே வியாபாரியிடத்தில் பல லட்ச ரூபாய் மதிப்புள்ள பாம் எண்ணை பிடிக்கப்பட்டு இருக்கிறது. அந்த இரண்டு இடங் களிலும் பினாமி பெயரில் தான் கம்பெனி நடத்தப்படுகிறது. அவர் ' ஆன்டிசிபேட்டரி பெயில் ' எதிர்பார்ப்பு ஜாமீன்— பெற்று இருக்கிறார். நான் கேட்டுக் கொள்கிறேன்—கைது செய்யப்பட்டவர்கள் யார்? அங்கே ரெய்டு செய்தவர்கள் பெயர்கள் எல்லாம் சொல்லப்பட்டு இருக்கின்றன. நான் அந்தத் தகவலை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.

The raid was conducted by Kandaswamy V. R. Ganapathy, Perumal, Gopalsankar and the Police have registered two cases against the firm hyder enterprises and some others.

ரெய்ட் செய்தவர்கள் பெயர்கள் எல்லாம் இங்கே தெரிவிக்கப் பட்டு இருக்கின்றன. அப்படியிருக்கும்போது—இந்த ' சமூக விரோதிகள் ' என்பவர்கள் யார் என்பதைச் சொல்லவேண்டாமா! அதை ஏன் இந்த மன்றத்தில் சொல்லவில்லை. பல முறை இந்த மன்றத்திலே அது குறித்து விவாதம் செய்யப்பட்டு இருக் கிறது. நான் ஒரு கேள்வியைக் கேட்கிறேன். யார் என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். கைது செய்த அதிகாரிகள் பெயர் களை எல்லாம் சொல்லலாம் என்கிறபோது, கொள்ளைக்காரன் பெயர் சொல்லாமல் இருக்கலாமா! இந்த அரசு ஏன் அது குறித்து மௌனம் சாதிக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். ரெயின்போ அஸ்பெஸ்டாஸ் என்ற நிறுவனத்திற்கு மாதம் ஒன்றுக்கு 375டன்—7,500 மூட்டைகள் சிமெண்ட் கோட்டா வழங்கப்படுகிறது. அதேபோல், ராஜேஸ்வரி அந்த நிறுவனத் தின் துணைவியார் அவருக்கு 75 டன்—1,500 மூட்டைகள் வழங்கப்படுகிறது. எதற்காக இவைகள் கொடுக்கப்படுகிறது

என்று சொன்னால், அந்த கோட்டா சிமெண்ட்டைப் பெற்று, சிமெண்ட் பைப்புகள் செய்யவும், அஸ்பெஸ்டாஸ் ஷீட் செய்ய வும், கொடுக்கப்படுகிறது. ஆனால் கேரளாவிற்கு அதைக் கடத்திக் கொண்டு போகிற நிலையில் அவர்கள் சொந்தக் காம்பௌண்டிலேயே தாலுக்கா சப்ளை ஆபிசரால் 200 மூட்டைகள் சீஸ் செய்யப்படுகின்றன. பிடிக்கப்படுகின்றன.

அவருக்கு எதிராக வழக்கு இருக்கிறது. புட் செல் டிப்பார்ட்மெண்ட்டிலே அந்த மேட்டர் ரெபர் செய்யப்பட்டு இருக்கிறது. இன்வெஸ்டிகேஷன் பெண்டிங்காக இருக்கிறது. 200 மூட்டைகள் பிடிக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் கலெக்டர் என்ன உத்தரவு போடுகிறுர் தெரியுமா? சிமெண்ட் அழுகிபோகிற பொருள் அல்ல. அந்த புட்செல் டிபார்ட் மெண்டைக் கன்சல்ட் செய்யாமல், சம்பந்தப்பட்ட அதிகாரி யோடு கலந்து பேசாமல், கலெக்டர் உத்தரவு போடுகிறார். அந்த 200 மூட்டைகளை திருப்பித் தரவேண்டும் என்று சொல் கிறார். 200 மூட்டைகளும் திருப்பித் தரவேண்டும் என்று கலெக்டர் உத்தரவு போட, அதைச் செய்யத் தூண்டியவர் யார்? ஆளும் கட்சி உறுப்பினர் தூண்டுதல் இல்லாமல் அந்த உத்தரவு வந்து இருக்குமா? ஆளும் கட்சி உறுப்பினர் களின் தூண்டுதல் இல்லை என்று சொன்னால், அந்தக் கலெக்டர் எப்படி இந்தக் காரியத்தைச் செய்யலாம், அது விதிகளுக்கு, சட்டத்திற்குப் புறம்பான காரியம் இல்லையா? நான் கடுமை யாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன்—ஆளும் கட்சியைச்சேர்ந்த உறுப்பினர் தலையீடு இருப்பதாக நான் அறிகிறேன். அதைப் போலவே இன்னொன்றையும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, உங்கள் மூலமாக இந்த சபையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இந்த ரேஷன் கார்டு சம்பந்த மான பிரச்னை மிகவும் முக்கியமான பிரச்னையாக இருக்கிறது. ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலமாக இதைப் பற்றி நான் பேசி இருக்கிறேன். நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் பதில் சொல்லி இருக்கிறார்கள். 1975-ம் ஆண்டில் கலைஞர் முதலமைச்சராக இருந்த காலத்தில், 'எனியூமரேஷன் லிஸ்ட்' தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிறகு இப்போது கடந்த 5 ஆண்டுகாலமாக புதிய கார்டுகள் வழங்கப்படுவதாக எனக்குத் தெரியவில்லை. இந்த 5 ஆண்டு காலத்தில் கார்டுகளைப் பலர் தொலைத்து இருக்கலாம். சென்னைக்குப் பலர் புதிதாக வந்து செட்டில் ஆகியிருக்கலாம். அவர்களுக்கு எல்லாம் புதிய கார்டுகள் இல்லை. இன்றைக்கு இந்த கார்டுகள் இல்லாமல் பல ஏழை எளிய, நடுத்தரக் குடும்பங்கள் மிகவும் வேதனைப் பட்டுக்கொண்டு இருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-40)

உணவுப் பண்டங்கள் விலைவாசி அதிகமாக இருக்கிறது. இப் படிப்பட்ட சூழ்நிலையில் அவர்கள் எல்லாம் ரேஷன் கார்டு மூலம் அந்த உணவுப் பண்டங்களை வாங்க முடியவில்லை.





ரேஷன் கார்டு கொடுங்கள் என்று சம்பந்தப்பட்ட அதிகாரி களிடம் கேட்டால் அவர்கள் தொடர்ந்து, உங்கள் சொந்த ஊர் தாசில்தாரரிடமிருந்து சர்டிபிகேட் வாங்கிவாருங்கள். கபற்றோர்களிடமிருந்து சர்டிபிகேட் வாங்கி வாருங்கள் என்று சொல்லி தட்டிக்கழித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

இப்படிப்பட்ட சிரமங்களைக் குறைப்பதற்காகத்தான் நான் ஏற்கனவே சொன்னேன். சட்ட மன்ற உறுப்பினர்கள் சான்றிதழ் கொடுத்தால் போதும்; வேண்டுமானால் அதை ஒரு குறிப்பிட்ட அதிகாரி வெரிஃபை செய்துவிட்டு கொடுக் கலாம் என்று சொன்னேன். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று பேரவைத் துணைத் தலைவரவர்களே உங்கள் மூலமாக இந்த அரசின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

இன்றைய வாக்காளர் பட்டியல்—ஏறத்தாழ 6 தடவை எடுத்திருக்கிறோம். அப்படியானால் எனுமரேஷன் லிஸ்ட் எடுக்கப்படவில்லையா என்றால் இல்லை, எனவே இதுவரை ரெவின்யூ டிபார்ட்மென்டில் இருக்கிற ஊழியர்கள் வாக்காளர் பட்டியலை வைத்துக் கொண்டு வீடு வீடாக போய் எனும ரேஷன் லிஸ்ட் உடனடியாக எடுப்பதற்கு வேண்டிய ஏற்பாடு களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ரேஷன் கார்டு கிடைக்காமல் தாய்மார்கள் இன் றைக்கு எவ்வளவு சிரமப்படுகிறார்கள். தாய்க்குலத்தைப்பற்றி அக்கரை காட்டுகிற நீங்கள் இந்த ரேஷன் கார்டு பற்றி அக்கரை காட்டக்கூடாதா? தேர்தல்தான் முடிந்து விட்டதே. இனி கொஞ்சம் பொறுத்துப்பார்ப்போம்என்று நீங்கள் எண்ணிக் கொண்டிருந்தால் அது சரியல்ல.

அடுத்தபடியாக என்னுடைய சில ஆலோசனைகளைச் சொல்ல முன்வருகிறேன். ஒன்று உங்களுக்குத் தெரியும் புரோக்கன் ரைஸ் என்று சொல்கின்ற நொய் அரிசியை இந்த சர்க்கார் வெளிநாட்டுக்கு, துபாய் நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறது. அதை இங்கேயே விற்கலாம். இங்கே அதைச் சாப்பிடுகிறவர்கள் இல்லையா? இருக்கிறார்கள். ஆனால் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அதனால் இலாபமா என்றால் இல்லை. இருந்தாலும் அப்படி அனுப்பு கின்ற ஏற்பாட்டை அரசாங்கமே நேரடியாகச் செய்திருக் கலாம். அப்படியும் செய்யவில்லை. இடைத்தரகர்... மூலம் அனுப்புகிறார்கள். இடைத்தரகர்... பயனடைகிறார்களே தவிர அரசுக்கு அ... இல்லை. இதுபற்றி நம்முடைய நிதி ...சர் ... அவர்... விளக்குவார்கள் என்று கருதுகிறேன்.

நமக்கு 'சைன்டிபிக் கோடவுன்ஸ்' இருக்க வேண்டும். ஆந்திராவிலே அப்படிப்பட்ட நல்ல கோடவுன்ஸ் இருக்கின்றன. ஆனால் தமிழ்நாட்டில் அந்த அளவுக்கு இல்லை. தென்னாட்டிலேயே மிகவும் மோசமாக இருப்பது நம்முடைய தமிழநாட்டில் தான். அதனால்தான் வெளிநாட்டிலிருந்து வாங்கிய 10 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள அரிசி மோசமாகப் போய், கெட்டுப் போய் இருக்கிறது. இங்கேயும் சைன்டிபிக் கோடவுன்ஸ் இருந்தால் அந்த நிலை ஏற்பட்டிருக்காது. ரேஷன் கார்டுகளுக்கு வழங்கப்படும் அரிசி மோசமாக இருப்பதற்கும் இதுதான் காரணம். ஆகவே, சைன்டிஃபிக் கோடவுன்களை அமைக்க இந்த அரசு என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது? குறைபாடுகளைப் போக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது அதிகாரிகள் முயற்சி எடுத்திருக்கிறார்களா? இந்த இலாகாவினர் முயற்சி எடுத்திருக்கிறார்களா? சம்பந்தப்பட்ட அமைச்சர் முயற்சி எடுத்திருக்கிறாரா என்று தெரிந்து கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே மாதிரியாக, இங்கே கோடவுன்ஸ் இருக்கின்றன. இன்றைக்கு தஞ்சாவூர் ஒரு 'புரொக்கியூர்மென்ட் சென்டர்'. அங்கிருந்து நெல்லை கொள்முதல் செய்து, சென்னையில் இருக்கிற கோடவுனுக்குக் கொண்டு வருகிறார்கள். சென்னைக்கு கொண்டு வருவதற்கு ட்ரான்ஸ்போர்ட், வாகன வசதி வேண்டும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு போதுமான வாகன வசதி இல்லை. அதனால் தனியாரிடம் அந்தப் பொறுப்பு விடப்படுகிறது. கான்ட்ராக்டர்கள் வண்டிகளை வைத்துதான் கான்ட்ராக்டர்கள் லாரிகளை வைத்து தான் தஞ்சாவூரில் கொள்முதல் செய்த நெல்லை சென்னைக்குக் கொண்டு வருகிறார்கள். அதிலே பல ஊழல்கள் இருக்கின்றன. இந்த இடைத்தரகர்கள், கான்ட்ராக்டர்கள் இல்லாமல் கார்ப்பரேஷனே நேரடியாகக் கொண்டுவருவதாக இருந்தால் இன்னும் அதிக லாபம் இருக்க முடியும்.

இன்னொன்று, இந்தத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிற அதிகாரிகள் இருக்கிறார்கள். அந்த அதிகாரிகளை நான் குறைகூறவில்லை. நல்ல அதிகாரிகள்தான். எல்லோரும் திறமை மிக்கவர்கள்தான். அதே நேரத்தில் ஒவ்வொரு துறையிலும் ஒருவர் திறமைமிக்கவராக இருப்பார். இன்றைக்கு விளையாட்டிலே ஒருவர் சிறந்தவராக இருப்பார். ஒருவர் பாட்டிலே சிறந்து விளங்குபவராக இருப்பார். துறையிலே சிறந்தவராக இருக்கிறவர் அந்தந்த பொறுப்பு ஏற்று செயல்பட்டால் அந்தந்த துறைக்கு விளங்கும். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ஒரு வர்த்தகக் கழகம்; வியாபாரக் கழகம். இந்தத் துறையிலே பிஸ்னஸ் ஆர்கனைசேஷனில் தேர்ச்சி பெற்றவர்கள் இருந்தால், அவர்கள் அந்தக் கண்ணோட்டத்தோடு செயல்பட்டு இந்த





வர்த்தகக் கழகம் நல்ல இலாபகரமாக இயங்குவதற்கு உதவியாக இருக்க முடியும். இப்போது இருக்கின்ற அதிகாரிகளை தகுதியைப் பற்றி, அவர்கள் பெற்றிருக்கிற அறிவைப் பற்றி நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆனால் பிஸ்னஸ் ஆர்கனை சேஷன் துறையிலே பயிற்சி பெற்றவர்களாக, அனுபவம் உள்ள வர்களாக இருந்தால் இன்னும் சிறப்பாக இந்தத் துறையை இயங்கச் செய்ய முடியும். ஆகவே, பிஸ்னஸ் நாலட்ஜ் பெற்ற அதிகாரிகளை இந்த துறையிலே நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து மீனவர் சார்பாக மீன்ளத் துறையில் சில கருத்துக் களைக் குறிப்பிட விரும்புகிறேன். இன்றைக்கு மீனவர்கள் மத்தியிலே எழுப்பப்பட்டிருக்கிற ஒரு முக்கியமான பிரச்னை யைப் பற்றி அருமை நண்பர் பொன்னுரங்கம் அவர்கள் இங்கே சொன்னார்கள். இந்த அரசு மூலம் நான் ஒரு தகவல் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். 'கார்ப்பரேஷன் ஆஃப் ஃபிஷரீஸ்-ஐ அபாலிஷ் பண்ணப் போகிறார்கள் என்ற ஒரு பிரச்சனை வந்திருக்கிறது. அது எந்த அளவுக்கு உண்மை என்பது தெரியாது. ஆனால் அதன் மூலம் 1,500 தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்று நான் கேள்விப்படுகிறேன். ஆகவே, இந்த 'கார்ப்பரேஷன் ஆஃப் பிஷரீஸ்-ஐ அபாலிஷ் செய்யப் போவதாகச் சொல்லப்படுவது குறித்து இந்த அரசு ஒரு சரியான தகவலைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கார்ப்பரேஷன் ஆஃப் ஃபிஷரீஸ் அழிக்கப்படக்கூடாது நீக்கப்படக்கூடாது என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல இன்னும் ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் நான் சொல்லி விடைபெற்றுக்கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக மண்ணெண்ணெய் விநியோகத்தைப் பொறுத்த வரையிலே இன்றைக்கு அதனுடைய ஹோல்சேல் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிடத்திலே தரப்பட்டிருக்கின்றது. ஆனால், அதிலே பல ஊழல்களுக்கு வாய்ப்பு இருக்கின்றது. சீரான விநியோகம் இருப்பதற்குரிய வாய்ப்புக்கள் இல்லாத சூழ் நிலை இருக்கின்றது. காரணம் என்னவென்றால் எல்லோரும் அந்த இடங்களுக்குச் சென்று வாங்குவதில்லை. தங்களுடைய கார்டுகள் மூலம் மண்ணெண்ணெய் பெறுவதில்லை. பல இடங்களில் சில வியாபாரிகள் அந்தக் கார்டுகளை வாங்கி வைத்துக் கொண்டு அதன் மூலம் அந்த வியாபாரிகளே அந்த மண்ணெண்ணெயைப் பெறுகின்ற வகையிலே சூதாட்டமான ஒரு நிலை இருந்து கொண்டிருக்கின்றது. இதை அரசு கண்காணிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்றும் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். சர்க்கரை விநியோகத்தைப் பொறுத்த வரையிலே அதனை வருமான அடிப்படையிலே கொடுக்கிறார்கள். அது தவறானது. ஒரு குடும் பத்திலே எவ்வளவு பேர்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையைவைத்துக் கொண்டு அதன்படி விநியோகம் செய்கின்ற முறை இருக்கவேண்டும்.

அடுத்து மஃபஸிலில் என்று சொல்லக்கூடிய அந்தப் பகுதி களிலே கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேஷனின் கிளை அமைப்புக்கள் ஜீனியை விநியோகம் செய்து வருகின்றன. அவ்வாறு விநியோகிக்கின்ற நேரத்தில் 15 மூட்டை ஒரு இடத்திற்கு அலாட்மென்ட் வருகின்றது என்றால் அதிலே 3 மூட்டையை மட்டும் விற்றுவிட்டு பாக்கியை அவர்கள் கூட்டுறவு முறையிலே கொள்ளை அடித்துக் கொள்கிறார்கள். கொள்ளை அடிப்பதில் கூட கூட்டுறவு முறை. அந்த அடிப் படையிலே இப்போது நடந்து கொண்டிருக்கின்றது. நான் எல்லா இடங்களிலும் இவ்வாறு நடப்பதாகச் சொல்லவில்லை. பல இடங்களில் இந்த மாதிரி நடக்கின்றது. நம்முடைய அரசாங்கத்திலே புலனாய்வுத்துறை இருக்கின்றது. அவர்கள் இது சம்பந்தமாக ஏதாவது வழக்கினை போட்டிருக்கிறார்களா? குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறார்களா? அல்லது ஆளும் கட்சிக்கு வேண்டியவர்கள் என்ற காரணத் தாலே தப்பித்து விடுகிறார்களா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் கூறிவிட்டு விடைபெற்றுக் கொள்கிறேன் இங்கே கொடுக்கப்பட்டிருக்கின்ற பாலிசி நோட்டிலே எல்லாவற்றுக்கும் காரணம் மத்திய சர்க்கார் என்று காரணத்தை அவர்கள் மீது போடுவது சரியாக இருக்காது. உங்களுக்கு இருக்கக்கூடிய அதிகாரிகளை வைத்துக் கொண்டு நீங்கள் சில காரியங்களை ஆற்ற வேண்டியவர்களாக இருக் கிறீர்கள்.

அடுத்து இப்போது உணவு நிலைமை திருப்திகரமாக இருக்கின்றது என்று சொல்கிறீர்கள். நீங்கள் உங்களுடைய தேர்தல் வாக்குறுதியிலே உணவு நிலைமை திருப்திகரமாக இருந்தால் வறுமைக் கோட்டிற்கும் கீழே இருக்கின்ற ஒரு நாளைக்கு 25 பைசாவுக்கும் கீழே வருமானம் பெறுகின்ற ஏழை எளியவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு கிலோ அரிசியைத் தாராளமாகக் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறீர்கள். படியரிசி திட்டத்தை நிறைவேற்றாத பாவி கருணாநிதி ஆட்சி யிலே இருக்கின்றபோதுதான் நான் ரத்தக் கண்ணீர் வடித்தேன். அதில் தோன்றியதுதான் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னார்கள். அன்றைக்கு நான் அது குறித்து சபையிலே கேட்டபோதுகூட அவ்வாறு சொன்னதாக நினைவு இல்லை என்றும் அதற்குரிய குறிப்பைப் பார்க்கலாம் என்றும் சொன்னார்.



அவர் பேசிய அந்தப் பேச்சு ரேடியோவிலே வந்திருக்கின்றது. நம்முடைய மாண்புமிகு நாவலர் அவர்கள் கூடக் கேட்டார்கள், தேர்தல் வாக்குறுதியை நாங்கள் நிறைவேற்றவில்லை என்று சொன்னால் அண்ணா நிறைவேற்றினாரா என்று கூடக் கேட்டார்.. அண்ணா அவர்களால் நிறைவேற்ற முடியவில்லை. ஆக அந்த அடிப்படையிலே இங்கே நான் கேட்டுக் கொள்ள விரும்புவது எல்லாம்.................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நேரம் ஆகி விட்டது. முடித்து விடுங்கள்.

திரு. அ. ரகுமான்கான் : முடித்து விடுகிறேன். ஒரே ஒரு கருத்தை மட்டும் சொல்லிக் கொள்கிறேன்.

நான் கேட்டுக் கொள்ள விரும்புவதெல்லாம் நியாயமான கோரிக்கைகள் வைக்கின்றபோது அவைகளை நிச்சயமாக நாங்கள் ஆதரிக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் நாங்கள் சொல்லி இருக்கக்கூடிய பல்வேறு குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல் லாமல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் எல்லாவற்றிற்கும் மத்திய சர்க்கார்தான் காரணம் என்று சொல்வது சரியல்ல. அப்படிச் சொல்வதாக இருந்தால் தேர்தல் நேரத்திலேயே அப்படிச் சொல்லி இருக்கவேண்டும். ஆனால் நாங்கள் வந்தால் எல்லாம் சரியாக இருக்கும் என்று தேர்தல் நேரத்திலே சொல்லி விட்டு இப்போது மத்திய சர்க்கார்தான் காரணம் என்று சொல்வது தவறானதாகும் என்று சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12-50)

*திரு என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நுகர் பொருள் வழங்கு மானியத்திலே காங்கிரஸ் பெரு இயக்கத்தின் சார்பிலே கொடுத்திருக்கிற வெட்டுத் தீர் மானத்தை ஆதரித்து என்னுடைய ஒரு சில கருத்துக்களை இந்த மன்றத்தின் முன்னாலே வைக்க விரும்புகிறேன். '' தமிழகத்தினுடைய உணவு நிலைமை '' என்ற குறிப் பினை நானும் மிகுந்த கவனத்தோடு படித்துப் பார்த்தேன். இதை தயாரித்த அதிகாரிகள் மிகுந்த கவனத்தோடும், சாமர்த்தியத்தோடும், தயாரித்திருக்கிறார்கள் என்று முதலில் பாராட்டுகிறேன். இதிலே ''இப்பொழுது தமிழ்நாட்டில் கட்டாயக் கொள்முதல் எதுவும் கிடையாது. வர்த்தகர்கள் மீதோ, அரிசி அரைவை ஆலைகள் மீதோ எதுவும் லெவி கிடையாது. நெல் அரிசி நடமாட்டத் தடைகள் எதுவும் கிடையாது. சுதந்திரமான சூழ்நிலை உருவாகியிருக்கிறது. ஆக அரிசி, உணவுத் துறையிலே சிறப்பான சூழ்நிலையில் இருக்கிறது '' என்று சொல்லி இந்த இலாகா தனக்குத் தானே ஒரு 'சபாஷ்' போட்டுக் கொண்டிருக்கிறது.

ஆக, உணவுத் துறையிலே பெரிய அளவிலே இன்றைக்கு இந்த அளவு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்னவென்று சிந்தித்துப் பார்த்தால், வெள்ளையன் ஆட்சிக் காலத்திலே அரிசி இறக்குமதி செய்யப்பட்டது. கடன் வாங்கினோம் என்றெல்லாம் பலர் எடுத்துச் சொன்னார்கள். சுதந்திரத்திற்குப் பின்னால் காங்கிரஸ் ஆட்சியிலே இருந்த காலத்திலே ஆறுகளிலே அணையைக் கட்டி, வீரிய விதைகளை தமிழகத்திற்குக் கொண்டு வந்து காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே செய்த மகத்தான சாதனைகளின் விளைவுகள்தாம் இவை என்பது புரியும். இன்றைய தினம் உணவுத் துறையிலே தன்னிறைவு பெற்றதோடு மாத்திரம் அல்லாமல் இங்கே, சிறப் பாக குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்களே, 'உலகத்திலே இருக்கிற பல நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவிலே நம்முடைய நிலை உயர்ந்திருக்கிறது என்று' அதற்கு காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் செய்த பணிகளும் காரணம் என்று குறிப் பிட்டிருந்தால் மெத்த பெருந்தன்மையாக இருக்கும் என்று தான் நான் கூற விரும்புகிறேன்.

இந்த அறிக்கையிலே பல்வேறு இடங்களிலே எங்கெல்லாம் விலைவாசி கட்டுக்கடங்கியிருக்கிறது என்ற நிலை கூறப்பட்டிருக் கிறது. இந்த நிலை அரிசியைப் பொறுத்த அளவில்தான். அதை மட்டும் தங்களுடைய சாதனையாக இந்த இலாகா பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. ஆனால் அதே வேளையில் உயர்ந்து கொண் டிருக்கிற அத்தியாவசியப் பொருள்களின் விலைவாசியைப் பார்க்கிற காலத்தில், மத்திய அரசாங்கத்தை துணைக்கு அழைக் கிறார்கள். அல்லது வேறு மாநிலங்களை கையை காட்டி விடுகிறார்கள். இந்த நிலையைத் தான் இந்த அறிக்கையிலே நான் பார்க்கிறேன்.

பொதுவாக எனக்கு முன்னாலே பேசிய உறுப்பினர்கள் திரு. ரகுமான்கான் உட்பட எடுத்துச் சொன்னார்கள். "தமி ழகத்திலே இன்றைக்கு அத்தியாவசியப் பொருள்களின் விலை வாசி உயர்ந்து கொண்டே போகிறது. அதுவும் கொஞ்சம் கொஞ்சமாக இல்லை, கடுமையாக உயர்ந்துக் கொண்டிருக்கிறது" என்று கடந்த 4, 5 மாதங்களிலே அதிகமாக உயர்ந்திருக்கிறது என்பதை என்னால் ஆதாரத்தோடு சொல்ல முடியும். சீனியைப் பொருத்த அளவில் மார்ச் மாதம் ரூபாய் 5.50 ஆக இருந்தது இப்போது 7.50 ஆக உயர்ந்திருக்கிறது. இன்றைக்கு அதை ஒரு முன் எச்சரிக்கையாகவே அறிக்கையிலே கொடுத்து கொண்டிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற மாநிலங்களிலே கூட 5 ரூபாய் 6 ரூபாய் விலையில் சீனி விற்கிறது என்று. அப்படி முன் எச்சரிக்கையாகச் சொல்லிக் கொண்டாலும் கூட, இன் றையதினம் 7.50-லிருந்து 8.00 ரூபாய் வரை கிலோ ஒன்றுக்கு சீனி விற்கிறது.





புளி மார்ச் மாதம் 5.80 பைசா இன்று 11 ரூபாயாக ஏறியிருக்கிறது. அரிசி விலையும் கணிசமாக உயர்ந்திருக்கிறது. கடலை பருப்பு 2.90 ஆக இருந்தது 4.40 ஆக உயர்ந்திருக்கிறது. துவரம் பருப்பு கூட 4.50 ஆக இருந்தது. 5.50 ஆக உயர்ந்திருக்கிறது. சீரகம் 14.50-லிருந்து 20.00 ஆக உயர்ந் திருக்கிறது. மிளகு 19.00 ரூபாயிலிருந்து 24.00 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. நல்லெண்ணெய் 10.20-லிருந்து 14.00 ஆக உயர்ந்திருக்கிறது. கடலை எண்ணெய் 9.30-லிருந்து 11.50 ஆக உயர்ந்திருக்கிறது. தேங்காய் எண்ணெய் 14.00-லிருந்து 19.00 ஆக உயர்ந்திருக்கிறது. கடுகு 3.50-லிருந்து 5.50 ஆக உயர்ந்திருக்கிறது. விறகு கூட ரூபாய் 6 லிருந்து 8.50 ஆக உயர்ந்திருக்கிறது. இப்படி நீண்ட பட்டியலை நம்மால் கொடுக்க முடியும். இவ்வளவு விலை உயர்வும் 5 மாதங்களில் ஏற்பட்டுள்ளது.

ஆனால் இதிலே விலை உயர்வுக்குக் காரணம் என்ன சொல்கிறார்கள் என்று பார்த்தால் பயறு வகைகள் வட மாநிலங் களிலிருந்து வரவேண்டும். நல்லெண்ணெய்க்கு எள் ஆந்திரா விலிருந்து, ராஜஸ்தானிலிருந்து வரவேண்டும். தேங்காய் எண்ணெய்க்கு, தேங்காய் கேரளாவிலிருந்து வரவேண்டும். புளி கர்நாடகத்திலிருந்து வரவேண்டும். இப்படி ஒவ்வொரு மாநிலத்திலிருந்தும் என்னென்ன பொருள் வருகிறது என்ற விளக்கம் நாங்கள் கேட்கவில்லை. அரசாங்கத்தை கையிலே வைத்துக் கொண்டு, அதிகாரத்தை கையிலே வைத்துக் கொண்டு, நிதி இருப்பை கையிலே வைத்துக் கொண்டு, ஏன் குறைப்பதற் கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றுதான் நாங்கள் கேட்கிறோம்.

சரி இவைகளாவது வேறு மாநிலங்களிலிருந்து வருகின்றன. கடலை எண்ணெய் விலை ஏறியிருக்கிறது ஏன் என்று சொன்னால், "என்ன செய்வது இங்கேயிருந்து வேறு மாநிலங்களுக்கு போகி றதே" என்று சொல்கிறார்கள். வேறு மாநிலங்களுக்கு போகக் கூடாது; தடை என்று சொன்னால், மற்ற மாநிலங் களிலிருந்து நமது மாநிலத்திற்கு மட்டும் எப்படி மற்ற பொருள் கள் வர முடியும் என்று நான் கேட்கிறேன். ஆக, விலைவாசி யினைக் குறைப்பதற்கான திட்டமான நடவடிக்கையை அர சாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டும். குறைந்த வருவாயில் மாத சம்பளத்தில் இருக்கிறவர்கள் இதனால் மிகவும் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள். குறிப்பாக என்.ஜி.ஓக்கள் மிகவும் பாதிக் கப்பட்டிருக்கிறார்கள். அந்த என். ஜி. ஓக்கள் கூட அகவிலை கூடுதல் படியை எதிர்பார்க்கிறார்கள். நிதியமைச்சர் அவர்கள் கூட இங்கே இருக்கிறார்கள். இந்த பட்ஜெட் கூட்டத் தொடரின் இறுதியிலே அவர்களுக்கான கூடுதல் அகவிலைப் படியை அறிவிப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

ஆக, இந்த விலைவாசியைக் குறைப்பதற்கான திட்டவட்ட மான நடவடிக்கையை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல கிற நேரத்தில் திரவியமே நம்மிடத்தில் இருக்கிறது—திரவியம் என்று நான் சொல்வதை யாரையும் குறிப்பிட்டுச் சொல்வதாக நினைத்துக் கொள்ளக்கூடாது, அரசாங்கத்தினுடைய நிதி ஆதாரம் நம்மிடம் இருக்கிற நேரத்தில், ஐந்தாறு மாதங்களில் விலைவாசி கூடப் போகிறது என்று சொல்லிவிட்டு பொறுப்பிலே இருந்து தட்டிக் கழிக்காமல், பொருட்களை அதிகமாக இருப்பு வைத்து விலைவாசி கூடுகிற காலத்திலே சரியான முறையிலே வினியோகம் செய்து அவைகளை குறைப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் வகுத்துக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சரி, பயிர் வகைகள் தான் வேறு மாநிலங்களிலிருந்து வருகிறது. ஆகவே விலை கூடுகிறது. உருளைக் கிழங்கு பச்சை மிளகாய், தக்காளி, வாழைக்காய், கத்தரிக்காய் இவைகள் கூடவா வேறு மாநிலங்களிலிருந்து வருகிறது? அவை களின் விலையும் கொஞ்சம் கொஞ்சமாக உயர்ந்து கொண்டுதான் இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட ஒரு முறை சொன்னார்கள். ''நாங்கள் படித்த பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப் போகிறோம். சைக்கிள்களிலே காய் கறிகள் ஏறிக்கொண்டு வீடு தேடி வரும். அந்த வகையிலே பட்டதாரி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்போகிறோம்'' என்று சொன்னார்கள்.

அது அறிவிப்பு அளவில்தான் இருக்கிறது. அதை விரைவில் செயல்படுத்துவார்கள் என்று நினைக்கிறேன்.

ஹோட்டல் உணவுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில் பலகாரங்கள், காபி போன்ற அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள் உயர்ந்து கொண்டே போகின்றன. அவசர கால நிலைமை அமலில் இருந்த போது விலைவாசி கணிசமான முறையில் குறைந்திருந்தது. அப்போது சென்னையில் இட்டிலி, தோசை, காப்பி, டீ எல்லாம் சொன்ன விலைக்கு விற்றார்கள். அப்போது குறிப்பிட்ட விலைக்குக் கொடுக்கமுடியும் என்ற நிலை இருந்தது. ஏன் அப்படி அவர்களால் இன்று கொடுக்கமுடிய வில்லை! நிச்சயமாகக் கொடுக்கலாம். அதற்கான அதிகாரங்கள் அரசின் கையில் இருக்கின்றன. அந்த அதிகாரத்தை பிரயோகப்படுத்த வேண்டும். இந்த உணவு நிலைமை அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். ''ஹோட்டல் களில் பலகாரங்களில் விலைகள் உயர்வதுபற்றி கவலை கொள்கிறோம். மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் சொல் யிருக்கிறோம். விலையைக் குறைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கிறோம் ' என்றெல்லாம் சொல்லியிருக்கிறார் கள். மயிலே மயிலே இறகு போடு என்றால் இறகு போடுமா?



அரசாங்கம் அதற்கு வேண்டிய அதிகாரங்களை கையில் வைத்துக் கொண்டிருக்கிறது. துணிச்சலோடு அதிகாரங்களை உப யோகியுங்கள் காங்கிரஸ் அதற்கு துணையாக இருக்கும். நடுத்தர ஏழை மக்களின் இந்தப் பிரச்னையில் அரசு மெத்தனமாக இருக்கக் கூடாது.

திரு. ரகுமான்கான் அவர்கள் சொன்னார்கள். உணவு வழங்குத் துறையிலிருந்து திருவான்மியூரின் அருகே சில நாட் களுக்கு முன்னால் ஏறக்குறைய ரூ. 3,66,00,000 பெறுமான பாம் ஆயில் கண்டுபிடிக்கப்பட்டது. இதுபற்றி இந்த மன் றத்தில் நான் ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். அதாவது இப்படிப்பட்ட கடுமையான குற்றங்களைச் செய்யும் குற்ற வாளிகள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன். குற்றம் செய்பவர்கள் மீது சட்டம் பாயவில்லை என்று சொன்னேன். ஒருவன் இரண்டரை ரூபாய் திருடினான், அல்லது ஜேப்படி செய்துவிட்டான் என்றால் அவனை அடித்து சிறையில் தள்ளுகிறது இந்த அரசாங்கம். ஆனால் மூன்று கோடி அறுபத்தாறு லட்சம் ரூபாய் எண்ணெய் பதுக்கி வைத்திருந்தவர்கள் மீது ஏன் அரசாங்கம் கரிசனம் காட்டுகிறது? அன்றே நான் சொல்லியதுபோல் கடுமையான நடவடிக்கை எடுத்திருந்தால்—மூன்றாவது முறையாக இப்போது 16 லட்சம் ரூபாய் அளவிற்கு அதே ஆளிடமிருந்து, அதே சரிசில் அதே எண்ணெய் பிடிக்கப்பட்டிருக்கிறது. இது அரசாங்கத் திற்கு எதிராக விடப்படுகிற சவால் அல்லவா? ஆகவே நான் கேட்டுகொள்வது என்னவென்றால் இனிமேலாவது இத்தகைய பதுக்கல்காரர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் படவேண்டும் கடுமையான தண்டனை வழங்கப்படவேண்டும் அப்போதுதான் நாம் மக்களின் நல்வாழ்வில் ஈடுபாடு கொண்ட வர்களாவோம். கலப்படம் இன்றையதினம் மிக அதிகமாக ஆகிக் கொண்டிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் அவர்கள் கூட சொன்னார்கள். அரிசி, மிளகு, காபி, கடுகு ஆகிய பல பொருள்களில் கலப்படம் செய்கிறார்கள், அப்படி கலப்படம் செய்வதன் காரணமாக இளம் தலைமுறை யினர், அதாவது சமுதாயத்தின் ஒரு தலைமுறையே பாதிக்கப் படுகிற அளவிற்கு உடல்நலம் கெடுகிறது. ஆகவே, கலப்படம் செய் கிறவர்களுக்கு கடுமையான தண்டனை அளிக்கப்படவேண்டும். கலப்படம் என்று சொல்கிறபோது சென்னை நகரில் சாப்பாடு சாப்பிடுகிற எங்களுக்கு பத்து நாட்கள் சாப்பிட்டால் வயிற்று வலி வந்துவிடுகிறது. சில ஓட்டல்களில் சோற்றில் சுண்ணாம்புத் தண்ணீர் கலக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அது எவ் வளவு தூரம் உண்மை என்று தெரியாது. இதேமாதிரி நிலைமை இருந்தால்...........(குறுக்கீடு) இந்தச் சட்டமன்றத்தில் விவசாயிகள், ஏழை மக்கள், நடுத்தர மக்கள் பிரதிநிதிகள் தான் இருக்கிறார்கள் என்று நினைத்தோம். இப்போது ஹோட்டல் முதலாளிகளின் பிரதிநிதி ஒருவர் இருக்கிறார் என்றும்

அவர் ரூபத்தைக் காட்டிக் கொண்டிருக்கிறார் என்பது
கண்டு மெத்த மகிழ்ச்சி. பத்து நாட்கள் தொடர்ந்து ஒருவர்
இங்கே ஹோட்டலில் சாப்பிட்டு வந்தால் வயிற்றுவலி வந்து
விடுகிறது. உணவு அமைச்சர் அவர்கள் இருக்கிறார்கள்.
அவர்கள் ஒருமுறை எங்களோடு வரவேண்டும் அல்லது எங்களை
அழைத்து ஹோட்டலில் சாப்பிடவேண்டும். ஹோட்டல் சாப்பாடு
தரமாகயிருக்கிறது என்று அவர்கள் ஒத்துக் கொண்டால் நாங்கள்
அதை ஏற்றுக் கொள்கிறோம். எங்களுக்குக் கிடைத்த தகவல்
களை வைத்துச் சொல்கிறோம். இதற்காக யாரும் ஆத்திரப்
பட வேண்டாம். (மணியடிக்கப்பட்டது).

கலப்படம் என்பது உணவுப் பொருள்களில் மட்டுமல்ல.
பெட்ரோல், டீஸல், மண்ணெண்ணை உள்ளது. இவற்றின்
சராசரி அளவு சரியாக இல்லை. பெட்ரோல் டீஸல் போடு
வதில் மீட்டரில் ஒரு சில முறைகளைச் செய்து குறைந்த அளவில்
போடுகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. இதையும் அரசு
கவனத்தில் கொள்ளவேண்டும்.

சிமென்டில் கலப்படம் செய்வதால் கட்டடங்கள் இடிந்து
விழுந்தால் அதனால் ஏற்படுகின்ற இழப்புகள் பற்றி யோசிக்க
வேண்டும். ஆகவே, இதுபோன்ற கல்ப்படங்கள் பற்றி அரசு
முனைப்பாக நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்று கேட்டுக்
கொண்டு, எனது உரையை நிறைவாக்குகிறேன்.

(பிற்பகல் 1-00)

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழ
கத்தின் சார்பில் அருமைச் சகோதரர் ரகுமான்கான் அவர்கள்
கூறிய அந்த உரையோடு என்னுடைய சொற்றொடரை
இணைத்து இங்கே நான் பேச விரும்புகிறேன்.

நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில் உணவு
உற்பத்தி திருப்திகரமாக இருக்கிறது என்றும், சுமுகமான
சூழ்நிலை இருக்கிறது என்றும் இந்த அவையிலே வைத்திருக்கக்
கூடிய அறிக்கை மூலம் கூறுகிறார்கள். இந்த சட்டமன்றத்திலே
இருக்கின்ற நாம் அத்தனை பேர்களும், தமிழ் நாட்டிலே உள்ள
விவசாயிகளுக்கு நன்றி சொல்ல வேண்டும். காரணம், தமிழ்
நாட்டிலே உள்ள விவசாயிகள் மட்டுமல்ல, இந்தியாவிலே
இருக்கின்ற விவசாயிகளும் சிரமப்பட்டு உற்பத்தி செய்ததன்
காரணமாக, ஒருகாலத்தில் இந்தியா வெளிநாடுகளிலிருந்து
இறக்குமதி செய்து வந்த நிலைமைபோய், இந்தியாவிலே
இருந்து குறிப்பாக, தமிழ் நாட்டு அரிசி மேலை நாடுகளுக்கு,
மத்திய கிழக்கு நாடுகளுக்கெல்லாம் தமிழ்நாட்டு குறுவை



அரிசி ஏற்றுமதி செய்யப்படுகின்ற ஒரு சிறந்த வாய்ப்பை,
அதுவும் குறிப்பாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம்
ஏற்றுமதி செய்யக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பை அளித்த இந்த
தமிழக விவசாயிகளுக்கு இந்த மன்றமே நன்றி சொல்ல
வேண்டும்.

அந்த அளவுக்கு வெளிநாடுகளுக்கு அரிசியை ஏற்றுமதி
செய்கிறார்கள். ஆனால், உள்நாட்டிலே இருக்கக்கூடிய பிரச்னை
என்ன என்பதை நாம் பார்க்கவேண்டும். நெல்லுக்கு கொடுக்கக்
கூடிய விலை போதுமா? அந்த விலை அவர்களுக்கு கட்டுப்படி
யாகுமா? விவசாயிகள் உற்பத்தி செலவோடு ஒப்பிட்டுப்
பார்ககும்போது, இப்போது கொடுக்ககூடிய விலை மிகமிகக்
குறைவு. கோதுமைக்கு அதிக விலை கொடுக்கப்படுகிறது.
நெல்லுக்கு கொடுக்கவில்லை. நெல்லும் கோதுமையும் சீரான
அளவிற்கு செலவாகின்ற போதிலும், வட மாநிலங்களிலே
உற்பத்தியாகின்ற கோதுமைக்கு அதிக விலையும், தென் மாநிலங்
களிலே விளையக் கூடிய நெல்லுக்கு குறைந்த விலையும் தரப்
படுகின்றது என்ற குற்றச்சாட்டிலே இருந்து மத்திய அர
சாங்கம் தப்ப வேண்டுமென்றால், தென் மாநில அரசாங்கங்கள்
கூறக்கூடிய அதிகபட்ச விலையை ஏற்றுக் கொண்டு, குறைந்த
பட்சம் நெல்லுக்கு 125 ரூபாய் கொடுப்பதற்கு மத்திய அரசாங்
கத்தின இலாகா செயல்பட வேண்டும். அதன் மூலமாக
தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகள் நல்ல பலன் பெற்று,
மேலும் அதிக உற்பத்தி செய்கின்ற நிலை ஏற்படும். உரத்தி
னுடைய விலை அதிகமாகிவிட்டது. அப்படி உரத்தின் விலை
அதிகரித்துவிட்ட காரணத்தினால், ஏற்கனவே நெல்லுக்கு
கிடைத்த விலை குறைந்துபோய் விட்டது. ஆகவே, நெல்
லுக்கு அதிக விலை கொடுக்கவேண்டும் என்று மத்திய அரசாங்
கத்திற்கு நமது மாநில அரசு செய்திருக்கின்ற சிபார்சை ஏற்றுக்
கொள்ள வேண்டுமென்று திராவிட முன்னேற்றக் கழகத்தின்
சார்பிலே கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த அவையிலே வைத்திருக்கின்ற குறிப்பிலே என்ன
சொல்லியிருக்கிறார்கள்? இரண்டு லட்சம் டன் நெல்லை
மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலைக்குமேல் வாங்கினோம்.
அதிலே ஒரு லட்சம் டன் நெல்லை குறைந்த விலைக்கு கொடுத்து
விட்டதால், அதன் காரணமாக நஷ்டம் ஏற்பட்டிருககிறது
என்று சொல்லியிருக்கிறார்கள். இது பாராட்ட வேண்டிய
ஒன்றுதான். ஆனால், எந்த அளவுக்கு பாராட்ட வேண்டும்?
இந்த பர்சேசிங் சென்டர்களை எல்லா இடங்களிலும் ஓபன்
செய்தார்களா? தஞ்சை மாவட்டத்திலே மட்டும் சில பர்சேசிங்
சென்டர்களை ஓபன்செய்து விட்டால் போதுமா? தென் ஆற்காடு
மாவட்டம் இல்லையா? வட ஆற்காடு மாவட்டம் இல்லையா?
திருச்சி மாவட்டம் இல்லையா? இதைப் போல், நெல் உற்பத்தி
செய்யக் கூடிய எல்லா இடங்களிலும் இந்த வசதியை செய்து

கொடுக்கவில்லை. ஒரு சில இடங்களில் மட்டும் திறந்தது ஏதோ கண் துடைப்பாகத்தான் இருக்கிறது. எல்லா இடங்களிலும் இந்த பர்சேசிங் செண்டர்களை ஓபன் செய்யவில்லை. அவைகளின் மூலம் நெல்லைக் கொள்முதல் செய்யவில்லை. ஆகவே, நீங்கள் சொல்வதை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

அதற்குமேல் ரிசர்வ் பாங்கு ஒத்துக் கொள்ளவில்லை; இதை மாநில அரசாங்கம் 20 ரூபாய், 15 ரூபாய் அதிகம் கொடுத்து வாங்கக் கூடாது. அதற்கு மாநில பட்ஜெட்டிலே நிதி ஒதுக்கவில்லை; இதற்கு ரிசர்வ் பாங்கியின் அக்காம டேஷனை உபயோகப்படுத்தக் கூடாது என்று அப்படி ரிசர்வ் பாங்கி சொன்னதும் தவறு. எனக்கு இதிலே கருத்து வேறுபாடு இல்லை. இந்த 2 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்யும் நிலையை அதிகப்படுத்தி, ஆங்காங்கே பர்சேசிங் செண்டர் களைத் திறந்து விவசாயிகள் அதிகமாக உற்பத்தி செய்கின்ற நெல்லை வாங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்யவில்லை. அதன் காரணமாக, விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டமும், சரியான விலையும் கிடைக்கவில்லை என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இங்கே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் சேலத்திலே சொன்னார்கள் என்று உறுப்பினர் ஒருவர் கூடக் குறிப்பிட்டார்—ஒரு ரூபாய்க்கு சாப்பாடு போடப் போகிறோம் என்று. ஒரு ரூபாய்க்குச் சாப்பாட்டைப் போடுங்கள். சொன்னதை எல்லாம் செய்வீர்கள் என்றுதான் மக்கள் உங்களை ஆட்சியில் உட்கார வைத்திருக்கிறார்கள்...............

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் சாப்பாடு போடப் போகிறேன் என்று சொல்லவே இல்லை. ஜனதா சாப்பாடு ஏற்கனவே போட்டு வந்தார்கள். இடையில் நிறுத்தி விட்டார்கள். மறுபடியும் போட ஏற்பாடு செய்யப்படுமா என்று கேட்டார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலம் ஆங்காங்கு இருக்கும் ஓட்டல் அதிபர்களைக் கூப்பிட்டுப் பேசி ஒரு அறிக்கையை அரசுக்குத் தரும்படி கேட்டுக் கொண்டிருக்கிறேன். அது வந்த பிறகு முடிவு செய்யலாம் என்றுதான் எடுத்துச் சொன்னேன். அங்கே எடுத்துச் சொல்லப்பட்ட கருத்து ஒரு ரூபாய்க்கு, ஒரு ரூபாய் 25 காசுக்கு போடலாம் என்பது. ஏழை எளிய மக்கள் பசியாறுவதற்கு எந்த அளவுக்குப் போட முடியுமோ அந்த அளவுக்குப் போடவேண்டும். சுவையோடு சாப்பிட விரும்பு கிறவர்கள் வேறு எங்கு வேண்டுமானாலும் போகலாம். மலிவு விலைச் சாப்பாடு போடுவது நல்லது. அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்று சொன்னேனே தவிர, நான் போடுவேன், ..ந்த அரசு போடும் என்று சொல்லவில்லை.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ரொம்ப நன்றி, நாவலர் நான் வீட்டில் போய்ச் சாப்பிட உட்காரப் போவதில்லை. நீங்கள் உணவு அமைச்சராக இருக்கும் காரணத்தால்........ ...............

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: என் வீட்டில் போடு கிறேன் என்று நான் சொல்லவில்லை. போடுகின்ற அளவுக்கு வசதியும் இடையாது. அரசாங்கத்தின் சார்பில் அதுபற்றிய அறிக்கை வந்த பிறகு யோசித்து முடிவு எடுக்கப்படும் என்றுதான் சொன்னேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ரொம்ப சந்தோஷம். அப்படி குறைவான விலையில் உணவு போட தமிழ்நாட்டில் ஓட்டல்களில் போட்டி போட்டுக்கொண்டு போடுவதற்கு செயல்படுத்துங்கள். நாங்கள் அதற்கு பக்க பலமாக இருக்கிறோம். ஆதரவாக இருக் கிறோம். சரியாகச் செய்யுங்கள். சொன்னதைச் செய்யுங்கள். அரிசியை 'சீப்' ஆகக் கொடுங்கள். பருப்பை 'சீப்' ஆகக் கொடுங்கள். எல்லாவற்றையும் குறைவான விலையில் கொடுங்கள். முடிந்தால் 75 பைசாவுக்கு சாப்பாடு போடுங்கள். சிவில் சப்ளை கார்ப்பரேஷன் மூலமாக—'அமுதம்' என்ற பெயரில் சில இடங்களில் இரண்டு மூன்று வருஷங்கள் ஓட்டலை நடத்தி வந்தார்கள். இவர்கள் ஒரு ரூபாய்க்குச் சாப்பாடு போட்டால் இரண்டு ரூபாய்க்குப் போடுகிறவனிடம் யார் செல்வார்கள்? காம்பெடிஷன் கொண்டுவந்து விலையைக் குறைக்கலாம் என்று முயற்சி செய்தார்கள். ஆனால் அவை மூடப்பட்டு விட்டன. அந்தப் பண்டம் பாத்திரங்களை எல்லாம் ஆக்ஷன் விடுவதாக இந்து பத்திரிகையில் வந்திருக்கின்றது. அமுதம் ஓட்டல் ஏலம் போகிறது. தனிப்பட்ட முதலாளிகளை அரசாங்கத்தின் அதி காரத்தை வைத்து கம்பல் பண்ணி, எசன்ஷியல் கமாடிடீஸ் ஆக்ட்டின்படி ஒரு ரூபாய்க்குச் சாப்பாடு போடாவிட்டால் ஜெயி லுக்கு அனுப்புவோம் என்றும் சொல்லலாம். முடிந்தால் அதையும் செய்யுங்கள். தமிழ்நாட்டு மக்களுக்கு நன்மை கிடைக்கும் என் றால் அதையும் செய்யுங்கள்.

இந்த மன்றத்தில் பேசுகிற சமயத்தில் ஒன்றை நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நான் இந்த மன்றத்தில் ஏற்கனவே இரண்டு முறை உறுப்பினராக இருந்தேன். சென்ற முறை உறுப் பினராக இருந்தபோது 1973-74 ல் எஸ்டிமேட் கமிட்டி சேர்ம னாக இருந்தபோது உணவு சம்பந்தமான பிரச்னையில் கமிட்டி அதிக கவனம் செலுத்தியது. ஆளும் கட்சியில் அமைச்சராக இருக்கும் காளிமுத்து அவர்கள் கூட அதிலே இருந்தார்கள். எஸ்டிமேட் கமிட்டி பல சிபாரிசுகளைச் செய்தது. பல குற்றச் சாட்டுகளைச் சொன்னோம். பல ஊழல்களை, பல தில்லுமுல்லு களை அந்தக் கமிட்டி எடுத்துக் காட்டியது. இந்த அரசாங்கம் பொறுப்பேற்ற பிறகு அதன் பேரில் என்ன செய்திருக்கிறார்கள்? அதற்கு தெள்ளத் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்?

தெளிவாக இன்றில்லாவிட்டாலும், இன்னொரு நாளிலாவது பதில் சொல்ல வேண்டும். அதற்கு பதில் சொல்லத் தயாரா? ஊழல் என்றால் சாதாரண ஊழல் இல்லை. ஒன்றரைக் கோடி ரூபாய் பெறக்கூடிய அரிசியை தமிழ்நாட்டிலிருந்து கேரளா வுக்கும் மற்ற மாநிலங்களுக்கும் விற்றுவிட்டார்கள். அதிக விலைக்கு அனுப்பி விட்டார்கள். அரசாங்கம் அதற்கு உடந்தை யாக இருந்தது என்று அன்று எஸ்டிமேட் கமிட்டி குற்றம் சாட் டியது. அது யாராக இருந்தாலும், எப்பேர்ப்பட்ட அதிகாரியாக இருந்தாலும், எப்பேர்ப்பட்ட இடத்தில் இருந்தாலும் தமிழ் நாட்டு மக்களை வஞ்சித்தவர்களுக்குத் தண்டனை கொடுத்தாக வேண்டும். என்னுடைய தலைமையில் இயங்கிய எஸ்டிமேட் கமிட்டி சிபாரிசு செய்தது. என்ன நடவடிக்கை எடுத்தீர்கள்? 1976 ஜனவரியில் எங்கள் ஆட்சி நீக்கப்பட்டது. அதற்குப் பிறகு வந்தவர்கள் என்ன செய்தீர்கள்?

[பிற்பகல் 1-10]

மூன்று ஆண்டுகாலமாக அந்த வழக்கிலே சம்பந்தப்பட்டிருக் கிறவர்கள் மீது என்ன என்ன வழக்குப் போட்டிருக்கிறீர்கள்? எத்தனை பேர்களை சிறைச்சாலைக்கு அனுப்பியிருக்கிறீர்கள்? அசோகா டிரேடர்ஸ் தப்பி விட்டார்களே, மற்றும் உள்ள வர்கள் எல்லாம் தப்பிவிட்டார்களே, ஊழல் பெருச்சாலிகள் எல்லாம் உங்கள் பக்கத்திலே வந்து புகுந்துவிட்டார்கள் என்ற காரணத்தினால் தப்ப விட்டுவிட்டீர்களே. 3 ஆண்டு காலம் நீங்கள் ஆட்சியிலே இருந்தீர்களே. சாதாரண ஊழலா, நாங்கள் பல பிரச்சினைகளை இந்த மன்றத்திலே வைத்தோம். ஏறத்தாழ 200 ரூபாய் சம்பளம் வாங்காத தாண்டவராயன் என்கிறவருக்கு தமிழ்நாட்டினுடைய அரசாங்கம் ஏற்கெனவே, இருந்த அந்த அதிகாரிகள் ஒன்றரைக்கோடி ரூபாய் பெறக்கூடிய அரிசியையும் நெல்லையும் கொடுத்துவிட்டார்கள். என்ன கார ணம்? அது சம்பந்தமாக நான் குற்றம் சாட்டினேன். நான் முன் னேற்றக் கழகத்தைச் சார்ந்தவனாக இருந்தாலும், இன்னும் சொல்லப்போனால் அந்தப் பொறுப்பு எங்கள் பேரிலே விழும் என்றாலும் முன்னேற்றக் கழகத்திற்கு அது பாதகமாக இருந் தாலும் கூட தவறுகள் தண்டிக்கப்படவேண்டும், தவறுகள் தீர்க் கப்படவேண்டும் என்ற தோரணையில் நான் எடுத்துக் காட்டினேன்.

என்ன நடைபெற்றது? ஒன்று நடைபெற்றது. விசாரணை கமிஷன் வந்தது. என்ன விசாரணை கமிஷன் வந்தது? ராமபிர சாத்ராவ் விசாரணை கமிஷன் வந்தது. ஏற்கனவே அமைச்சராக் இருந்த ப. உ. சண்முகம் அவர்கள் பேரிலே அந்த விசாரணைக்கு கமிஷன் ஆப் என்குயரி ஆக்டின் கீழே மாநில அரசாங்கம் உத்திரவிட்டது. அந்த உத்திரவை சரியாக இட்டார்களா? ப. உ. சண்முகம் மீது தனியாக வந்து, மற்ற அதிகாரிகள்



எல்லாம் அதிலே தப்பிக்கிற நிலையிலே ஸ்கோப் ஆப் என்குயரி இருந்ததா, அல்லது கமிஷன் ஆப் என்குயரி எப்படி நடைபெற்றது என்ற விவரங்களுக்குள் நான் சொல்ல விரும்பவில்லை. திரு. ப.உ. சண்முகம் அவர்கள் பேரிலேயே இந்த இடத்திலே நான் குற்றஞ்சாட்ட விரும்பவில்லை. காரணம், அவர் இந்த மன்றத் திலே இப்போது இல்லை. அவருக்கு பாதுகாப்பு கொடுப்பதற்கு, டிபென்ட் செய்வதற்கு யார் இருக்கிறார்களோ என்னவோ தெரிய வில்லை. நான் அதையும் சொல்லவில்லை. ஆனால் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். என்ன செய்தார்கள் முதலமைச்சர் அவர்கள்? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்ன செய்தது? அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஆட்சிக்கு வந்திருக்கக் கூடிய எம்.ஜி.ஆர். என்ன சொல்வார்கள். சொல்வார்களே, ஒரு தவறு செய்தால், அதைத் தெரிந்துசெய்தால் தேவன் வந்தாலும் விடமாட்டேன் என்று சினிமாவிலே பாடிவிட்டால் போதுமா அந்தத் தவறு செய்தவர்களை எல்லாம் என்ன செய்தீர்கள் நீங்கள்? 3 ஆண்டுக் காலத்திலே இந்த அரசினுடைய சார்பிலே என்ன செய்தீர்கள்? விசாரணை கமிஷன் நடைபெற்றபோது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், எம். ஜி. ஆர். சார்பில் அபிடவிட் கொடுத்தவர்கள், வாதாடியவர்கள் சேலம் கண்ணன் அவர்கள். சேலம் கண்ணன் சர்க்காரியாவுக்குக் கொடுக்கக்கூடிய அளவுக்கு அந்தப் புகார் பட்டியலை தயாரித்து என்னிடத்திலே கொடுத்தார்கள் நான் அதை சுமந்து கொண்டு ஜனாதிபதியிடத்திலே கொடுத்தேன் என்று எம். ஜி. ஆர். சொன்னார்— இருந்தாரே அவர் என்ன சொன்னார், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிலையை அவர் சொன்னார். இந்த என்குயரி கமிஷன் கண் துடைப்பு. ப. உ. சண்முகம் அவர்களைக் காப்பாற்றுவதற்காக ஏற்படுத்தப்பட்ட கண்துடைப்பு....

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:</u> தாங்கள் முன்னாலே பேசியபோது குற்றச் சாட்டைச் சொல்லவில்லை என்று சொன்னீர்கள், இப்போது பெயரைச் சொல்கிறீர்களே?

<u>திரு. வி. கிருஷ்ணமூர்த்தி:</u> நான் அவரைச் சொல்லவில்லை. அவரை டிபண்ட் செய்யவேண்டியதில்லை. அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அது விஷயத்தில் எப்படி நடந்து கொண்டார்கள், என்ன செய்தார்கள் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தென்னகம் பத்திரிகையில் 9—4—1975ல் என்ன சொல்கிறார்கள், அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் சட்டமன்றத்தை விட்டு வெளி நடப்புச் செய்தனர். அமைச்சர் ப. உ. சண்முகம் மீது நீதி விசாரணைக்கு உத்திரவிட்ட பிறகும் அவர் தமது பதவியை ராஜிநாமா செய்யாமல் இருக்கிறார். நீதிவிசாரணைக்குப் பிறகும்

முதல்வர் ப. உ. சண்முகம் அவர்களை அமைச்சரவையிலே வைத்து
கொண்டு மறைமுகமாகப் பாதுகாப்பு தந்து கொண்டிருக்கிறார்
என்று அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக
உறுப்பினர்கள் அன்று இந்த மன்றத்தைவிட்டே இந்த சபையை
விட்டே வாக் அவுட்செய்தார்கள். இந்த மன்றத்தை விட்டு
மட்டுமா சென்றார்கள்? ராமபிரசாத் ராவ் விசாரணை கமிஷனை
விட்டும் சென்றார்கள். அந்தக் கமிஷன் வெறும் கண் துடைப்பு.
அந்தக் கமிஷனுக்கு கொடுக்கப்பட்ட ஸ்கோப் ஆப் என்குயரி
சரியில்லை. ப. உ. சண்முகத்தைப் பாதுகாப்பதற்கு என ஸ்கோப்
ஆப் என்குயரியை அமைத்திருக்கிறார்கள். இப்படி எல்லாம்
அங்கே ஸ்டேட்மெண்டு தாக்கல் செய்துவிட்டு விசாரணையி
லிருந்து அன்றைக்கு வெளிநடந்தீர்களே, நான் எம். ஜி. ஆரைக்
கேட்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்
கழகத்தினுடைய தலைமையைக் கேட்கிறேன். நீங்கள் ஆட்சிக்கு
வந்தீர்களல்லவா, நீங்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு அந்த
கமிஷனுடைய ஸ்கோப் ஆப் என்குயரி சரியில்லை
என்றால் அதை என்லார்ஜ்மென்ட் செய்தீர்களா? அதை
என்லார்ஜ் செய்து இன்னும் யார் யாரை உட்படுத்த
வேண்டுமோ உட்படுத்தி விசாரணையை செய்யுங்களேன், அதற்
குத் தயாரா? நாங்கள் சொல்லக் கூடியது புதிதா? ஏன்
சேலத்திலே நடைபெற்ற கொலை வழக்கிலே முடிந்ததற்குப் பிறகு
ரீஓப்பன் செய்தார்களே. இப்படியே எத்தனையோ
வழக்குகள். ஏறத்தாழ 4 கோடி ரூபாய் அளவுக்கு
தமிழ் நாட்டினுடைய அரிசி வெளி மாநிலத்திற்கு.
அந்தக் கயவர்களைத் தண்டிக்காமல் ஏன் எம். ஜி. ஆர்.
அவர்கள் விட வேண்டும்? இதுவரையில் என்ன
செய்து கொண்டிருக்கிறார்கள்? தவறு செய்தவர்களுக்குத் தண்ட
டனை அளிக்கப்பட வேண்டுமா, இல்லையா? இவர்களைத்
தப்புவிப்பதற்காகக் கருணாநிதி அவர்கள் முயற்சி செய்தார்கள்
என்ற உங்களுடைய கன்சப்ஷனை நான் ஒத்துக்கொள்கிறேன்.
நீங்கள் சொல்வதை ஏற்றுக் கொண்டாலும் கூட, நீங்கள் வந்த
பிறகு, அந்தக் குற்றவாளிகளை விசாரணை செய்து, அதற்கு
மூலகாரணமாக இருப்பவர்களைக் குற்றவாளிக் கூண்டிலே ஏற்று
வதற்கு என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்பதைச் சுட்டிக்
காட்டி கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது) எனக்கு
ஒன்றரை மணி வரையில் நேரம் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை உங்க
ளுக்கு நேரம் 1-15 மணி வரையில்தான் ஒதுக்கப் பெற்றது.
சீக்கிரம் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஆகையினாலே இந்தக் குற்ற
வாளிகளை, அரிசி பேர ஊழலில் சிக்கிய குற்றவாளிகளை, இன்
னும் சொல்லப்போனால், கொள்ளைக்காரர்களை, தமிழ்நாட்டு
மக்களை ஏமாற்றிய வஞ்சகர்களை நீங்கள் சிறைச்சாலையில்
தள்ளாமல் அணைத்து வைத்து இருக்கிறீர்கள். இது நியாயமா



நான் சொல்வதிலே ஏதாவது தவறுகள் இருந்தால் என்னை
அதற்காக மன்னியுங்கள். என்ன காரணத்தால்— இவர்களெல்
லாம் தப்பிக்க நடவடிக்கை எடுக்கிறீர்கள்.?

இப்பொழுது சொல்கிறேன், அப்படிப்பட்ட குற்றவாளிகளை
ஆசிட் டெஸ்ட் செய்து பரிசீலனை செய்தீர்களா? எந்த
ஆசிட்டில் போட்டு ஊற வைத்தீர்கள்? எங்களுடைய முன்னேற்றக்
கழகத்தில் அவர்கள் இருந்தால் அவர்கள் ஊழல் பேர்வழிகள்.
ஆனால் எங்கள் பக்கத்திலே இருந்து அங்கே வந்தால் அவர்கள்
உத்தமர்களா? இதுதான் எம். ஜி. ஆர். அவர்களுடைய டிக்ஷ
னரியின் அர்த்தமா? சொல்லுங்கள். இதைத் சொல்வதன்
மூலம் இந்த இலாக்கா அந்தத் தவறு செய்தவர்களைத் தண்ட
னையிலிருந்து காப்பாற்றி, அவர்களோடு சேர்ந்துகொண்டு
இன்னும் சொல்ல வேண்டுமென்றால், குற்றவாளிகளோடு
சேர்ந்து கொண்டவர்களாக இந்த ஆட்சி செயல்பட்டு வருகிறது
என்பதைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை என்பதைச்
சொல்ல விரும்புகிறேன்.

இன்னொன்றும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். நான்
என்ன சொல்கிறேன் என்றால், நான் அதையெல்லாம் சொல்ல
முடியும். ராமபிரசாத் ராவ் என்கொயரி கமிஷன் ரிப்போர்ட்
எங்களுக்குக் கடைசியிலேதான் வந்தது. கிருஷ்ணமூர்த்தி,
இதையெல்லாம் இப்பொழுது ஏன் சொல்கிறீர்கள், முன்பே
சொல்லியிருக்கலாம் அல்லவா என்று சொல்லலாம்.
அப்படிச் சொல்லலாம். ஆனால் எஸ்டிமேட் கமிட்டி
சேர்மனாக இருந்து, பிறகு சட்டமன்றம் கலைக்கப்
பட்டுவிட்டது. நான் சென்ற முறை சட்டமன்றத்திற்கு
வரவில்லை. இப்பொழுது வருகிறேன். அப்படி வரு
கின்ற காரணத்தால், நாங்கள் தயாரித்த, எஸ்டிமேட் கமிட்டி
சொல்லிய அந்த ஊழலைப்பற்றி, வந்த அரசாங்கம், அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக அரசாங்கம் கடந்த இரண்டரை
ஆண்டுக்காலமாக எதற்காக மூடி வைத்து விட்டது? அந்த
ஊழலைச் செய்தவர்களுக்குப் பாதுகாப்பு கொடுத்துக் கொண்டி
ருப்பது நியாயமா? இதுதான் எம். ஜி. ஆர். போதிக்கக்கூடிய
தர்மமா? இதுதான் எம். ஜி. ஆர். நாட்டு மக்களுக்கு சொல்லக்
கூடிய நியாயமா என்று கேட்க விரும்புகிறேன்.

சர்க்கரை சம்பந்தமாக, நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்
பரேஷன் எப்படி செயல்படுகிறது என்ற விவரத்தை மட்டும்
சொல்லி முடித்துவிட விரும்புகிறேன். பத்து நிமிடங்களில்
முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் ஐந்து
நிமிடங்களில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: The difference between 5 and 10 minutes is not much.

இப்பொழுது ஷுகர் டீல் இருக்கிறதே அதைப்பற்றி நான் சொல்ல விரும்புகிறேன். இந்தக் குறிப்பிலே கொடுத்திருக்கிறார்கள். என்ன? நம்முடைய தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், இன்னும் பெருமையாக சொல்லப்போனால் திரு. திரவியம் அவர்கள் தலைமையிலே இயங்கக்கூடிய, சேர்மனாக இயங்கக்கூடிய அந்தத் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் ரொம்ப அருமையாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று மற்ற மாநிலங்களுக்குப் பரிந்து செய்திருக்கின்றார்கள் என்று அந்தப் பாராகிராப்பில் போட்டிருக்கிறார்கள், பெயரைச் சொல்லவில்லையே தவிர. I have no difference of opinion. அது பாராட்டப்பட வேண்டிய ஒன்றுதான். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் செய்திருக்கக்கூடிய நல்ல காரியங்களை நாங்கள் பாராட்டுகிறோம். அரிசி ஏற்றுமதி பண்ணுகிறீர்கள், அதைப் பாராட்டுகிறோம். ஆனால் அங்கே சிலேட், பலப்பம், நோட் புத்தகம் விற்க ஆரம்பித்து விட்டார்கள். கிருஷ்ணாயில் ஒரு பக்கம், அரிசி ஒரு பக்கம். அதனால் இரண்டையும் கலந்து விடக்கூடிய நிலைமைகள் ஏற்படுகின்றன. ஒரே கிளார்க் தான் ஹேண்டில் செய்யவேண்டியிருக்கிறது. அரிசி, கிருஷ்ணாயில், கோழி முட்டை, புத்தகம் எல்லாவற்றையும் வைத்திருக்கிறார்கள். பையன்கள் சென்றால், புத்தகத்தில் கிருஷ்ணாயில் பட்டு விடுகிறது. எனவே, இந்த மாதிரி வேண்டாம். இந்த நோட்டு புத்தகங்களையெல்லாம் ஹைஸ்கூலிலே கொடுக்கச் சொல்வதை விட்டுவிட்டு நீங்கள் ஏன் அநாவசியமாக இதைச் செய்து கொண்டிருக்கிறீர்கள்? ஹெட் மாஸ்டர்கள் இருக்கிறார்கள், சீஃப் எஜுகேசனல் ஆபீசர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? எனவே, திரு. அரங்கநாயகம் அவர்கள் தலைமையில் இயங்கக் கூடிய அந்த இலாகாவிற்குக் கொடுக்கலாம். சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் நோட்டு புத்தகங்கள் விற்கவேண்டுமா?

ஆகையால் சர்க்கரை வாங்கும் விஷயத்தில் மத்திய அரசாங்கம் பாராட்டியது என்று சொன்னார்கள். பாராட்டுகின்றவரைக்கும் சரி. என்ன பாராட்டினார்கள்? சென்ட்ரல் கவர்ன்மெண்டிலேயிருந்து நவம்பர், டிசம்பர் மாதத்தில் ஒரு செய்தி மாளிட்டர் ஆயிற்று. எங்கே? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனுக்கு, என்ன என்றால், நாங்கள் நகரிலே ------ கன்ட்ரோலை மறுபடியும் கொண்டு வரப் போகிறோம். அதனால் விலை ஏறக்கூடும் என்று ஒரு செய்தி மாட்டர் கிடைத்தது.



[பிற்பகல் 1-20]

அதை வைத்துக்கொண்டு நம்முடைய சிவில் சப்ளைஸ் கார்ப்ரேஷன் பல ஆயிரக்கணக்கான சர்க்கரை மூட்டைகளை, பல மில்களிலேயிருந்து, வாங்கியிருக்கிறது. அன்றைக்கு ஓப்பன் மார்க்கெட்டிலே விற்ற விலை ரூ. 270, ரூ. 270 க்கு அன்றைய தினம் ஒரு மூட்டை சர்க்கரை விற்றது. ரூ. 270, ரூ. 275 விற்ற சமயத்திலே, தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் பல்லாயிரக்கணக்கான டன்கள் சர்க்கரையை ரூ. 270, ரூ. 280, ரூ. 285, ரூ. 290 என்ற விலைக்கு வாங்கினார்கள், வாங்கி வைத்துவிட்டார்கள். அதுவரையிலே லாபம் தான். அதுவரையிலும் அவர்களுடைய கடமையைப் பாராட்டி வேண்டியதுதான். ஆனால், அவர்கள் என்ன விலைக் விற்றார்கள்? ரூ. 270க்கு ரூ. 280க்கு வாங்கினார்களே, ரூ. 300க்கு விற்றார்களா என்றால் அதுதான் இல்லை. ரூ. 650க்கு விற்றார்கள் முதலிலே, ரூ. 650க்கு விற்கிறார்களே, இது கொள்ளை இலாபம் அல்லவா என்று நான் நெல்லிக்குப்பத்திலே, சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னதாகப் பேசியதற்குப் பிறகு ரூ. 600 ஆக வைத்தார்கள். சில இடங்களிலே ரூ. 600க்கு விற்பது என்று வைத்தார்கள். பிறகு மீண்டும் ரூ. 550 ஆகக் குறைக்கப்பட்டது. கடைசியிலே, ரூ. 500லே வந்து நின்றுவிட்டது. அன்றைக்கு பிஸ்கட் செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு, மிட்டாய் செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு, பன், பிரட் செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு, சர்க்கரையை கன்ஸ்யூம் செய்யக்கூடிய தொழிற்சாலைகளுக்கு, ஓட்டல்களுக்கு எல்லாம் குறைந்த பட்சம் ரூ. 500க்கு விற்றார்கள். ரூ. 280க்கு வாங்கிய சர்க்கரையை ரூ. 500க்கு விற்றால் அது பிளாக் மார்க்கெட் இல்லையா? தனிப்பட்ட ஒரு வியாபாரி ரூ. 300 க்கு சர்க்கரையை வாங்கி, ரூ. 500க்கு விற்றால் எசன்சியல் கமாடிட்டிஸ் ஆக்ட் வேகமாகப் போகும். அவனைப் பிடித்து விட்டு தானே மறுவேலை பார்க்கும்—நம்முடைய போலீஸ்காரர்கள் சும்மா இருக்க மாட்டார்களே?

* * *

அரசாங்கம் செய்வது பிளாக் மார்க்கெட் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த மாதிரி வாசகங்கள் வேண்டாம். அந்த வாசகங்களை நீக்க உத்தரவிடுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : I have mentioned it in a lighter manner (Interruption). I said it in a lighter veiw.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அரசாங்கத்திற்குத் தண்டனை கொடுக்க வேண்டுமென்றால், அர
சாங்கத்திலே யாருக்குத் தண்டனை கொடுப்பது? நீங்கள் வேண்டு
மென்றால், சொல்லுங்கள் டெப்டி ஸ்பீக்கர், அதிகாரிகளுக்கு
தண்டனை கொடுக்கக் கூடாது. நம்முடைய உணவுத்துறை
அமைச்சருக்குத் தண்டனை கொடுக்கவேண்டுமென்று நீங்கள்
சிபாரிசு செய்தால் நான் ஏற்றுக் கொள்கிறேன். எனக்கொன்றும்
ஆட்சேபனை இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்
பினர்களும் மற்றவர்களும் எனக்கு எவ்வளவு தண்டனை வேண்டு
மானாலும் தாருங்கள், அதைத் தாங்கிக்கொள்ள நான் தயாராக
இருக்கிறேன். அந்த அதிகாரிகளைப் பொறுத்தோ, மற்றவர்
களைப்பொறுத்தோ ஒரு பொறுப்பு வாய்ந்த பல்லாண்டு
காலமாக உறுப்பினராக இருக்கிறவர் அவ்வாறு சொல்வது சரி
யல்ல.

மற்றொன்று, உணவுபொருள் வாணிபக் கழகம் ஒரு பொருளை
ஒரு குறிப்பிட்ட விலைக்கு வாங்கி, ஒரு குறிப்பிட்ட விலைக்கு
விற்கின்ற பொழுது, கூடுதலாக விற்கின்றது என்ற காரணத்தைச்
சொல்லுங்கள். அது எப்படி பிளாக் மார்க்கெட் ஆகும்? பிளாக்
மார்க்கெட் ஆகாது. ரூ. 270 க்கு ரூ. 300 க்கு வெளிப்படையாக
வாங்கி, வெளிப்படையாக விற்பதால் விலையை வேண்டுமென்றால்
தெளிவாக நான் பிறகு சொல்கிறேன். ஒரு குறிப்பிட்ட விலைக்கு
வெளிப்படையாகக் கணக்கு வைத்து, வெளிப்படையாக விற்பது
எப்படி பிளாக் மார்க்கெட் ஆகும்?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: வியாபாரி ரூ. 300 க்கு சர்க்கரை
வாங்கி, ரூ.500க்கு விற்கிறான் என்றால், அது பிளாக் மார்க்கெட்
தான் இல்லையா? இது பிளாக் மார்க்கெட் இல்லையென்றால்
அவனும் தானே மூட்டையை வண்டியில் ஏற்றுகிறான். ரூ. 300
க்கு ரூ. 500க்கு விற்கிறான். நீங்கள் சொல்வது போல் என்றால்
அதுவும் பிளாக் மார்க்கெட் இல்லை. தனிப்பட்டவர் ரூ. 300க்குச்
சர்க்கரை வாங்கி, ரூ. 290 க்கு சர்க்கரை வாங்கி, ரூ. 500 க்கு
விற்றால் அது பிளாக் மார்க்கெட். அரசாங்கம், ரூ. 290 க்கு
வாங்கி, ரூ. 500க்கு விற்றால் அது பிளாக் மார்க்கெட் இல்லை
யென்ற சித்தாந்தத்தை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.
அரசு பிளாக் மார்க்கெட் செய்திருக்கிறது. செய்யக்கூடாது
என்பதற்காகத்தான் சொல்கிறேன். இனி செய்யாதீர்கள், நீங்கள்
ரூ. 290க்கு வாங்கி கிராமங்களுக்குக் கொண்டுபோய் ரூ. 290க்
கோ அல்லது ரூ. 300க்கோ கொடுத்திருந்தால், அதைப் பாராட்டு
கிறேன். அல்லது, விலை அடக்கம், டிரான்ஸ்போர்ட் எல்லாம்
சேர்த்து ரூ. 310க்கு ஒரு கிளாஸ் ஆப் கன்ஸ்யூமர்களுக்கு ஒட்டும்
களுக்கு நாங்கள் கொடுத்திருக்கிறோம் என்று சொன்னால், நான்
பாராட்டுகிறேன். ரூ. 290க்கு வாங்கிய சர்க்கரை எத்தனை
ஆயிரம் டன்? கொண்டு வாருங்கள் கணக்கை. எத்தனை
கோடி லாபம் வந்திருக்கிறது? என்னுடைய கணிப்புப் பிரகாரம்



குறைந்த பட்சம் ரூ. 10 கோடி இந்த
ரூ. 500க்கு விற்றதில் மட்டும் லாபம் வந்திருக்கிறது.
சர்க்கரை வியாபாரத்திலே ஆதாரமில்லை, நான் கணக்கைப்
என்னிடத்திலே, கணக்கில்லை, பார்த்தால் ஒரு வேளை
பார்ப்பதற்குச் சந்தர்ப்பம் இல்லை. ஆகலாம். ஆனால், பல
குறையும், அல்லது அதிகமாகக் கூட பிளாக் மார்க்கெட்
கோடிக்கணக்கான ரூ. 5 கோடி, ரூ. 10 கோடி அரசாங்கம்
நடந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், நியாய
செய்தால் பிளாக் மார்க்கெட் இல்லையாம். என்ன அரசாங்கம்
மாக இருக்கிறது? தனிப்பட்டவன் செய்தால் பிளாக். விற்பது
செய்தால், ரூ. 300க்குச் சர்க்கரை வாங்கி, ரூ. 500க்கு ரேஷனுக்
பிளாக் மார்க்கெட் இல்லையா? மத்திய அரசாங்கம் முடித்து
கென்று சர்க்கரை கொடுக்கிறது. (மணியடிக்கப்பெற்றது).
விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: நீங்கள் முடித்து
விடுங்கள், நேரம் ரொம்ப ஆகிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: மத்திய அரசாங்கம் ரேஷன் கார்டு
க்குச் சர்க்கரை கொடுக்கிறது. ரேஷன் கார்டுக்குக் கொடுக்கிற
சர்க்கரையை, நீங்கள் ரூ. 500க்கு விற்க முடியுமா? ரூ. 2.60க்கு
ரூ. 2.70க்கு விற்கவேண்டுமென்று சொன்னால் அந்த
விலைக்கு தானே விற்கவேண்டும். ஆகையினாலேதான்
இந்த அரசாங்கம் சர்க்கரையைப் பொறுத்தவரையிலே, பல தவறு
களை, அதுவும் டிசம்பர் மாதத்திலே செய்தது. பல்லாயிரக்கணக்
கான டன்கள் சர்க்கரையை, நவம்பர் டிசம்பரிலே வாங்கியது.
வாங்கிய வரையில் பாராட்டுகிறேன்.

நீங்கள் போய் 3 ரூபாய்க்கு ஜனங்களுக்குக் கொடுத்திருந்
தால் 3.10க்குக் கொடுத்திருந்தால் பாராட்டுவேன். சிவில் சப்ளைஸ்
கார்ப்பரேஷனைப் பாராட்டுவேன். அதை விட்டு விட்டு ஒரு
நாளைக்கு 500 ரூபாய்க்கு விற்கச் சொல்லி தந்தி, அடுத்த நாள்
600 ரூபாய்க்கு விற்கச் சொல்லுகிறார்கள். எத்தனை ரீஜனல்
மேனேஜர்கள் எத்தனை ஓட்டல் முதலாளிகளுக்கு விற்றிருக்
கிறார்கள்? ஒரு நாளைக்கு 500 ரூபாய்க்கு விற்கச் சொல்லி
உத்தரவிடுகிறீர்கள். அடுத்த நாள் ஒரு டெலிகிராம் போகும்.
550 ரூபாய்க்கு விற்பனை செய்யுங்கள். அடுத்த நாள் சென்னை
யிலே நான் பத்திரிகை நிருபர்களை சந்தித்துப் பேசிய பிறகு 500
ரூபாய்க்கு விற்பனை செய்யுங்கள் என்று சொல்லுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சீக்கிரம் முடித்
துக்கொள்ளுங்கள். உங்களுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற நேரம்
15 நிமிடம். ஏற்கனவே நீங்கள் 25 நிமிடங்கள் பேசியாகிவிட்டது.
இன்றைக்கு நிறைய உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கொடுக்க
வில்லை நீங்கள் சீக்கிரம் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: அடுத்து நான் சொல்ல விரும்புவது; இந்த பாராவிலே சொல்லி இருக்கிறார்கள். வெளிச் சந்தையிலே குறைவாக விலைக்கு விற்கும் முயற்சிகளைத் தொடர்ந்து இப்போது சர்க்கரை விலை அதிகமாக இருப்பதால், அதே மாதிரி குறைச்சலாக விற்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். என்ன முயற்சிகளை நீங்கள் மேற்கொள்ளப்போகிறீர்கள்? அடுத்த வருஷம் கரும்பு உற்பத்தி பண்ணி, சர்க்கரை வரும் வரையில் ஒரு மாதம், 2 மாதங்களுக்கு வெளியே இருக்கக்கூடிய கூட்டுறவு மில்கள், தனிப்பட்ட ஆலைகளிலே ஓப்பன் மார்க்கட்டிலே ரிலீஸ் செய்யக்கூடிய சர்க்கரையை குறைந்த விலைக்கு வாங்க—இன்னும் சொல்லப்போனால் நமது முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக இன்ஸ்டிரக்ஷன்ஸ் கொடுத்திருக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது. 465 ரூபாய்க்கு ஓப்பன் மார்க்கட்டிலே வாங்கி—பாதி மில்களுக்கு—20 சர்க்கரை ஆலைகள் இருந்தால் 20 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் உட்பட, பப்ளிக் செக்டார் சர்க்கரை ஆலைகள் உட்பட பிரைவேட் செக்டார் ஆலைகள் உட்பட அத்தனை மில்களும் 465 ரூபாய்க்கு கொடுக்கவேண்டும் என்று எனக்குத் தகவல். இன்றைய தினம் மார்க்கட்டு ரேட் 720 ரூபாய். நீங்கள் சொல்லலாம். இதில் என்ன தவறு என்று. 720 ரூபாய் இருந்தால், ஒரு கிலோ 7.50 அல்லது 8 ரூபாய்க்கு கிடைக்கும். நம்முடைய முதலமைச்சர் எம்.ஜி.ஆர். 465 ரூபாய்க்கு வாங்கிக் கொடுக்கிறார்களே அது நல்லதல்லவா? அப்படி என்று சொல்லலாம். நான் ஏற்கனவே கவர்னர் உரையிலே சொன்னேன். அத்திப்பழத்தைப் பார்த்தால் நன்றாக இருக்கும் என்று. ஆனால் உள்ளே புழு இருக்கும் என்றும் சொன்னேன். அதைப் போல் இதற்குள் புழு இருக்கிறது. 465 ரூபாய்க்கு எந்தக் கண்டிஷனில் அவர்கள் வாங்குகிறார்கள். 465 ரூபாய்க்கு ஒரு மாதத்திற்கு இரண்டு மாதத்திற்கு ஓப்பன் மார்க்கெட்டில் தனிப்பட்ட மில்களில் கூட்டுறவு மில்களில் கொடுக்க வேண்டும் என்று சொல்லக்கூடிய அரேன்ஜ்மெண்டிலே பின்னாடி ஒன்று வருகிறது. அது என்னவென்றால், 20 சர்க்கரை ஆலைகள் 18 கோடி ரூபாய்கள் பர்சேசிங்டாக்ஸ் இன்றையதினம் அர்ரியர்ஸ் வைத்திருக்கின்றன. அந்த 18 கோடி ரூபாய் தனிப்பட்ட ஆலைகள், கூட்டுறவு ஆலைகள், பப்ளிக் செக்டார் அண்டர்டேக்கிங்ஸ் இவர்கள் அனைவரும் கொடுக்காமல் இருக்கிறார்கள். அதைப் பாதியாகக் குறைத்துக் கொள்வதற்கு மாநில அரசாங்கம் தயாராக இருப்பதாக எனக்கு தகவல் வந்து இருக்கிறது. எது சரியோ எது தவறோ என்ற பதிலைச் சொல்லவேண்டியவர்கள் முதலமைச்சர் அவர்களும், உணவு அமைச்சர் அவர்களும் தான். ஆகவே, தனிப்பட்ட வகையிலே இதிலே பேரம் இருக்கிறது. மேலவையில் ஆற்காடு வீராசாமி அவர்கள் சொன்னார்கள். தேர்தலுக்கு முன்பு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் 5 லட்ச ரூபாயை சர்க்கரை ஆலை அதிபர்களிடத்திலே இருந்து வாங்கியிருப்பதாக அங்கே சொன்னார்கள். இங்கே சொல்லவில்லை. ஒரு வேளை......



மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கிருஷ்ணமூர்த்தி, தயவு செய்து முடித்து விடுங்கள், சர்க்கரையைப் பற்றியே பேசுகிறீர்கள். தற்போது அலிகேஷனுக்கு வருகிறீர்கள் நேரம் ஆகிக்கொண்டு இருக்கிறது. ஆகவே, தயவு செய்து முடித்து விடுங்கள்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி: ஒரு வேளை வாங்கிய பணத்திற்கு ஈடு கட்டுவதற்காகத்தான் தனிப்பட்ட சர்க்கரை ஆலைகளுக்கு 5 கோடி ரூபாய் தள்ளுபடி செய்வதற்கு எம். ஜி. ஆர். அரசாங்கம் முயற்சிக்கிறதா என்ற குற்றம் சாட்டி, அப்படிப்பட்டக் குற்றங்களை செய்வீர்களேயானால், நீங்கள் தண்டனையிலிருந்து எதிர்காலத்தில் தப்ப முடியாது என்று சொல்லி என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத் தம்பி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளும் கட்சியின் பொதுச் செயலாளர்மீது ஒரு குற்றச்சாட்டு இங்கே வந்து இருக்கிற காரணத்தாலே ஒரு சில விளக்கங்களை பேசிய மாண்புமிகு உறுப்பினர் அவர்களிடமிருந்து கேட்பதற்கு நான் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது அதற்கு பதில் சொல்வார்கள். நீங்கள் பேசினால் அந்த உறுப்பினருக்கும் வாய்ப்புக்கொடுக்கவேண்டியிருக்கும்.

அவையின் அனுமதியோடு, பேரவையின் நேரத்தை நீட்டிக்கிறேன்.

[முற்பகல் 1-30]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மிக முக்கியமான இரு பொருள்களைப்பற்றி இங்கே மாமன்றத்திலே உள்ள உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எல்லாம் வழங்கியிருக்கிறார்கள். பசி வந்திடப் பத்தும் பறந்து போகும் என்பார்கள். ஆனால் இங்கே மீன் பற்றியும், உணவு பற்றியுமே நாம் பேசிக்கொண்டு இருக்கிறோம். ஆகவே, இந்தப் பசி நேரத்தில் மீன் பற்றிச் சொல்வதும், இங்கே பசியை சொல்வதும், உணவைப் பற்றிச் சொல்வதும், இங்கே பசியைத் தூண்டி விடும் வகையில் இருந்தாலும். இந்த விவாதம் அதிகமாகத் தூண்டிவிடும் உங்களில் சிலபேராவது மீன் உணவை சாப்பிடு முடிந்த பிறகு நிலையிலும், அதுவும் உங்கள் செலவிலேயே சாப்பிடுவீர்கள் என்ற காரணத்தாலும், அந்த இலாக்காக்களின் பொறுப்புகளை நான் ஏற்றுக்கொண்டு இருக்கிற காரணத்தாலே இந்த விவாதத்திலே பலரும் எடுத்து வைத்துள்ள, வழங்கி இருக்கிற கருத்துக்களுக்கு பதில் அளிக்க வேண்டிய கட்டாயத்தில் நான் இருக்கிறேன்.

மீனளக் கொள்கையைப் பொறுத்தவரையில், இங்கே பலரும்
அதனை எந்தெந்த வகையிலே மேம்பாடு காணச் செய்யலாம்
என்பதற்கான வகையில் கருத்துறைகளை வழங்கி இருக்கிறார்கள்.
அவர்கள் அத்தனை பேருக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்
கொள்கிறேன், தனித் தனியாக அவர்கள் கருத்துக்களையும் சில
பல குறைபாடுகளையும் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். அவற்
றைப் போக்குவதற்கான வழி வகைகளைக் கூறி குற்றங்களை
நீக்குவதற்கான வழிவகைகளைக் கூறியிருக்கிறார்கள். அவற்றை
தனித்தனியாக எடுத்து ஆராயவேண்டுமானால், நீண்ட நேரம்
ஆகும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை).

மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியிருக்கின்ற அத்தனையையும்
இங்கே வந்திருக்கிற அதிகாரிகள் குறித்துக்கொண்டு இருக்கிற
காரணத்தாலும், அந்தக் குறைபாடுகள், குற்றங்கள் ஆகிய
வற்றைப் போக்குவதற்கான முயற்சிகளில் அரசுத் துறை அதிகாரி
களும், அலுவலர்களும், தொடர்ந்து ஈடுபடுவார்கள், அவற்றை
போக்குவதற்கான வழிவகைகளைக் கண்டு நல்லதொரு
சூழ் நிலையை உருவாக்குவார்கள் என்பதை இங்கே நான்
கூறிக்கொள்கிறேன்.

மீன் துறையைப் பொறுத்தவரையிலும், நாம் இதிலே வளர
வேண்டிய அளவிற்கு வளரவில்லை என்பதும் நாம் வளர்க்க
வேண்டிய வழிமுறைகள் வேறு பல நாடுகளோடு ஒப்பிட்டுப்
பார்க்கிறபோது, மிக அதிகமாக இருக்கின்றன என்பதும்
இங்கே உறுப்பினர்கள் பலரும் எடுத்துச் சொன்ன கருத்துக்களில்
இருந்து நாம் உணரலாம். நாமும் அதை நன்கு உணர்கிறோம்.
ஆனால், அதை நன்கு வளர்க்கவேண்டும் என்று ஆர்வம் இருந்த
போதிலும், நிதி நிலை நெருக்கடி காரணமாக, மத்திய அரசானா
லும் சரி, மாநில அரசானாலும் சரி, எடுக்கவேண்டிய முயற்சிகள்
பலவற்றை, அதற்கான திட்டங்கள் பலவற்றை நாம் பெற்று
இருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கு அவ்வப்
போது நிதிநிலையில் தடையேற்படுகிற தன்மைகளாலே அவைகள்
அப்படியே நிற்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

விதைக்காது விளையும் கழனி என்பார்கள் கடலை. ஆகவே,
விதைக்க வேண்டிய அவசியம் இல்லாமல் தானாகவே வளர்கின்ற
கழனியாக இருந்தால், சாதாரணமாக விவசாயக் கழனியாக
இருந்தால், நாம் அந்த வயலைச் செம்மைப்படுத்தி, சீர்படுத்தி
உழுது பயிரிட்டு நீர் பாய்ச்சி, விதை விதைத்து, களை எடுத்து,
தளை அறுத்து, அவைகளில் இருந்து மணிகளை எடுத்துக்கொள்கிற
அளவிற்கு நிலைமைகள் இருக்கும். ஆனால், அந்தத் தன்மையில்
தான் நாம் கடலில் இருந்து மீன் அரிக்க வேண்டிய தன்மையில்
இப்போது இருக்கிற நவீன முறைகளில் இருக்கிறோம் என்பதை
தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நாம் நவீன முறைகளில்



குளங்கள் ஏரிகள் ஆகியவற்றில் மீன் வளர்க்கிறோம். அவற்றின்
மூலம் மீன் குஞ்சுகளை அதிகமாக ஆக்கத்தக்க அளவிற்கு முயற்சி
களை நாம் எடுத்துக்கொண்டுவருகிறோம். இருந்தாலும் கூட,
அந்த வகைகளிலே மீனை அரிக்கின்ற இத்தகைய முயற்சிகளில்
நவீன முறைகளைக் கையாண்டு அதிலே வெற்றி பெற்ற நாடு
கள் மிக சிறப்பாக அதனைச் செயல்படுத்தி வருகின்றன. அந்த
முறையில் நாமும் நவீன முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம்.

உள்நாட்டுக்குளங்
கடலில் உள்ள மீன்கள் மட்டுமல்லாமல், உணவு உற்பத்தியை
களிலும் மீன்கள் வளர்க்கச் செய்வதன்மூலம் சத்
அதன் மூலம் ஓரளவிற்குப் பெருக்கிக் காட்டுவதன் மூலம் மீன்
துணவு பெறுகின்ற வாய்ப்பும் நாம் பெறுகிறோம். ஆகவே, மீன்
வளர்ப்பை கழிமுகங்களிலும், உப்பளங்கள் ஏரிகளிலும் மேற்
உற்பத்தியைத் தொடங்குவதற்கு நாம் முயற்சிகளை
கொண்டு இருக்கிறோம். இப்படிப்பட்ட உணவுப் பொருள்களை
அதிகமான அளவிற்கு வளர்ப்பதன் மூலம் நாம் ஏற்றுமதிக்கும்
அதிக கவனம் செலுத்த முடிந்த அளவிற்கு நடவடிக்கைகளை
நாம் செய்து வருகிறோம்.

மீனளத்தின் பெருக்கத்தைப பொறுத்தவரையில், முதல் ஐந்தா
ண்டுத் திட்டத்தில் 31,34,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. இப்படி
ஒவ்வொரு ஐந்தாண்டுத் திட்டத்திற்கும் சிறிதளவு தான் நிதி
ஒதுக்கம் அதிகரிக்கப்பட்டு இருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் 71,30,000 ரூபாய் ஒதுக்கப்பட்டது. மூன்றாவது ஐந்
தாண்டுத் திட்டத்தில் 2 கோடியே 57 இலட்சம் ஒதுக்கப்பட்டது.
நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 9 கோடியே 83 இலட்சம்
ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில்
8 கோடியே 7 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டது. ஆறாவது ஐந்
தாண்டுத் திட்டதில் 13 கோடியே 11 லட்ச ரூபாய் என்ற அள
விற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஆறாவது ஐந்தாண்டுத்
திட்டத்தில் கூட ஓரளவிற்கு அதனை வெற்றிகரமாகச் செய்ய
முயற்சிகளை மேற்கொண்டு வருகிறோம். நம்முடைய சிறு
முயற்சிகள் ஓரளவிற்கு பலன்தரத்தக்க அளவிற்கு அமைந்து
இருக்கிறது என்கிற பாங்கினை நாம் பார்க்கிறோம்.

3 லட்சத்து 30 ஆயிரம் டன்கள்
கிட்டத்தட்ட 71–ம் ஆண்டு அளவிற்கு இருந்தால், இப்போது 4
மீன்கள் கிடைக்கத்தக்க என்கிற அளவிற்கு
இலட்சத்து 20 ஆயிரம் டன் மீன் கிடைக்கும் 6 வது ஐந்தாண்
நிலைமை முன்னேற்றம் அடைந்து இருக்கிறது. 5 லட்சத்து 20 ஆயிரம்
டுத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஒரு வாய்ப்பு ஏற்படும்
டன் அளவிற்கு மீன்கள் கிடைக்கக் கூடிய நாம் பணியாற்றி
என்கிற ஒரு கணக்கோடு அந்த முறையில்
வருகிறோம்.

அதுமட்டுமல்ல இந்த 6-வது ஐந்தாண்டுத்திட்டத்தில்-400 விசைப் படகுகளை வாங்க திட்டமிட்டிருக்கிறார்கள். அதன் மூலம் இந்தத் துறையை இன்னும் விரிவுபடுத்தலாம் என்ற கருத்து இருக்கிறது. ட்ராலர் என்று சொல்லக்கூடிய பெரிய விசைப்படகுகளை வெளிநாட்டிலிருந்து வாங்குவதன் மூலம் இந்தத் துறையை விரிவுபடுத்தி சிறப்பாகச் செயல்பட செய்யலாம்.

இபபோது நம்முடைய மீனவர்கள், கட்டுமரங்களில் சென்று கரையோரம் வலைகளை வீசியும் மற்ற வகையிலும் மீன் பிடிக் கிறார்கள். விசைப்படகு மூலம் சற்று தூரம் சென்று மீன்களை அரித்து வருகிறார்கள். இப்படித்தான் இப்போது மீன் பிடிவேலை நடக்கிறது. கட்டுமரம் வைத்திருப்பவர்கள் கடற்கரை ஓரத்தில் மீன்களை அரித்து வருகிறார்கள். அதற்கு அப்பால் சென்று விசைப்படகு வைத்திருப்பவர்கள் மீன்களை அரித்து வருகிறார் கள். ஆனால் ஆழ்கடலிலே சென்று மீன்களை அரித்து வருகின்ற வசதி வாய்ப்பு நம்மிடம் தற்போது இல்லை. அதற்கு வேண்டிய கப்பல் பெரிய விசைப்படகு நம்மிடம் அதிகமாக இல்லை. அதை இப்போதுதான் பெறுகின்ற சூழ்நிலையைப் பெற்றி ருக்கிறோம்.

ஆழ்கடலிலிருந்து மீன்களைப் பிடிப்பதற்காக மத்திய அரசு நம்முடைய அரசுக்கு இரண்டு ட்ராலர்களைக் கொடுத்திருக் கிறார்கள். அதை நிறுத்தி வைப்பதற்காக நம்மிடம் 'ஹார்பர்' சரியாக இல்லை. இரண்டு ட்ராலர்களும் ஆழ்கடலுக்குச் சென்று 4 அல்லது 5 நாட்கள் அங்கே மீன்களைப் பிடித்து வந்து விற்பனை செய்கின்ற பணியில் ஈடுபடுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளை நிறுத்திவைக்க இங்கே வசதி இல்லாத காரணத்தால் விசாகப் பட்டினத்தில் நிறுத்திவைக்க போதுமான வசதி இருப்பதால் அங்கே நிறுத்திவைக்கிறோம். மேற்கொண்டும் இப்படிப்பட்ட பல ட்ராலர்கள் வந்தால் பெருமளவில் மீன்களைப் பிடித்து நல்ல இலாபம் பெற முடியும். 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் 20 ட்ராலர்கள் நமக்கு கிடைக்கும் வாய்பபு இருக்கிறது. அவை கிடைத்தால் நிச்சயமாக நமக்கு அதிகமான லாபம் வரும் வாய்ப்பு இருக்கும்.

நாம் ஆழ்கடலில், வங்காள விரிகுடாவில் போய் மீன்பிடிக் கின்ற வசதி வாய்ப்புகள் சிறப்பாக இல்லாத காரணத்தால் ஜப்பான், தைவான் நாட்டுக்காரர்கள் எல்லாம் பெரிய ட்ராலர் களில் வந்து ஏராளமான மீன்களைப்பிடித்துச் செல்லும் நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது. கடலிலே நமக்கு 200 கிலோ மீட்டர் தூரம் தான் சொந்தம். 200 கிலோ மீட்டர், தூரத்திற்கு அப்பால் இருக்கிற கடல் பகுதி எல்லோருக்கும் அனைத்து உலகத்திற்கும் சொந்தம். அங்கே யார் வேண்டுமா னாலும் மீன் பிடிக்கலாம்; நாம் தடுக்க முடியாது; யாரும் தடுக்க முடியாது; அதனால்தான் ஜப்பான் நாட்டுக்காரர்களும் தைவான் நாட்டுக்காரர்களும் அங்கே வந்து மீன் பிடிக்கிறார்கள்.





சமீபத்தில் தூத்துக்குடிக்கு அருகில் 6 தைவான் நாட்டு விசைப் படகுகள் மீன்பிடித்து கொண்டிருந்தது, கண்டுபிடிக்கப்பட்டது. நம்முடைய மீனவர்கள் வலைகளை அறுத்து அவர்கள் பலசங்கடங்களை ஏற்படுத்தியதை எல்லாம் நீங்கள் அறிந்திருப்பீர் கள். உடனே இந்திய நாட்டு கடற்படையின் உதவி நாடப் பட்டது. கடற்படை உதவியுடன் அவர்களை பிடிக்க முயன்ற போது 5 படகுகள் தப்பிவிட்டன; ஒன்று மட்டும் சிக்கிக் கொண் டது; சிக்குண்ட படகில் இருந்தவர்களை கைதுசெய்து இப்போது விசாரணை நடந்துகொண்டிருக்கிறது. அந்த ஒரு படகில் மட் டும் 75 டன் மீன் இருந்தது கைப்பற்றப்பட்டது. அதை இங்கே ஏலம் விட்டு, பணத்தை வைத்திருக்கிறோம். இதையெல்லாம் எதற்காகச் சொல்கிறேன் என்றால் தம்மிடம் ஆழ்கடலில் சென்று மீன்பிடிக்கும் அளவுக்கு போதுமான எண்ணிக்கையில் ட்ராலர்கள் இருந்தால், ஆழ்கடலுக்குச் சென்று அதிகமான அளவுக்கு மீன்களை அரிதது வந்து, நல்ல இலாபம் பெறமுடியும் என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான். அதற்கான முயற்சிகளிலே இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. அதற்காக திட்டங்களைத் தீட்டிக்கொண்டி ருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரி வித்துக்கொள்கிறேன்.

இன்னொரு கருத்தும் இங்கே சொல்லப்பட்டது. சாதாரண குளம், ஏரிகளில் மீன் குத்தகை எடுப்பதை எல்லோருக்கும் தரக் கூடியதன்மை இப்போது இல்லை. மீனவர் கூட்டுறவுச் சங்கங் களுக்குத்தான் குத்தகை விட வேண்டுமென்று இந்தத் துறை எடுத்த முடிவின் காரணமாக, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் இருக்கிற சாதாரண மக்களுடைய வாழ்வு வளம்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு மீனவர்கூட்டுறவுச் சங்கங்களுக்குத்தான். குத்தகைவிட வேண்டுமென்ற கருத்தை வைத்திருக்கிறோம். சிலர் பொதுவாகவே எல்லோருக்கும் குத்தகை விடவேண்டும் ஏலம் விடவேண்டும், தனியார்களும் வந்து ஏலம் எடுக்க வழிவகை செய்யவேண்டும் என்று சொன்னார்கள். மீனவர் அல் லாதவர்களும் ஏலம் எடுக்கலாம் என்ற முறையை ஏற்படுத்தினால், மீனவர் அல்லாதவர்கள் குத்தகை எடுத்துவிட்டால், தனியார் ஏலம் எடுத்துவிட்டால் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர் களுடைய வேலை வாய்ப்பு போய்விடும். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கே குத்தகை விடுவதாக இருந்தால் மீனவர்களுக்கு அது பாதுகாப்பு தரும் என்று எண்ணுகிறோம். ஆகவே, தனியார் களுக்கு குத்தகை விடுவது சரியில்லை என்ற முடிவில் அரசு இருந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

சில இடங்களில் மீனவர் அல்லாதவர்களும் மீனவர் கூட்டுற வுச் சங்கங்களில் மீனவர்போல் போலி வேடம் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் அந்த குத்தகையில் வரு கின்ற லாபத்தை, அந்த நன்மையை உண்மையான மீனவர்கள் பெறமுடியாமல் செய்துவிடுகிறார்கள் என்ற கருத்தையும் இங்கே தெரிவித்தார்கள். அவற்றை எல்லாம் அதிகாரிகள் தீவிரமாக

நடவடிக்கை எடுத்து, கண்டறிந்து, மனவர் கூட்டுறவுச் சங்கத்தில்
மீனவர் மட்டுமே உறுப்பினராக இருக்கும் அளவுக்கு பார்த்துக்
கொள்ளவும், இப்படிப்பட்ட குத்தகை மனவர்களுக்கே போய்
சேர வேண்டும் அதன் மூலம் அவர்களுடைய வருவாய் பெருக
வேண்டும்; அவர்களுடைய வாழ்வு வளம்பெறவேண்டும் என்ற
நோக்கத்தோடு இந்த அரசு செயல்படும் என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன். சில இடங்களிலிருந்து அப்படிப்பட்ட குறை
பாடுகள் இருப்பதாக அரசுக்கு தகவல் வந்திருக்கிறது. அதை
இந்த அரசு தீவிரமாக கவனிக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தி
திலே சுட்டிக்காட்ட நான் விரும்புகிறேன்.

[பிற்பகல் 1-40]

மீன் பிடிப்பை அதிகப்படுத்துவதற்கான முயற்சியிலே நான்
முதலிலே சொல்லியது மாதிரி 25 அடி படகு 32 அடி படகு
ஆகியவற்றைப் பொறுத்தவரையில் 2,400 படகுகள் இதுவரை
யிலும் நாம் தந்திருக்கிறோம். ஆனால் நம்முடைய கடற்கரை
நீட்ட அளவு, நமக்கு அமைந்திருக்கின்ற கடற்கரைப்பாங்கு,
மற்றவைகள் ஆகியவற்றை வைத்துப் பார்க்கின்ற போது இவை
மிகவும் குறைவான ஒன்றுதான், ஆகவே கட்டு மரத்தை நம்பி
வாழ்கின்ற மீனவர்களுடைய எண்ணிக்கை நாளுக்குநாள்
வளர்ந்து அவர்களுடைய வழி வருகின்றவர்கள் ஓரளவுக்கு அறிவு
பெற்று, நல்ல தொழில் நுட்ப அறிவெல்லாம் பெற்று விசைப்
படகுகளையும் மற்றவைகளையும் செலுத்தக்கூடிய அளவுக்கு
அவர்களுடைய நிலைமையை உருவாக்கித் தருவோமேயானால்,
எதிர்காலத்தில் அவர்களுடைய வாழ்க்கைத்தரம் உயரும் என்று
வகையிலே திட்டத்தைத் தீட்டி அதற்கான முயற்சிகளிலே நாம்
ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம்.

அடுத்து மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தரவேண்டும் என்ற
தன்மையை எடுத்துச் சொன்னார்கள். மீனவர்களுக்கு வீடுகட்டு
கின்ற முயற்சி சில பல ஆண்டுகாலமாக நடைபெற்று வருகின்றது
என்றாலும் 1974ஆம் ஆண்டு வரையில் 1784 வீடுகள் அவர்களுக்
குக் கட்டித் தரப்பட்டன. அதற்குப்பிறகு அவர்களுக்காக வீடு
கட்டுகின்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு 4,000 வீடுகள் கட்டப்
பட்டன. இந்த ஆண்டு அதாவது 1980–81-லே 4,397 வீடுகள்
அவர்களுக்குக் கட்டித் தருவதற்கு நாம் 1 கோடி ரூபாயை இந்த
ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே ஒதுக்கித் தந்திருக்கிறோம்.
தாழ்த்தப்பட்டவர்களுக்கு எந்த அடிப்படையிலே நாம் வீடுகள்
கட்டித் தந்தோமோ. அதே அடிப்படையில்தான் மீனவர்
களுக்கும் வீடுகள் கட்டித் தருகிற முறையை மேற்கொண்டோம்.
தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியமாகத் தந்து
மேற்கொண்டு ஆகின்ற செலவை அவர்கள் கடனாகப் பெரு
கின்ற வாய்ப்புக்களின் மூலம் அதிகமான தாழ்த்தப்பட்டவர்
களுக்கு வீட்டு வசதி செய்து தருகின்ற ஒரு திட்டத்தை அடிப்
படையாக வைத்து இவர்களுக்கும் அதே திட்டத்தின்





அடிப்படையில் செய்யலாமா என்பதைப் பற்றியும் அரசு
யோசித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் குறிப்பிட
விரும்புகிறேன்.

அடுத்து இறந்துவிட்ட மீனவர்களுக்கு உதவி செய்கின்ற
முறையில் இன்சூரன்ஸ் கம்பெனி என்று சொல்லப்படுகின்ற
ஆயுள் காப்புறுதிக் கழகத்திலே எல்லோரும் பதிவு செய்து
கொள்கின்ற முறையில் மீனவர்களாக இருப்பவர்களும் பதிவு
செய்து கொள்ளலாம். ஆனால் மீனவர்களுக்கென்று தனியாக
பாதுகாப்பு தருகின்ற சூழ்நிலை ஏற்படுமானால் அதற்கு எந்த
அளவுக்கு அவர்களாலே பணத்தைக் கட்ட முடியும் என்பதை
எல்லாம் ஆராய்ந்து பார்த்து அதற்குத் தகுந்தபடி ஒரு காப்
புறுதிக் கழகம் வைத்து தனியாகத்தான் ஆராயவேண்டும்.
மீனவர்கள் இப்போது கடலிலே செல்கின்றபோது இறந்து
விடுவார்களேயானால் முன்பு ஒரு பாதுகாப்பும் இல்லாமல்
இருந்தது. அதற்குப்பிறகு அவர்களின் குடும்பத்திற்கு ஆயிரம்
ரூபாய் உதவித் தொகை தருவதாக திட்டம் ஏற்படுத்தப்பட்டது.

1977 ஆம் ஆண்டு சூலை திங்கள் 25 ஆம் தேதியன்று இந்தத்
தொகை 5,000 ரூபாய் ஆக உயர்த்தப்பட்டது. அதுமட்டு
மல்ல; 5 ஆயிரம் ரூபாய் இறந்தவரின் குடும்பத்தினருக்குத்
தருகிறோம் என்பது மட்டுமல்லாமல் அந்தக் குடும்பத்தைச்
சேர்ந்தவர்கள் இளைஞர்களாக இருந்து மேற்படிப்பு படிக்க
வேண்டிய அவசியம் உள்ளவர்களாகவும் இருந்து சிலபல
தொழில்களைப் பார்க்கவேண்டிய அவசியமும் ஏற்படுமே
யானால் அவர்களுக்கு மேற்கொண்டு 5 ஆயிரம் ரூபாய் தருகின்ற
அளவுக்கு நாம் ஒரு திட்டத்தைத் தீட்டி இருக்கிறோம்.
எடுத்த எடுப்பிலேயே 5 ஆயிரம் ரூபாயையும் கொடுத்துவிட்டால்
அதை அவர்கள் செலவழித்து விட்டால் அவர்களுக்குக் கஷ்டம்
ஏற்படுமே என்பதை எண்ணிப்பார்த்து முதலில் 2,000 ரூபாயும்
பின்னர் 100, 100 ரூபாயாக 30 திங்களுக்கு பரவலாகக்
கொடுக்கின்ற ஒரு திட்டத்தையும் வைத்திருக்கிறோம்.

அடுத்து குளிர் சாதனங்களை குத்தகைக்கு விடுவது பற்றி
மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. சுப்பிரமணியம் அவர்கள்
குறிப்பிட்டார்கள். அதை நாமே வைத்திருந்தால் சிலபல
நஷ்டங்களும், சில பல சூழ்நிலைகளும் ஏற்படுவதால் அதை
வாடகைக்கு விடுவதன் மூலம் அதற்கு முதலீடு செய்யப்பட்ட
தொகைக்கு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு லாபம் கிடைக்கின்ற
வகையில் அதாவது அது பயன்படவும் வேண்டும், அதனால்
லாபமும் வரவேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாக
வைத்துத்தான் அவ்வாறு விடப்பட்டிருக்கின்றது.

அடுத்து எண்ணூர் உறைய வைப்பு நிலையத்திற்குப் போதிய
மீன்கள் பதனப் படுத்துவதற்குக் கிடைக்காத காரணத்தால்
மீன் துறையின் கீழ் இருந்தபோதே அது குத்தகைக்கு விடப்
பட்டது. இந்த நிறுவனம் அமைக்கப்பட்டது 1974 ஆம்
ஆண்டு. பிறகு இந்த நிறுவனத்திற்கு அது வந்து சேர்ந்தது.
அப்போது இந்த நிலையம் காப்பர் எக்ஸ்போர்ட்ஸ், சென்னை
என்ற நிறுவனத்திற்கு 1,35,000 ரூபாய் ஒரு வருடத்திற்கு என்ற
வகையில் குத்தகைக்கு விடப்பட்டது. 1—2—1978 முதல்
3 ஆண்டுகளுக்கு இது குத்தகைக்கு விடப்பட்டிருக்கின்றது.
இதைத்தவிர பணிபுரியும் கழக அலுவலர்களுக்கு சம்பளமும்
இதர செலவுகளும் குத்தகைதாரர்களே குத்தகை ஒப்பந்தப்
படி தரவேண்டும் என்று நாம் விதிமுறைகளை வகுத்து
தந்திருக்கிறோம். கழகமே இதை இயக்கும் பட்சத்தில் நஷ்டம்
அடைய ஏதுவாகும் என்று மீன் துறையில் இருந்து எடுத்துக்
கொண்ட நாள் முதல் இந்நிலையத்தை குத்தகைக்கு விடுவதற்கு
ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

மண்டபம் உறைய வைப்பு நிலையத்தைப் பொறுத்த
வரையில் கழகமே அதை இயக்கி வருகிறது. இதிலுள்ள
1 1-2 டன் ப்ளேட் ஃப்ரீஸர் மண்டபம் மாத வாடகை 10ஆயிரம்
ரூபாய் என்ற அடிப்படையிலே முன் வாடகை 20,000 ரூபாய்
பெற்றுக்கொண்டு ஈஸ்ட்ஃபிஷரீஸ் நிறுவனத்திற்கு விடப்பட்
டுள்ளது. மற்றவற்றை கழகமே இயக்கி வருகின்றது.
அனைத்து வசதிகளும் ஒருங்கே இணைந்த முறையில் அங்கே
இருந்தால் நல்லது என்ற தன்மையின் அடிப்படையிலே தான்
படகுகள் கட்டும் நிலையங்கள் 4 வைத்துக்கொண்டிருக்கிறோம்
நம்முடைய மாநிலத்தில். இதைக் கார்ப்பரேஷன் தன் பொறுப்
பில் கொண்டிருக்கின்றது.

ஆனால், தொடர்ந்து இதிலே லாபம் வராத அளவிற்கு
நட்டமே வந்து கொண்டிருக்கிறது.. கிட்டத்தட்ட 45 லட்சம்
ரூபாய்க்கு மேல் இதுவரையிலும் நட்டம் வந்து கொண்டிருந்தது.
மேற்கொண்டு நடத்தினால் மேலும் அரசாங்கத்திற்கு நட்டம்
தான் ஏற்படும் அதை மூடி விடலாம் என்ற யோசனையை
சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அதிலே சில பிரச்னைகளை
யும் கவனிக்க வேண்டியிருப்பதானால் உடனடியாக எதுவும்
முடிவு எடுக்கப்படவில்லை. அதிலே வேலை செய்கிறவர்கள்
நிலை பற்றி இங்கே இருக்கிற மன்ற உறுப்பினர்களில் கூட
பலரும் அந்த ஐயப்பாட்டை எடுத்து தெரிவித்ததின் பேரில், அவர்
களுக்கு ஏதாவது ஒரு மாற்றுவேலை வாய்ப்பை கொடுத்துவிட்டு
அந்த படகு கட்டும் நிறுவனத்தை கலைக்கிற அளவிற்கு முடிவு
எடுக்க..........

<u>திரு. ஈா. உமாநாத் :</u> தலைவர் அவர்களே, படகு கட்டும்
அந்த 4 இடங்களைப் பொருத்தவரையில் மூடுவது சம்பந்த
மாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். காம்ப்ட்ரோலர்
அண்ட் ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா அவருடைய 1977-78



ரிப்போர்ட்டிலே வரக்கூடிய நட்டத்தைப்பற்றி குறிப்பிடும்போது
அண்டர் யுடிலைசேஷன் ஆப் கெப்பாசிட்டிதான இதற்கு
பிரதான காரணம் என்றும், அந்த அண்டர் யுடிலைசேஷன்
கெப்பாசிட்டிக்கு ரி-பைனான்ஸ் கார்ப்பரேஷன் கொடுக்க
வேண்டிய பணத்தை கொடுக்காமல் டிலே அண்டு கன்ஸ்டி
ரைன்ட்ஸ் என்ற முறையில் செய்ததினாலும், மற்றும்
இன்-எபிஷியன்ஸி இன் மேனேஜ்மெண்ட் என்றும் குறிப்பிட்டி
ருக்கிறார். அப்படி மேனேஜ்மெண்ட் தகுதி குறைவு என்று
சொல்லப்பட்ட நிலையை மாற்றி அதை ஓட்டுவதற்கு பதிலாக,
மூடிவிடுவது என்று சொல்வது சரியாகத் தெரியவில்லை.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> தலைவர்
அவர்களே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போன்று
அந்த அறிக்கை என்ன சொல்கிறது என்று நான் பார்க்கவில்லை.
அந்த அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிற குறைபாடுகளை நீக்கி
தேவையான நிறைபாடுகளோடு அதை இயக்க முடியும்
என்றால் இயக்கலாம். ஆனால், இந்த குறைபாடுகளை இன்-
எபிஷியன்ஸியை நீக்கமுடியாது என்ற நிலை இருந்தால் லாபமே
கொண்டு வர முடியாது என்ற நிலைஇருந்தால் மேற்கொண்டு
நட்டத்தை தான் எதிர் பார்க்க முடியும் என்கிற நிலை இருந்தால்
கலைக்க வேண்டியிருக்கும். ஆனால், இன்னும் முடிவு எடுக்கப்
படவில்லை என்று சொன்னேன். இந்தக் கட்டத்திலே மற்றவர்
களும் யோசனை சொன்னது போல் அங்கே வேலை செய்கிற
வர்களுக்கு அதை நம்பி அங்கே பணியாற்றிக்கொண்டிருக்கும்
தொழிலாளர்களுக்கு ஏதேனும் ஒரு மாற்று வேலையைத் தந்து
விட்டுதான் மூடவேண்டும் என்ற அவர் ஒரு யோசனை அரசுக்கு
இருக்கிறது.

அல்லது யாராவது குத்தகைக்கு எடுத்தவர்களுக்கு அதை
வாடகைக்கு விட்டு அவர்கள் திறம்பட நடத்துகிற சூழ்நிலை
வருமேயானால் நாம் வைத்திருக்கும் இடம் பொருள்கள் எல்லா
வற்றையும் வாடகைக்கு கொடுத்து குத்தகை அடிப்படையில்
நடத்துவதாக இருந்தாலும் அதையும் செய்யலாம். அல்லது
அதிலே இருக்கிற தொழிலாளர்கள் மற்றும் உள்ளவர்களும்
சேர்ந்து கூட்டுறவு முறையிலே நாங்களே நடத்த முடியும் அதை
எங்களுக்கு வாடகைக்கு தாருங்கள் என்று கேட்கிற சூழ்நிலை
இருந்தால் அதையும் ஆராயலாம். இன்னும் எந்த முடிவுக்
கும் வரவில்லை. மூடிவிடக்கூடிய அச்சம் இருக்கிறது. அந்த
அச்ச நிலையைப் பற்றி கருத்து பரிமாறுகிற நிலை இருக்கிறதே
தவிர இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை என்று மட்டும் நான்
இங்கே குறுக்கிட்டு கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மீனவர்களுக்கு பாதுகாப்புச் சட்டம் வேண்டும் என்று
கேட்டார்கள். அதைப்பற்றி இந்த அரசு மீனளத்
துறையின் ப்ரின்துறையின் பேரில் இந்திய அரசால்
அமைக்கப்பட்ட குழு ஒன்றின் மூலம் பல வகைப்

பட்ட மீன் பிடி கழகங்களுக்கு மீன் பிடிப்பதற்கான
எல்லையை வரையறுத்து அதற்கான மசோதா ஒன்றை மத்திய
அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தோம்.
மத்திய அரசு மாநில அரசு அனுப்பி வைத்த மசோதாவை ஆனால்
ஏற்றுக்கொள்ளாமல் அவர்களே ஒருமாதிரி (மாடல்)மசோதாவை
தயாரித்து அதை மாநிலஅரசுக்கு அனுப்பிவைத்து அந்த மசோதா
வின் மீது கருத்துக்களை வழங்கும்படி கூறியிருக்கிறார்கள்.
அந்த மசோதாவின் அடிப்படையில் இப்பொழுது ஒரு மசோதா
தயாரிக்கப்பட்டிருக்கிறது. அந்த மசோதா நிறைவேறி சட்டம்
ஆக்கப்படும் போது விசை படகுக்காரர்களுக்கும் நாட்டு படகுக்
காரர்களுக்கும் இடையில் எழும் சச்சரவுகளை சட்டப்படி தீர்ப்ப
தற்கு அந்தச் சட்டம் வகை செய்யும்

அது வரையில் இப்பொழுது ஆங்காங்கு சமரசம் செய்து
தான், ஒப்பந்தம் செய்துதான், பிரச்னைகள் தீர்க்கப்படுகின்றன.
ஆனால் சில இடங்களில் ஒப்பந்தத்தை மீறுகிற நிலை ஏற்படு
கிறது. அது மேலும் வன்முறையை தூண்டிவிடுவதும்,
அதனால் மாவட்ட ஆட்சித் தலைவரும் காவல் துறையினரும்
தலையிட்டு அதை நீக்க வேண்டிய கட்டங்களும் ஏற்படுகின்றன.
அந்த மசோதா வந்து சட்டமாக நிறைவேற்றப்பட்டால் ஓரளவு
விற்கு சூழ்நிலை சரியாகும். அந்தச் சட்டத்தின் அடிப்படை
யில் நடவடிக்கையும் எடுக்க வாய்ப்பு ஏற்படக்கூடும்.
மத்திய அரசே அனுப்பியிருக்கிறது. மாநில அரசு ஆராய்ந்து அதை
கொண்டிருக்கிறது. விரைவில் அது பற்றி முடிவுகள் எடுக்கப்
படும். தற்பொழுது ஆங்காங்கே சமரசம் காண்பதற்கு
மாவட்ட அளவிலே சமரசக் குழுக்கள் ஏற்படுத்தி அந்தப்
பிரச்னைகளை தீர்த்து வரும் நிலை இருக்கிறது என்பதைகூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி மீனளத் துறை மீது பல்வேறு கருத்துக்களை பல்
வேறு நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் எடுத்துச்
சொல்லியிருக்கிறார்கள். என்றாலும் அவைகளையெல்லாம்
ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்வதற்கு நேரம் இடம் தராது
என்ற காரணத்தினால் முக்கியமானவற்றை மட்டும் குறிப்
பிட்டேன். மற்றவைகளையெல்லாம் அதிகாரிகளுடைய கவ
னத்திற்கு எடுத்துக் கொள்ளப் பெற்ற எடுக்கப்படவேண்டிய
நடவடிக்கைகளை எடுக்கலாம். அப்படி எடுக்கத் தவறினால்
கேள்வி நேரத்தின் மூலம் கேட்பதற்கு உங்களுக்கும் வாய்ப்பு
இருக்கிறது.

[பிற்பகல் 1.50]

அப்பொழுது துணைக் கேள்விகள் எழுப்பி பதில்கள் பெற
வாய்ப்பிருக்கிறது. அடுக்கடுக்காக கேள்விகளை எடுத்து
வைப்பார்கள். நீங்கள் அத்தனை பேர்களும் மூன்றரை மணி
நேரம் பேசிவிட்டு அதற்கு அரை மணி நேரத்தில் பதில்
சொல்வது என்றால் அவ்வளவு கேள்விகளுக்கும் பதில் சொல்வது
என்பது எளிதான ஒன்றல்ல.





உணவு நிலைமையைப் பொறுத்த வரையில் நான் ஏற்கனவே
எடுத்து தெரிவித்திருக்கிறேன். இந்த அறிக்கை மூலமாகவும்
சிறப்பாகவும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் எடுத்துச் சொல்கின்ற
போது மறுபடியும் வாக்குறுதிகள் பற்றி அவர்கள் எடுத்துச்
சொன்னார்கள். அன்றே நான் அது பற்றி தெளிவுபட எடுத்துச்
சொல்லியிருக்கிறேன். எந்த உணர்வுகளின் அடிப்படையில்
வாக்குறுதிகள் தந்தோமோ அந்த வாக்குறுதிகளை நிறை
வேற்றுகிற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். படிப்படியாக
நிறைவேற்றி வருகிறோம் என்று பதில் சொல்லிவிட்டேன்.
நீங்கள் சொல்வதை நீங்கள் சொல்லிக்கொண்டிருங்கள். நாங்கள்
சொல்வதை நாங்கள் சொல்லிக்கொண்டிருக்கிறோம். நாம்
சொல்வதை நாடு கேட்கட்டும். அதுவே தீர்புளிக்கட்டும்.
மக்களிடம் நாங்கள் விரும்பியதை எடுத்துச் சொன்னோம்
எங்களது உணர்வுகளை மக்களிடம் எடுத்துச் சொன்னோம்.
எங்களால் இயன்றதைச் செய்து கொண்டு வருகிறோம். இதில்
எங்களுக்கு முழு நம்பிக்கை இருக்கிறது. நாங்கள் சொன்ன
வாக்குறுதிகளை நம்பி மக்கள் எங்களை அனுப்பினார்கள்
இன்னும் அனுப்புவார்கள் என்ற உறுதிப்பாடு எங்களுக்கு
இருப்பதன் காரணமாக எங்களைப் பார்த்து நீங்கள் கொஞ்சம்
அதிகமாகக் கவலைப்பட வேண்டாம் என்று தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத்தட்டும் ஒலி) அதைப்பற்றி நாங்கள்
கவலைப்பட்டுக்கொள்கிறோம்.

திரு. அ. ரகுமான கான்: நமது நிதி அமைச்சர் அவர்
கள் நான் கேட்டுக்கொள்வதெல்லாம் தேர்தல் காலத்தில்
நம்முடைய முதல்வர் அவர்கள் பிரசாரம் செய்கிற பேச்சுக்கள்
எல்லாம் இருக்கின்றன. அண்ணா மீது ஆணையாகச் சொல்
கிறேன். நிச்சயமாக நாங்கள் ஆட்சிக்கு வந்தால் இவைகளை
உடனடியாகச் செய்வோம். அது தான் வாக்குறுதி.

Breach of Assurance

வாக்குறுதியை மீறுகிறார்கள். படிப்படியாக என்று தேர்தல்
அறிக்கையில் சொல்லவில்லை. அதைத்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நீங்கள் உங்கள்
குற்றங்குறைகளைச் சொல்லிக் கொண்டிருங்கள் நாங்கள் பதில்
கள் தருவதைத் தருகிறோம். இரண்டையும் நாடுபார்க்
கட்டும். மக்கள் நம்பிக்கையை உங்கள் பக்கம் வைக்கிறார்களா
அல்லது எங்கள் பக்கம் வைக்கிறார்களா என்று பார்ப்போம்.
மக்கள் மன்றம் தீர்ப்பளிக்கட்டும். ஐந்தாண்டுகளுக்குப் பிறகு
நாங்கள்தான் வருவோம் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கி
றது. நாங்கள் எங்கள் கருத்துக்களைச் சொல்கிறோம்.
மக்கள் மன்றம் தீர்ப்பளிக்கட்டும். வாதி, பிரதிவாதி என்றால்
இருவரும் கருத்துக்களை எடுத்து வைப்பார்கள். நாங்கள்

எங்கள் கருத்துககளை எடுத்து வைக்கிறோம் நீங்கள் உங்கள்
ஐயப்பாடுகளை எடுத்துச் சொல்லுங்கள். நாடு தீர்ப்பளிக்
கட்டும்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : சிலசமயங்களில் ப்ராஸிகயூஷ
னிலிருந்து எஸ்கேப் ஆகியவர்களும் இருப்பார்கள். அதனால்
என்ன, எஸ்கேப்பாகிவிட்டீர்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எஸ்கேப்பாவது
என்றால், மக்களுக்குத் தெரியாமலா எஸ்கேப் ஆக் முடியும்?
அதுவும் மககள் பார்த்துத்தான் முடிவு கட்டவேண்டும்.

திரு. அ. ரகுமான்கான் : நீதிமன்றங்களில்கூட பார்க்கி
றோம். நீதிபதிகள் எல்லாம் சட்டம் படித்தவர்கள். ஆனால்
சட்டத்தின் அடிப்படையில் சொல்கிறபோது சில குற்றவாளிகள்,
கொள்ளைக்காரர்கள், திருடர்கள், நீதிபதி புத்திசாலியாக
இருந்தும், சட்டம் இருந்தும், சட்டங்கள் தெளிவாக இருந்தும்,
தப்பித்துக்கொள்கிறார்கள். அப்படி..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரிக்குவரி விவாதம்
வேண்டாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஆகவே, அவர
வர்களுடைய நியாயம் அவரவர்களுக்கு.
அவரவர்கள் கருத்துக்களை எடுத்துச் சொல்கிறார்கள். அவரவர்கள்
மக்கள் என்ன தீர்ப்பளிக்கிறார்கள் என்பதை பொறுத்திருக்கிறது.
தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி
வருகிறோம், படிப்படியாக. மக்கள் தீர்ப்பளித்துத்தான் இங்கே
வந்திருக்கிறோம். நாங்கள் குற்றங்குறைகள் செய்யவில்லை
ஒரு குற்றமும் நடைபெறவில்லை. குற்றம் இழைக்கவேண்டும்
என்ற மனப்பான்மையில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்
கள், புரட்சி தலைவர் அவர்கள் இல்லை. அப்படி நாங்கள்
யாரும் இல்லை. ஆகவே குற்றம் செய்யவேண்டுமென்று
யாரும் இங்கே உட்கார்ந்திருக்கவில்லை. எங்களை அறியாமல்
சில குறைபாடுகள் நிகழலாம். அந்தக் குறைபாடுகளைத்
தீர்த்துக்கொள்ள நாங்கள் தயாராகயிருக்கிறோம். சிலபல
குற்றங்கள் நிகழ்ந்துவிடலாம். அவற்றை திருத்திக்கொள்ள
ஆயத்தமாயிருக்கிறோம், நியாயமாக சுட்டிக்காட்டினால், நேர்
மையாகச் சுட்டிக்காட்டினால், எங்களுக்கு நியாயம் என்று
தோன்றுவதைச் செய்து வருகிறோம்.

உணவு நிலைமையைப் பொறுத்த வரையில் உணவு நிலைமை
திருப்திகரமாகயிருக்கிறது. உணவு நிலைமை திருப்திகரமாக
இருக்கிறதென்று சொல்வதற்குக் காரணம் இக்கட்டான கட்டம்
வரவோ, தட்டுப்பாடு காரணமாக கட்டுப்பாடு வரவோ அவசி
யம் ஏற்பட்டு மக்கள் பட்ட அவதிகளைபல ஆண்டுகள் பார்த்திருக்கி



றோம். இப்போது உணவு நிலைமையில் திருப்திகரமான நிலை
இருக்கிறது. அரிசி போதுமான அளவிற்கு இருப்பில் இருக்கிறது.
அதுமட்டுமல்லாமல் இந்த மாநிலத்தின் தேவையை நிறை
வேற்றுவதோடு கூட ஏற்றுமதி செய்கிற அளவிற்கு நம்மிடம்
அரிசி இருக்கிறது. ஏற்றுமதி செய்வது என்றால் நம்மால்
ஏற்றுமதி செய்துவிட முடியாது. மத்திய அரசின் அனுமதி
பெற்று எந்த வகையில் எந்த நாட்டுக்கு ஏற்றுமதி செய்கிறோம்
என்று அனுமதி பெற்றுத்தான் ஏற்றுமதி செய்யமுடியுமே தவிர
நாமாக, எந்த நாட்டிற்கும் ஏற்றுமதி செய்துவிட முடியாது.
பொது விநியோக முறையின்கீழ் அரிசி வழங்குவதற்கு கணிசமான
அளவு கையிருப்பு இருக்கிறது. பபர் ஸ்டாக் என்று சொல்லும்
போது கையிருப்பு இருக்கவேண்டும். விலை ஏறுவது அல்லது
அரிசி இல்லாமல் போகிற சூழ்நிலை ஏற்பட்டால் பாது
காப்பாக இருக்கவேண்டும் என்பதற்காக. கையிருப்பு
வைத்திருக்கிறோம். இந்தியா முழுவதும் ஒரு ஸோன் என்று வைத்
திருக்கிறார்கள். மாநிலத்திற்கு மாநிலம் உணவு நட
மாட்டம் தாராளமாக இருக்கிறது. இதில் கட்டுப்பாடு
இல்லை. ஏதோ ஒரு காரணத்தால் நம் மாநிலத்தில் சரியாக
இருந்து பிற மாநிலங்களில் பஞ்சம் வந்தால் இங்கிருக்கின்ற அரிசி
நகர்கின்ற சூழ்நிலை ஏற்படுமானால் நாம் இங்கே அதைத்
தாக்குப்பிடிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். அதற்
காகத்தான் கணிசமான அளவுக்கு பாதுகாத்து, நுகர்
பொருள் வாணிபக் கழகம் சேர்த்து வைத்திருக்கிறது
என்று நாங்கள் குறிப்பிட்டுக் காட்டினோம். கட்
டாய கொள்முதல் இப்போது இல்லை. வணிகர்கள்
மீதோ அல்லது அரிசி அறவை ஆலைகள் மீதோ இப்போது
லெவி இல்லை. நெல், அரிசி நடமாட்டத்திற்கு தடையில்லை
இதையெல்லாம் சேர்த்துத்தான், ஒட்டு மொத்தமாக பார்க்கின்ற
போது திருப்திகரமான சூழ்நிலை இருக்கிறது என்று சொல்
வதற்குக் காரணம், இந்த அடிப்படைகளை வைத்துத்தான்.

1976-77-லே 53 லட்சம் டன்னாக உற்பத்தி இருந்தது.
1979-80-லே 62,29 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. ஆகவே,
அந்த அளவுக்கு உற்பத்தி கணிசமான அளவிற்கு பெருகியிருக்
கிறது. அதிலே வெற்றி வெற்றிருக்கிறோம் என்று இந்த
புள்ளி விவரத்தை எடுத்துச் சொல்கிறோம். ஆக 53 லட்சம்
டன்னாக இருந்தது 62லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது என்று
சொன்னால், அதை நாமே உயர்த்தினோம் என்று
சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி
அவர்கள் சொன்னதுபோல், விவசாய மக்களின் பெரு
முயற்சியின் காரணமாகத் தான்,

அறிஞர் அண்ணா அவர்கள்கூட குறிப்பிட்டிருக்கிறார்கள். புளி விலை குறைந்ததற்குக் காரணம் என்ன என்று. அப்போது எதிர்க் கட்சித் தலைவராக இருந்த விநாயகம் அவர்கள் யாரால் புளி விலை குறைந்தது? என்று கேட்கின்றபோது, அண்ணா அவர்கள், புளிய மரத்தின் தயவால் என்று இந்த மன்றத்திலே எடுத்துச் சொன்னார்கள். ஆகவே, இந்த அரிசி விலை ஏறுவதற்கோ, பயிர் விலை ஏறுவதற்கோ நாங்கள்தான் என்று சொல்லவில்லை. விவசாயிகள் ஒத்துழைப்புத் தராவிட்டால், இந்த நிலைமை வராதுதான். நாம் தந்த உதவி, ஊக்கம், ஆக்கம், அதோடு விவசாயிகளுடைய முயற்சி ஆகியவைகள் எல்லாம் சேர்த்துத்தான் இந்த அளவுக்கு நிலைமை வந்திருக்கிறதே தவிர, என்னால் வந்தது என்றோ, எங்களால் வந்தது என்றோ நான் சொல்லவில்லை. வழிவழியாக வருகின்ற நிலைமை. ஆரம்ப காலத்திலே இருந்து அது தொடர்ந்து வருகிறது. மீண்டுபட வில்லை. குறைபாடுகள் ஏற்பட்டுவிடவில்லை என்பதற்காகத் தான் இதைச் சுட்டிக் காட்டினேன்.

பொதுவாக, அரிசி, கம்பு சோளம் கேப்பை அத்தனையும் சேர்த்துப்பார்த்தால் கூட 77 லட்சம் டன்னாக இருந்தது 82 லட்சம் டன்னாக உயர்ந்திருக்கிறது. இதைத்தான் இந்த ஆண்டு சொல்லியிருக்கிறோம். இதை 89 லட்சம் டன்னாகவா வது பெருக்குகின்ற அளவுக்கு இந்த ஆண்டு பல்வேறு துறை களிலே எடுத்துக் கொண்டிருக்கிற முயற்சிகள், நமக்கு அந்த சூழ்நிலையை உருவாக்கித் தரும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்பதைத்தான் இங்கே எடுத்து தெரிவித்திருக்கிறோம்.

இன்றியமையா உணவுப் பொருள்கள் நியாய விலைக் கடை களிலே கிடைக்கவேண்டும் என்ற அடிப்படையை நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம். ஆதவே, விலை வாசியை கட்டுப்படுத்து கின்ற அதிகாரம் ஓரளவுக்கு நமக்கு இருக்கிறது. ஆனால் விலைவாசி ஏறுகின்ற சூழ்நிலையைத் தான் நாங்கள் சொல்லி யிருக்கிறோம். தவிர இவை அத்தனைக்கும் மத்திய அரசுதான் காரணம் என்று சொல்லவில்லை. அவர்களுக்கும் சிலபல தன்மைகள் வருகின்றன என்பதைத்தான் எடுத்துக் காட்டி யிருக்கிறோம்.

இப்போது சர்க்கரையைப் பொறுத்தவரை ஜோனல் முறை வைத்திருக்கிறார்கள். இதற்கு ஒரு எல்லையை வைத்து விடுவார்களானால் நல்லது. இப்போது சர்க்கரை வெளி மாநிலங்களுக்குப் போய் கொண்டிருக்கிறது. நம்மைவிட அதிக மான விலையை விற்கக்கூடிய மாநிலங்களுக்குப் போய் கொண் டிருக்கிறது. இதை யெல்லாம் தடுத்து நிறுத்துகின்ற அதிகாரம் நமக்கு இல்லை. அப்படி தடுத்து நிறுத்தினால், இன்னும் சுலபமாக தருவதற்கு வாய்ப்பும், வசதியும் ஏற்பட்டு விடும். ஆக இந்த நிலையில் அந்த அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கு இருக்கிறது. நம்முடைய மாநில அரசுக்கு இல்லை. ஆகவே





தான், இந்த விலை வாசி உயர்வுக்குக் காரணம் சில மாநில அரசின் பங்கு ஓரளவுக்கு உண்டு. மத்திய அரசிற்கு பெரும்பங்கு உண்டு என்று குறிப்பிட்டு காட்டியிருக்கிறோம். மத்திய அரசு பின்பற்றுகின்ற நிதிக்கொள்கை, அவர்கள் செய்கின்ற நாணயப் புழக்கம், வங்கி தரும் உதவி இவைகளால் தான் விலை வாசி உயருகிறது. வங்கி தரும் உதவியைப் பெற்று, விளை பொருள்களை காலத்தில் வாங்கி சேமித்து வைக்கிறார்கள் ஒரே தடவையாக. அப்படி அவர்கள் சேமித்து வைப்பதற்கு வங்கி ஏராளமான பணத்தை தந்து விடுகிறார்கள். நெருக்கடி ஏற்படுகின்றபோது, அதிகமான பணத்தை சம்பாதித்து, வங்கிக்கு கட்டவேண்டிய பணத்தை கட்டி விடுகிறார்கள். இதை யெல்லாம் கண்ட்ரோல் செய்கின்ற அதாரிடி மாநில அரசுக்கு இல்லை, மத்திய அரசுக்கு இருக்கிறது. ஏற்றுமதி, இறக்கு மதி கொள்கை மாறிமாறி வருகின்றபோது, விலை ஏறுவதும் இறங்குவதுமான பல்வேறு சூழ்நிலை எற்படுகிறது. பல்வேறு மாநிலங்கள் இடையே இன்றியமையாப் பொருள்களின் நட மாட்டத்தின் காரணமாகவும் விலை உயர்வு ஏற்படுகின்றது. போக்குவரத்து வசதியின்மை காரணமாகவும் விலை உயர்வு ஏற்புடுகின்றது. இரயில்வே வேகன்கள் கிடைக்காததன் காரண மாகவும் அது தொடர்பாக உரிய காலத்திலே பொருள்கள் வந்து சேராவிட்டாலும் விலை உயர்வுக்குக் காரணமாகி விடுகிறது. இப்படிப்பட்ட காரணங்களைக் காட்டியிருக்கிறோமே தவிர மத்திய அரசாங்கம் தான் காரணம் அவர்களுக்குத்தான் அந்தப் பொறுப்பு இருக்கிறது, மாநில அரசுக்கு அந்தப் பொறுப்பு இல்லை என்று தட்டிக் கழிக்கவில்லை. முழுவதும் அவர் களுக்கே இருக்கிறது என்றும் சொல்லவில்லை.

இப்படிப்பட்ட குறைபாடுகளைப் போக்குவதற்கு விரும்பித் கேட்கின்ற நேரத்தில், மத்திய அரசு நமக்கு உதவி செய்கிறது. செய்யவில்லை என்று சொல்லவில்லை. நாம் எண்ணுகின்ற அளவுக்கு அவர்களால் செய்ய முடியவில்லை. அப்படிச் செய்தால், இன்னும் நம்மால் அதிகமாகச் செய்ய முடியும் காரணம், மக்களோடு நாம் நேரடித் தொடர்பு கொண்டிருக்கி றோம். மக்களுடைய வேதனையை புரிந்துகொண்டு, உடனுக் குடன் செய்கின்ற பொறுப்பு மாநில அரசுக்குத்தான் இருக்கிறது. ஆகவேதான், மாநில அரசின் எண்ணத்தை மத்திய அரசு புரிந்துகொண்டு உதவ முன்வந்தால் இத்தகைய குறைபாடு களை எல்லாம் போக்க முடியும் என்று எடுத்துச் சொல்லி யிருக்கிறோம்.

[பிற்பகல் 2.00]

மாநில அரசின் அதிகார வரம்புக்குட்பட்டு எல்லா நட வடிக்கைகளையும் கூடுமான வரையில் எடுத்து வருகிறது. விலை வாசிகள் ஏறுகின்றன என்றெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். குறிப்பாக எந்த ஆண்டு பட்டியலைப் பார்த்

தாலும் மே—அக்டோபருக்கு இடையில் விலைவாசிகள் ஏறத்
தான் செய்யும். அறுவடை கிடையாது. பருப்பு வகைகளும்
ஓரளவு ஏறியிருக்கின்றன. பருப்பு உற்பத்தி குறைந்துவிட்டது
என்றும் பருப்பு எங்கு உற்பத்தியாகிறதோ அங்கேயே விலை
ஏறிவிட்டது என்றும் சொல்லப்படுகிறது. தேங்காய் எண்ணெய்
கேரளத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது. உற்பத்தியாகும்
இடத்திலேயே தேங்காய் எண்ணெய் விலை ஏறியிருக்கிறது.
அதனால் இங்கும் விலை ஏறியிருக்கிறது. நல்லெண்ணெய்
பெரும்பகுதி ஆந்திரத்திலிருந்து வரவேண்டியிருக்கிறது.
விற்பனை செய்கிற அந்த இடத்திலேயே ஏறிவிட்டதன்
காரணமாக இங்கும் அதிக விலைக்கு விற்கிற நிலை ஏற்பட்டி
ருக்கிறது.

சர்க்கரையைப் பொறுத்த வரை லெவி சர்க்கரை எவ்வளவு
கொடுக்கிறார்களோ அதை வைத்துக்கொண்டுதான் பணிகளை
ஆற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். நம்முடைய
மாநிலத்திற்கு சாதாரணமாக 19,792 டன் சர்க்கரையை அவர்
கள் தருகிறார்கள். அதை வைத்துக் கொண்டுதான் லெவி
சர்க்கரையைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. மீதி சர்க்கரையை
திறந்த வெளி சந்தையில் விற்க வழி வகை செய்திருக்கிறார்கள்.
19,792 டன் சர்க்கரையைப் பிரித்துக்கொடுக்கும்போது சாதாரண
மாக 1,04,88,239 குடும்ப அட்டைகளுக்கு இந்தப் பங்கீடு
முறையில் லெவி சர்க்கரையை அரசு தந்து கொண்டு வருகிறது.
சென்னையில் மட்டும் 8,02,951 குடும்ப அட்டைகள் இருக்
கின்றன. மாவட்டத் தலைநகர்களில் எட்டு லட்சத்து சில்லரை
குடும்ப அட்டைகள் இருக்கின்றன. நகராட்சிப் பகுதிகளில்
கிட்டத்தட்ட 9,61,000 குடும்ப அட்டைகள் இருக்கின்றன.
நகரியங்கள், வேறு நகரப் பஞ்சாயத்துக்களில் 16 லட்சம்
அட்டைகள் இருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துக்களில்
59 லட்சம் அட்டைகள் இருக்கின்றன. எல்லாம் சேர்த்துக்
கணக்கிடும்போது இப்போது வைத்திருக்கும் முறை சென்னை
நகருக்கும் புற நகர்ப் பகுதிகளுக்கும் ஒரு அட்டைக்கு ஐந்து
கிலோ சர்க்கரை கொடுப்பது என்று வைத்திருக்கிறோம். மாவட்ட
தலைநகரங்களில் இருக்கும் நகராட்சிப் பகுதிகளுக்கு ஐந்து
கிலோ சர்க்கரை; இதர நகராட்சிகள், நகரியங்கள், புறநகரப்
பகுதிகளுக்கு 3 கிலோ சர்க்கரை என்று வைத்திருக்கிறோம்.
நகர பஞ்சாயத்துக்களுக்கும் கிராமப் பஞ்சாயத்துக்களுக்கும்
ஒரு கிலோ சர்க்கரை என்று வைத்திருக்கிறோம்.

மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் குறிப்பிட்டார்கள்.
கிராமங்களுக்கு கொடுக்கப்படும் ஒரு கிலோ சர்க்கரையை
கூடுதலாகக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள்.
அவர்களுக்குக் கூடுதலாக்கி மூன்று கிலோ கொடுப்பது
என்றால் 15,000 டன் லெவி சர்க்கரை கிடைத்தால்தான்
கொடுக்க முடியும். இரண்டு கிலோ கொடுக்க வேண்டுமென்றால்
7,500 டன் சர்க்கரை கூடுதலாகக் கிடைக்க



வேண்டும். இப்போது கூடுதலாக சர்க்கரை தரும் நிலைமை
மத்திய சர்க்காருக்கு இல்லை. வருமானத்தை அடிப்படை
யாக வைத்து சர்க்கரையைக் கொடுக்கக்கூடாது என்று மாண்பு
மிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் குறிப்பிட்டார்கள்.
சிலர் வருமானத்தின் அடிப்படையில் கொடுத்தால் கிராமப்
பகுதிகளுக்கு அதிகமாகக் கொடுக்கலாம் என்ற யோசனையைத்
தெரிவித்தார்கள். தற்போது குடும்ப அட்டைக்கு ஐந்து
கிலோ என்று எல்லாத் தரத்தினருக்கும் கொடுக்கப்படுகிறது.
வருமானத்தின் அடிப்படையில் இரண்டு கிலோ, மூன்று
நான்கு கிலோ, ஐந்து கிலோ என்று கொடுத்தால் வருகிற
மிச்சத்தை எடுத்து பஞ்சாயத்துக்களுக்குக் கொடுக்கலாம். இப்
போது சாதாரண குடிசைவாழ் மக்கள் ஐந்து கிலோ சர்க்க
ரையை வாங்கி மற்றவர்களுக்கு விற்கிற அளவுக்கு குறைபாடு,
குற்றச்சாட்டு வருகிறது. வருமான அடிப்படையில் கொடுக்கும்
நிலை வருமானால் டிஸ்க்கிரிமினேஷன் பண்ணிய நிலைமை
வரும். சர்க்கரை விலை ஏறுவது பற்றி மாண்புமிகு உறுப்பினர்
கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். லெவிக்கு வாங்கி
யது போக வெளிச் சந்தையில் பல விலைகளில் வாங்கியிருக்
கிறோம். ஆக 290, 310, 350, 400, 425, 450 என்ற விலை
களிலே வாங்கி அதற்கு மேல் 75 ரூபாய் எக்சைஸ் வரி செலுத்தி
நாம் சராசரிஒரு கிலோவுக்கு 5 ரூபாய் என்ற அளவுக்குக்கொடுத்து
வருகிறோம். அந்த நிலை இப்போதும்கூட கட்டுபடியாகாத
நிலைதான் இருக்கிறதே தவிர 1,325 ரூபாய்க்கு வாங்கியது
லெவி சர்க்கரை திட்டம் வந்தபின் 12 ஆயிரம் டன்கள் வெளிச்
சந்தையிலே வாங்கியது. இன்று 7.30 என்று வெளிச் சந்தை
யில் விற்கிறபோது நாம் 5 ரூபாய்க்கு விற்கிற அளவுக்கு அதை
நாம் வாங்கி வைத்ததன் காரணமாகத்தான் விற்க முடிகிறது....

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு உணவு அமைச்சர்
அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி, பாராட்டுகிறேன். 290
ரூபாய்க்குள்ளே, 300 ரூபாய்க்குள்ளே குறைவாக—மத்திய
அரசாங்கம் பாராட்டக் கூடிய ஒரு நிலைமை, தமிழ்நாடு சிவில்
சப்ளைஸ் கார்ப்பரேஷன் விலையேறும் என்று கருதி இருக்கக்
கூடிய ஓப்பன் மார்க்கட் சர்க்கரையையெல்லாம் வாங்கி வைத்து
விட்டார்களே—மற்ற மாநில சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்
களும் ஏன் செய்யவில்லை என்று அவர்கள் கேட்கக்கூடிய அள
வுக்கு திறமையாக செயலாற்றியது, அதிலே பிரச்சினை இல்லை.
12 ஆயிரத்திலே எத்தனை ஆயிரம் டன் 300 ரூபாய்க்கு வாங்கப்
பட்டது? சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலே ஒரு குறிப்பிட்டகாலத்
திலே 600 ரூபாய்க்கு மேல் விற்றிருக்கிறார்கள் அதற்கு அப்புறம்
600 ரூபாய்க்கு விற்றிருக்கிறார்கள் ஒரு குறிப்பிட்ட சில நாட்
களுக்கு 550 ஆக விற்றிருக்கிறார்கள் அதற்குப் பிறகு மறுபடி
யும் 500-க்கும் குறைத்து விற்றிருக்கிறார்கள் பல்க் கன்ஸ்யூ
மர்ஸ்க்கு 300 ரூபாய்க்கு வாங்கி எத்தனை ஆயிரம் டன்

600-க்கு 550-க்கு, 500-க்கு விற்றார்கள் என்பதையும் அதிலே எத்தனை கோடி ரூபாய் லாபம் வந்தது என்பதையும் சொல்ல முடியுமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்பு மிகு தலைவர் அவர்களே, முதலிலே நான் சொல்லியபடி, தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் வாங்கா விட்டால் அவர்கள் அவர்களுடைய விலைக்கு 6 ரூபாய், 7 ரூபாய், 7 1/2 ரூபாய்க்கு, எந்த விலைக்கு மற்றவர்கள் விற்றார்களோ அந்த விலைக்குத் தான் விற்றிருப்பார்கள். ஆனால் அந்த விலைக்கு விற்க வேண்டியதை குறைத்து நாம் வாங்கியது திறமை என்றுதான் சொல்ல வேண்டும். நாம் வாங்கியதே தப்பு என்று சொல்வார்களானால் அது தவறு............

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : நான் சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனைப் பாராட்டுகிறேன். ஆனால் வாங்கின விலையோடு 10 ரூபாய் டிரான்ஸ்போர்ட் காஸ்டோடு; 10 ரூபாய் லாபம் வைத்து பொது ஜனங்களுக்குக் கொடுத்து இருந்தால் தப்பு இல்லை. ஆனால் அதிலே பிளாக் மார்க்கட் பண்ணியதுதான் தப்பு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மற்றவர்கள் 600, 650, 700க்கு விற்க வேண்டியதை 290, 310, 450, 475-க்கு வாங்கி வைத்து 500 ரூபாய்க்கு விற்கிற ஒரு சூழ்நிலைக்கு சராசரி கிலோ 5 ரூபாய்க்கு விற்கிற நிலை இருக்கிறது, இப்போதும் கூட. இப்போது 7 1/2 ரூபாய்க்கு விற்கிற சமயத்தில் தேவையான அளவுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகம் கொடுக்கிற அளவுக்கு இருக்கிறது. இதைத்தான் மத்திய அரசு சொல்கிற போது மற்றைய மாநிலங்களும் இதேமாதிரி ஓப்பன் மார்க்கட்டிலே வாங்கி வைத்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக வாங்கி வைத்து கொடுக்கிற சூழ்நிலையினைப் பெற்றால் நல்லது என்ற யோசனையை எடுத்துச் சொல்லிற்று. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுமாதிரி இப்போது கொடுக்காவிட்டாலும் வாங்கியது எவ்வளவு, விற்றது எவ்வளவு என்பதையும் லாபமா நட்டமா, எவ்வளவு என்பதையும் தெளிவாக இந்த அவையிலே வைக்கிறேன். இப்போது வைக்கமுடியாததற்கு வருந்துகிறேன். முன்கூட்டியே தெரிவித்திருப்பார்களானால் நான் இந்த நாளில் திரட்டியிருப்பேன். ஆகவே, இதிலே ஒளிவுமறைவு இல்லை. பிளாக் மார்க்கட் இல்லை, வேண்டுமானால் கொள்ளை லாபம் என்று சொல்லுங்கள், ஆனால் அது கொள்ளை லாபம் இல்லை என்று நான் சொல்வேன்..................

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : பிளாக் மார்க்கட் என்பதைத் திருத்திக் கொண்டு அரசாங்கம் கொள்ளை லாபத்திற்கு விற்றது என்று வேண்டுமானால் சொல்கிறேன்.



மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : கொள்ளை லாபம் இல்லை என்பதற்குப் பின்னாலே கணக்கைச் சொல்கிறேன் நீங்கள் சொல்கிற வெர்டிங்கிற்கு நான் சொல்கிறேன். தெரியாமலே வாங்கி, தெரியாமலே விற்பது பிளாக் மார்க்கட். ஆனால் இது ஒயிட் மார்க்கட், சர்க்கரையே ஒயிட் தான், ஆகவே அதிலே தகராறு இல்லை. அதிக லாபத்திற்கு விற்கிறார்கள் என்கிற போது நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மற்றையக் கணக்குகளைத் தெளிவாகச் சொல்கிறபோது சொல்கிறேன், எவ்வளவு எவ்வளவு வாங்கினோம், எப்போது எப்போது வாங்கினோம், எப்போது எப்போது எவ்வளவு எவ்வளவு விற்றோம், லாபமா நட்டமா, எவ்வளவு என்பதை எல்லாம் நான் தெளிவுபடுத்திச் சொல்கிறேன்..................

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஒரு கமிட்டியைப் போடுங்கள். நாங்கள் பார்க்கிறோம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : எங்களைப் நம்ப மாட்டீர்களா?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : ஆளுங்கட்சியிலே 5 பேர்களையும் எதிர்க்கட்சியிலிருந்து 4 பேர்களையும் அதிலே போடுங்கள், அதிலே நானும் இருக்கிறேன், நாங்கள் அதைப் பார்க்கிறோம்.

திரு. பாபு கோவிந்தராஜன் : முதலிலே ஹோட்டல்களுக்கு சர்க்கரை கொடுத்தார்கள். ஒரு மாதமாக சர்க்கரையே கொடுப்பதில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனிலிருந்து, 500, 600க்குக் கொடுக்கப்பட்டது. ஆனால் ஒரு மாதமாகக் கொடுக்கப்படுவதில்லை. நிறுத்திவிட்டார்கள்.

[பிற்பகல் 2-10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் தன்னுடைய கஷ்டத்தைச் சொல்கிறார்கள். மற்றவர்கள் அவரவர்கள் கஷ்டத்தைச் சொல்கிறார்கள். நான் ''நுகர்பொருள் வாணிபக் கழகத்தினுடைய கஷ்டத்தைச் சொல்லிக் கொண்டிருக்கிறேன்; அரசாங்கத்தினுடைய கஷ்டத்தை நாம் சொல்கிறோம். இன்னும் கொஞ்சம் அதிக சர்க்கரை மத்திய அரசு வழங்குமேயானால் இன்னும் கொஞ்சம்கூடத் தாராளமாக உங்களுக்கும் சேர்த்துத் தரலாம் என்பதுதான் எங்களுடைய எண்ணம். ஆகவே, இதைப் பொறுத்தவரையிலும் இப்பொழுது இருக்கின்ற சூழ்நிலைகளிலே நம்முடைய மாநிலத்திலே எந்த அளவிற்குக் கட்டுப்படுத்திக் கொண்டு வருகிறோம் என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

நேற்று வந்த பத்திரிகையிலேயிருந்து குறிப்பிட ஆசைப்படுகிறேன். நேற்று வந்த ''எகனாமிக் டைம்ஸ்'' என்ற பத்திரிகையிலே பம்பாய் நிலைமை எப்படியிருக்கிறது என்பதற்கு அதனுடைய தலையங்கத்திலே எழுதியிருக்கிறார்கள், சர்க்கரையைப்பற்றி.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1980 ஜுலை 24

Economic Times : Bombay

"The open market price of sugar has crossed Rs. 8/- per kilogram
and what is worse is the price expectation in the market is that it will
cross Rs. 9/- more than the absolute price of sugar which has crossed
all the records. It is the price expectation that is all concerned.

என்று சொல்லியிருக்கிறார்கள். "டைம்ஸ் ஆஃப் இந்தியா"
பத்திரிகையிலே சொல்லியிருக்கிறது.

The price have crossed Rs. 8/- per kilo and considering the rates of
increase witnessed during the last few months it would be a miracle, if
they do not scale at Rs. 10/- by November.

என்ற அளவிற்கு அங்கேயெல்லாம் சூழ்நிலை இருக்கும்பொழுது,
இந்த அளவிற்கு நாம் குறைத்து வைத்திருக்கிறோமே என்கின்ற
அளவிற்கு—அந்த அளவிற்குப் பாராட்டும்படியாகக் கேட்டுக்
கொள்கிறேனே தவிர, முழுப் பாராட்டையும் நண்பர் கிருஷ்ண
மூர்த்தி அவர்கள் தராவிட்டாலும், ஒரு பர்சன்டாவது பாராட்டு
தருவார்களேயானால் மிக்க மகிழ்ச்சியாக இருக்கும் என்பதைத்
தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையில்தான் நுகர் பொ
ருள் வாணிபக் கழகத்தினர் தங்களுடைய திறமையை ஓரள
வுக்கு நல்லபடியாகவும், கூடுமானவரையில், முடிந்த அளவிற்குச்
செய்திருக்கிறார்கள் என்பதையும் இந்த வாய்ப்பிலே நான்
சுட்டிக்காட்டிக் கொள்ள விரும்புகிறேன்.

நெல் கொள்முதல் விலையைப் பற்றியெல்லாம் சொன்னார்
கள். அதை இந்த மன்றத்திலே உள்ள ஏறக்குறைய எல்லா
உறுப்பினர்களும் அதைச் சொல்கிறார்கள். மாநிலத்திலே இருக்
கின்ற விவசாயப் பெருமக்களின் நிலைமையும் அதுதான். ஆகவே
நாம் அடிக்கடி எடுத்துச் சொல்லி வருகின்ற ஒன்றுதான் அது.
ஏற்கனவே அவர்கள் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு 85
ரூபாய் ஆக இருந்தபொழுதுகூட, நாம் 20 ரூபாய் கூடுதலாகச்
சேர்த்து சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 105 ரூபாய்
என்றும், சன்ன ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு 109 ரூபாய்
என்றும் ஆக்கினோம். பிறகு மத்திய அரசு 95க்குக் கொண்டு
வந்து நிறுத்திற்று. இப்பொழுது அங்கே இருக்கிற நிறுவனத்
தினர் மத்திய அரசுக்கு சிபாரிசு செய்திருக்கிறார்கள், 100
ரூபாய் ஆக்கலாம் என்றுதான் சொல்லியிருக்கிறார்கள். நாமும்
பலபேர்களும் எல்லாக்கட்சியினரும் எடுத்துச் சொல்லியிருக்
கிறார்கள் 100 ரூபாய்க்கு உயர்த்துவது கட்டுப்படியாகாது இன்னும்
அதிகமாக உயர்த்த வேண்டும் என்று. பொதுவாக இருக்கின்ற
சூழ்நிலைகள், மற்றவைகளையெல்லாம் பார்க்கின்றபொழுது
இந்த அரசின் சார்பாக நாம் வற்புறுத்தி வருவது, இப்பொழுது
இருக்கும் சூழ்நிலைகளிலே மத்திய அரசை அதிகமாகக் கட்டுப்
படுத்தாமல் இருக்கவும், விலைவாசி அதிகமாக் உயர்த்தப்படா
மல் இருப்பதற்குண்டான வகையில் ஒரு குவிண்டால் 130-க்
காவது குறைந்த அளவிற்கு உயர்த்த வேண்டுமென்று. ஏனென்



1980 ஜுலை 24] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

றால் கோதுமையைப் பொறுத்த வரையிலும் குவிண்டாலுக்கு
117-க்கு விலையை நிர்ணயித்திருக்கிறார்கள். கோதுமை உற்
பத்திக்கு எவ்வளவு செலவாகிறதோ, அதே அளவிற்குச் செலவு
தான் நெல்லை உற்பத்தி செய்வதற்கும் ஆகிறது என்பதையும்
நிபுணர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். அப்படியிருந்தும் நெல்
லுக்கு ஒரு விலை, கோதுமைக்கு ஒரு விலை என்று நீண்ட பெருங்
காலமாக இருந்து, அது ஒரு போராட்டமாகவே, பாராளு
மன்ற உறுப்பினர்களெல்லாம் எடுத்துச் சொல்லிக்கொண்டு வரு
கின்ற நிலையில் வருகிறது.

இப்பொழுதும் வற்புறுத்துகிறோம், கோதுமைக்கு என்ன
விலையை நிர்ணயிக்கிறீர்களோ அதே விலையையாவது அரிசிக்
கும் நிர்ணயிக்க வேண்டுமென்று. அரிசிதான் உணவிலேயே கிட்ட
தட்ட, உணவினுடைய பண்டங்களிலே, நம்முடைய நாட்டில்
சாதாரண மக்களுடைய கணக்கைப் பார்த்தால் 100 ரூபாய்
செலவழிக்கிறான் என்றால் கிட்டத்தட்ட 65 ரூபாய் உணவுக்கே
போகிறது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அந்த 65 ரூபாயைத்
தனியாக எடுத்து, அதை 100 ஆக்கிக் கணக்குப் போட்டுப்
பார்ப்போமேயானால், அரிசிக்கு மட்டுமே செலவழிப்பது 70
பர்சன்ட். 30 பர்சன்ட்தான் காய்கறி, மற்றபடி உப்பு, புளி
மிளகாய் என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கிட்டிருக்கிறார
கள்.

ஆக, அரிசி விலையைப் பொறுத்துத்தான் மற்றவகைப் பொ
ருள்களின் விலையெல்லாம் கட்டுப்படுகின்ற அளவிற்கு, ஏறுகிற
அளவிற்கு, இறங்குகின்ற அளவிற்கு, வாழ்க்கைச் செல்வை உயர்த்
துகின்ற அளவிற்கு அமைந்து இருக்கிறது. ஆகவேதான் இது
மிகவும் அதிகமாக உயர்ந்து விடாமலும் பார்த்துக் கொள்ள
வேண்டியிருக்கிறது. அதே நேரத்தில் கொள்முதல் விலையும்
கட்டுப்படியாகும் விதத்தில் இருக்க வேண்டுமென்று பார்த்துக்
கொள்ள வேண்டியிருக்கிறது. ஆகவேதான், மத்திய அரசுக்கு
இதற்கு நூற்று முப்பதாவது தர வேண்டுமென்று நாம் சொல்லி
யிருக்கிறோம்.

இப்பொழுது தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின்
அடக்க விலை, சன்ன ரகத்தினுடைய விலை குவிண்டாலுக்கு 228
ரூபாய் ஆகிறது. சாதாரண நெல்லினுடைய விலை குவிண்டா
லுக்கு 220 ரூபாய் ஆகிறது. ஆனால் இதை நாம் எவ்வளவுக்கு
விற்க வேண்டுமென்று கேட்டால், ஒரு கிலோ 2 ரூபாய் 28
காசுக்கு நாம் விற்க வேண்டும், சன்ன ரகத்தை. 2 ரூபாய் 20
காசுக்கு சாதாரண ரகத்தை விற்றிருக்க வேண்டும், ஒரு கிலோ.
ஆனால் நாம் விற்பனை எவ்வளவுக்குச் செய்கிறோம் என்றால்
அந்த அளவிற்கு இன்னமும் விலையை நாம் ஏற்றாமல் சப்ஸிடி
ரேட்டிலே இப்பொழுது நுகர் பொருள் வாணிபக் கழகம்
கொடுத்துக்கொண்டு வருகிறது. சன்ன ரகம் ஒரு கிலோ 1 ரூபாய்

85 காசுக்கு நாம் தருகிறோம். சாதாரண ரகம் ஒரு கிலோ
1 ரூபாய் 60 காசுக்குத் தருகிறோம். இதனால் எவ்வளவு இழப்பு
ஏற்படுகிறது என்று சொன்னால், சன்ன ரகத்திற்கு ஒரு குவிண்
டாலுக்கு 43 ரூபாய் நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு நஷ்
டம் வருகிறது. சாதாரண ரகத்திற்கு 60 ரூபாய் வருகிறது.
ஒரு இலட்சம் டன் அரிசியை நாம் இந்தப் பொது விநியோகம்
செய்தோமேயானால் இதுவரையில் நுகர்பொருள் வாணிபக்
கழகத்திற்கு ஏற்பட்டிருப்பது ஒரு லட்சம் டன் விநியோகத்
திற்கு 5 கோடியே 32 இலட்சம் ரூபாய் ஆகியிருக்கிறது.

திரு. எல். இளையபெருமாள் : பாய்ன்ட் ஆஃப் இன்ஃபர்
மேஷன். ரூ 1.80 பைசாவுக்கு நகரத்தில் இப்பொழுது
கிடைக்கவில்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நுகர் பொருள்
வாணிபக் கழகத்தின் சார்பாக ஹாஸ்டலுக்கு, மற்ற இடங்களுக்கு
தருகிறோமே, அதை ரூ. 2.28 காசுக்கு வாங்கி, நாம் குறைந்த
விலைக்குக் கொடுக்கிறோம். அதன்மூலமாக, நுகர்பொருள்
வாணிபக் கழகத்திற்கு போன வருஷம் 2 இலட்சம் டன்கள்
விற்றிருக்கிறோம்—அந்த 2 இலட்சத்திற்கு ரூ. 10 கோடியே
64 இலட்சம் நஷ்டம் வருகிறது. (குறுக்கீடு) கணக்கு சரியாக
இல்லையென்றால் நான் திருத்திக் கொள்கிறேன். 1 இலட்சமா
என்பதைப் பார்க்கவேண்டும். 2 இலட்சம் டன் என்றால் ரூ 10
கோடியே 64 இலட்சம் என்று நான் கருதுகிறேன். 1 இலட்சம்
டன் விநியோகத்திற்கு ரூ 5 கோடியே 32 இலட்சம் நஷ்டம் வரு
கிறது. அதைக் குறைக்கலாம் என்றால், இப்பொழுது எல்லாம்
விலை ஏறியிருக்கிற நிலையில், சாதாரண விடுதிகள், மற்றவைகள்
கஷ்டப்படும் என்று இந்த நஷ்டத்தைக் கழகம் ஏற்றுக்
கொண்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. என்பதை நான்
குறிப்பிட விரும்புகிறேன். அடக்க விலைக்கே நாம் விற்றாலுங்
கூட இந்த நஷ்டம் வராது. வாங்கின விலைக்கே, அடக்க
விலைக்கே நாம் விற்றிருக்கலாம். ஆனால், குறைத்துத்தான்
கொடுக்கிறோம். அதன் மூலமாக, 1 இலட்சம் டன்னுக்கு ரூ 5
கோடியே 32 இலட்சம் நஷ்டம் வரும் என்று கணக்கு போட்டிருக்
கிறார்கள். 2 இலட்சம் டன் ஆயிற்றா என்று கணக்கைப் பார்த்
தால்தான் தெரியும். ஆனால் 1 இலட்சம் டன்னுக்கு இந்த
அளவுக்கு ஆகிறது என்பதைமட்டும் நான் குறிப்பிட விரும்பு
கிறேன்.

சென்னை நகரில் குடும்பக் கார்டுகளைப் பற்றி குறிப்பிட்டு
சொன்னார்கள். சுமார் 8 இலட்சம் அட்டைகளில் ஏறக்குறைய
மூன்றில் இரண்டு பகுதி அட்டைகளின் மீது அச்சிடப்பட்ட தாள்
கள் ஒட்டப்பட்டுவிட்டன, புதுப்பிக்க வேண்டுமென்பதற்காக.
பொது மக்களின் நன்மையைக் கருதி 31—7—1980-க்கு மேலாக
31—8—1980 வரை தாள்கள் ஒட்ட வேண்டிய காலம் நீட்டித்
தரப்பட்டிருக்கிறது, அவர்கள் புதுப்பித்துக் கொள்ளலாம்





என்று. 31—8—1980 வரை அட்டைகளின் மீது தாள்களை
ஒட்டுவதற்கு அட்டைதாரர்கள் உணவு வழங்கு துறை உதவி
ஆணையாளர்கள் அலுவலகங்களுக்குச் செல்ல வேண்டியதில்லை.
தங்கள் அட்டைகள் எந்த கடைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன
வோ, அந்தக் கடைகளிலேயே தாளை ஒட்டிக் கொள்ளலாம்
என்றும் அதற்காக அரசாங்க அலுவலகங்களுக்குப் போக வேண்
டாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. புதிய அட்டைகளுக்
கான உணவு வழங்குதுறை உதவி ஆணையாளர்களுக்கு மனுச்
செய்து கொள்ளலாம் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு சனவரி திங்கள் முதல் ஜூன் திங்கள் இறுதி
வரை புது அட்டைகளுக்கும் நகல் அட்டைகளுக்கும் 32,034
மனுக்கள் வந்தன. 1—1—1980-ல் நிலுவையில் இருந்த மனுக்
கள் 1,147. ஆக, மொத்தம் 33,131 விண்ணப்பங்கள் பரிசீலனை
செய்யப்பட்டு அவற்றில் 31,744 விண்ணப்பங்கள் பைசல் செய்
யப்பட்டுவிட்டன. 30—6—1980ஆம் நாளன்று நிலுவையி
லிருந்தவை 1,437. 1—1—1980 முதல் 30—6—1980 வரை
24,805 புதிய குடும்ப அட்டைகளும், தொலைந்து போன அட்
டைகளுக்காக 6,939 நகல் அட்டைகளும் வழங்கப்பட்டு
உள்ளன.

ஜூலை திங்களில் 18-ம் நாள் வரை வரப்பெற்ற விண்ணப்
பங்கள் 7,921. 30—6—1980-ம் நாளன்று நிலுவையில் இருந்த
விண்ணப்பங்களையும் சேர்த்து மொத்த விண்ணப்பங்கள் 9,358.
அவைகளில் 5,160 விண்ணப்பங்கள் பைசல் செய்யப்பட்டு
நிலுவையில் உள்ள விண்ணப்பங்கள் 4198. 1—7—1980 முதல்
18—7—1980 வரை 4241 புதிய அட்டைகளும் 919 நகல் அட்
டைகளும் ஆக மொத்தம் 5160 அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.
புதிய குடும்ப அட்டைகள் வழங்குவதில் காலதாமதத்தைத்
தவிர்க்க அவ்வப்போது ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இப்பொழுது லெவி சர்க்கரை, வேறு பல பொருட்களை
நாம் தருவதன் காரணமாக புதிதாக அட்டை வேண்டுமென்கிற
அளவு கொஞ்சம் அதிகமாக வருகிறார்கள் பல பேர். சிலபேர்
அட்டைகளை விற்றுவிட்டு தங்களுக்குப் புது அட்டை வேண்டு
மென்றும் கேட்கிறார்கள் ஆகவே, விசாரணை செய்யவேண்
டிய கட்டாயத்தினால் கொஞ்சம் தாமதம் ஆகிறது. கூடுமான
வரையில் இந்த ஒரு மாதத்திற்குள்ளாக இந்தப் பிரச்னை
இல்லாத அளவிற்குச் செய்வதற்கு தீவிர முயற்சிகள் எடுக்கப்
பட்டு வருகின்றன என்பதையும் குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. பாபு ஜனார்த்தனம் : எல்லோருக்கும் புதிய அட்டை
கள் கொடுத்துவிட்டால் இந்தப் பிரச்னைகள் எல்லாம்
இருக்காது. ஆகவே, இந்த அரசு கவனிக்குமா?

திரு. அ. ரகுமான்கான : தலைவரவர்களே, ரேஷன் கார்டு மக்களுடைய பிரச்னை, இதிலே பாலிடிக்ஸ் கிடையாது: விளக்கம் கேட்கிறேன்...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த மன்றத்திலே பேசப்படுகிற எல்லா பிரச்னைகளும் மக்களுடைய பிரச்னைதான், உங்கள் தனிப்பட்ட பிரச்னை அல்ல. இப்பொழுது நேரம் 2-30-ஐ நெருங்கிக் கொண்டிருக்கிறது, தயவுசெய்து உட்காருங்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கானுக்கு ஏராளமான வாய்ப்பு இருக்கும் பின்னாலே. எல்லோரும் பசி என்கிறார்கள். என்னைப் பற்றி கவலை இல்லை. நான் பழக்கப்பட்டவன். (திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : உணவு அமைச்சர் உணவு கொடுத்திருக்க வேண்டும்) நான் உணவு கொடுத்து உங்களை இழுத்து விட்டேன் என்று சொல்வீர்கள். அதனால்தான் இல்லை.

சென்னை நகரைப் பொறுத்தவரையிலே நியாய விலை கடைகளைப் பற்றி விவரமாக எடுத்துச் சொல்ல இப்பொழுது நேரம் இல்லை. 17,000 நியாய விலைக் கடைகளில் கிராமப் புறங்களில் மட்டும் 15,000 கடைகள் வைத்திருக்கிறோம். நியாய விலைக் கடைகள் கூடுமான அளவு, பரவலாக எங்கெங்கு என்னென்ன, தேவைப்படுகின்றனவோ, அதை அதைக் கொடுக்கின்ற முறையில் நியாய விலைக் கடைகளில் நியாய விலையில் தரவேண்டுமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். அதிலே, அரிசி, சர்க்கரை ரவா, மைதா, கோதுமை, குழந்தைகளுக்கான பால் உணவுபொருள், மாட்டுத் தீவனமான தவிடு, கோதுமை உமி, சோப்புகள், சலவை சோப்புகள், எண்ணெய் வகைகள், பருப்பு வகைகள், மண்ணெண்ணெய், சிமெண்ட், விறகு, மிளகாய், தனியா, புளி, உப்பு, பாமாலின் எண்ணெய், காய்கறிகள் மாணவர்களுக்கான குறிப்பேடுகள், மின்சார பல்புகள், மெழுகு வர்த்தி, அஞ்சல் தலைகள், தீப்பெட்டி, தேயிலைப் பொட்டலம் பச்சை அரிசி குருணை, நிரோத் போன்றவைகள் கூடத் தரப் படுகின்றன.

[பிற்பகல் 2-20]

ஆகவே எங்கெங்கு எது தேவைப்படுகிறதோ அவைகள் தரப் படுகின்றன. எனவே கிராமப் புறங்களில் இருக்கின்ற நியாய விலைக் கடைகளின் கணக்கைப் பார்க்கும்போது அவைகள் நஷ்டத்திலேதான் இயங்குகின்றனவே தவிர லாபத்தில் இயங்க வில்லை. நான் அதுபற்றிய முழு விவரத்தை தரவேண்டுமானால், நேரம் இடம் தராது.





உணவு விடுதிகளைப் பொறுத்த வரையில் இங்கே எடுத்துச் சொன்னார்கள். உணவுப் பண்டங்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்று கேட்டார்கள். அரசுக்கும் அதை ஓரளவுக்குக் குறைக்க வேண்டும் என்ற உணர்வுதான் இருக்கிறது. அதை ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். நான் முதலிலே எல்லாம் சொல்லிய மாதிரி மாவட்ட ஆட்சித் தலைவர்களை ஆங்காங்கே அறிக்கை கொடுக்குமாறு கேட்டிருக்கிறோம். ஆங்காங்கே ஓட்டல்கள் நடத்துகின்றவர்களுடைய எண்ணங்களை எல்லாம் கேட்டு, எந்த அளவுக்கு அவர்கள் குறைக்கத் தயாராக இருக்கிறார்கள் என்பதைக் கேட்கும்படி சொல்லியிருக்கிறோம். நாம் அவர்களுக்கு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் உதவ புரிந்து கொண்டு இருக்கிறோம். அவர்கள் வெளி மார்க்கட்டில் அதிக விலை கொடுத்து வாங்காமல் நாமே அவர்களுக்கு உதவி புரிகிறோம். அரசு எந்த அளவுக்கு உதவி செய்கிறதோ அந்த அளவுக்கு விலையைக் குறைக்கவேண்டும் என்று ஆங்காங்கே உள்ள நிலைமையைப் பொறுத்தவரையில் கேட்கும்படியாகக் கேட்டிருக்கிறோம்.

ஆகவே, எல்லா ஓட்டல்களிலும் ஒரே விலையைக் கூட நிர்ணயம் செய்யச் சொல்லவில்லை. கூரை வேய்ந்த ஓட்டல்களிலும்; தாஜ்கோரமண்டல் ஓட்டலிலும் இட்டிலி ஒரே விலை, இட்டிலி ஒரே விலைதர வேண்டும் என்று சொல்லவில்லை. ஆகவே ஓட்டல்களை வேறுபடுத்துங்கள், தரம் பிரியுங்கள், சர்வீஸ் சார்ஜ் வேண்டுமானாலும் போட்டுக் கொள்ளுங்கள் இட்டிலி பிளஸ் சர்வீஸ் சார்ஜ் போட்டுக் கொள்ளுங்கள் அருகே இருக்கிற ஏர் கண்டிஷன், மற்றும் கார்ப்பட் போன்றவற்றிற்கும் சார்ஜ் போடுங்கள். இதுவெல்லாம் ஜனங்களுக்குத் தெரியாது. இட்டிலி 3 ரூபாய், காப்பி 3 ரூபாய் என்றால் அவர்களுக்கு ஒன்றும் புரியாது. அவர்களுக்கு வேண்டியது இட்டிலி தான். அதைத் தாருங்கள் என்றுதான கேட்பார்கள். அவர்கள் ஏர்கண்டிஷன் போன்ற வசதிகளை எல்லாம் கவனிப்பது கிடையாது. இட்டிலி விலையைக் இட்டிலியாகவே ஆக்குங்கள், மற்றவைகளைப் பற்றி என்ன செய்யலாம் என்று ஆராயுங்கள். அதற்கு உதவ வேண்டுமானாலும் செய்கிறோம்.

திரு. பாபு கோவிந்தராஜன் : அப்போது சட்டினிக்கும் சாம்பாருக்கும் தனியாக சார்ஜ் செய்து சொள்ளலாமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, சட்டினிக்குத் தனி சார்ஜ் போடலாமா, சாம்பாருக்கு தனியாக கட்டணம் வசூலிக்கலாமா என்பதைப் பற்றிப் பேசும் போது அதையும் பேசுங்கள். அப்படிப்பேசி முடிவுக்கு வந்து ஒருமித்த கருத்துக்கு வந்து, அது நியாயமாக இருக்குமானால் அதை ஏற்கத்தயார். நாம் எதைச் செய்தாலும் ஏழை எளிய மக்களுக்குக் கஷ்டம் வரக்கூடாது. அநியாயமாக வாங்கினார்களா

எனற நிலை வரக்கூடாது. அதை ஆராய்ந்து கொண்டிருக்
கிறது இந்தத் துறை. அப்படி ஆராய்ந்ததற்குப் பிறகு, ஒரு
ஒருமித்த முடிவுக்கு வந்ததற்குப் பிறகும், அதை ஒரு யோசனை
யாக எடுத்துச் சொல்கின்றபோது வரலாம். மண்புமிகு உறுப்
பினர் சித்தன் அவர்கள் குறிப்பிட்டார்கள் என்று கருதுகிறேன்.
நெருக்கடி காலத்திலே, அவசரச் சட்டம் இருந்தது. அந்தச்
சட்டத்தை வைத்துக்கொண்டு மிரட்டி செய்ய முடிந்தது. இப்
போது அந்த சட்டம் இல்லை. மிரட்டவும் முடியாது. அப்படி
மிரட்டினால் உயர்நீதி மன்றத்திற்குப் போய்விடுவார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தலைவர் அவர்களே, இப்
போது அவசர நிலை இல்லாவிட்டாலும் கூட, நமக்கு இருக்
கிற சட்டத்தை வைத்து நடவடிக்கை எடுக்கலாம் என்று
சொன்னேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: நான அதை
யோசிக்கச் சொல்லி இருக்கிறேன். இப்போது இருக்கிற
சட்டத்தை வைத்துக் கொண்டு மத்திய அரசு இதற்கு ஏதாவது
சட்டம் செய்து தரவேண்டும் என்றால், அந்த யோசனை
யையும் ஆராய்ந்து முடிவெடுத்து, அந்தச் சட்டத்தை வாங்கி
வைத்துக்கொண்டு, அவர்களுக்கும் தொல்லை இல்லாமல் பொது
மக்களுக்கும் கேடு இல்லாமல், முறையை வகுக்கவேண்டும்
என்பதற்காக இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது.
நாம் ஒரு கணக்கைப் போடுகிறோம். அவர்கள் கட்டுப்படி ஆக
வில்லை என்று சொல்லுகிறார்கள், எனவே இவைகளை எல்லாம்
உட்கார்ந்து பேசி ஒரு முடிவுக்கு வந்து நியாயம் இருந்தால் அதை
ஓட்டல் முதலாளிகள் ஏற்றுக்கொள்கிற அளவுக்கு வருமேயானால்
எதிர்காலத்திலே சுலபமாக இருக்கும். உதாரணத்திற்கு
ஒன்று சொல்ல வேண்டுமேயானால், அவினாசிலிங்கம் ஹோம்
சைன்ஸ் கல்லூரியில் ஒரு ரூபாய்க்கு சாப்பாடு போடுகிறார்கள்.
அதை லாபம் இல்லாமல் போடுகிறார்களா என்பதைப் பார்க்க
வேண்டும். ஒரு ரூபாய் என்றால் ஒரு ரூபாய் அல்ல, 1.25 கூட
இருக்கலாம். ஆனால் குறைந்த விலைக்கு வயிறு நிரம்ப சாப்
பாடு போடுகிறார்கள். ஏழைகளுக்குக் குறைந்த விலையில் நிறைய
சாப்பாடு போடவேண்டும். பணம் அதிகமாக இருப்பவர்களுக்கு
வேண்டுமானால் 6 ரூபாய், 8 ரூபாய்க்குப் போடுங்கள். ஏற்
கனவே இருந்தது இல்லை என்ற குறைபாடு இருக்கிறது. வெள்
ளைக்காரன் காலத்திலே $1\frac{1}{2}$ அணாவுக்கு அரைச் சாப்பாடும் $2\frac{1}{2}$
அணாவுக்கு முழுச்சாப்பாடும் போட்டார்கள். எனவே மலி
வான விலைச்சாப்பாடு வருவது நல்லது. அதைச் செய்ய முடி
யும் என்று இருப்பதால் யோசிக்கச் சொல்லி இருக்கிறேன்.
கட்டாயப்படுத்தவில்லை. ஆகவே, விரைவிலே இது பற்றி
நாங்கள் முடிவெடுப்போம் என்பதையும் நான் கூறிக்கொள்ள
விரும்புகிறேன்.



இங்கே பாமா ஆயில் பற்றிக் குறிப்பிட்டார்கள். அதை
மட்டும் குறிப்பிட்டுச் சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
சாப்பிட்டுவிட்டு வந்து விட்டாரா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : உங்களை
எல்லாம் விட்டு விட்டு நான் சாப்பிட்டு விட்டு வந்து விடுவேனா

பாமாயில் கைப்பற்றினோம் என்பது உண்மை. அவர்கள்
மீது வழக்குத் தொடுத்தோம். கீழ்க்கோர்ட் அந்த ஏலம் விடுங்
கள் என்று உத்தரவிட்டார்கள். அவர்கள் ஹைக்கோர்ட்
போனார்கள். ஹைக்கோர்ட் போன உடனே அவர்கள் ஸ்டே
கொடுத்து விட்டார்கள். ஸ்டே கொடுத்ததற்குப் பிறகு அவை
களை நாம் வைத்து இருந்தோம். இப்போது ஹைக்
கோர்ட்டிலே, மறுபடியும் 22-ம் தேதி தீர்ப்பளித்து இருக்கிறார்
கள். ஒன்று நாம் அந்த ஆயிலை விற்று அந்தப் பணத்தை
வைப்பதற்கு வழி செய்யுங்கள் என்று நாம் கேட்டோம். ஹைக்
கோர்ட் என்ன தீர்ப்பளித்தது என்று சொன்னால் அந்த சரக்கு
களை அவர்களிடத்தில் கொடுத்து விடுங்கள், அவர்கள் விற்க
வேண்டும், விற்ற பணத்தை வங்கியில் போடவேண்டும். வங்கியில்
இருக்கும் பணத்தை அந்த வழக்கு முடிந்து வருகிற வரையில்
எடுக்கக்கூடாது, அதற்கு அந்த வங்கி காரண்டி தரவேண்டும்.
திருப்பித்தரக்கூடாது என்ற அளவிற்கு ஹைக்கோர்ட் முந்தா
நாள் தீர்ப்பளித்து இருக்கிறது. ஆகவே, ஹைக்கோர்ட் தீர்ப்
புப்படி நாம் நடக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, வழக்குப்
போடும் தன்மை இருக்கிறது. அது வேறு, ஸ்டே வாங்குவது
வேறு. அது விற்பதா, வைத்துக்கொள்வதா என்பதும் இப்
போது முடிவாகிவிட்டது. அவர்கள் மீது மூல வழக்கு நீதி மன்
றத்தில் இருக்கிறது.

வழக்கில் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றிக் கேட்டார்கள்.
சொல்லக்கூடாது என்பது அல்ல. யாரையும் மறைக்கவேண்டும்
என்பது அல்ல. யாரையும் காப்பாற்றவேண்டிய அவசியம் இல்லை.
இப்படிப்பட்டவர்களை காப்பாற்றவேண்டிய அவசியம் அர
சாங்கத்திற்குக் கிடையாது. அந்தத் துறைக்கும் கிடையாது.
கைது செய்யப்பட்டவர்கள். . . . . . . . . ஷௌகதர் அலி, என்பவர்—
ப்ரொப்ரைட்டர்—ஜஹாங்கீர் பாட்சா, என்பவர் ப்ரொப்ரைட்
டர்—சமீனா என்பவர் மேனேஜர், மாரூட் என்பவர் கிடங்கியூா
ளர், நைனா முகமது என்பவர் ப்ரொப்ரைட்டர். இந்தப்பெயர்
களையும் எழுதி சேர்த்துத்தான் பத்திரிகைகளுக்குச் சொன்
னோம். பத்திரிகைகள் பெயர்களை விட்டு விட்டு என்பவர்
கிரைஸ் என்று மட்டும் போட்டு விட்டார்கள்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெயர்களை வெளியிடுவதில் தயக்கம் இல்லை என்று சொல்லி அதை வெளியிட்டார்கள். நன்றி. பாராட்டுகிறேன். இப்படி அவர்கள் ஒரு முறை அல்ல, இரண்டு முறை அல்ல, மூன்று முறை செய்து இருக்கிறார்கள். அதுவும் சென்னைக்குப் பக்கத்திலேயே செய்து கொண்டு இருக்கிறார்கள். நாம் வழக்குப் போடுகிறோம், கோர்ட்டுக்குப் போகிறோம். எண்ணெயை விற்றுவிடச் சொன்னார்கள் என்பதற்குப்பதிலாக, இந்த நிலைமைகளுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கிற வகையில் இருக்கின்ற சட்டத்தை வைத்துக்கொண்டு நாம் கடுமையாக இருக்கவேண்டும், மறுபடியும் இப்படி நடக்கக் கூடாது, நமது மாநிலத்தில் வேறு எங்கும் நடக்கக்கூடாது என்பதுதான் நம்முடைய அக்கறையாக இருக்கவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரெய்டு இரண்டு இடங்களில் நடந்து இருக்கிறது. ராயபுரத்திலும், திருவொற்றியூரிலும் நடந்து இருக்கிறது. அந்த நிறுவனத்தின் பெயர் ஹைதர் என்டர்பிரைசஸ். அது ராயபுரத்தில் உள்ளதா, திருவொற்றியூரில் உள்ளதா ? அந்த இரண்டு இடத்திலும் ரெய்டு நடந்து இருப்பதால், இரண்டு இடத்திலும் யார் யார் கைது செய்யப்பட்டார்கள், யார் யார் மீது வழக்குப் போடப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு இடத்திலும் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். ராயபுரம், திருவொற்றியூர் இரண்டு இடத்திலும் நடந்து இருக்கிறது, ஆனால் அந்தக் கம்பெனி பெயர் ஹைதர் என்டர்பிரைசஸ். அதிலே இருக்கிறவர்களின் பெயர்களைத் தான் குறிப்பிட்டேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் சொல்கிறபோது குறிப்பிட்டதுபோல், 16—7—1980 அன்று மறுபடியும் பதுக்கல் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. அது திருவொற்றியூர் காலடிப்பேட்டை, 201-ஏ-3, எண்ணூர் ஹைரோடு என்கிற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. கிட்டத்தட்ட ஒரு லட்சத்து 62 ஆயிரத்து 206.5 கிலோ கிராம் ஃபாம் ஆயில் கிடைத்து இருக்கிறது. 16 லட்சத்து 22 ஆயிரம் விலை பெறும் என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அவர்கள் மீதும் மூல வழக்குப் போட்டு இருக்கிறோம். இதை எல்லாம் கருத்தில் கொண்டு தான் எப்படி வழக்குப் போடுவது, எப்படிச் செய்வது என்பதை சட்டத் துறையும், அந்தச் சம்பந்தப்பட்ட இலாகாவும் ஆராய்ந்துகொண்டு இருக்கிறது. விரைவில் திரு. சித்தன் அவர்கள் மகிழ்ச்சி பெறத் தக்க அளவிற்கு தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை நான் இந்த மன்றத்தில் உறுதியோடு கூறிக்கொள்கிறேன்.



ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்னுரங்கம் அவர்கள் சொல்கிறபோது குறிப்பிட்டார்கள். மானியக் கோரிக்கையில் கொடுத்து இருக்கிற புள்ளி விவரங்கள் சரியாக இல்லை என்று குறிப்பிட்டார்கள். கோரிக்கை எண் 21—மீனளத்துறை என்கிற தலைப்பில் 'சார்ஜ்ட்' காட்டியது என்பது 10,000. அதிலே 'ஓட்டட்' அனுமதிக்கப்பட்டது என்பது 316 லட்சத்து 60 ஆயிரம். அந்த இரண்டையும் கூட்டினால் 316 லட்சத்து 70 ஆயிரம் வரும். இந்த 10,000 தொகு நிதியில், கன்சாலிடேட் பண்டில் சேரும். அது எதற்காகச் சாட்டப்படுகிறது என்று சொன்னால், நேரடியாக எதற்காகச் சாட்டப்படுகிறது என்றால், நீதிமன்றத்தீர்ப்பு முதலியன செலவிற்காக இந்த கன்சாலிடேட் பண்ட் என்று ஏற்படுத்தினோம். அதனால், தான் இந்த இப்படி குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே, புள்ளி விவரத்தில் எந்த விதமான தவறும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பிற்பகல் 2.30]

மற்றொன்றையும் சொன்னார்கள். பட்ஜெட் மெமரான்டத்தில் 3,16,70,000 ரூபாய் என்று கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில் 4,14,47,000 என்று கொடுத்திருக்கிறார்கள்; இது முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறது என்று சொன்னார்கள். மானியக் கோரிக்கை 21—மீனளம் என்பதற்கு 3,16,70,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மானியக் கோரிக்கை 55—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பில் 65,19,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது இன்று வரவில்லை, 29-ந் தேதி கொண்டுவர இருக்கிறேன். மானியக் கோரிக்கை 59—கடன்களும் முன் பணங்களும் என்ற தலைப்பில் 32,56,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதுவும் 29-ந் தேதி வரவிருக்கிறது. மானியக் கோரிக்கை 33—வீட்டுவசதி என்ற தலைப்பில் 2,000 ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது; அதுவும் அன்று தான் வரும். இவை எல்லாம் சேர்த்து ஆக மொத்தம் 4,14,47,000 ரூபாய் வருகிறது. இதைத்தான் இந்த பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில் சொல்லியிருக்கிறோம். இதிலே எதையும் மறைக்கவும் இல்லை; மறைக்கப்பட வேண்டிய நிலையும் இல்லை; கொடுக்கப்பட்டிருப்பது சரியான கணக்குத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வீடுகளைப்பற்றிச் சொன்னார்கள். மொத்தம் 308 மீனவர் குப்பம் இருக்கிறது. இந்த மானிய விளக்கக் குறிப்பில் 240 குப்பம் என்று கொடுத்திருப்பது விசைப்படகுக்காரர்களும், நாட்டுப் படகுக்காரர்களும் மீன் பிடிக்கச் செல்லுகின்ற நிலையை வைத்து, அதாவது 'லோடிங் சென்டர்' அடிப்படையை வைத்துக் கொடுக்கப்பட்ட விவரம். பக்கம் 9-ல் இந்த விவரம் தெளிவாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

அதைப்போல நிதிநிலை அறிக்கையில் 214 குடியிருப்புகள் அதாவது 214 மீனவர்குப்பம் என்று கொடுத்திருப்பதாகச் சொன்னார்கள். இந்தக் கணக்கு, குடிநீர் வாரியத்தினால் மீனவர் குப்பங்களுக்கு குடிநீர் வசதி செய்துகொடுத்த கணக்கைச் சொல்லும்போது கொடுக்கப்பட்ட விவரம், பக்கம் 13-ல் இந்த விவரம் தெளிவாக இருக்கிறது. ஆனால் மீனவர் குப்பம் மொத்தம் 308 இதில் வேறுபாடு இல்லை.

மற்ற முக்கியமான கருத்துக்களையும் சொல்லியிருக்கிறார்கள். மேலும் அவ்வப்போது இதற்கு விளக்கம் தர வாய்ப்பு ஏற்படும் என்று கருதுகிறேன். பொதுவாக இந்தத் துறை முழுமையாக சரியான முறையில் செயல்பட வேண்டுமென்ற காரணத்தால் நல்லபல கருத்துக்களைச் சொன்னார்கள் என்று எல்லோருடைய கருத்துக்களையும் ஏற்று, இருக்கிற குறைபாடுகளை போக்கவும், மேம்பாடு செய்து முன்னேற்றம் காணுகின்ற வகையிலேயும் செயல்பட இந்தத்துறை பாடுபடும் என்று சொல்லி, நல்ல முறையிலே பணியாற்றி விவரங்களைச் சேகரித்துக் கொடுத்த மீனளத் துறையின் செயலாளர் அவர்களையும் அதிகாரிகளையும் இதர அலுவலர்களையும் பாராட்டி, அதைப்போல நுகர்பொருள் வாணிபக் கழகத்தையும் பாராட்டி, அதிலே பணியாற்றுகின்ற அதிகாரிகளையும் ஊழியர்களையும் பாராட்டி, நல்லுரைகளை வழங்கிய மாமன்ற உறுப்பினர்களுக்கு பாராட்டு தெரிவித்து, இவ்வளவு நேரம் என்னுடைய பதிலுரையை பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்த உங்கள் எல்லோருக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றித்தரும்படி அனைவரையும் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. வெட்டுத் தீர்மானங்கள் வற்புறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

## கோரிக்கை எண் 21.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், உ. சுப்பிரமணியன், ரா. கிருஷ்ணன், செ. சிவசாமி ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,16,60,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று கோரிய தொகை வழங்கப்பெற்றது.





## கோரிக்கை எண் 35.

திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், கே. எம். தங்கமணி கவுண்டர், என். வரதராஜன், எம். ஆறுமுகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—"மானியக் கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல் என்ற தலைப்பின் கீழ் ரூ. 5,24,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை வழங்கப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.34 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தில் 1977-78 ஆம் ஆண்டிற்கான ஆறாவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்) [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

58. தமிழ்நாடு திரையரங்குக் கழகத்தின் 1978-79 ஆம் ஆண்டிற்கான 7-வது ஆண்டு அறிக்கை (ஆங்கிலம்) [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956 619-அ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

*101. கோரிக்கை எண் 21—மீனளத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1980-81 (தமிழ், ஆங்கிலம்).

@102. கோரிக்கை எண் 35—தமிழகத்தில் உணவு நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, ஜூலை 1980 (தமிழ், ஆங்கிலம்).

*103. 1980-81 ஆம் ஆண்டில் மீனளம் பற்றிய செயல் வினை முறைத்திட்டம் (ஆங்கிலம்).

---

*22—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

@21—7—1980 அன்று உறுப்பினர்களுக்கு அனுப்பப் பெற்றது.

[..753.... ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

## மீனளம்

### கொள்கை விளக்கக் குறிப்பு 1980-81.

தமிழ்நாடு 1,000 கி. மீட்டர் நீளத்திற்கு நீண்டதொரு கடற்கரையைக் கொண்டுள்ளது. அத்துடன் 351 இலட்சம் ஹெக்டேர் பரப்புள்ள உள் நாட்டு நீர் நிலைகளும் இங்குள்ளன. இதன் காரணமாகவே, தமிழ் நாட்டில் மீன்வளம் மிகுந்துள்ளது. இந்நாட்டில் கரை சேர்க்கப்படும் மொத்த ஆழ் கடல் மீன் வகைகளில் 18.6 சத வீத ஆழ் கடல் மீன் வகைகள் கரை சேர்க்கப்படுகின்றன. நாட்டின் உள்நாட்டு மீன் வகைகளின் மொத்த உற்பத்தியில் இம்மாநிலத்தின் உற்பத்தி 18.3 சதவீதமாகும். 1978-79-ல் தமிழ் நாட்டிலிருந்து 28.70 கோடி ரூபாய் மதிப்புள்ள ஆழ்கடல் மீன் உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டது. இது நம் நாட்டின் ஆழ்கடல் மீன் வகை உற்பத்திப் பொருட்களின் மொத்த ஏற்றுமதி மதிப்பில் 12.23 சதவீதமாகும்.

2. இம்மாநில மீனளத் துறை, ஆழ் கடல், உள்நாட்டு உவர் நீர் மீனளங்களின் வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களை செயற்படுத்துவதற்குப் பொறுப்பு வகிக்கிறது. பல்வேறு வளர்ச்சி திட்டங்களை வெற்றிகரமாக செயல்படுத்தியதன்மூலம், 1951-52ல் 45,700 டன்னாக இருந்த தமிழ் நாட்டின் ஆழ் கடல் மீன் உற்பத்தி 1978-79 இறுதிக்குள் 2,10,000 டன்னாக உயர்ந்துள்ளது. இதே போன்று, உள்நாட்டு மீன் உற்பத்தியும் அதே கால அளவில் 36,000 டன்னிலிருந்து 1,60,000 டன்னாக உயர்ந்துள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில், ஆழ் கடல், உள் நாட்டு மீன் உற்பத்தி முறையே 3,00,000 டன், 2,20,000 டன் அளவுக்கு உயரும்.

### 3. திட்ட நோக்கங்கள்—

பின்வரும் நோக்கங்களை எய்துவதற்காக, மாநில அரசு மீனள வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது :—

(அ) இம் மாநிலத்தில் ஆழ்கடல், உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரித்தல் ;

(ஆ) மீன்பிடிப் பணிகளின் விரைவான வளர்ச்சிக்கு உதவுவதற்காக தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் ;

(இ) மீனவர்கள் அதிக அளவுக்கு மீன்களைக் கரை சேர்த்து தங்களுடைய வருமானத்தை உயர்த்திக் கொள்ளும் வகையில் படகுகள் மீன்பிடி சாதனம் செயல்படும் திறனை மேம்படுத்தல்;



980 ஜூலை 24]

(ஈ) அதிக உற்பத்தி இலக்கை அடைவதற்கு நிறுவன நிதிகளைப் பெருமளவுக்கு மீன் தொழிலில் பயன்படுத்தல் ;

(உ) ஆழ் கடலில் இதுவரை மீன் பிடிக்காத இடங்களில் மீன்களைப் பிடிப்பதற்காக இழு படகுகளின் (Trawlers) எண்ணிக்கையை அதிகரித்தல்;

(ஊ) கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காக உவர் நீர் நிலைகளில் இறால் வளர்ப்பையும் மீன் வளர்ப்பையும் மேற்கொள்ளுதல் ;

(எ) முனைந்து பாடுபடும் மீனவர்கள் பிடிக்கின்ற மீன்களை தாங்களே விற்பனை செய்யும் வகையிலும் இடைத்தரகர்களை நம்பி இருப்பதைத் தவிர்க்கும் வகையிலும் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் புத்துயிர் அளித்தல் ;

(ஏ) மீன் விற்பனையை நிறுவன அமைப்பு முறையில் விரிவுபடுத்தல். மீன் உண்பவர்களுக்கு நியாய விலையில் மீன் கிடைக்கச் செய்தல் ;

(ஐ) உள்நாட்டு நீர் நிலைகளிலும், உவர் நீர் நிலைகளிலும் மீன் வளர்ப்புக் கலையில் பயிற்சி அளித்தல்.

### 4. திட்ட உத்திகள்—

1974 ஜூலையில், மாநில அரசு, வணிகத் தன்மை வாய்ந்த மீனளத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு மீனள நிறுவனத்தை நிறுவியது. எனவே, மீனள மேம்பாடு திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென தமிழ் நாட்டில் தனித் தனியே இரண்டு ஏஜன்சிகள் உள்ளன. இம்மாநிலத்திலுள்ள மீனவர்களின் சமூக-பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்ட திட்டங்கள் உட்பட அனைத்து வளர்ச்சித் திட்டங்களும் மாநில மீனளத்துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மீன் பிடிப் படகுகள் வழங்குதல், மீன் பிடி இழுபடகுகள் இயக்குதல், மீன் பக்குவப்படுத்தல், மீன் விற்பனை, மீன் மாவு உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், போன்ற வணிகத் திட்டங்கள் ஆகியவை அனைத்தும் தமிழ்நாடு மீனள நிறுவனம் செயற்படுத்தும் திட்டங்களில் சிலவாகும்.

### 5. நிதி—

சில ஆண்டுகளுக்கு முன்பு, வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக நிதியுதவியை அளித்துவரும் ஒரே ஏஜன்சியாக அரசு இருந்து வந்தது. மீன் வளர்ப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கு இயன்றளவு நிதி நிறுவனங்களின் உதவியைப் பெருமளவில் பெறுவதே தற்போதைய கொள்கையாகும். இதன் விளைவாக முக்கியமாக தமிழ் நாடு மீனள நிறுவனத் திட்டங்களை ஏற்றுச் செயல்படுத்த வேளாண்மை மறுநிதியுதவி வளர்ச்சி நிறுவனம், தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனம் ஏனைய வணிக

வங்கிகள் ஆகியவற்றிடமிருந்து நிதியுதவி பெற மாநில அரசு ஏற்பாடு செய்துள்ளது. திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழ் நாடு மீன்வள நிறுவனத்திற்கு உதவுவதில் அரசு தொடர்ந்து முக்கிய பணி ஆற்றி வருகிறது. மீன்பிடிப் படகுகள் வழங்குதல் மர வள்ளங்கள் (Wooden Vallams) உள்நாட்டு மீன் வளர்ப்புப் போன்ற திட்டங்களுக்கு நிறுவன நிதியுதவி தற்போது கிடைத்து வருகிறது.

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி மன்றம், மத்திய ஆழ்கடல் மீனள ஆராய்ச்சி நிறுவனம் போன்ற தன்னாட்சி நிறுவனங்களின் முழுநிதி உதவியையோ ஓரளவு நிதி உதவியையோ பெறுகின்ற சில ஆராய்ச்சித் திட்டங்கள் மத்திய அரசின் நிதி உதவி பெறுகின்ற மீன்பிடித் துறைமுகம் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு நிறுவனங்கள் போன்ற மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை நீங்கலாக, மாநில மீனளத் துறை மேற்கொண்ட திட்டங்கள் அனைத்திற்கும் மாநில அரசே முழுவதுமாக நிதியுதவி அளிக்கிறது.

1980-81 ஆண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்காக, கீழே கொடுக்கப்பட்டுள்ள விவரங்களின் படி, 1980-81 ஆம் ஆண்டுத் திட்டத்தில் மாநில அரசு ரூ. 212.78 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இதன் விவரங்கள் வருமாறு :—

| | (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| (i) மாநிலத் திட்டப் பணிகள் .. .. | 93.77 |
| (ii) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் | 17.87 |
| (iii) தமிழ் நாடு மீனள நிறுவனத்திற்கு நிதியுதவி | 71.14 |
| (iv) வேளாண்மைப் பல்கலைக் கழகம் .. | 30.00 |
| மொத்தம் .. | 212.78 |

இவற்றுடன் ஏனைய மீனளத் திட்டங்கள் சிலவற்றை நிறைவேற்றுவதற்காக. ஏனைய துறைகளின் வரவு-செலவுத் திட்டங்களிலும் தொகை ஒதுக்கப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் வருமாறு :—

| திட்டம். (1) | ரூபாய் இலட்சத்தில். (2) | பெயர். (3) |
|---|---|---|
| 1. மீனவர்களுக்கு வீட்டு வசதி. | 100.00 | தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி வளர்ச்சி கழகம். |
| 2. மீனவர் கிராமங்களுக்கு இணைப்புச் சாலைகள். | 30.00 | நெடுஞ்சாலைகள்—கிராமப் பணிகள் துறை. |





6. <u>மாநிலத் திட்டப் பணிகள்—</u>

<u>(1) கடல் மீனளம்.</u>—கடலிலிருந்து பிடிக்கப்படும் மீன்களின் அளவை ஆண்டு ஒன்றுக்கு 3 லட்சம் டன்னாக உயர்த்துவதே ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கமாகும். விசைப் படகுகளைக் கொண்டு மீன் பிடிப்பதாலும் நாட்டுப் படகுகளின் செயல் திறனை மேம்படுத்துவதன் மூலம் இந்நோக்கத்தை எய்த திட்டமிடப் பட்டுள்ளது. கடல் மீன் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சியில் மீன்பிடிப்பணியைப் பல் திறப்படுத்துவதிலும் சிறு அளவில் மீன்ள மேம்பாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

<u>(2) பல்வகை மீன்களைப் பிடித்தல்.</u>—தமிழ் நாட்டில் தற்போது, 2,500-க்கும் அதிகமான விசைப் படகுகள் மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. இரால் மீன்களுக்கு வெளிநாட்டில் அதிக விலை கிடைப்பதால் அவற்றைப் பிடிப்பதற்காக கடலுக்கு அடியில் சென்று மீன்பிடித்தலை இப்படகுகள் மேற்கொள்ளுகின்றன. இவ்வாறு கடலுக்கு அடியில் சென்று வரையறை ஏதும் இன்றி மிகு விலை தரக்கூடிய இரால் மீன்களை/ நீண்டகாலத்திற்குப் பிடித்தால் அவை குறைந்துவிடும். எனவே, கடலில் பல்வேறு ஆழங்களில் கிடைக்கப்பெறும் பல்வேறு வகையான மீன்களைப் பிடிப்பதற்கு பல்வேறு வகையான தொழில் நுட்ப உத்திகளை மீனவர்கள் கையாளுமாறு செய்வதால் அவர்களுடைய வருமானம் படிப்படியாக உயருவதற்கு உறுதியளிக்கும். கடலில் ஆழத்தில் சென்று மீன் பிடிப்பதிலிருந்து மீனவர்களைத் திருப்பி அதற்குப் பதிலாக மீன்களை அவற்றின் செவுள்களில் வலையை மாட்டி மீன்பிடித்தல் (Gill netting) கண்ணி வைத்து மீன்பிடித்தல், நீண்ட தூரத்திற்கு வலையை விரித்து மீன் பிடித்தல், ஆகிய முறைகளைக் கையாண்டு மீன் பிடிக்குமாறு மீனவர்களுக்கு வழிகாட்டுதல் என்பதே இன்றைய முக்கியப்பிரச்சினை ஆகும். பலதிறப்படுத்தப்பட்ட மீன் பிடிப்புப் பணியில் பயன்படுத்தப்படுகின்ற மீன்பிடி வகைகளுக்காக உதவித் தொகை வழங்குவதன்மூலம் அவர்களை ஊக்குவிக்க மீனளத் துறை உத்தேசித்துள்ளது. பல்வகை மீன்களைப் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு வலைகள் வாங்குவதற்காக உதவித் தொகை வழங்க 1980-81 ஆம் திட்ட ஆண்டில் ரூ. 2.00 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. தொன்று - தொட்டுப் பயன் படுத்தபட்டு வரும் மீன் பிடி படகுகள், கட்டுமானத்தை நன்னிலைப் படுத்துவதும் அவற்றைப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதும் குறித்து நவீனதொழில் நுட்ப உத்திகளை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கைகள் எடுப்பதும். இந்த பல்முனைப் படுத்துதல் திட்டத்தில் அடங்கும். குறிப்பிட்ட பகுதியில் குறிப்பாக இரால் மீன் பிடி பருவத்தில் ஏற்படும் மீன் பிடித்தல் குறித்து நெருக்கடியை குறைப்பதற்கும் இது ஓரளவு உதவி புரியும்.

<u>(3) (அ) மீன்வள வாயில்களை ஆய்வு செய்தல்.</u>—கரையோரப்பகுதிகளில் உள்ள மீன் வளவாயில்கள் குறித்து இத்துறை ஏற்கெனவே ஆய்வு செய்து வருகிறது. ஆழ்கடலில் மீன் வளவாயில்

களை இன்னும் அமைப்பு ரீதியில் பயன்படுத்திக் கொள்ளத்
தொடங்வில்லை. இதற்குக் காரணம் ஆழ்கடல் பகுதிகளில்
உள்ள மீன்களின் வளவாயில் விவரம் தற்போதுதெரியவரவில்லை.
ஆழ்கடல் பகுதியில் மீன்பிடி படகுகளை அதிகமாகப் பயன்படுத்து
வதற்கும் அது குறித்து திட்டமிடுவதற்கும் இப்பகுதியில் கிடைக்கப்
பெறும் மீன்களின் வளவாயில்களை அவற்றின் இருப்பிடம்
ஆகியவை குறித்து ஆய்வு செய்வதும் மதிப்பிடுவதும் இன்றியமை
யாததாகும். மாநில அரசு தொடர்ந்து கோரி வந்ததன் பேரில்
உணவு, வேளாண்மை நிறுவனத்தின் நாட்டுத் திட்டத்தின் கீழ்
ஆய்வு செய்யும் பணியில் கிழக்குக் கடற்கரைப் பகுதியையும்
சேர்த்துக் கொள்ளுமாறு உணவு, வேளாண்மை நிறுவனத்தை
இந்திய அரசு அணுகியது. எந்தெந்தப் பருவ காலங்களில் எந்த
எந்த பகுதிகளில் மீன்பிடி படகுகளையும் இயந்திரங்களையும்
பயன்படுத்தலாம் என்பது குறித்து போதிய அளவிற்கு விவரங்கள்
தெரியாததால் இப்படகுகளும் இயந்திரங்களும் குறைந்த அளவே
பயன்படுத்த படுகின்றன. எந்தெந்தப் பருவகாலங்களில்
எந்தெந்த பகுதிகளில் எந்தெந்த வகை மீன்கள் அதிகமாகக்
கிடைக்க பெறும் என்ற விவரங்கள் துல்லியமாக தெரியவரப்
பெற்றால் இந்த மீன்பிடி படகுகளையும் இயந்திரங்களையும் அதிக
எண்ணிக்கையில் திறம்பட பயன்படுத்த இயலும். விரிவாக்கப்
பெற்ற பொருளாதார மண்டல பகுதியின் 41,400 சதுர கி.மீ.
பரப்பை உள்ளடக்கி கடல் மீன் பிடித்தல் திடடங்கள் பற்றி
திட்டமிட்டுச் செயல்படுத்துவதற்கு இந்த ஆய்வு அரசுக்கு உதவி
புரியும். இக் கண்டத்திற்கு பகுதியல் சுமார் 5,30.000
எடையுள்ள மீன் கிடைக்க பெறும் என்றும் இப்பகுதியல் கிடைக்
கப்பெறும் மீன் வளவாயில்களை குறித்து நன் முறையில்
அறிந்த பிறகுதான் அதனை பிடிக்க இயலும் என்றும் தொடக்க
நிலைமையிலிருந்து தெரிய வருகிறது.

(ஆ) இரண்டு படகுகளைக் கொண்டு அல்லது ஒரு ஜோடி
இழு படகுகளைக் கொண்டு மீன் பிடித்தல்.—உணவு வேளாண்மை
நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் நடுக்கடலில் சென்று
இரு படகுகளை பயன்படுத்தி மீன்பிடிக்கும் திட்டம் ஒன்றை
மீனளத் துறை மேற்கொண்டுள்ளது. இது நடுக்கடலிலும்
தொலைக் கடலிலும் உள்ள மீன் வளவுகளைக் கண்டறிந்து
ஜோடி இழு படகுகளை பயன்படுத்தி ஆழ் கடலிலும் நடுக்
கடலிலும் சென்று மீன் பிடிப்பதற்குரிய சாத்தியக் கூறுகள் பற்றி
விளக்குவதை நோக்கமாகக் கொண்டது.

(4) மீன் பிடி படகுகளைப் பதிவு செய்தல்.—மீன் பிடி விசைப்
படகுகள் உரிய அனுமதியின்றி, ஒரு மாநிலத்திலிருந்து பிரி
தொரு மாநிலத்திற்கு செல்வதை மீன்பிடி விசைப்படகு உரிமை
யாளர்கள் தங்களது ஈட்டுறுதிப் பத்திரத்தைக் காலாவதி ஆகாமல்
பார்த்துக் கொள்வதிலிருந்தும் தவறிவிடுகின்றனர். ஒவ்வொரு
படகையும் தனித்தனியாக அடையாளம் கண்டு இவற்றை ஆய்வு
செய்வதற்கும் வாய்ப்பில்லை. இவற்றின் இயக்கம் மீன்பிடி
தொழிலில் ஈடுபடுதல் ஆகியவற்றின் மீது விதிக் கட்டுப்பாடு
வகிக்கும் பொருட்டு, மீன் பிடி விசைப்படகுகள் 1953-ஆம்



ஆண்டு சிறு துறைமுகங்கள் துறைமுகப் படகு விதிகளின் செயல்
வரம்பிற்குள் தற்போது கொண்டுவரப்பட்டுள்ளன. இதன் கீழ்
விசைப்படகு ஒவ்வொன்றும் அருகில் உள்ள துறைமுக அலுவல
கத்தில் பதிவு செய்யப்பட்டு பதிவுச் சான்றிதழ் ஒன்றைப் பெற
வேண்டும். அதன் பிறகு அப்படகுக்கு ஒதுக்கப்படும் எண்,
அப்படகு எந்த இடத்தில் இருந்தாலும் எளிதில் அதனை அடை
யாளம் கண்டுகொள்ளுவதற்கு இயலும் வண்ணம் அந்த எண் அப்
படகில் எளிதில் புலப்படும் வகையில் தெளிவாக எழுதப்பட்டிருக்க
வேண்டும். இம்மாநிலத்தில் 2,822 விசைப்படகுகள், சம்பந்தப்
பட்ட சிறு துறைமுக அலுவலர்களிடத்தில் பதிவு செய்யப்
பட்டுள்ளன.

(5) கருவாடு சேமிப்புக் கிடங்குகள் கட்டுதல்.—மீன்களைப்
பக்குவப்டுத்திப் பாதுகாப்பதற்கான பல முறைகளில் அவற்றை
வெயிலில் உலர்த்திப் பக்குவப்படுத்துவது என்பது அனைவரும்
அறிந்த ஏற்றுக் கொண்ட முறைகளில் ஒன்றாகும். மீனளத்
திலிருந்து கிடைக்கின்ற வேலை நிறைவு பெற்ற பொருட்கள் மிக
உயர்ந்த தேசியத்தரம் வாய்ந்தவையாக இருக்க உறுதி
செய்யும் பொருட்டு, அவற்றைச் சுகாதாரமான முறையில்
சேமித்து வைக்க வேண்டியது அவசியமாகும். இத்தகைய
தேவையைநிறைவு செய்யும்பொருட்டுதூத்துக்குடியில்கருவாட்டுக்
கிடங்கு ஒன்றை ரூ. 5.00 இலட்சம் செலவில் நவீனமுறையில்
கட்டுவதற்கு கடல்படு பொருள்கள் உற்பத்தி—ஏற்றுமதி
வளர்ச்சி அதிகார மன்றம் முன் வந்துள்ளது. இக்கட்டிடத்தைக்
கட்டுவதற்காக மீனளத்துறை தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகப்
பகுதியில் போதிய நிலம் அளித்துள்ளது. இக்கிடங்கு கட்டப்படு
வதற்கு, கடல்படு பொருட்கள் உற்பத்தி ஏற்றுமதி வளர்ச்சி
அதிகார மன்றம் ஏற்கெனவே நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.
இக்கட்டுமானப்பணி விரைவில் முடிக்கப்பட்டுவிடும்.

(6) சங்குக் குளிப்பு.—சங்குக் குளிப்பவர்களை ஊக்குவிக்கும்
பொருட்டு, அரசு, 197 - -ம் ஆண்டிலிருந்து சங்குகளின்
அளவிற்கு ஏற்றவாறு சங்குகளின் கொள்முதல் அளவையும்
விலையையும் உயர்த்தியுள்ளது. அவற்றின் விவரங்கள் கீழே
கொடுக்கப்பட்டுள்ளன—

| | ரூ. | பை. |
|---|---|---|
| 1. ஜாதி (வெள்ளை)— | | |
| (அ) $2\frac{3}{8}$ அங்குலம் ஆனால் $2\frac{3}{4}$ அங்குலத்துக்கு குறைந்தவை. | 2 | 25 |
| (ஆ) $2\frac{3}{4}$ அங்குலம் அதற்குமேல் .. | 2 | 60 |
| (இ) $2\frac{3}{8}$ அங்குலம் அதற்குமேல் (புழு அரித்தது) | 0 | 20 |

| | | |
|---|---|---|
| 2. பட்டி (வெள்ளை)— | | |
| (அ) $2\frac{3}{8}$ அங்குலம் ஆனால் $2\frac{3}{4}$ அங்குலம் அளவிற்குக் குறைந்தவை. | 1 | 10 |
| (ஆ) $2\frac{3}{4}$ அங்குலமும் அதற்கு மேல் .. | 1 | 30 |
| (இ) $2\frac{3}{8}$ அங்குலமும் அதற்கு மேல் (புழுஅரித்தது) | 0 | 10 |
| 3. ஜாதி (செவ்வாயன்)— | | |
| $2\frac{3}{4}$ அங்குலம் அதற்கு மேல் .. .. | 1 | 10 |
| 4. பட்டி (செவ்வாயன்)— | | |
| $2\frac{3}{4}$ அங்குலம் அதற்கு மேல் .. .. | 0 | 75 |

முழு அளவிலான சங்குகளின் குறைந்தளவு கொள்முதல் விலை ரூ. 2.00-லிருந்து ரூ. 2.25 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. முன்னர் கொள்முதல் செய்யப்படாத $2\frac{3}{8}$ அங்குலம் அளவுள்ள சங்கு களைக் கொள்முதல் செய்யத் தொடங்கியதால் சங்கு குளிப்பவர் கள் அதிக வருமானம் பெற உதவியாக இருந்தது. சங்கு குளிக்கும் பருவத்தில் குறைந்தளவு, அதாவது 1,500-க்கும் அதிகமாக சங்குக் குளிப்பவர்களுக்கு கொள்முதல் விலைக்கு மேல் சங்கு ஒன்றுக்கு 60 காசு வீதத்தில் ஊக்கத் தொகை வழங்குவதற்கான திட்டம் ஒன்றுக்கு அண்மையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சங்குகுளிப் பவர்கள் கடலில் அதிக ஆழம் மூழ்கி சங்குகளை திறம்பட சேகரிக்க இயலும் வகையில் அவர்களுக்குச் சலுகை விலையில் 800 முக மூடிகளையும் நீந்துவதற்குத் துடுப்பு போன்ற உறுப்புகள் 800 ஜோடிகளையும் வழங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள் ளது. அதிக எண்ணிக்கையுள்ள சங்குகளைச் சேமித்து வைப் பதற்காகக் கூடுதல் சேமிப்பு வசதிகளை வழங்கும் பொருட்டு 1980-81-ம் ஆண்டில் ரூ. 2.66 இலட்சம் செலவில் மேலும் ஒரு கிடங்கினைக் கட்டுவதற்காக அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(7) வணிகத்திற்காக முத்துச்சிப்பிகளை வளர்த்தல்.—இத் துறை, முத்துச்சிப்பி உற்பத்தி செய்யும் பொருட்டு கடல் மீனள ஆராய்ச்சி மத்திய நிறுவனத்துடன் சேர்ந்து தூத்துக்குடியில் மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணி வெற்றியடைந்துள்ளது. இத் துறை வணிக ரீதியில் முத்துச் சிப்பிகளை வெற்றிகரமாக வளர்ப்பதற்குத் திட்டம் ஒன்றைத் தயாரித்து வருகிறது.

எனவே, ஆறாம் திட்ட காலத்தில், தூத்துக்குடியிலும் இராமநாதபுரம் மாவட்டத்தில் மண்டபத்துக்கு அருகே உள்ள குரு சடைத் தீவுக்கப்பாலுள்ள பாதுகாக்கப்பட்ட விரிகுடாப் பகுதியிலும் முத்துச் சிப்பி வளர்ப்புத் தொழிலை மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது.



(8) வழிகாட்டி விளக்குக் கம்பங்கள் நிறுவுதல்.—தமிழ்நாட் டில் கடற்கரையோரங்களிலுள்ள சுமார் 240 மீன்பிடிக் கிராமங் களிலிருந்து சுமார் 42,000 நாட்டுப் படகுகளும், 2,200 விசைப் படகுகளும் மீன்பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ளன. பகல் நேரங்களில் மீன்பிடிப்படகுகள் தெளிவாகத் தெரிகின்ற நில அடையாளங்களை வைத்து கரைசேர இயலும். ஆனால், இரவில் அவர்கள் இவ்வாறு அடையாளங்கண்டு கரைசேர இய லாது. எனவே, இரவு நேரங்களில் மீனவர்கள் பாதுகாப்பாகக் கரையை அடைவதற்கு உதவி செய்யும் பொருட்டு, பின்வரும் இடங்களில் வழிகாட்டி விளக்குக் கம்பங்களை நிறுவுதற்காக 1979-80-ம் ஆண்டில் தேவையான செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

(1) ஏரிப்புறக்கரை

(2) வானமாதேவி

(3) செந்தாழை வயல்

(4) கரையூர்

(5) மல்லிப்பட்டினம்

(6) வீரபாண்டியன்பட்டினம்

(7) இணையம்

(8) தூத்தூர்

(9) நீரோடித்துறை.

மாநிலத் துறைமுகத்துறை, 1980-81ம் ஆண்டில் மேற்சொன்ன இவ்விடங்களில் வழிகாட்டி விளக்குக் கம்பங்களை நிறுவும்.

(9) உவர் நீர் மீன் வளர்ப்பு.—மாநில மீனளத்துறை நடத் திய ஆய்வின் அடிப்படையில் இறால் மீன்களை உவர் நீரிலும் ஒரு ஏக்கர் நீர்ப்பரப்புள்ள இறால் பண்ணையிலும் வளர்க்க இயலும் என்றும் உறுதி செய்யப்பட்டது. 90 நாள் முதல் 120 நாள் வரையுள்ள ஒவ்வொரு காலத்திலும் ஒரு முறை 500 கி.கி. வீதம் இரு முறைகளில் 1,000 கி.கி. இறால்களைப் பெற இயலும். கிடைக்கக்கூடிய அதிகமான இறால்களை உள்நாட்டின் பயனுக் காகவும், ஏற்றுமதிக்காகவும் பயன்படுத்துவதைத்தவிர, இறால் மீன்களை வளர்ப்பவர்களுக்கு இது கணிசமான அளவு வருவாயை கொடுக்கும். எனவே கடற்கரையோரமாக உள்ள பல மாவட் டங்களில் கட்புல விளக்க இறால் பண்ணைகளை அமைப்பதற்கும் தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த அதிராம்பட்டினத்தில் கூட்டு றவுத்துறையில் வணிக முறையில் இறால் பண்ணைகள் அமைப்ப தற்கும் அரசு கருதியுள்ளது.

(அ) கட்புலவிளக்க இரால் பண்ணைகளை அமைத்தல்.—உவர் நீர்ப்பகுதிகளை, அரசின் முகவரமைப்புகளோ அல்லது மீனவர்களோ தங்களுக்குள்ளே கூட்டுறவுச் சங்கங்களை அமைத்துக் கொள்வதன மூலம் பயன்படுத்திக் கொள்வதற்கு, அரசின் கொள்கைக்கிணங்க, இம்மாநிலத்திலுள்ள மாநில பகுதிகளில் இரால் வளர்ப்பதற்குரிய தொழில்நுட்ப உவர் நீர்ப் மீனவர்களுக்குக் கற்றுக் கொடுப்பதற்கு 1980-81 ஆம் ஆண்டில் உதவிகளை பின்வரும் 10 இடங்களில் ஆய்வு-கட்புல விளக்க நிலையங்களை அமைப்பதற்கு அரசு கருதியுள்ளது:—

| | |
|---|---|
| 1. பழவேற்காடு | செங்கல்பட்டு மாவட்டம். |
| 2. செம்மண்சேரி | |
| 3. டி.வி.எஸ். பேட்டை | —தென்ஆற்காடு மாவட்டம். |
| 4. உப்பனாறு கழிமுகம் | தஞ்சாவூர் மாவட்டம். |
| 5. அதிராம்பட்டினம் | |
| 6. கட்டுமாவடி | —புதுக்கோட்டை மாவட்டம். |
| 7. கண்ணமுனை | —இராமநாதபுரம் மாவட்டம். |
| 8 வெப்பலோடை | திருநெல்வேலி மாவட்டம் |
| 9 புன்னக்காயல் | |
| 10. இராஜக்காமங்கலம் | —கன்னியாகுமரி மாவட்டம். |

மேற்சொன்ன பிரிவுகளில் இரால்கள் வளர்ப்பதற்கு கட்புல விளக்கம் காட்டுவதோடு இரால்களை வளர்ப்பதற்குத் தகுந்த உவர்நீர்ப் பரப்புகளையும் அவற்றின் அளவுகளையும் பல்வேறு பருவகாலங்களில் அவற்றின் உவர் தன்மை பற்றியும் மண்ணின் பொருத்தக்கூறு பற்றியும் புயல் வெள்ளங்களால் அவை எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்பது பற்றியும் கண்டறிய விரிவான ஆய்வுகளை மேற்கொள்ளும்.

(ஆ) அதிராம்பட்டினத்தில் உள்ள இரால் பண்ணை.—அரசின் கொள்கை முடிவுகளை ஒட்டி அதிராம்பட்டினத்தில் ஏற்படுத்தக் கருதியுள்ள இரால் பண்ணை கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படும். குறிப்பாக இதற்கென அமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கம், தன்னுடைய பணியை நிறைவேற்றுவதோடு, கிராமத்திலுள்ள எல்லா மீனவர்களையும் உறுப்பினர்களாக ஏற்றுக்கொள்ளும். இச்சங்கத்திற்கு அதிராம்பட்டினத்தில் 80 எக்டேர் உவர்நீர்ப் பகுதியை ஒதுக்கீடு செய்யும். 80 எக்டேர் உவர்நீர்ப்



பிரிக்கப்பட்டு பகுதி முழுவதும் 50 இரால் பண்ணைகளாகப் இரால்களை வளர்த்து அவற்றைப் ஒவ்வொரு பண்ணையும், ஒவ்வொன்றுக் பெறுவதற்கு சங்கத்தின் மீனள உறுப்பினர்குழு கும் ஒதுக்கப்படும்.

(இ) தூய நீர் இரால் பண்ணைகளை அமைத்தல்.—இரால்கள் ஏனைய வகை மீன்களை விட அதிக மதிப்பு வாய்ந்தது என்பது எல்லோரும் நன்கு அறிந்ததே. எனவே, செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கொளவாய் ஏரிக்கு அருகே முன்னோடி விளக்கப் பண்ணை ஒன்றை அமைப்பதன் மூலம் தூயநீரில் இரால்களை வளர்ப்பதற்குரிய சாத்தியக்கூறுகள் குறித்து விளக்கிக் காட்டுவதற்கு முயற்சி செய்யப்பட்டு வருகிறது. சிறு இரால்களை சேகரித்து அவற்றை வளர்ப்பதற்காகச் சேமித்து வைக்கக் கருதப் பட்டுள்ளது. இம்முயற்சி வெற்றி பெற்றால் மீனவர்களின் பயனுக்காக ஏனைய உள்நாட்டு நீர் நிலைகளுக்கும் நீட்டிக்க இயலும்.

10. துறைப்பணியாளர்களுக்குப் பயிற்சியளித்தல்.—ஒவ்வோராண்டும் துறைப்பணியாளர்கள், மீனளம் குறித்த பல்வேறு துறைகளில் தனிப்பட்ட அறிவைப் பெறுவதற்காக மத்திய அரசின் பல்வேறு நிறுவனங்களுக்கு முகமையில் அனுப்பப்படுகின்றனர். 1980-81-லும் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும். பல வேறு துறைகளில் நவீனப்பயிற்சி பெறுவதற்காக மீனளத் துறை உதவி இயக்குநர், மீனளத்துறை ஆய்வாளர்கள், துணை ஆய்வாளர்கள் ஆகிய பதவித் தரங்களிலுள்ள அதிகாரிகளும், பணியாளர்களும், சென்னை, கொச்சி, ஹைதராபாத், ஆக்ரா, பாரக்பூர் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மத்திய அரசின் பல்வேறு நிறுவனங்களுக்கு முகமையில் அனுப்பப்படுகின்றனர். இதற்காக அரசு 1980-81-ஆம் ஆண்டுத். திட்டத்தில் ரூ. 1.03 இலட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

உள்நாட்டு மீனளங்கள்.

(11) 100 மிலியன் மீன் முட்டைகளை உற்பத்தி செய்யும் திட்டம்.—தமிழ்நாட்டில் தற்போது மீன் முட்டை உற்பத்தி செய்வது ஆண்டொன்றுக்கு சுமார் 50 மிலியன் ஆகும். 3.50 ஹெக்டேர் பரப்புள்ள மீன் வளர்ப்புக்கேற்ற நீர் நிலைகளில் வளர்ப்பதற்காக நமக்குத் தேவைப்படும் மீன் குஞ்சுகள் 350 மில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு, மீன் முட்டை உற்பத்தி அளவு, தேவை அளவைவிடக் குறைவாக உள்ளது. மீன் முட்டை உற்பத்தியைப் பெருக்குவதில் உள்ள முக்கிய சிரமம் என்னவெனில், மீன் குஞ்சை உற்பத்தி செய்வதற்குப் போதுமான அளவு மீன் குஞ்சு வளர்ப்பிடம், மீன் வளர்ப்புக் குட்டைகள், இனப் பெருக்கம் செய்யும் குட்டைகள் ஆகியவை இல்லாததாகும். இந்த இடைவெளியை நிரப்பும் முதல் நடவடிக்கையாக, 109 இலட்சம் ரூபாய் செலவில் பின்வரும் 10 இடங்களில் 30 ஹெக்டேர் பரப்பளவில் மீன் குஞ்சுப் பண்ணைகள் மேம்படுத்தக்

1980 ஜூலை 24]

கருதப்பட்டுள்ளது. 1980-81ஆம் ஆண்டில் இதற்காக 25.92 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் பூர்த்தி செய்யப்படும்போது, ஆண்டொன்றுக்கு மேலும் 100 மில்லியன் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்படும்.

| தொடர் எண். (1) | இடத்தின் பெயர். (2) | மேம்படுத்தக் கருதப்பட்டுள்ள மீன் வளர்ப்பிடத்தின் பரப்பு. (3) ஹெக்டேர் |
|---|---|---|
| 1 | மேல் ஆளியாறு .. .. .. | 3 |
| 2 | ஜேடர்பாளையம் .. .. | 5 |
| 3 | கிருஷ்ணகிரி .. .. .. | 3 |
| 4 | பவானிசாகர் .. .. | 3 |
| 5 | மேட்டூர் அணைக்கட்டு .. | 3 |
| 6 | ஆளியாறு .. .. .. | 2 |
| 7 | திருமூர்த்தி .. .. .. | 3 |
| 8 | சாத்தனூர் அணைக்கட்டு .. | 3 |
| 9 | மணிமுத்தாறு .. | 2 |
| 10 | மஞ்சளாறு . . . | 3 |
| | மொத்தம் . . | 30 |

(12) மீன் வளர்ப்பவர்கள் மேம்பாட்டு முகவரமைப்பு.—தஞ்சாவூர் மாவட்டத்தில் முதன் முதலாக அமைக்கப்பட்ட மீன் வளர்ப்பவர்கள் மேம்பாட்டு ஏஜென்சி பெற்ற வெற்றியினால் ஊக்குவிக்கப்பட்டு, 1978ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி, மதுரை, தருமபுரி ஆகிய மாவட்டங்களில் இத்தகைய பிரிவுகள் தொடங்கப்பட்டன. மீன் வளர்ப்பவர்கள் மேம்பாட்டு ஏஜன்சியின் நோக்கம் என்னவெனில், வங்கிகளிடமிருந்து நிதியுதவியை பெற்றும், மாநில, மத்திய அரசுகளிடமிருந்து கிடைக்கும் கடன்களையும் உதவித் தொகைகளையும் பெற்றும் மீன் வளர்ப்பை மேற்கொள்ளவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், சிறிதளவில் மீன் வளர்ப்பவர்களை மேலும் ஊக்குவிப்பதாகும். இந்த ஊக்குவிப்பு திட்டங்கள், சத்துமிக்க மீன் உணவை மக்களுக்குப் பெருமளவில் கிடைக்கச் செய்வதோடு கிராமப்புற மீன் வளர்ப்பவர்களுக்கு நல்ல வருமானம் கிடைக்கவும் வகை செய்கிறது. எனவே



1980 ஜூலை 24]

செங்கற்பட்டு, தென் ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இத்தகைய ஏஜென்சிகளை ஏற்படுத்தவும் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள திட்டத்தை விரிவுபடுத்தவும் அரசு உத்தேசித்துள்ளது. இதற்காக, அரசு 1980–81 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் 15.20 இலடசம் ரூபாய் நிதியொதுக்கம் செய்துள்ளது.

(13) நீர்த்தேக்கங்களிலும், பெரிய நீர் நிலைகளிலும் மீன் உற்பத்தி செய்தல்.—இத்துறையின் முக்கியமான ஒரு கொள்கை என்னவெனில், மீன் வளர்ப்புக்காக புதிதாக அமைக்கப்படும் நீர்த் தேக்கங்கள் அனைத்தையும் எடுத்துக்கொள்வதாகும். பொதுப் பணித்துறை ஏரிகள் போன்ற பெரிய நீர்நிலைகளிலும் மீன் வளர்ப்புக்காக இவ்வாறு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இக்கொள்கையின் அடிப்படையிலும் இம்மாநிலத்தில் உள்நாட்டு மீன் உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் 1980-81 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள பின்வரும் நீர்த் தேக்கங்களையும், பெரிய நீர்நிலைகளையும் மீன்வளர்ப்புக்காக எடுத்துக்கொள்ள கருதப்பட்டுள்ளது,—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் கொட்டாறு நீர்தேக்கம்.

(ஆ) வட ஆற்காடு மாவட்டத்தில் பையூர் ஏரி.

(இ) தர்மபுரி மாவட்டத்தில் பரூர் ஏரி.

மேற்கூறிய இடங்களில் மீன் வளர்ப்புப் பணியைக் கவனிப்பதற்கு அவசியமான பணியாளர்களை நியமிப்பதற்கென 1980-81ஆம் ஆண்டுத் திட்டத்தில் அரசு 0.67 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது.

(14) மாமூல் வறட்சிப் பகுதித் திட்டங்கள்.—மாமூல்வறட்சிப் பகுதித் திட்டதின் கீழ், இராமநாதபுரம், தருமபுரி ஆகிய மாவட்டங்களில் பின்வருவனவற்றைச் செல்படுத்தக் கருதபட்டுள்ளது :—

| | ரூபாய் இலட்சம். |
|---|---|
| 1. இராமநாதபுரம் மாவட்டம்— | |
| (அ) மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 33 1/3 சதவீதம் உதவித் தொகையில் பைபர் கிளாஸ் படகுகளை வழங்குதல் (50 படகுகள்). | 5.00 |
| (ஆ) மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு 33 1/3 சதவீத உதவித் தொகையில் மரவள்ளங்களை வழங்குதல் (100படகுகள்.) | 4.00 |

| | | |
|---|---|---|
| (இ) | காரங்காட்டில் 50 ஏக்கர் பரப்பளவில் இரால் மீன் பண்ணை அமைத்தல். | 3.65 |
| (ஈ) | சங்கங்களுக்கு நிர்வாக உதவித் தொகை (5 சங்கங்கள்). | 0.54 |
| | மொத்தம்... .. | 13.19 |

படகு எதனையும் சொந்தத்தில் வைத்துக் கொண்டிராத மீனவர்கள் கட்டுமரத்தைக் சொந்தத்தில் வைத்துக் கொள்ளும் பொருட்டும், கூட்டுறவு மீன் விற்பனை முறையின்கீழ் வர அவர் களுக்கு ஊக்கமளிக்கப்பதற்கும், ஃபைபர் கிளாஸ் படகுகளையும் மர வள்ளங்களையும் வழங்குவதும் திட்டத்தின் நோக்கமாகும். காரங்காடு கிராமத்தில் இரால் மீன் அமைக்கும் மற்றொரு திட் டம் மீனவர்கள் தங்களே கூட்டுறவுகளை அமைப்பதன் மூலம் மாநிலத்தில் உள்ள உவர்நீர் நிலைகளை மேம்படுத்திப் பயன் படுத்த வேண்டும் என்ற அரசின் கொள்கை முடிவுக்கு ஏற்றதாக உள்ளது. காரங்காடு கிராமத்தில் 50 ஏக்கர் பகுதியில் இரால் மீன் வளர்ப்பு நீர்நிலை ஏற்படுத்தப்பட்டு, பின்னர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள், இரால் மீன் வளர்ப்புப் பணியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும், அதைக் கொண்டு வாழ்க்கை நடத்த பயன்படுத்திக் கொள்வதற்கும் அது அவர்களிடம் ஒப் டைக்கப்படும். இத்திட்டம் இந்திய அரசால் ஒப்புதல் அளிக்கப் பட்ட பின்னர் செயல்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும்—

2. தருமபுரி மாவட்டம்—

| | | ரூபாய் இலட்சத்தில். |
|---|---|---|
| (அ) | சின்னாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் மீன் வளர்ப்புப் பண்ணையைக் கட்டுதல். | 3.30 |
| (ஆ) | கிருஷ்ணகிரியில் மீன் வளர்ப்புப் பண்ணையைக் கட்டுதல். | 3.30 |
| | மொத்தம் | 6.60 |

இத்திட்டங்களுக்கு இந்திய அரசு ஏற்கெனவே ஒப்புதல் ரித்துள்ளது. அவை 1980-81 ஆம் ஆண்டில் செயல்படுத்தப் ம்.

ஏனைய திட்டங்கள்.

(15) அடிப்படை வசதிகளுக்கு வகை செய்தல்.—பிடித்த களைக் கரை சேர்க்கும் நிலையங்கள் தமிழ்நாட்டில் 240 ான. அவற்றில் பெரும்பாலானவற்றில் கரைக்குக் கொண்டு



வரப்படும் மீன்களைப் பெறுவதற்கும், அனுப்புவதற்கும் உரிய அடிப்படை வசதிகள் இல்லை. எனவே, இந்திய அரசு, முக்கிய மீன் பிடிப்புக் கிராமங்களில் அடிப்படை வசதிகள் வழங்கப்படு வதற்காக, மாநில அரசுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. கீழ்க் கண்ட அடிப்படை வசதிகளுக்கு வகை செய்வதற்காக தஞ்சாவூர் மாவட்டத்தில் பழையேறு, இராமநாதபுரம் மாவட்டத்தில் வாலிநோக்கம், ஆகியவற்றை மாநில அரசு தெரிந்தெடுத் துள்ளது. அதற்காகத் தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு இந்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

1. அணுகு சாலை.
2. தண்ணீர் வழங்கல்.
3. மீன் பதனிடும் கூடம்.
4. காப்பு ஏற்பாடுள்ள தொடர் வண்டிப்பணி.
5. பனிக்கட்டித் தொழிற்சாலை.
6. சமுதாயக் கூடம்.
7. மின்சக்தி வழங்கல் (சாலை விளக்கு உட்பட),

மாநிலத் துறைமுகத்துறை தற்போது மேற்சொன்ன இரு இடங்களிலும் இப்பணிகளை நிறைவேற்றி வருகிறது. இதற்காக அரசு 1980-81 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 11.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

(16) பணியாளர் குடியிருப்புகளைக் கட்டுதல்.—மீனள மையங்கள் பலவற்றில் துறைப்பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதி இல்லை. மீன்பிடிப் பணிகளுக்காகவும், மீன் குஞ்சுகள் உற்பத் திக்காகவும், அவர்கள் பணி இடத்தில், குறிப்பாக அணைக்கட்டு களில் தங்க வேண்டியது அவசியமாகும். அரசுக் கட்டிடங்கள் இல்லாததால், பணியாளர்கள் மிகவும் இன்னலுறுகின்றனர். பெரும்பாலான அணைக்கட்டுகளில் தனியார் இடவசதியும் கிடைப் பதில்லை. அதன் விளைவாக, பணியாளர்கள் அணைக்கட்டுகளில் தங்கியிருக்க இயலவில்லை. இதனால் பணி பாதிக்கப்படுகிறது. எனவே, மதுரை மாவட்டத்தில் மஞ்சளாறு அணை, சாத்தியார் அணை, வைகை அணை, ஆகிய இடங்களில் பணியாளர் குடி யிருப்புகளைக் கட்டுவதென அரசு கருதியுள்ளது. இதற்காக அரசு 1980-81 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 7.35 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

(17) விரிவாக்கப்பணி.—பிடிபட்ட மீன்களைக் கெடாமல் பாதுகாத்தல், மீன் வளர்ப்பு உத்திகள் முதலியவற்றின் அவசியத் தையும், அதன் பயன்களையும் பற்றி மீனவர்களுக்கு புகட்டு வதே விரிவாக்கப் பிரிவின் நோக்கமாகும். விரிவாக்கப் பிரிவு

ஒன்று சென்னையில் ஏற்கனவே செயல்படுவது தவிர இந்திய அரசின் நிதி உதவியுடன் மற்றொரு பிரிவு தூத்துக்குடியில் அமைக் கப்பட்டுள்ளது. மேலும் ஒரு பிரிவை அமைக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இது தஞ்சாவூரில் செயல்படத் தொடங்கி யுள்ளது. இந்த மூன்று விரிவாக்கப் பிரிவுகளுக்கான செலவுக் காக அரசு 1980-81 ஆம் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 1.72 இலட்சத்தை நிதி ஒதுக்கம் செய்துள்ளது.

(18) மீனவர் துயர் தணிப்பு,— கடலில் மீன் பிடிக்கச் செல் லும்போது, உயிரிழக்கும் மீனவர் குடும்பங்களுக்கு 5,000 ரூபாய் வரையில் கருணை மானியம் வழங்கும் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அவ்வாறு இறக்கும் மீனவர்களின் குழந்தைகள் வாழ்க்கைத் தொழில் கல்வியை மேற்கொள்ள இயலும் வகையில் கூடுதலாக 5,000 ரூபாயும் வழங்கப் படுகிறது. மேற்சொன்ன சலுகை, சங்கு குளிப்பவர்களுக்கும் வழங்கப்படுகிறது.

(19) வீட்டு வசதி.—தமிழ்நாடு அரிசன வீட்டு வசதி மேம் பாட்டுக் கழகம் இத்திட்டத்தின் கீழ் இதுவரை 4,000 வீடுகளைக் கட்டியுள்ளது. இத்திட்டம் 1980-81 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தபபடுமென உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்காக, அரசு 1980-81ஆம் ஆண்டுத் திட்டத்தில், ரூ. 100 லட்சம் நிதி ஒதுக்கியுள்ளது.

(20) சாலைகள்.— பெரும்பாலான மீனவர் கிராமங்கள் முக்கியச் சாலைகள் அவற்றையொட்டியுள்ள நகரங்கள், கிராமங் கள் ஆகியவற்றுடன் தொடர்பு இல்லாமல் தனியாக அமைந் துள்ளன. மருத்துவம், கல்வி, மின்விளக்கு, குடிநீர் ஏனைய இன்றியமையாத வசதிகள் ஆகியவை இக்கிராமங்களில் இல்லை. மாநிலத்தில் தொலைவில் அமைந்துள்ள மீனவர் கிராமங்களுடன் தொடர்பு கொள்ள போதுமான அளவுக்கு வசதிகள் இல்லாததால் ஏற்பட்டுள்ள இடர்பாடுகளை இத்துறை உணர்ந்துள்ளது. மீன வர் கிராமங்கள் அனைத்துக்கும் இணையபுச் சாலைகளை, குறிப் பாக, புயல் காலங்களில் இச்சாலைகள் முக்கியமானவையாகவும் அவசரத் தேவையாகவும் உள்ளன. எனவே மீனவர் கிராமங் களை முக்கியச் சாலைகளுடனும் அவற்றை யொட்டியுள்ள நகரங்களுடனும் இணைக்கும் இணைப்புச் சாலைகளை அமைப் பதற்காக அரசு நிதி ஒதுக்கம் செய்துள்ளது. இதற்காக அரசு நெடுஞ்சாலைத் துறையின் ஆண்டுத் திட்டத்தில் ரூ. 30.00 இலட்சம் நிதி ஒதுக்கம் செய்துள்ளது. எந்தெந்த மீனவர் கிராமங்களுக்கு செய்தித் தொடர்பு வசதிகள் அவசரமாகத் தேவைப்படுகின்றன என்பதை மீனளத் துறை ஆய்வு செய்து கண்டறியும். நெடுஞ்சாலை கிராமப்பணிகள் துறை அத்தகைய பணிகளை நிறைவேற்றும்.

(21) தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம்.— மீனவர்கள் விசை படகுகள், மோட்டார் வண்டிகளை வாங்குதல், இயக்குதல், மீன் பக்குவப்படுத்தும் தொழிற்சாலைகள் அமைத்தல், கிடங்குகள்



கட்டுதல், மீன் பதப்படுத்தல், மீன் விற்பனை செய்தல் போன்ற பணிகளைப் பலதிறப்படுத்தி மேலும் விரிவாக்கிக் கொள்ள இயலும் வகையில் புது டில்லியில் உள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடனாகவும், உதவித் தொகையாகவும் நிதியுதவி அளித்து வருகிறது.

1977-79-ல் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், மாவட்ட அளவிலான மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் மூன்றிற்கும் மீனவர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் இரண்டிற்கும் அளித்த மொத்த நிதியுதவி ரூ. 8.07 இலட்சம் ஆகும்; இதில் கடனாக அளிக்கப்பட்டது ரூ. 5.29 இலட்சம் ஆகும்; உதவித் தொகையாக அளிக்கப்பட்டது ரூ. 1.39 இலட்சம் ஆகும். இந்த உதவித் தொகையை தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ஏற்கும். மேற்சொன்ன ஐந்து செயற் குறிப்புகள் குறித்து தமிழ்நாடு அரசுக்கு ஏற்பட்ட செலவு ரூ. 1.30 இலட்சம் ஆகும். மீனவர் மாவட்டக் கூட்டுறவு கூட்டமைப்புகள் மூன்றில் தென்னாற்காடு மாவட்ட மீனவர் கூட்டுறவுக் கூட்டமைப்பு மேற்படி நிதியுதவியைப் பெற மறுத்து விட்டது. எஞ்சிய இரண்டு மீனவர் மாவட்டக் கூட்டுறவுக் கூட்டமைப்புகளுக்கும் இரண்டு மீனவர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளிக்கப்பட்ட நிதியுதவி ரூ. 6.27 இலட்சம் ஆகும்; அதில் கடனாக அளிக்கப்பட்டது ரூ. 4.89 இலட்சமும், உதவித்தொகை யாக அளிக்கப்பட்டது ரூ. 1.38 இலட்சமும் ஆகும்.

1979-80ல் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மீனவர் மாவட்டக் கூட்டுறவுக் கூட்டமைப்புகள் மூன்றிற்கும் மீனவர் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அளித்த மொத்த நிதியுதவி ரூ. 22.07 இலட்சம் ஆகும்; இதில் கடனாக அளிக்கப் பட்டது ரூ. 5.95 இலட்சமும் ஆகும். இதனை தேசிய கூட் டுறவு வளர்ச்சிக் கழகம் ஏற்கும். எஞ்சியுள்ள ரூ. 5.95 இலட்சத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்கும்.

(22). மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.—நீலகிரி மாவட்டத்தில் மீனள வளர்ச்சிக்காக இத்திட்டத்தின் கீழ் ரூ. 3 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டது. உதகமண்டலத்தில் உள்ள வில்சன் மீன் பண்ணையில் தூண்டுதல் முறை மீன் குஞ்சு உற்பத்தி ஆய்வுக் கூடம் கட்டப்பட்டதோடு மேலும் பல மீன் குட்டைகளும் ஏற்படுத்தப்பட்டன. வில்சன் மீன் பண்ணையில் நீர் வழங்கவும் நீர் ஊற்று ஏற்பாடு களைச் செய்யவும் ஏற்கனவே உள்ள குட்டைகளை இவற் றுடன் இணைக்கவும் மேற்கொண்டும் ரூ. 1.00 இலட்சம் நிதியுதவி பெறப்பட்டுள்ளது. இப்பணிகள் நடந்தேறி வரு கின்றன.

வில்சன் மீன் பண்ணைகள் வளாகத்தில் ரூ 1.78 இலட்சம்
செலவில் மீன் காட்சியகம் ஒன்றைக் கட்டுவதற்குரிய திட்டத்
திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது; இப்பணியும் தற்போது
நடந்தேறி வருகிறது.

(23) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்.—
இத்திட்டத்தின் கீழ் மீனளத் துறை மீன் பிடி துறைமுகங்
களையும் விசைப்படகுகளைக் கரை சேர்ப்பதற்கான தோணித்
துறைகளையும் அமைத்து வருகிறது. இப்பணிக்காக மத்திய
அரசிடமிருந்து 1978-79 வரையில் முழு நிதியுதவியும் 1979-
80 முதல் 50 சதவீத நிதியுதவியும் இத்துறை பெற்றுள்ளது.
1976-77ல் மல்லிப்பட்டினம் கோடிக்கரையில் மன் பிடி
தோணித் துறை கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி
வருகின்றன; அவை விரைவில் முடிவடையக் கூடும்.

10 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட செலவில் சென்னையில்
தற்போது பெரிய அளவில் மீன்பிடி துறைமுகம் கட்டப்பட்டு
வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சின்னமுட்டம் என்ற இடத்
தில் பெரிய அளவில் மீன்பிடி துறைமுகம் கட்டுவதற்கு
வகுக்கப்பட்டுள்ள திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல்
அளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இராமநாதபுரம்
மாவட்டத்தில் வாலிநோக்கம் என்ற இடத்தில் இன்னொரு
மீன்பிடித் துறைமுகத்தை உருவாக்கிட செயற் குறிப்புகள்
வகுக்கப்பட்டுள்ளன. தகுந்த இடத்தில் மிதக்கும் தோணித்
துறை ( Floating Jetty ) ஒன்றை அமைப்பதற்
குரிய வாய்ப்பு குறித்து ஆராயப்பட்டு வருகிறது.

7. தமிழ்நாடு மீனள வளர்ச்சிக் கழகம்—

ஏற்கனவே குறிப்பிட்டவாறு இம்மாநிலத்தில் வணிகத்
தன்மை வாய்ந்த மீனளத் திட்டங்கள் செயற்படும் பொறுப்பை
இக்கழகம் ஏற்கிறது. தற்போது இக்கழகம் பின்வரும் திட்டங்
களை நிறைவேற்றி வருகிறது.

1. மீன்பிடி விசைப் படகுகளைக் கட்டுதலும் வழங்கு
தலும்.
2. மெக்சிகன் இழு படகுகளை இயக்குதல்.
3. மீன்களைப் பதப்படுத்துதலும் விற்பனை செய்தலும்,
4. மீன் தூள் தயாரிப்பும் விற்பனையும்.
5. டீசல் பங்குகளை நடத்தல்.



தமிழ்நாடு மீனள வளர்ச்சிக் கழகம் மீனவர்களுக்கு விசைப்
படகுகளை , வழங்குகிறது. அவர்களுக்கு கடன் உதவித்
தொகை வழங்கும் பொருட்டும் மீனள வளர்ச்சிக் கழகம்
இயந்திரமயமாக்கும் திட்டத்தைச் செயலாக்கும் பொருட்டும்
அரசு ரூ. 71.14 இலட்சம் ஒதுக்குவதற்கு ஒப்புக் கொண்டுள்ளது.
எஞ்சிய திட்டங்களுக்கு மீனள வளர்ச்சிக் கழகமே நிதியுதவி
அளிக்கும்

(2) இயந்திரமயமாக்கும் திட்டம்.—தமிழ்நாடு மீனள
வளர்ச்சிக் கழகம். தொடங்கப்பட்ட நாள் முதற்கொண்டு
இதுகாறும் 576 விசைப் படகுகளை வழங்கியுள்ளயுது.
இக் கழகத்தில் ஏற்கெனவே தமது பெயரைப் பதிவு செய்துள்ள
மீனவர்களுக்கு 1980—81 ஆம் ஆண்டில் விசைப் படகுகள்
வழங்குவதென உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(3) மெக்சிகன் இழுபடகுகளை இயக்குதல்.—தமிழ்நாடு
மீனள வளர்ச்சிக் கழகம் இறக்குமதி செய்யப்பட்ட இரு
மெக்சிகன் இழுபடகுகளை இயக்குகின்றது. அவை முக்கிய
மாக இறால் மீன் பிடிப்பதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

(4) மீன்களைப் பதப்படுத்துதலும் விற்பனை செய்தலும்.—
இக்கழகத்தின் பொறுப்பில் பின்வரும் இடங்களில் மீனைப்
பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன:—

1. எண்ணூர்
2. மண்டபம்.
3. தூத்துக்குடி.

(5) மீன் விற்பனை.—இக்கழகம், சென்னையிலும் அதை
சுற்றியுள்ள பகுதிகளிலும் 12 மீன் விற்பனை நிலையங்களை
யும் கோயம்புத்தூர், பெரியார் மாவட்டங்களில் 11 மீன்
விற்பனை நிலையங்களையும், மதுரையில் 4 மீன் விற்பனை
நிலையங்களையும், திருநெல்வேலியில் 4 மீன் விற்பனை நிலை
யங்களையும் நடத்துகின்றது.

பவானிசாகர், திருமூர்த்திநகர்; ஆழியாறு, அமராவதி,
சாத்தனூர் நீர்த்தேக்கங்களில் மீன்பிடி உரிமையை இக்
கழகத்திற்கு அரசு வழங்கியுள்ளது. இந்நீர்த்தேக்கங்களி
லிருந்து கிடைக்கின்ற மீனில் ஒரு பகுதியை மேலே குறிப்பிட்ட
மீன் விற்பனை நிலையங்கள் மூலமாக இக்கழகம் விற்பனை
செய்கிறது. எஞ்சியவை குத்தகைக்கு விடப்படுகின்றன.

(6) மீன் தூள் தயாரித்தலும் விற்பனையும்.—இந்திய
நார்வே திட்டத்தின்படி மண்டபத்தில் பெரிய மீன் தூள்
தயாரிப்பு நிலையம் ஒன்று அமைக்கப்பட்டது. தற்போது.
இந்நிலையம் மீனள வளர்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின்

கீழ் செயல்படுகிறது. இந் நிலையத்தில் தயாரிக்கப்படும் மீன் தூள் பெரும்பாலும் கோழி-கால்நடைத் தீவனமாகப் பயன்படும் பொருட்டு தமிழ் நாடு கோழிப் பண்ணை வளர்ச்சிக் கழகத்திற்கும், பல்வேறு மாநிலங்களிலுள்ள கால்நடை வளர்ப்பு துறைகளுக்கும் விற்கப்படுகின்றன.

(7) டீசல் பங்குகளை நடத்துதல்.—துறைமுகங்களில் மீன்பிடி விசைப்படகுகளை இயக்கும் மீனவர்களுக்கு டீசல் எண்ணெய் கிடைக்கச் செய்யும் நோக்கத்துடன் இக்கழகம் இராயபுரம், மல்லிப்பட்டினம், தூத்துக்குடி ஆகிய இடங்களில் டீசல் பங்குகளை நிறுவியுள்ளது. இவை தவிர, கோடிக்கரையில் ஒரு டீசல் பங்கை நிறுவும் திட்டமொன்று கழகத்திடமுள்ளது.

முடிவுரை :—

மீன் வளத்தைப் பெருக்குவதிலும் மீனவர்களின் பொருளாதார நிலையைச் சீராக்குவதிலும் தற்போதைய அரசு பின்பற்றி வரும் கொள்கையை விளக்க முயன்று அதனை இங்கே சுருங்கக் கூறியுள்ளேன். பொதுமக்கள் அனைவரின் ஒத்துழைப்புடன், இந்நாட்டின் மீன் பிடி தொழிலில் இம்மாநிலம் சிறந்த ஓர் இடத்தைப் பெற முடியுமென நான் உறுதியாக நம்புகிறேன்.

## இணைப்பு II.

(753ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

## தமிழகத்தில் உணவு நிலைமை

### I. அரிசி நிலைமை—கொள்முதலும், விற்பனையும்.

#### 1. அரிசி நிலைமை.

அரிசியைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் நிலைமை மிகவும் திருப்திகரமாக உள்ளது. வெளிச் சந்தையில் அரிசி தாராளமாகவும் நிதானமான விலைகளிலும் கிடைத்து வருகிறது. பெரும்பான்மையான நுகர்வோர் பயன்படுத்தும் சாதாரண ரகப் புழுங்கல் அரிசி வெளிச் சந்தையில் கிலோ ரூ1.90 முதல் ரூ2.20 வரை விற்கப்படுகிறது.

பொது விநியோக முறையின் கீழ் வழங்குவதற்குத் தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தினிடம் கணிசமான கையிருப்பு அரிசி உள்ளது. வெளிச்சந்தையில் அரிசி தாராளமாகக் கிடைப்பதால் பொது விநியோக முறையின்கீழ் மாதந்தோறும் விற்பனையாகும் அரிசியின் அளவு, சென்ற சனவரி மாதம் முதல், மாதம் ஒன்றுக்கு 10,000 டன்களுக்குள்ளாகவே இருந்து வந்துள்ளது. அடுத்த மூன்று நான்கு



மாதங்களில், நெல் அறுவடை இல்லாத காரணத்தினால் வெளிச் சந்தையில் அரிசியின் புழக்கம் குறையக்கூடும் என்பதால், பொது விநியோக முறையில் அரிசிக்குத் தேவை உயரலாம். அப்படி உயர்ந்தாலும் தேவையைச் சமாளிக்கப் போதுமான கையிருப்பு அரசின் கைவசம் உள்ளது.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் மேற்பார்வையில் நடந்து வரும் 'வேலைக்கு உணவு என்ற திட்டத்தின் கீழ் மத்திய அரசின் அனுமதியைப் பெற்று, 1979-80 ஆம் ஆண்டில் மத்திய அரசு உணவுத் தொகுப்பின் அரிசிக்குப்பதிலாக, தமிழக அரசின் கையிருப்பில் இருந்த அரிசியை நாம் பயன்படுத்தி வந்தோம். 1979--80ஆம் ஆண்டுக்கு இத்திட்டத்தின்கீழ்மத்திய அரசு அளித்த ஒதுக்கீடு 73,000 டன்கள். இதைத் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன் கையிருப்பில் இருந்து வழங்கியது. 1980–81ஆம் ஆண்டைப் பொறுத்தவரை இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு தமிழ்நாட்டுக்கு ஒதுக்கீடு செய்யும் அரிசியை மத்திய அரசின் உணவுக் கார்ப்பரேஷனிடமிருந்து நேரடியாகப் பெற்று இத்திட்டத்திற்குப் பயன்படுத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

1979–80-ல் பொது விநியோகத்தின் தேவையை முழுமையாகநிறைவு செய்ததோடல்லாமல், வேலைக்கு உணவுத் திட்டத்திற்கு 73,000 டன்கள் அரிசியும், வெள்ள நிவாரண வேலைகளுகக்கு 4,000 டன்கள் அரிசியும் வழங்கப்பட்டுள்ளது. இதைத் தவிர வெளிநாடுகளுக்கு 50,000 டன்கள் பச்சரிசியும், 5,000 டன்கள் குருணையும் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. கெனியா நாட்டிற்கு 20,000 டன்கள் அரிசியும், பேரு நாட்டிற்கு 10,000 டன்கள் அரிசியும், க்யூபா நாட்டிற்கு 20,000 டன்கள் அரிசியும், மேற்கு ஜெர்மனிக்கு 5,000 டன்கள் குருணை அரிசியும் ஆக மொத்தம் 55,000 டன்கள் இதுவரை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே செய்துள்ள ஒப்பந்தத்தின்படி மேலும் 10,000 டன்கள் அரிசி ஏற்றுமதி செய்யவேண்டும். 55,000 டன்கள் ஏற்றுமதி செய்ததின் மூலமாக ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய் நிகர இலாபம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு கிடைத்துள்ளது. அதுமட்டுமல்லாமல் இதே அரிசியைப் பொது விநியோக முறையின்கீழ் குறைந்த விலையில் விற்றிருந்தால் ஏற்படக்கூடிய 8.10 கோடி ரூபாய் நட்டமும் தவிர்க்கப்பட்டுள்ளது.

#### 2. கொள்முதல்.

இப்பொழுது தமிழ்நாட்டில் கட்டாயக் கொள்முதல் எதுவும் கிடையாது. வர்த்தகர்கள் மீதோ, அரிசி அரைவை ஆலைகள் மீதோ லெவிஎதுவும் கிடையாது. நெல் அரிசி நடமாட்டத் தடைகள் எதுவும் கிடையாது. நெல் வர்த்தகத்தில் இத்தகைய சுதந்திரமான சூழ்நிலையை உருவாக்கி, அதே சமயத்தில் அரிசியின் விலைவாசிகளையும் கட்டுப்படுத்தி, உற்பத்தியாளர்களின் நலனையும் நுகர்வோர் நலனையும் ஒருங்கே காத்து, பொது விநி

யோக முறையைத தேவைக்கு ஏற்பத் திறமையாகச் செயல் படுத்தக் கணிசமான கையிருப்பும் வைத்திருப்பது, இந்த அரசு உணவு முனையில் ஆற்றியுள்ள சிறப்பான சாதனையாகும். சென்ற சில ஆண்டுகளுக்கு முனபு, கட்டாயக் கொள்முதலினால் கஷ்டப்பட்டுக் கசப்பான பல அனுபவங்களைப் பெற்றருந்த விவசாயிகள், இன்றுள்ள சூழ்நிலையில், பெரும் மனநிறைவும், நிம்மதியும் அடைவார்கள் என்று நாம் துணிந்து கூறலாம். கட்டுப்பாடும், தட்டுப்பாடும் கடுமையாக இருந்த நிலை கடந்த கால நிலையாகி, செழிப்பும், சீரான விநியோகம், சுதந்திர மான வர்த்தகச் சூழ்நிலையும் உருவாக்கப்பட்டிருப்பது பொது மக்கள் அனைவரும் பாராட்டிப் போற்றுதற்குரியது.

3. நெல்லின் கொள்முதல் விலைகள்.

நெல்லின் கொள்முதல் விலை மத்திய அரசினால் நிர்ணயிக்கப் படுகின்றது. மத்திய அரசு நியமித்துள்ள விவசாய விளைபொருள் கள் விலைவாசிகள் ஆணைக் குழுவின் பரிந்துரையின் பேரில் இந்த விலை நிர்ணயம் செய்யப்படுகின்றது. கோதுமையின் உற் பத்திச் செலவை விட நெல்லின் உற்பத்திச் செலவு எந்த வகை யிலும் குறைவாக இருக்க முடியாது என்பது வேளாண்மை நிபு ணர்களின் தெளிந்த கருத்து. இருந்தபோதிலும், நெல்லின் கொள் முதல் விலைக்கும் கோதுமையின் கொள்முதல் விலைக்கும் இடையே, பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பெரும் வேற்றுமை காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, 1967–68ஆம் ஆண்டில் கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ. 70 முதல் ரூ. 76 வரை நிர்ணயிக்கப்பட்டிருந்த நேரத்தில், நெல்லின் கொள் முதல் விலை ரூ. 43 ஆகத்தான் நிரிணயிக்கப்பட்டிருந்தது. அது போலவே, 1979–80ஆம் ஆண்டில் கோதுமையின் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூ, 117 ஆக நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலைக்கு மாறாக, சாதாரண ரக நெல்லின் கொள்முதல் விலை ரூ. 95 ஆகத்தான் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நெல்லின் கொள் முணல் விலைக்கும் கோதுமையின் கொள்முதல் விலைக்கும் இடையே உள்ள வேறுபாட்டினை நீக்கவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தி, வேளாண்மை விளைபொருள்கள் விலைவாசி கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவரே 1978–79ஆம் ஆண்டு குழுவின் அறிக்கையில் தனிக் குறிப்பு ஒன்று அளித்திருந்தார். வேளாண்மை பல்கலைக் கழக நிபுணர்கள், வேளாண்மைத் துறை அதிகாரிகள், விவசாய உயர்மட்டக் குழுவின் உறுப்பினராக இருந்த விவசாயப் பிரதிநிதிகள் ஆகியோர் கருத்துக்களை அறிந்து, நம் மாநிலத்தில் நெல்லின் உற்பத்தி விலை குவிண்டா லுக்கு ரூ. 124 அளவில் அமைந்துள்ளது என்று எடுத்துக் காட்டிப் புள்ளி விவரங்களை மத்திய அரசு முன் வைத்துள்ளோம். நம் நாட்டு விவசாயிகளில் மூன்றில் இரு பங்கினர் நெல் உற்பத்தி யாளர்கள். நம் நாட்டு மக்கள் தொகையில் மூன்றில் இரு பங் கினர் அரிசியையே முக்கிய உணவாகக் கொண்டுள்ளவர்கள் ஆகவே, மத்திய அரசின் கொள்முதல் கொள்கை இதுவரை கோதுமைக்கு மட்டுமே ஆதரவாக இருந்து வந்துள்ள நிலையை மாற்றி, நெல்லுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கும் வகையில்



என்பதையும் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். அமையவேண்டும் என்பதையும் நாம் எடுத்துக்காட்டியுள்ளோம். நெல்லின் விலையை உயர்த்துவது, கிராமப் பொருளாதார மேம் பாட்டிற்கு மட்டும் அல்லாமல், நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டு உணர்வை பலப்படுத்துவதற்கும், இன்றியமையாத நடவடிக்கை என்பதையும் நாம் வலியுறுத்தியுள்ளோம்.

1978–79ஆம் ஆண்டில் நெல்லின் கொள்முதல் விலை சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 85 ஆக நிர்ணயிக் கப்பட்டிருந்த நேரத்தில், மத்திய அரசு நம் பரிந்துரைகளைஏற்று நியாயமான விலையை நிர்ணயிக்காவிட்டால், தமிழக அரசேதம் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்து குவிண்டாலுக்கு கூடுதலாக ரூ. 20 அளித்து, நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ள வகை செய்யுமென்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 1979 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 13 ஆம் நாளன்று அறிவித்தார்கள். அதற்கு இணங்க, அப்போது மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்டிருந்த நெல் கொள்முதல்விலை யான ரூ. 85-க்குக் கூடுதலாக ரூ. 20 கொடுத்து, சாதாரண ரக நெல்லை ரூ. 105 என்ற விலைக்கும், சன்ன ரக நெல்லை ரூ. 109 என்ற விலைக்கும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக வாங்க முன் வரவேண்டுமென்று தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் திற்கு அரசு ஆணையிட்டது. 1979–80ஆம் ஆண்டிற்கு மத்திய அரசு நெல்லின் கொள்முதல் விலையை சாதாரண ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூ. 95 என்று நிர்ணயித்த பின்னரும் ரூ. 105, ரூ. 109 என்ற கூடுதலான விலைகளில் தமிழக அரசின் ஆணையின் பேரில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விவ சாயிகளிடமிருந்து நெல்லை வாங்கி வந்துள்ளது. மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல் விலைகளுக்குக்கூடுதலாக, மாநில அரசுகள் ஊக்குவிப்புத் தொகையாகவோ, வேறு எந்த இனத்தில் கூடுதல் தொகையாகவோ அதிக விலை கொடுக்கக் கூடாதென்று மத்திய அரசு ஆணைகள் பிறப்பித்திருந்தது. மாநில அரசு அதிக விலை தர விரும்பினால் அவர்கள் தங்கள் சொந்த நிதிப் பொறுப்பிலிருந்து அவ்வாறு வழங்கிக்கொள்ளலாம் என்று பின்னர் மத்திய அமைச்சர்களால் அறிவிக்கப்பட்டது. ஆனால் இதற்கான அதிகாரபூர்வமான ஆணை எதுவும் வரவில்லை. இவ்வாறு அறிவிப்பு செய்வது மட்டும் பலன் தராது என்பது கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து புலனாகும். மாநில அரசுகள் தங்கள் கொள் முதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரிசர்வ் வங்கி யிலிருந்து கடனாகப் பல கோடி ரூபாய்கள் வாங்குகின்றன. மத்திய அரசினால் நிர்ணயிக்கப்பட்ட கொள்முதல் விலைகளுக்கு கூடுதலான விலைகளில் நெல்லை வாங்கியதால் மாநில அரசு களுக்கு ரிசர்வ் வங்கியின் நிதியுதவி கிடைப்பதில் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. அவ்வாறு அதிக விலை கொடுத்து வாங்குவது கொள்முதல் ஆகாது என்றும், ஆகவே அந்த வர்த்தக நடவடிக் கைகள் ரிசர்வ் வங்கியின் நிதி உதவிக்கு உரியவை ஆகா என்றும் ரிசர்வ் வங்கியின் சார்பில் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. ரிசர்வ் வங்கியின் நிதி உதவி இல்லாமல் கொள்முதல் செய்வதுஇயலாதது. ஆகவே, இந்த இக்கட்டான நிலைமைக்குத் தீர்வு காண்பதற்கு ஒரே வழி, மத்திய அரசு, நெல்லின் கொள்முதல் விலைகளை உயர்த்துவதுதான்.

[1980 ஜூலை 24

தமிழக விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க எடுக்க வேண்டிய
நடவடிக்கைகள் குறித்து பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு தமிழக
முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு பிப்ரவரி திங்களிலேயே
ஒரு குறிப்பு கொடுத்திருந்தார்கள். இந்த அரசு மீண்டும்
பொறுப்பு ஏற்ற பின்பு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்
கள் பாரத பிரதமருக்கு இப்பரிந்துரைகளை வலியுறுத்தி மீண்டும்
ஒரு கடிதம் எழுதியுள்ளார்கள். இவ்வளவு முயற்சிகள் எடுத்
துள்ள போதிலும், வரும் ஆண்டுக்கு நெல்லின் கொள்முதல்
விலையை உயர்த்தவேண்டாமென்று வேளாண்மை விளை
பொருள் விலைவாசிகள் ஆணைக்குழு மத்திய அரசுக்கு பரிந்துரை
செய்ததாக முதலில் வந்த செய்திகள் நமக்கு மிகுந்த ஏமாற்
றத்தை அளித்தன. இதற்கு இடையில், உரங்கள், டீசல் ஆகிய
வற்றின் விலையில் உயர்வு ஏற்பட்டதையொட்டி நெல்லின் கொள்
முதல் விலையை உயர்த்தவேண்டுமென்ற பிரச்னை பரிசீலிக்கப்
பட்டபோது, ஆணைக்குழு குவிண்டாலுக்கு ரூ. 95 ஆக இருந்த
விலையை ரூ. 100 ஆக உயர்த்தி நிர்ணயித்தால் போதும் என்று
அண்மையில் பரிந்துரை செய்துள்ளதாக வந்துள்ள செய்திகள்
நமக்கு மிகுந்த மனவேதனையை அளிக்கின்றன. உற்பத்திச்
செலவின் அடிப்படையில் குவிண்டாலுக்கு ரூ. 130 ஆக நெல்லின்
கொள்முதல் விலையை நிர்ணயிக்கவேண்டுமென்றும், முதற்கட்ட
மாக, கோதுமையின் கொள்முதல் விலையான ரூ. 117-க்கு
ஒத்த அளவிலாவது நெல்லின் கொள்முதல் விலையை உயர்த்த
வேண்டுமென்றும் தமிழக அரசு தொடர்ந்து வலியுறுத்தி வரு
கின்றது. இக்கருத்துக்கு இம்மாமன்ற உறுப்பினர்கள் அனை
வரும் ஒருமனதாக ஆதரவு அளிப்பார்கள் என்ற நம்பிக்கை
எனக்கு உண்டு. இக்கருத்துக்கு மதிப்பு கொடுத்து, முதல்
கட்டமாக கோதுமையின் கொள்முதல் விலைக்கு ஒத்த அளவிலா
வது நெல்லின் கொள்முதல் விலையை நிர்ணயித்து மத்திய அரசு
விரைவில் ஆணைகள் வெளியிடவேண்டுமென்று நாம் தொடர்ந்து
வலியுறுத்துவோம்.

4. பொது விநியோக முறையில் அரிசி விற்பனையின் பொருளா
தாரம்.

சாதாரண ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ. 105, சன்ன
ரக நெல்லுக்கு ரூ. 109 என்ற கூடுதல் விலைகளை விவசாயி
களுக்கு அளித்து, 1979ஆம் ஆண்டு குறுவையிலும் 1980ஆம்
ஆண்டு சம்பாவிலும் ஏறத்தாழ இரண்டு இலட்சம் டன்கள்
நெல்லைத் தமிழக அரசின் சார்பில் தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகம் வாங்கியுள்ளது. இந்த விலையில் நெல்லை
வாங்கி, அரிசியாகத் தயாரித்து விற்பதற்கு அடக்கவிலை, சன்ன
ரக அரிசியைப் பொறுத்தவரை குவிண்டாலுக்கு ரூ. 228-ம்,
சாதாரண ரக அரிசியின் விலை குவிண்டாலுக்கு ரூ. 220-ம் ஆக
அமையும். அதாவது சன்ன ரக அரிசியின் அடக்கவிலை கிலோ
வுக்கு ரூ. 2.28. சாதாரண ரக அரிசியின் அடக்கவிலை கிலோவுக்கு
ரூ. 2.20. ஆயினும் மத்திய அரசின் கொள்முதல் விலைகள்
ரூ. 74-78 ஆக இருந்த நேரத்தில், தமிழகத்தில் பொது
விநியோகமுறையின் கீழ் அரிசியின் சில்லரை விற்பனை விலை



1980 ஜூலை 24]

களாக நிர்ணயிக்கப்பட்டிருந்த சாதாரண ரக அரிசிக்கு கிலோ
ரூ. 1.60. சன்ன ரக அரிசிக்கு கிலோ ரூ. 1.85 என்ற
விற்பனை விலைகளிலேயே, இப்போதும் தமிழக அரசின் ஆணை
யின்பேரில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் விற்று
வருகின்றது. கூடுதல் விலைகளில் நெல்லை வாங்கி, குறைந்த
விலைகளில் அரிசியை விற்பதினால் சன்னரக அரிசியைப் பொறுத்த
வரை ஒரு குவிண்டாலுக்கு ரூ. 43 இழப்பும், சாதாரண ரக அரி
சிக்கு குவிண்டாலுக்கு ரூ. 60 இழப்பும் ஏற்படுகிறது. இந்த
அடிப்படையில் சுமார் 1 இலட்சம் டன்கள் அரிசியைப் பொது
விநியோக முறையின்கீழ் இப்பொழுது நிர்ணயிக்கப்பட்ட விலை
களில் விற்பதன் மூலம் தமிழக அரசுக்கு ரூ. 5.32 கோடி இழப்பு
ஏற்படுகின்றது. ஓர் ஆண்டில் சுமார் 2 இலட்சம் டன்கள் விநி
யோகம் ஆகும் என்று கணக்கு எடுத்துக்கொண்டால்கூட,
ரூ. 10.64 கோடி இழப்பு ஏற்படுகின்றது.

மத்திய அரசு, அயல் நாடுகளிலிருந்து கோதுமையை இறக்கு
மதி செய்துவந்தபோது, அயல் நாட்டுக் கோதுமையையும் உள்
நாட்டுக் கோதுமையையும் விரவி ஒரே விலையில் விற்பதற்காக,
கோதுமை விற்பனைக்கு ஓர் ஆண்டுக்குப் பல கோடி ரூபாய்கள்
மத்திய உணவுக் கார்ப்பரேஷனுக்கு மான்யமாக அளித்து வந்தது.
அதுபோலவே விவசாயிகளின் நலனை முன்னிட்டு நெல்லின் கொள்
முதல் விலையை உயர்த்துகின்ற நேரத்திலே, நுகர்வோரின்
நலனை முன்னிட்டு அரிசியின் விலையைக் குறைந்த அளவில் நிர்
ணயிக்க, இதுவரை கோதுமைக்குத் தந்து வந்தது போலவே,
அரிசிக்கும் மத்திய அரசு மான்யம் தரவேண்டுமென்று இந்த அரசு
கோரியுள்ளது. இக்கோரிக்கையினை மத்திய அரசு ஆதரவாகப்
பரிசீலிக்க வேண்டும் என்பதில் இந்த மாமன்ற உறுப்பினர்
களிடையே கருத்து வேறுபாடு இராது என்று நான் நம்புகிறேன்.
நம் ஒருமித்த குரலுக்கு மத்திய அரசு செவி சாய்க்கும் என்றும்
எதிர்பார்க்கின்றேன்.

5. அரிசியின் சில்லரை விற்பனை விலைகள்.

நெல்லின் கொள்முதல் விலைக்கும், பொது விநியோக முறை
யின்கீழ் அரிசியின் சில்லரை விற்பனை விலைக்கும் இடையே
பெரும் வேறுபாடு உள்ளது என்று சில சமயங்களில் சுட்டிக்
காட்டப்படுகிறது. தாமாக விரும்பி நெல்லை அரசுக்கு விற்க
விரும்பும் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்கு
வதற்கு அறுவடைக் காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட நெல்
வாங்கும் நிலையங்களைப் பரவலாகத் திறக்க வேண்டியுள்ளது.
இவற்றிற்கான நிர்வாகச் செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
பல்வேறு இடங்களில் வாங்கும் நெல்லைக் கிடங்குகளில் சேமித்து
வைத்து, போக்குவரத்து வசதிகள் கிடைக்கின்ற நேரத்திலே
அரைவை ஆலைகள் அதிகமாக உள்ள மாவட்டங்களுக்கு எடுத்துச்
செல்லவேண்டியுள்ளது. ஒரு குவிண்டால் அரிசியைத் தயாரிக்க
13 குவிண்டால் நெல்லுக்கு மேல் தேவை ஆகின்றது. அரைவைக்
கூலியை நாம் தரவேண்டும். சாக்கு போன்ற செலவுகளை ஏற்று
கொள்ளவேண்டும். அரிசி ஆலைகளில் இருந்து பல்வேறு

மாவட்டங்களுக்கும அரிசியை விநியோகத்திற்காக எடுத்துச்
செல்ல வேண்டும். எந்த நேரத்திலும் பொது விநியோக முறை
யின்கீழ் போதிய கையிருப்பு இல்லை என்ற குறைக்கு இடம்
தராமல் முன்னெச்சரிக்கையாக நாம் கணிசமான அளவு கையிருப்
பைச்சேமித்து வைத்துக்கொள்ள வேண்டும். மேலும் நெல்லைக்
கொள்முதல் செய்வதற்காக ரிசர்வ் வங்கியிலிருந்து கடன் பெறு
கின்றோம். இந்தக் கடனுக்கு 11 விழுக்காடு வட்டி செலுத்த
வேண்டும். தனியார் வியாபாரிகள் இத் தொழிலில் ஈடுபடும்
போது, அவர்கள் தங்கள் தேவைகளுக்கு வேண்டிய நெல்லை
மட்டும் வாங்கிக்கொள்ளலாம். தங்களுக்குப் பிடித்தமான ரகங்
களை மட்டும் வாங்கிக் கொள்ளலாம். அதிகப் போக்குவரத்துச்
செலவுக்கு இடம் கொடாமல், சுற்று வட்டாரத்திலேயே விற்றுக்
கொள்ளலாம். அவர்கள் விற்பனை விலைக்கு நிர்ணயமும் கட்டுப்
பாடும் கிடையாது. ஆனால். அரசு பொதுவிநியோகத்தை மேற்
கொள்ளும்போது, உருவாகும் சில அடிப்படை நிர்ப்பந்தங்களை
நாம் மனதில் கொள்ள வேண்டும். தாமாக விரும்பி விவசாயிகள்
தருகின்ற நெல் அனைத்தையும் அவர்கள் நலனை முன்னிட்டு
நாம் வாங்கிக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளோம். ஆகவே,
நெல்லை வாங்கும்போது நம் தேவைக்கு ஏற்ற அளவு வாங்கிக்
கொண்டால் போதும் என்ற வர்த்தக நோக்குக்கு இடம்
கொடாமல், விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு,
அவர்கள் தர முன் வரும் நெல் அனைத்தையும் நாம் வாங்கிக்
கொள்ள வேண்டும். குறிப்பிட்ட சில ரகங்களைத் தேர்ந்
தெடுத்து வாங்குவது என்பது இயலாது. உற்பத்தியாகும்
மாவட்டங்களில் நெல்லை வாங்கி, பற்றாக்குறை மாவட்டங்
களில் உள்ள குக்கிராமங்களுக்கும் அரிசியை எடுத்துச் செல்ல
வேண்டும். தனியார் நடத்தும் வர்த்தகத்தைவிடப் பொது விநி
யோகமுறையின் பொறுப்புகள் மிக அதிகமானவை, விரிவானவை,
உற்பத்தியாளர் நலனைக் காக்கும் வகையிலும் நுகர்வோர்
நலனுக்குப் பாதகம் இல்லாத முறையிலும் செயல்படுவதே,
பொது விநியோக முறையின் இரு அடிப்படை நோக்கங்களாகும்.
இந்த வரம்புகளுக்கு உட்பட்டு மிகச் சிக்கனமான முறையில்
நாம் விநியோகத்தை நடத்தி வருகின்றோம். பங்கீட்டு
முறையோ, பொதுவிநியோக முறையோ செயல்பட்டு வந்த
சென்ற முப்பது ஆண்டுகள் அனுபவத்தை நாம் ஆய்ந்து பார்த்
தால், அரிசியின் சில்லரை விற்பனை விலை, நெல்லை வாங்கும்
விலைக்கு இரு மடங்காகத்தான் தொடர்ந்து இருந்து வந்துள்ளது.
இதே நிலைதான் இன்றும் நீடிக்கின்றது. மேலும், நான்
முன்னால் குறிப்பிட்டதுபோல், இப்போதே அடக்க விலைக்
கும் குறைவான விலையில் நாம் அரிசியை விற்று வருவதால்,
பல கோடி ரூபாய் இழப்பை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.
நெல்லை வாங்கும் விலையோடு அரிசியின் சில்லரை விற்பனை
விலையை ஒப்பிட்டு, அரிசியின் விலை அதிகமாக இருக்கிறதா
என்ற பிரச்னையை அணுகும்போது, இந்த பின்னணியைக்
கொண்டு தான் நாம் ஆராய வேண்டும். அந்த நோக்கு கொண்டு
ஆய்வு செய்தால், தமிழகத்தில் பொதுவிநியோக முறை மிகவும்
திறமையாகவும் சிக்கனமாகவும் நடந்து வருகின்றது என்று
துணிந்து கூறலாம்.





## I. இன்றியமையாப் பொருட்களின் பொது விநியோகம்.

### 1. அரிசி.

பொது விநியோக முறையின்கீழ் மாநிலம் முழுவதிலும்
அரிசி வழங்கும் பணி தொடர்ந்து வருகின்றது. வெளிச்
சந்தையில் அரிசி தாராளமாகவும் நயமாகவும் கிடைத்து வருவ
தால், பொதுவிநியோக முறையின்கீழ் அரிசியின் விற்பனை
தற்சமயம் குறைவாகவே உள்ளது. 1976 ஆம் ஆண்டில் 6
இலட்சம் டன்கள் விநியோகிக்கப்பட்டதற்கு மாறாக, 1978ஆம்
ஆண்டில் 93,000 டன்களுக்குக் குறைந்தது. 1979-ல் கிராமந்
தோறும் நியாயவிலைக் கடைகள் திறக்கப்பட்டதன் விளைவாக,
அரிசி விநியோகம் சற்று உயர்ந்து 1.50 இலட்சம் டன்கள் அளவை
எட்டியது. 1980ஆம் ஆண்டில் அரிசியின் மாதாந்திரச் செலவு
சனவரி முதல் மே மாதம் வரை சராசரியாக 8 முதல் 11 ஆயிரம்
டன்கள் அளவில் உள்ளது.

### 2. கோதுமை— கோதுமைப் பொருள்கள்.

தமிழகத்தில் அரிசி நிலைமை மிகவும் திருப்திகரமாக இருப்ப
தாலும், சிறுதானியங்கள் தாராளமாகக் கிடைப்பதாலும்,
பொது விநியோக முறையின் கீழ் கோதுமையின் புழக்கம் குறைந்து
விட்டது. 1975ஆம் ஆண்டில் அரிசி பற்றாக்குறையும் விலையேற்
றமும் இருந்தபோது, 4.80 இலட்சம் டன்கள் அளவில் இருந்த
கோதுமையின் விற்பனை, அடுத்த மூன்று ஆண்டுகளில் குறைந்து
கொண்டே வந்தது. 1978-ல் 24,000 டன்கள் விற்பனை ஆன
தற்கு எதிராக 1979-ல் 8,500 டன்களே விற்பனை ஆனது.
நடப்பு ஆண்டில் மாதாந்திர விற்பனை சுமார் 1,000 முதல் 1,200
டன்கள் வரையில் உள்ளது. மத்திய அரசு கோதுமையை மாநில
அரசுகளுக்கு விற்கும் மொத்த விலையை உயர்த்தியுள்ள
போதிலும், தமிழக அரசு பொதுமக்களுக்குச் சில்லரை விற்பனை
விலைகளை உயர்த்தாமல், தொடர்ந்து கிலோ ரூ. 1.40 என்ற
விலையிலேயே விற்று வருகிறது.

தமிழ்நாட்டில் 31 கோதுமை அரவை ஆலைகள் இயங்கி
வருகின்றன. இவற்றிற்குத் தேவைப்படும் கோதுமை தாராள
மாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த சில மாதங்களாக
மின்வெட்டு காரணமாக இந்த ஆலைகள் முழு அளவில் இயங்க
முடியாமல் தடங்கல் ஏற்பட்டது. மின்வெட்டுக் காரணமாக
இந்தப் பண்டங்களில் சிறிது பற்றாக்குறை காணப்பட்டதால்,
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், ஆலைகளிலிருந்து
மைதா, ரவையை வாங்கி, நுகர்வோருக்கு, சட்டப்படி நிர்ணயிக்
கப்பட்ட விலைகளுக்கிணங்க, மைதாவை கிலோ ரூ. 1.95
என்றும், ரவையை கிலோ ரூ. 1.90 என்றும் வழங்கி வருகிறது.
அதே போன்று ரொட்டி தயாரிப்போர், உணவு விடுதிகள் போன்ற
மொத்த நுகர்வோருக்கும் மைதாவை வழங்கி வருகின்றது.

மே மாதத்தில் ஏறக்குறைய 3,000 டன்கள் மைதாவையும், 180 டன்கள் ரவையையும் நுகர்பொருள் வாணிபக் கழகம் விற்பனை செய்தது. இதன் காரணமாக வெளிச் சந்தையில் தட்டுப்பாடு நிலை உருவாகாமல் தடுக்கப்பட்டது.

ஒரு நாளுக்கு 30 டன்கள் அரைவைத் திறனுக்குக் குறைவாகவுள்ள சிறிய ஆலைகளை நிறுவ மாநில அரசு அனுமதி அளிக்கலாம் என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்திருந்தது. இதற்கிணங்க 11 புதிய ஆலைகளை, ஆலைகள் இல்லாத மாவட்டங்களிலும் பிற்பட்ட பகுதிகளிலும் நிறுவ, இந்த அரசு அனுமதி அளித்தது. இந்த அதிகாரத்தை மைய அரசு திரும்பப் பெற்றுக்கொண்டு, மேலும் சிறிய ஆலைகளை நிறுவ அனுமதி அளிக்கவேண்டாமென்று அண்மையில் தெரிவித்துள்ளது.

3. சர்க்கரை விநியோகம்.

1978ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் சர்க்கரை மீதான கட்டுப்பாடு அனைத்தையும் நீக்கியதையொட்டி மத்திய அரசு லெவி சர்க்கரை வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. மீண்டும் 1979ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ஆம் நாள் முதல் மத்திய அரசு லெவி சர்க்கரை விநியோக முறையைச் செயல்படுத்தியது. இத்திட்டத்தின்படி, நாட்டில் உற்பத்தியாகும் மொத்த சர்க்கரையில் 65 விழுக்காடு லெவிக்கு ஒதுக்கப்படும். எஞ்சிய 35 விழுக்காட்டை ஆலைகள் நாட்டின் எப்பகுதியிலும் எந்த விலைக்கும் விற்றுக்கொள்ளலாம். நுகர்வோருக்கு வழங்கப்படும் லெவி சர்க்கரையின் விலை கிலோ ஒன்றுக்கு ரூ. 2.85 ஆகும்.

லெவி திட்டத்தின்கீழ் சர்க்கரை தமிழ்நாட்டிற்கு மாதம் ஒன்றுக்கு 19,780 டன்கள் என்ற அளவில் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. சென்னை நகரம், அதன் புறநகர்ப்பகுதி, மாவட்டத் தலைநகரங்கள் ஆகிய பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப அட்டைக்கு 5 கிலோ வீதம் லெவி சர்க்கரை விநியோகம் செய்யப்படுகிறது. இதர நகராட்சிப் பகுதிகளிலும், நகரியப் பகுதிகளிலும் மற்றும் மாவட்டத் தலைநகரங்களையொட்டிய புறநகர்ப்பகுதிகளிலும் மாதம் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் லெவி சர்க்கரை வழங்கப்படுகிறது. நகரப் பஞ்சாயத்துக்கள், கிராமப் பகுதிகள் ஆகியவற்றில் ஒரு குடும்பத்திற்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ லெவி சர்க்கரை வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளில் தற்போது வழங்கப்பட்டு வரும் அளவு மிகக் குறைவு என்றும் இதை உயர்த்த வேண்டும் என்றும் பரவலாகக் கோரிக்கைகள் வந்துள்ளன. இம்மாநிலத்தில் ஏறக்குறைய 106 இலட்சம் குடும்ப அட்டைகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அவற்றில் கிராமப் பகுதிகளிலும் நகரப் பஞ்சாயத்துப் பகுதிகளிலும் ஏறக்குறைய 77 இலட்சம் குடும்ப அட்டைகள் உள்ளன. நகராட்சிப் பகுதிகளில் வழங்கப்படும் அளவுக்குக் கிராமப் பகுதிகளிலும் சர்க்கரை வழங்க வேண்டும் என்றாலும் ஒரு குடும்பத்திற்கு



மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ சர்க்கரை கூடுதலாக வழங்க வேண்டிவரும். அதற்குக் கூடுதலாக ஏறக்குறைய 15,000 டன்கள் லெவி சர்க்கரை தேவைப்படும். மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ வழங்கப்படும் பகுதிகளில் இரண்டு கிலோ வழங்க வேண்டுமென்றால் கூட. மேலும் 7,600 டன்கள் லெவி சர்க்கரை தேவைப்படும். கிராமப் பகுதிகளில் சர்க்கரையின் அளவை உயர்த்துவதற்குக் கூடுதலான லெவி சர்க்கரை ஒதுக்கீடு செய்யும்படி நாம் மத்திய அரசை வற்புறுத்தி வந்துள்ளோம். ஆனால், இதுவரையில் மத்திய அரசிடமிருந்து கூடுதல் ஒதுக்கீடு கிடைக்கவில்லை. கூடுதல் ஒதுக்கீடு கிடைப்பதற்கான வாய்ப்புக் கூறுகளும் தென்படவில்லை. எனினும் கிராமங்களுக்கு அதிக சர்க்கரை வழங்குவதற்கான வசதிகளைச் செய்யும் முயற்சியில் இந்த அரசு முனைந்து ஈடுபட்டுள்ளது. குடும்பக்கார்டுகள் தவிர, அரசு மருத்துவ நிலையங்கள், கல்வி நிலையங்களைச் சார்ந்த உணவு விடுதிகள், அனாதை இல்லங்கள், சிறைகள் ஆகியவற்றின் தேவைக்கும் லெவி சர்க்கரை விநியோகம் செய்யப்படுகிறது.

லெவி சர்க்கரை விநியோக முறை தமிழகத்தில் மிகச் சீராகவும் செம்மையாகவும் நடந்துவருகிறது. ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு நமக்கு ஒதுக்கீடு செய்யும் லெவி சர்க்கரையை அந்த மாதத்திற்குள்ளாகவே ஆலைகளிலிருந்து எடுத்து, நகரம் முதற்கொண்டு குக்கிராமம் வரை விநியோகம் செய்வதற்கான ஏற்பாடுகள் மிகக் கட்டுப்பாடான முறையில் செயல்பட்டு வருகின்றன. ஒதுக்கீடு செய்யப்படும் லெவி சர்க்கரையை ஆலைகளிலிருந்து எடுத்துச் சீராக விநியோகித்து வரும் மாநிலங்களில் தமிழகம் தலையாய இடம் பெற்றிருக்கிறது என்று மத்திய அரசு அண்மையில் நம்மைப் பாராட்டியுள்ளது.

4. வெளிச் சந்தை சர்க்கரை நிலைமை.

தமிழகத்தில் லெவி சர்க்கரையின் விநியோக முறை மிகச் சிறப்பாக நடந்துவந்த போதிலும், வெளிச் சந்தையில் லெவி அல்லாத சர்க்கரையின் விலை உயரும் நிலை உருவாகியுள்ளது. ஆனால், நாட்டின் பிற பகுதிகளில் வெளிச் சந்தையில் சர்க்கரை கிலோ ரூ. 7 என்ற அளவில் விற்கப்பட்டு அதிலும் தட்டுப்பாடு ஏற்பட்டிருந்த ஒரு நிலையிலும் கூட, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் வெளிச் சந்தை சர்க்கரையின் விலை ரூ. 5.50 முதல் ரூ. 6.00 வரைதான் இருந்து வந்தது. ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலிருந்தும் எந்த அளவுக்கு வெளிச் சந்தை சர்க்கரையை மத்திய அரசு ஒவ்வொரு மாதமும் விற்பனை செய்யலாமென நிர்ணயிக்கின்றது. வெளிச் சந்தை சர்க்கரையை ஒரு மாநிலத்திலிருந்து வேறு ஒரு மாநிலத்திற்கு எடுத்துச் செல்வதற்குத் தடை எதுவும் இல்லாத ஒரு நிலையில் தமிழகத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து விற்கப்படும் வெளிச் சந்தை சர்க்கரையின் பெரும் பகுதி மற்ற மாநிலங்களுக்குச் சென்று விடுகிறது. சர்க்கரை நடமாட்டத்துக்குக் கட்டுப்பாடுகள் இல்லாத ஒரு நிலையில் இதைத் தவிர்ப்பதற்கில்லை. சர்க்கரை

[1980 ஜூலை 24

உற்பத்தியில் தமிழகம் உபரி மாநிலமாக இருந்தபோதிலும்
தமிழகத்திலுள்ள சர்க்கரை ஆலைகளிலிருந்து வெளிச்சந்தை
சர்க்கரையின் பெரும்பகுதி வேறுமாநிலங்களுக்குச் சென்றுவிடு
கிறதுஎன்ற காரணத்தினால் தமிழகத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டு
வெளிச்சந்தைதில் சர்க்கரையின் விலையும் உயரக்கூடிய ஒரு நிலை
ஏற்படக்கூடும் என்பதை மத்திய அரசுக்கு நாம் எடுத்துக்
காட்டியுள்ளோம். 1978—79ஆம் சர்க்கரை ஆண்டுடன் ஒப்பிடும்
பொழுது 1979—80 சர்க்கரை ஆண்டில் நாடு முழுவதும் சர்க்
கரையின் உற்பத்தி ஏறக்குறைய 19 இலட்சம் டன்கள் குறைவாக
இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த சர்க்கரை
ஆண்டு உற்பத்தி இந்த ஆண்டு அக்டோபர் மாதம்தான் தொடங்
கும். வெளிச்சந்தை சர்க்கரையின் விலை ஏற்றத்தைத் தடுப்
பதற்குத் தீவிர நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்
டுள்ளது. மொத்த வியாபாரிகள் சர்க்கரையைப் பதுக்கி வெளிச்
சந்தை விலையை உயர்த்திவிடாமல் தீவிரமாகக் கண்காணிக்கப்
படுகின்றது. மேலும் வெளிச்சந்தை சர்க்கரை பல வியாபாரி
கள் கைமாறி, இறுதியில் சில்லரை விற்பனை விலை கட்டுக்கு
மேல் உயர்ந்துவிடுவதைத் தடுக்கும் பொருட்டு, ஒரு மொத்த
வியாபாரி மற்றொரு மொத்த வியாபாரிக்கு சர்க்கரையை
விற்பனை செய்யல்கூடாது என்றும், சில்லரை வியாபாரிகளுக்கும்
மொத்த நுகர்வோருக்கும் மட்டுமே விற்கலாம் என்றும் மத்திய
அரசின் ஒப்புதலோடு இந்த அரசு அண்மையில் ஆணை பிறப்
பித்துள்ளது.

மேலும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் வெளிச்
சந்தை சர்க்கரையை சர்க்கரை ஆலைகளிடமிருந்து வாங்கி
மொத்த நுகர்வோருக்கு வெளிச்சந்தை விலையை விடக் குறைந்த
விலையில் விநியோகம் செய்து வருகிறது. 1980 ஆம் ஆண்டு
சனவரி மாதம் முதற்கொண்டு வெளிச்சந்தையில் சர்க்கரையின்
விலை உயர்ந்த நிலையில், உணவு விடுதிகள், ரொட்டி
தயாரிப்போர், தனியார் மருத்துவ மனைகள் போன்ற
மொத்த நுகர்வோர் நலனை முன்னிட்டு அவர்களுக்கும்
திருமணம் போன்ற விழாக்களுக்கும் வெளிச்சந்தை விலைகள்
விடக் குறைவான விலையில் கழகம் விற்று வந்தது. முன்னெச்
சரிக்கையாக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், கணிச
மான அளவு வெளிச் சந்தை சர்க்கரையை வாங்கி வைத்திருந்த
காரணத்தினால்தான், இந்த ஏற்பாட்டைச் செய்ய முடிந்தது.
இந்த ஏற்பாட்டை மற்ற மாநிலங்களும் பின்பற்ற வேண்டும்
என்று மத்திய அரசு அறிவுரை கூறியுள்ளதே, தமிழக அரசு
எடுத்துக்கொண்ட முயற்சிக்குச் சிறந்த பாராட்டுதலாகும்.
வருகின்ற அக்டோபர் மாதத்தில் தொடங்கும் சர்க்கரை ஆண்டில்
ஆலைகளில் சர்க்கரை உற்பத்தியாகி, வெளிச்சந்தையில்சர்க்கரை
விலை மீண்டும் நிதானப்படும் வரை வெளிச்சந்தை விலைகளை
விடக் குறைவான விலைக்கு விற்க, முயற்சிகள் தொடர்ந்து
மேற்கொள்ளப்படும்.



1980 ஜூலை 24]

## 5. மண்ணெண்ணெய் விநியோகம்.

மண்ணெண்ணெய் விநியோகம் உணவுத்துறையின் அதிகார
வரம்புக்கு உட்பட்டது. டீசல், பெட்ரோல், ஆகியவற்றின்
விநியோகத்தை உள்துறை கவனித்து வருகிறது.

நாடு முழுவதும் பெட்ரோலியம் பொருட்களுக்கு ஏற்பட்
டுள்ள தட்டுப்பாட்டின் விளைவாக தமிழகத்திற்கு மத்திய அரசு
செய்து வந்த மண்ணெண்ணெய் ஒதுக்கீடு கடந்த ஆண்டு
குறைந்தது. எனவே மண்ணெண்ணெய் நுகர்வோர் அனைவருக்கும்
அரசு நிர்ணயித்த விலையில் கிடைக்கஏற்பாடுசெய்யும் வகையில்
பொது விநியோக முறையின்கீழ் மண்ணெண்ணெய் விநி
யோகத்தை அரசு மேற்கொள்ள முடிவு செய்தது. அதன்படி
மண்ணெண்ணெய் குடும்ப அட்டைகளின் பேரில் விநியோகம்
செய்யப்படுகிறது. சென்னை நகரிலும் அதன் புறநகர்ப் பகுதி
களிலும், மாவட்ட தலைநகரங்களிலும் மாதம் ஒன்றுக்கு ஒரு
குடும்பத்திற்கு 10 லிட்டர்கள் வீதம் வழங்கப்படுகிறது. மற்ற
நகராட்சிப் பகுதிகளில் 6 லிட்டர்களும், நகரியங்கள், நகரப்
பஞ்சாயத்துக்கள் ஆகிய பகுதிகளில் 5 லிட்டர்களும், கிராமப்
பகுதிகளில் 3 லிட்டர்களும் மாதம் ஒன்றுக்கு ஒரு குடும்ப
அட்டைக்கு வழங்கப்படுகின்றன. 1980ஆம் ஆண்டு சனவரி முதற்
கொண்டு மத்திய அரசு இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ள
மண்ணெண்ணெய் அளவின் விவரம் பின்வருமாறு.

| | மெட்ரிக் டன்களில். |
|---|---|
| சனவரி | 32,344 |
| பிப்ரவரி | 27,274 |
| மார்ச்சு | 30,780 |
| ஏப்ரல் | 26,959 |
| மே | 27,870 |
| ஜூன் | 24,820 |
| ஜூலை | 26,157 |

கடந்த ஆண்டு அந்தந்த மாநிலத்தில் எவ்வளவு விநியோகம்
செய்யப்பட்டதோ, அதற்குக் கூடுதலாக ஒரு குறிப்பிட்ட
விழுக்காடு அளவிற்கு உயர்த்தி இந்த ஆண்டில் மண்ணெண்ணெய்
மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் என மத்திய அரசு
தெரிவித்திருந்தது. ஆனால் சில மாதங்களில் இந்தஅடிப்படையில்

கூட நமக்குக் கிடைக்கவேண்டிய ஒதுக்கீடு முழுமையாகக் கிட்ட
வில்லை. தமிழகத்தின் குறைந்தபட்ச தேவை மாதம்
ஒன்றுக்கு 30,000 மெட்ரிக் டன்கள் ஆகும். மின்வெட்டு உள்ள
காலங்களிலும் குளிர்காலப் பருவத்திலும் மண்ணெண்ணெயின்
தேவை அதிகமாகி இருக்கும். எனவே சென்ற ஆண்டு
ஒதுக்கீட்டை அடிப்படையாகக் கொள்ளாமல், ஒவ்வொரு மாதத்
திற்கும் நிர்ணயமாகக் குறைந்த பட்சத் தேவைக்கேற்ப, ஒதுக்கீடு
செய்து, வாய்ப்பு இருந்தால், அதை உயர்த்தித்தர வேண்டு
மென்று நாம் மத்திய அரசிடம் வற்புறுத்தியுள்ளோம். மாதாந்திர
ஒதுக்கீடு முறைக்குப் பதிலாக மூன்று மாதத்திற்குஎவ்வளவுதேவை
என்பதை மத்திய அரசு நிர்ணயித்து ஒதுக்கீடு செய்யவேண்டு
மென்ற கருத்தையும் மாநில அரசு மத்திய அரசுக்கு தெரிவித்
துள்ளது. இதன்படி ஒரு மாதத்தில் குறைவாக மண்ணெண்ணெய்
பயன்படுத்தப்பட்டாலும் அடுத்த மாதங்களில் தேவையிருக்கும்
பொழுது, கூடுதலாகப் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு
ஏற்படும். இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இந்த யோசனையை
ஏற்றுக்கொள்வதற்கில்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

குடும்ப அட்டைகளின்பேரில் பொது விநியோகத் திட்டத்தின்
கீழ் இயங்கி வருகின்ற நியாய விலைக் கடைகளின் மூலமாக மண்
ணெண்ணெய் விநியோகம் செய்யப்படுகிறது. இது தவிர, மண்
ணெண்ணெய்த் தொழிலையே நம்பிப் பல கைவண்டிக்காரர்கள்
இத்தொழிலில் ஈடுபட்டிருந்னர். மனிதாபிமான அடிப்படையில்
அவர்களுக்கும் தொடர்ந்து மண்ணெண்ணெய் வழங்குவது
என அரசு முடிவு செய்தது. அதன்படி சென்னை நகரத்திலுள்ள
1,023 கை வண்டிக்காரர்களுக்கு நாள் ஒன்றுக்கு 100 லிட்டர்கள்
மண்ணெண்ணெய் சில்லறை விற்பனைக்காக வழங்கப்படுகிறது.
இதை அவர்கள் கார்டு அடிப்படையில் இல்லாமல் பொது
மக்களுக்கு அரசு நிர்ணயித்த விலையில் விநியோகம் செய்யவேண்
டும். இதே போன்று இதர மாவட்டங்களில் 1,812 கைவண்டிக்
காரர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர்கள் மண்ணெண்ணெய்
வழங்கப்பட்டு வருகிறது. கைவண்டிக்காரர்கள் தவிர சில
சில்லரை வியாபாரிகளும் மண்ணெண்ணெய்த் தொழிலையே
நம்பி இருப்பதாகவும், எனவே அவர்களுக்கும் மண்ணெண்ணெய்
விற்பனைக்கு வழங்கப்படவேண்டும் என்றும் கோரிக்கைகள்
வந்தன. அவற்றைப் பரிசீலித்து சென்னை நகரைத் தவிர மற்ற
மாவட்டங்களில் மண்ணெண்ணெய்த் தொழிலையே நம்பியிருந்த
சில்லறை வியாபாரிகளுக்கு, 500 க்கு மேற்படாமல் குடும்ப
அட்டைகளை இணைத்து விந்த அட்டைகளின் பேரில்மண்ணெண்
ணெய் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இத் திட்டத்
தின்படி 2,383 சில்லரை வியாபாரிகள் பயன் அடைந்தனர்.
சென்னை நகரம், அதன் புறநகர்ப் பகுதிகளைப் பொறுத்த
வரையில் கைவண்டிக்காரர்களுக்கு வழங்கப்படுவதுபோல் நாள்
ஒன்றுக்கு 100 லிட்டர்கள் விதம் மண்ணெண்ணெய்த்
தொழிலையே நம்பி இருக்கும் 154 சில்லரை வியாபாரிகளுக்கு
வழங்கப்பட்டு வருகிறது. தமிழகத்திற்கு மத்திய அரசு ஒன்
வொரு மாதமும் ஒதுக்கீடு செய்யும் மண்ணெண்ணெயில்



குடும்பக்கார்டு அடிப்படையில்
ஏறக்குறைய 20 விழுக்காடு, கைவண்டிக்காரர்கள், தனியார் சில்லரை வியா
அல்லாமல் கை வண்டிக்காரர்கள். இதற்கு மேற்பட்ட அளவில்
பாரிகளுக்கும் வழங்கப்படுகிறது. அந்த அளவுக்கு மண்ணெண்
அவர்களுக்கு ஒதுக்கீடு செய்தால், முறை பலவீனமடையும். இது
ணெய்யின் பொது விநியோக
பொதுநலனுக்கு உகந்ததல்ல.

மண்ணெண்ணெய் சில்லரை விற்பனை விலை சட்டபூர்வமாக
நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சென்னை நகரில் ஒரு லிட்டர் மண்
ணெண்ணெய் விலை ரூ. 1.55. சென்னை நகரின் புறநகர்ப்
பகுதிகளில் ஒரு லிட்டர் விலை ரூ. 1.56 மாவட்டங்களில்
மண்ணெண்ணெயின் சில்லரை விலை விற்பனை லிட்டர் ஒன்
றுக்கு ரூ. 1.59 முதல் ரூ. 1.76 வரை உள்ளது.

**மண்ணெண்ணெய் விநியோகம் பொதுப் பிரச்னைகள்.**

அனைத்து நாட்டு நிலைமையை யொட்டி பெட்ரோலியம்
பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால். இன்னும்
சிறிது காலத்திற்கு நமக்குதேவையான அளவு கிடைப்பது உறுதி
யில்லை என்ற நிலையில், பொதுமக்களுக்கு இன்றியமையாத
மண்ணெண்ணெய்யைப் பொது விநியோக முறையின் கீழ்
விநியோகிக்க முடிவு செய்து, அம்முறையைத் திறமையாகச்
செயல்படுத்தி வருவதன் மூலம், இந்த அரசு இப்பிரச்னையை
கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இதன் பயனாகக் குக்கிராமங்
களுக்கும் மண்ணெண்ணெய் எளிதில் நியாயமான விலையில்கிட்டும்
வாய்ப்பு உருவாகியுள்ளது. மாநிலத்திற்குச் செய்யப்படும்
மண்ணெண்ணெய்யின் ஒதுக்கீட்டை உயர்த்த வேண்டுமென்று
நாம் மைய அரசிடம் வற்புறுத்தி வருகின்றோம். ஆனால் நாடு
முழுவதுமுள்ள நெருக்கடி நிலையிலே அவர்கள் இக்கோரிக்கையை
ஏற்பதற்கான வாய்ப்புக்கூறுகள் அதிகம் இல்லை. ஆகவே கிடைக்
கும் அளவைச் சீராக விநியோகிப்பதுதான் இப்பிரச்னையைத்
தீர்க்க நாம் எடுக்கக் கூடிய உடனடியான நடவடிக்கையாகும்.
இப்பிரச்னைக்கு நிரந்தரமாகத் தீர்வு காணப் பல ஆலோசனை
களையும் இந்த அரசு மைய அரசு முன்வைத்துள்ளது. சில்லரை
விநியோகப் பொறுப்பைப் பொது விநியோக முறையின்கீழ்
அரசு சார்பு நிறுவனங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டியிருப்பதாலும்
சில்லரை விற்பனையை மட்டுமே நடத்துவது அந்த நிறுவனங்
களுக்கு நட்டத்தை ஏற்படுத்தும் என்ற காரணத்தினாலும்,
மண்ணெண்ணெய் மொத்த வியாபார உரிமையிலும் இந்த
நிறுவனங்களுக்குப் பங்கு அளிக்கவேண்டுமென்று நாம் வற்புறுத்
தியுள்ளோம். இக்கோரிக்கையை கொள்கைஅளவில் மைய அரசி
னால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் நடைமுறைக்குக்
கொண்டு வரப்படும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம். பெட்
ரோலியம் பொருட்களைச் சேகரித்து வைக்கும் நிலையங்கள்
பெட்ரோலியம் கம்பெனிகளின் பொறுப்பில் உள்ளன. தமிழகத்
தில் 16 மாவட்டங்களில் இப்பொழுது 6 மாவட்டங்களில்தான்

இந்த நிலையங்கள் அமைந்துள்ளன. மற்ற மாவட்டங்களுக்குத் தேவைப்படும் மண்ணெண்ணெய், பெட்ரோல், டீசல் போன்ற வற்றை இந்த மாவட்ட நிலையங்களிலிருந்துதான் எடுத்துச் செல்லவேண்டியிருக்கிறது. போக்குவரத்துச் செலவுகள் அதிக மாகி உள்ள சூழ்நிலையில், இதில் பல சிக்கல்கள் தாமதங்களும் ஏற்படுகின்றன. ஆகவே அடுத்த மூன்று ஆண்டு காலத்திற் குள்ளாவது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு நிலையத்தை நிறுவுவதற்கு மைய அரசு ஒரு திட்டத்தை வகுக்க வேண்டுமென்று நாம் வலியுறுத்தியுள்ளோம்.

சமையல் வாயு விநியோகத்தில் இன்று மாநில அரசுக்குப் பங்கும் பொறுப்பும் சிறிதும் இல்லை. சமையல் வாயு விநி யோகத்தில் தடங்கல் ஏற்படும்பொழுது மண்ணெண்ணெய்யின் தேவையும் அதிகமாகி விடுகிறது. ஆகவே இந்த நிலையைச் சீர்படுத்த சமையல் வாயு விநியோகத்திலும் மாநில அரசைச் சார்ந்த நிறுவனங்களுக்குப் பங்கு அளிக்கவேண்டுமென்று நாம் மைய அரசிடம் கோரியுள்ளோம். இப்பிரச்னைக்கு நிரந்தரமாகத் தீர்வு காண நாம் நீண்டகால நோக்குடன் செய்துள்ள பரிந் துரைகளை மைய அரசு வெகு விரைவில் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று வலியுறுத்திவருகின்றோம். இதற்கிடை யில் நமக்குக் கிடைக்கும் மண்ணெண்ணெய்யைச் சீராக விநியோகம் செய்வதிலும், இந்த விநியோகத்தைக் கண்காணிக்க வெளியிடப்பட்டுள்ள ஆணைகள் மீறப்படாமல் முன் எச்சரிக்கையான நடவடிக்கைகள் எடுப்பதிலும், மீறப்படுகின்ற நேரத்திலே கடுமையான நடவடிக்கை எடுப்பதிலும், நாம் முனைந்து செயல்பட்டு வருகின்றோம்.

## III. கிராமந்தோறும் நியாய விலைக் கடைகள்.

இந்த அரசு 1977 ஆம் ஆண்டில் பொறுப்பேற்றவுடன் சட்டப் பேரவையில் ஆளுநர் நிகழ்த்திய முதல் உரையிலேயே, வருவாய் கிராமம் ஒவ்வொன்றிலும் ஒரு நியாய விலைக் கடை திறக்கப்படும் என்று அறிவிப்பு செய்யப்பட்டது. இதற்குப்பின் ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகளுக்குப் பின்னர்தான் அனைத் திந்திய அடிப்படையில், பொது விநியோக முறையைப் பயன் படுத்த, கிராமங்களில் நியாய விலைக் கடைகள் திறக்கப்பட வேண்டுமென்ற திட்டம் ஒன்று மத்திய அரசினால் மாநிலங் களுக்குப் பரிந்துரை செய்யப்பட்டது. மத்திய அரசின் பரிந்துரைக்கு முன்பே இத்திட்டத்தைச் செயல்படுத்திய பெருமை தமிழகத்துக்கு உரியது. நம் மாநிலத்தில் இப்பொழுது குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், மற்ற மாநிலங் களில் இக்கடைகள் பெரும்பாலும், தனியார் வியாபாரிகளால் நடத்தப்படுகின்றன. ஆனால், தமிழகத்தில் இக்கடைகள் அனைத்துமே தமிழக அரசால் அமைக்கப்பட்ட தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தாலும், கூட்டுறவு நிறுவனங் களாலும் நடத்தப்படுகின்றன. மாநிலத்திலுள்ள 17,000



நியாய விலைக் கடைகளில் 15,000-க்கு மேற்பட்ட கடைகள் கிராமப் பகுதிகளில் இருக்கின்றன. திருநெல்வேலி, தென்னாற் காடு, தஞ்சாவூர் தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இத்திட்டத் தைச் செயல்படுத்தும் பொறுப்பு 'தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திடமும் மற்ற மாவட்டங்களில் இப்பொருப்பு கூட்டுறவுத் துறையிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

முன்பு ரேஷன் கடைகளில் அரிசி, கோதுமை, லெவி சர்க்கரை ஆகியவை மட்டுமே விற்கப்பட்டு வந்தன. அவை தவிர, பொது மக்களின் அன்றாட தேவைக்கான இன்றியமை யாப் பொருட்களில் முக்கியமானவற்றையும் இக்கடைகளில் விற்பனை செய்யும் வகையில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது இந்த அடிப்படையில், பருப்பு, பயிறு வகைகள், புளி, மிளகாய், உப்பு, தீப்பெட்டிகள் ஆகியவற்றையும் இக்கடைகளில் விற்கப் படுகின்றன. ஏறக்குறைய சென்ற ஆண்டுக்கு முன்னரே மண் ணெண்ணெய் விற்பனையையும் இக்கடைகள் தொடங்கிவிட் டன. மத்திய அரசு இறக்குமதி செய்துள்ள சமையல் எண் ணெய்களில் ஒன்றான பாமோலின்' எண்ணெய் விற்பனையும் இக்கடைகள் மூலம் நடந்து வருகின்றன.

தொடக்க கட்டத்தில் இக்கடைகளில் இழப்பு ஏற்படும் என்பதை அறிந்த அரசு இத்திட்டத்தைச் செயல்படுத்த ஆண்டுக்கு ரூபாய் 4 கோடி மான்யமாக வழங்கி வருகின்றது. இந்த மான்யத் தொகையில் பாதியையாவது ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாம் மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்துள் ளோம். இது வரை மத்திய அரசு நமக்கு மான்யத் தொகையை வழங்க முன்வராதது, நமக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித் துள்ளது.

இந்த நியாய விலைக் கடைகள் சீராகச் செயல் படுகின்ற னவா என்பதை அவ்வப்போது தணிக்கை செய்ய, தமிழ்நாடு நுகர்பொருள் வணிபக் கழகமும், கூட்டுறவு அமைப்புகளும் தணிக்கைப் பிரிவுகளை அமைத்துள்ளன. இது தவிர இக் கடைகளை மேற்பார்வை செய்து, ஒழுங்கீனங்களைக் கண்டு பிடிக்கவும், கடைகள் செம்மையாக நடக்கப் பரிந்துறைகள் செய் யவும், மாவட்ட ஆட்சித் தலைவர் முதலாக, வட்ட ஆட்சித் தலைவர் ஈறாக, பல்வேறு அதிகாரிகளும் அவ்வப்போது பார்வையிட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. உணவு குற்றப் புலனாய்வுத் துறைக் காவலர் பிரிவும் கடைகளை பார்வையிடுகின்றது.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கடை அமைக்கும் பணி ஏறக்குறைய நிறைவு பெற்றுவிட்டது. திட்டத்தின் தொடக்கக் கட்டத்தில் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களும் நிர்வாகத் தடங் கள்களும் ஏற்பட்டபோதிலும், மொத்தத்தில் இத்திட்டம் வெற்றி கரமாகவே செயல்பட்டு எந்த நோக்கத்துடன் கொண்டுவரப் பட்டதோ, அதை நிறைவேற்றி வருகிறது என்பதில் நாம் மன நிறைவு கொள்ளலாம்.

[1980 ஜூலை 24

வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள்.

இன்றியமையாப் பண்டங்களின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி, அவை நியாமான விலையில் பொது மக்களுக்குத் தாராளமாகக் கிடைக்க வழி செய்யும் பொருட்டு கீழ்க்கண்ட வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் நடைமுறையில் உள்ளன.—ஆணை, 197.

2. தமிழ்நாடு கோதுமை, கோதுமைப் பொருள்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974

3. தமிழ்நாடு மணிலா மணிலாப் பொருட்கள் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1974.

4. தமிழ்நாடு வனஸ்பதி (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை' 1974.

5. தமிழ்நாடு சர்க்கரை வர்த்தகங்கள் உரிமம் வழங்கும் ஆணை, 1962.

6. தமிழ்நாடு பயறுகள் (வர்த்தகக் கட்டுப்பாடு)ஆணை, 1974.

7. தமிழ்நாடு மண்ணெண்ணெய் (வர்த்தகக் கட்டுப்பாடு) ஆணை, 1973.

வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளின்கீழ், வணிகர்கள் வியாபாரம் செய்வதற்கு, உரிமம் பெறவேண்டும், மொத்த வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு உரிமங்களும், சில்லரை வியாபாரம் செய்யும் வணிகர்களுக்கு பதிவுச் சான்றிதழ்களும் வழங்கப்படுகின்றன. உரிமங்களைப் புதுப்பிப்பதற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டணத்தைச் செலுத்தி ஒவ்வொரு ஆண்டும் உரிமத்தைப் புதுப்பித்துக்கொள்ள வேண்டும். நெல், அரிசி இன்றியமையாப் பண்டங்களை முடக்கி வைத்து செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தக் கூடிய சூழ்நிலையைத் தவிர்க்கும் பொருட்டு, வர்த்தகங்கள் ஒரே சமயத்தில் கையிருப்பில் வைத்துக் கொள்ளும் அளவிற்கு உச்ச வரம்பு, வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. சமையல் எண்ணெய், பயறுவகைகள், எண்ணெய் வித்துக்களைப் பொறுத்தவரையில் மத்திய அரசு உச்ச அளவுகளை நிர்ணயித்து ஆணை பிறப்பித்துள்ளது. வர்த்தகங்கள் தாங்கள் கொள்முதல் செய்த அளவு, விற்ற விவரங்கள், இறுதி இருப்பு ஆகிய விவரங்களை உரிமங்கள் வழங்கும் அலுவலருக்கு இரு வாரங்களுக்கு ஒரு முறை அனுப்ப வேண்டும்.

பல் வர்த்தகக் கட்டுப்பாடு ஆணைகள் இருப்பதால் தங்களுக்கு நடைமுறையில் பல சங்கடங்கள் உள்ளதெனவும் ஒவ்வொரு ஆண்டும் உரிமங்களைப் புதுப்பிக்க வேண்டியுள்ள



1980 ஜூலை 24]

தெனவும் எல்லா இன்றியமையாப் பண்டங்களிலும் வர்த்தகம் செய்ய ஒரே உரிமம் வழங்கும் முறையைக் கொண்டுவரவேண்டு மென்றும் வர்த்தகங்களிடமிருந்து கோரிக்கைகள் பரவலாக வந்துள்ளன. இவற்றைப் பரிசீலித்து, வர்த்தகங்களின் கோரிக்கையை ஏற்று, மண்ணெண்ணெய், சர்க்கரை நீங்கலாக மேற்சொன்ன ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற பொருள் களுக்கு ஒரே உரிமம் வழங்குவதென்று அரசு முடிவு செய் துள்ளது. வர்த்தக சமுதாயத்தின் நலனைக் கருதி அரசு எடுத்துள்ள இந்த முடிவை வர்த்தக சமுதாயம் வரவேற்கும் என்று அரசு நம்புகிறது. புதிய திட்டத்தின்கீழ் உரிமங்களை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை புதிப்பித்தால் போதுமானது என்றும் விதி செய்யப்படும்.

V. அரிசி அரைவை ஆலைகளை நவீனமயமாக்குதல்.

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 15,000 அரிசி அரைவை ஆலைகள் உள்ளன. இவற்றில் சுமார் 6,000 ஆலைகள் மொத்த வணிகம் செய்யும் பெரிய ஆலைகள், மற்றவை சில்லரை வணிகங்களுக்கும், விவசாயிகளுக்கும் கூலி அரவை செய்பவை. அரைவை செய்யபபடும் அரிசியின் தரத்தை உயர்த்தவும், நெல்லிலிருந்து கிடைக்கும் அரிசியின் அளவை உயர்த்தவும், அரிசி அரைவை ஆலைகளில் நவீன இயந்திரங்கள் பொருத்த வேண்டுமென்று மத்திய அரசு 1970 ஆம் ஆண்டிலேயே ஆணையிட்டது. நவீன இயந்திரங்கள் வாங்குவதில் சிரமமிருக்கிற தென்று ஆலை அதிபர்கள் முறையீடுகள் செய்ததன் பேரில், இம் மாநில அரசு செய்த பரிந்துரையை ஏற்று, மத்திய அரசு, நவீன இயந்திரங்களை பொருத்துவதற்கான காலக்கெடுவை அவ்வப்போது நீட்டித்து வந்தது.

ஒரு அல்லருக்கு மேல் பொருத்தப்பட்ட ஆலைகள், ஷெல்லர் பொருத்தப்பட்ட பழைய ஆலைகள், ஆகியவற்றில் நவீன இயந்திரங்களை பொருத்துவதற்கான காலக்கெடு 1980 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் வரையில் மட்டும் கொடுக்கப்பட்டிருந்தது. மாநில அரசின் பரிந்துரையை ஏற்று இந்தக் காலக்கெடுவை 1981 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 30 ஆம் நாள் வரை மத்திய அரசு நீட்டித்து ஆணையிட்டுள்ளது.

பல்வேறு ரக அரைவை ஆலைகளுக்கு நவீன இயந்திரங்கள் பொருத்த வேண்டிய காலக்கெடு கீழே விவரிக்கப்பட்டுள்ளது :—

ஒன்றுக்கு மேற்பட்ட ஹல்லர் அல்லது ஷெல்லர் பொருத்தியுள்ள ஆலைகள்.

ஏற்கனவே இயங்கும் ஆலைகள், கால அவகாசம்.

30—4—1975-க்கு முன் உரிமம் பெற்றவை. 30—4—1981 வரை

புதிய ஆலைகள்—

| | |
|---|---|
| 30—4—1977-க்கு முன்பு கட்டிடம் கட்டி, இயந்திரங்களை பொருத்தி உரிமத்திற்கும் மனு 30—4—1977-க்கு முன்பு செய்ய பட்டவை. | உரிமம் வழங்கப்படும் நாளிலிருந்து ஓராண்டுக்காலம். |
| 30—4—1977-க்கு பின் நிறுவப்பட்ட அல்லது உரிமத்திற்கு மனுச்செய்யப்பட்ட புதிய ஆலைகள். | உரிமம் வழங்கப்படுவதற்கு முன் நவீன இயந்திரங்கள் பொருந்தப்பட்டிருக்க வேண்டும். |

ஒரே ஒரு ஹல்லர் பொருத்தப்பட்ட ஆலைகள்—

| | |
|---|---|
| ஏற்கெனவே இயங்கும் ஆலைகள். | 6—9—1981 வரை. |

புதிய ஆலைகள்—

| | |
|---|---|
| 15 குதிரை வேகத்திற்குக் குறைவான மோட்டாருடன், கிராம பகுதிகளில் நெல்லை வேகவைத்துப் புழுங்கல் அரிசியாகத் தயாரிக்கும் வசதிகளில்லாமலும், வாடிக்கைக்காரர்கள் கொண்டுவரும் நெல்லை அப்படியே அரைவை செய்தும் வரும் ஆலைகள். | உரிமம் வழங்கப்படும் நாளிலிருந்து ஐந்தாண்டு காலம். |
| மற்ற புதிய ஆலைகள் (அதாவது நகர பகுதிகளிலுள்ள ஆலைகளும் 15 குதிரை வேகத்திற்கு மேற்பட்ட மோட்டார் பொருத்தப்பட்ட கிராம பகுதிகளில் உள்ள ஆலைகளும்). | உரிமம் வழங்கும் முன்பாகவே நவீன இயந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்க வேண்டும். |

அரவை ஆலைகளை நவீனமயமாக்குவதில் ஆலையாளருக்கு அறிவுரைகள் வழங்கவும், அவர்களுக்குத் தேவையான கடன் வசதிகளை பெறுவதில் உதவுவதற்கும்; அரசு ஒரு குழுவை உணவு வழங்கு துறையின் இணை ஆணையாளர் தலைமையில் நியமித்துள்ளது. இக்குழுவில் சில மாவட்ட அரிசி ஆலை உரிமையாளர் சங்கங்களின் தலைவர்களும் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இக்குழு இதுவரையில் நான்கு கூட்டங்களை நடத்தியுள்ளது. ஆலைகளை நவீனமயமாக்குவதில் உள்ள சிரமங்களை இக்குழுவில் விவாதித்து அதன் தொடர்பாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்துடன், பேச்சு வார்த்தைகள் நடத்தி அக்கழகத்தின் மூலமாக ஆலை





யாளர்க்குக் கடன் வசதி ஏற்பாடு செய்யப்பட்டது. நவீன மயமாக்கப்படும் ஆலைகளுக்குக் கூடுதல் மின் சக்தி தேவை. அதை பெறுவதற்கு செல்நிலைச் சான்றிதழ் (Solvency Certificate) பெறவேண்டுமென தமிழ்நாடு மின் சார வாரியம் நிர்ணயித்திருந்த விதி தளர்த்தப்பட்டுள்ளது. ஆலைகள் நவீனமயமாக்கப் புது இயந்திரங்களைப் பொருத்த அனுமதி கோரும்பொழுது, சுகாதாரத் துறை அந்த ஆலைகளில் சில மாறுதல்களைச் செய்யவேண்டுமென கட்டாயப்படுத்து வதாகும், ஆனால் அவை சாத்தியமற்றவையெனவும் குழுவில் தெரிவிக்கப்பட்டதையொட்டி, நவீனமயமாக்கும் அரிசி அரைவை ஆலைகளை பொருத்தவரை, இத்தகைய நிபந்தனை களைக் கடுமையாகச் செயல்படுத்த வேண்டாமென அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. அரசு அதனை ஏற்றுக்கொண்டு போதிய பாதுகாப்பு வசதிகள் இருந்தால் அத்தகைய ஆலை களின் கட்டிட அமைப்பில் மாறுதல் செய்ய வற்புறுத்த வேண்டாமென்று 1980 ஆம் ஆண்டு மே திங்கள் 6 ஆம் நாள் அன்று மக்கள் நல்வாழ்வுத் துறையிலிருந்து ஆணை பிறப்பித் துள்ளது.

## VI விலைவாசிகளின் நிலைமை.

பொதுவாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் முதற்கொண்டு அக்டோபர் வரை, அறுவடையோ, விவசாயப் பொருட்கள் உற்பத்தியோ அதிகம் இல்லாத பருவ இப்பருவத்தில் விலைவாசிகள் சற்று ஏறுமுகமாக இப்போது ஆண்டு தோறும் காணப்படும் போக்கு. மேலும் விலைவாசிகள் உயர்வுக்கான காரணங்கள் மாநில அரசுகளின் கொள்கைகளுக்கு முற்றிலும் உட்பட்டவை அல்ல. மத்திய அரசு பின்பற்றும் நிதிக்கொள்கை, நாணயப் புழக்கம், வங்கி தரும் நிதி உதவி, இறக்குமதி ஏற்றுமதிக் கொள்கைகள், பல்வேறு மாநிலங்களுக்கு இடையே இன்றியமை யாப் பொருட்களின் நடமாட்டம், போக்கு வரத்துச் செலவுகள், ரெயில்வேக்களில் சரக்குப் பெட்டிகள் கிடைக்கும் வாய்ப்புகள், பெட்ரோல், டீசல் போன்றவற்றின் விலை உயர்வுகள்—இவை யெல்லாம் விலைவாசிகளைப் பெரிதும் பாதிக்கின்றன. மாநில அரசின் அதிகார வரம்புக்கு உட்பட்ட எல்லா நடவடிக்கைகளை யும் இந்த அரசு தீவிரமாக எடுத்து விலைவாசிகளைத் தன்னால் இயன்றவரை கட்டுப்படுத்த முயன்று வருகிறது.

### அரிசியின் விலை.

சென்ற ஆண்டில் நிலவி வந்த விலைகளுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டு அரிசியின் விலை கிலோவுக்குச் சராசரி 25 பைசா கூடியுள்ளது. இந்த விலை உயர்வுக்கு முக்கிய காரணம், இந்த ஆண்டு வட மாநிலங்கள் பல வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தால் நெல் உற்பத்தியாகும் தென் மாநிலங்களிலிருந்து அங்கு அரிசி பெருமளவில் செல்வதேயாகும். மற்றொரு காரணம், நெல்லின் உற்பத்திச் செலவு அதிகரித்திருப்பதினால் விவசாயி

கள் விற்கும் விலை உயர்ந்துள்ளது. இருந்த போதிலும் தமிழ கத்தில் அரிசியின் வெளிச் சந்தை விலைகள் மொத்தத்தில் நிதானமாகவே உள்ளன. நம் கையிருப்பும் கணிசமாக இருப்ப தால் பொது விநியோக முறையில் அரிசியின் விநியோகத்தை விரிவுபடுத்தி வெளிச் சந்தையில் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முடியும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

## சிறு தானியங்கள்.

கம்பு, கேழ்வரகு, சோளம் போன்ற சிறு தானியங்களின் விலைகளும் கட்டுக்கடங்கியே கிலோ சுமார் 1.30 வாக்கில் நிலவி வருகின்றன.

## பயறு, பருப்பு வகைகள்.

பயறு பருப்பு வகைகளைப் பொறுத்தவரையில் தமிழகம் எப்பொழுதுமே பற்றாக்குறை மாநிலமாகத்தான் இருந்து வருகிறது. கடலைப் பருப்பு துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றில் நம் மாநிலத்தில் உற்பத்தியாகும் அளவுக்கும் புழக்கத்திற்கு இங்கே தேவைப்படும் அளவுக்கு ஏறத்தாழ 5 இலட்சம் டன்கள் குறைபாடு இருந்து வந்துள்ளது. மேலும் இந்த ஆண்டு பல வட மாநிலங்கள் வரட்சியால் பாதிக்கப் பட்டுள்ளதால் பருப்பு வகைகள் உற்பத்தியாகும் அம்மாநிலங் களின் உற்பத்தி நிலையங்களிலேயே விலைகள் கூடிவிட்டன.

கடலைப் பருப்பைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டை விட விலை கிலோ ஒன்றுக்கு 1 ரூபாய்க்குமேல் கூடியுள்ளது. இதற்குக் காரணம் வட மாநிலங்களில் இவ்வாண்டு உற்பத்தி பெருமளவு, வறட்சி காரணமாகக் குறைந்துள்ளது. கடலை அயல்நாடுகளில் பயிர் செய்யப்படாததால், அதை இறக்குமதி செய்யவும் வாய்ப்பில்லை.

துவரம்பருப்பை பொறுத்த வரையில், வெளிச் சந்தையில் விலை கிலோவிற்குச் சுமார் ரூபாய் 4.75 ஆக உள்ளது. சென்ற ஆண்டும் இதே விலைதான் நிலவி வந்தது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம், தரத்தைப் பொறுத்து, கிலோ ரூ. 3.88 முதல் ரூ. 4.25 வரை உள்ள விலைகளில் விற்று வரு கின்றது.

உளுத்தம் பருப்பைப் பொறுத்தவரையில் வெளிச் சந்தையில் விலை சென்ற ஆண்டைப் போல் கிலோ ரூ. 4.15 அளவில் உள்ளது. தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகம் உளுத்தம் பருப்பைக் கிலோ ரூ. 3.50 அளவில் விற்று வருகிறது. துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவற்றைப் பொறுத்தவரை, உள் நாட்டில் உற்பத்தி பாதிக்கப்பட்டிருந்த போதிலும், வெளிநாடு களிலிருந்து இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாகப் பற்றாக் குறை ஈடு செய்யப்பட்டு, விலைகளும் நிதானமாகவே உள்ளன.



## சமையல் எண்ணெய்கள்.

சமையல் எண்ணெய்களைப் பொறுத்தவரையில் தமிழ் நாட்டில் அதிகம் புழங்குவது கடலை எண்ணெய்தான். வெளிச் சந்தையில் கடலை எண்ணெய்யின் விலை கிலோ ஒன்றுக்கு இப்பொழுது சுமார் ரூ. 10.90 அளவில் அமைந்துள்ளது. விலை உயர்விற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று அனைத்திந்தியாவிலும், குறிப்பாக தமிழ்நாட்டிலும், இவ் வாண்டு கோடை மணிலாப் பயறு உற்பத்தி பெருமளவு பாதிக் கப்பட்டது. மற்றொன்று, தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவில் வேறு மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டதேயாகும். கடலை எண்ணெய் அல்லது மணிலாப் பயறு ஆகியவற்றை ஒரு மாநிலத்திலிருந்து மற்றொரு மாநிலத்திற்கு எடுத்துச் செல் வதை ஒழுங்குபடுத்தத் தடைகள் எதையும் மாநில அரசு விதிக்கக் கூடாதென்பதில் மத்திய அரசு கண்டிப்பாக உள்ளது.

நல்லெண்ணெய்யைப் பொறுத்தவரையில் நம்முடைய தேவை களில் பெரும் பகுதி ஆந்திராவிலிருந்தும் ராஜஸ்தானிலிருந்தும் வருகிறது. அந்த மாநிலங்களிலேயே உற்பத்திக் குறைவின் காரணமாக விலைகள் உயர்ந்துவிட்டன. சென்ற ஆண்டு கிலோ ரூ. 8.50 என்ற விலையில் விற்று வந்த நல்லெண்ணெய் இப் பொழுது கிலோ ரூ. 13.00 முதல் 14.00 வரை விற்று வருகிறது.

தேங்காய் எண்ணெயின் புழக்கம் தமிழகத்தில் அதிகமில்லை. நம்முடைய தேவை முழுவதும் கேரள மாநிலத்திலிருந்தே தான் வருகிறது. சென்ற ஆண்டு கிலோ ரூ. 13.00 என்ற விலையில் விற்று வந்த தேங்காய் எண்ணெய் இப்பொழுது ரூ. 16.00 அளவில் விற்று வருகிறது. இதற்குக் காரணம் உற்பத்தி மாநிலத் திலேயே விலைகள் கணிசமாக உயர்ந்து விட்டதேயாகும்.

சமையல் எண்ணெய்களின் விலைகளைக் குறைப்பதற்கு மத்திய அரசு எடுத்துக் கொண்டுள்ள முக்கிய நடவடிக்கை. சில வகை சமையல் எண்ணெய்களை அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விநியோகிப்பதுதான். அவர்கள் இறக்குமதி செய்யும் எண்ணெய்களின் பெரும் பகுதி கடுகு எண்ணெய் இனத்தைச் சேர்ந்தது. இந்த எண்ணெய், வங்காளம், ராஜஸ்தான், ஒரிஸா போன்ற வட மாநிலங்களில் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் நம்முடைய மாநிலத்தில் இதைப் போது மக்கள் பயன் படுத்துவதேயில்லை. மத்திய அரசு இறக்குமதி செய்யும் 'பாமோலின்' என்ற எண்ணெய் வகை மட்டுமே தமிழக மக்க ளுக்கு ஏற்புடையதாய் உள்ளது. இதில் நாம் மத்திய அரசிட மிருந்து மாதம் 1,000 டன்கள் ஒதுக்கீடு பெற்றுப் பொது விநியோக முறையில் விற்று வந்தோம். இப்பொழுது மாதம் 2,000 டன்கள் அளவில் பெற்று விநியோகம் செய்யும் முயற்சிகளை மேற்கொண்

டுள்ளோம். 'பாமோலின்' விற்பனையை விரிவுபடுத்துவதன்
மூலம், சமையல் எண்ணெய் விலைகளை ஓரளவு நிதானப்படுத்த
முடியும் என்று எதிர்பார்க்கின்றோம். 'பாமோலின்' விற்பனை
விலை கிலோ ரூ. 8.25.

புளி:

நம் மாநிலத்தில் தேவைகளில் முக்கால் பங்கு
வெளி மாநிலங்களிலிருந்து, குறிப்பாகக் கர்நாடக மாநிலத்தி
லிருந்தும், ஆந்திர மாநிலத்திலிருந்தும் வருகிறது. விளைச்சல்
குறைவினால் அங்கு விலை உயர்வு காரணமாக இங்கும் புளி
விலை உயர்வாக கிலோ ரூ. 7.50 அளவில் உள்ளது.

தனியாவின் விலையும் வெளிச் சந்தையில் ஏறி விட்டது. தமிழ்
நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தன் கையிருப்பில் உள்ள
தனியாவை நியாய விலைக் கடைகளின் மூலம் கிலோ ரூ. 5.40
என்ற விலைக்கு விற்று வருகிறது.

மிளகாயைப் பொறுத்த வரையில் சென்ற ஆண்டைவிட
விலைகள் சற்று குறைந்துள்ளன.

சிமிட்டி:

இவற்றைத் தவிர, சிமிட்டியிலும் தட்டுப்பாடு ஏற்பட்
டுள்ளது. சிமிட்டி விநியோகத்தைத் தொழில் துறை கவனித்த
வருகிறது. மத்திய அரசு மூன்று மாதங்களுக்கு ஒருமுறை
ஒதுக்கீடு செய்யும் சிமிட்டியை தொழில் துறை விநியோகம்
செய்யும். இந்த விநியோகத்தில் தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகமும் கூட்டுறவு அமைப்புகளும் முதன்முறையாகப்
பங்கு கொண்டுள்ளன. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்
கழகம் இதுவரை மாநிலம் முழுவதும் சுமார் 3.5 இலட்சம்
டன்களை விநியோகித்துள்ளது. வட்ட ஆட்சித் தலைவர்கள்
அளிக்கின்ற அனுமதிச் சீட்டுகளின் பேரில் பதிவு செய்துகொண்ட
வரிசைக் கிரமப்படி மிசச் சீராக தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகம் சிமிட்டியை விநியோகம் செய்கிறது.

விறகு:

சென்னை நகரில் விறகு விலை உயர்வைக் கட்டுப்படுத்தும்
நோக்கத்துடன் வனத் துறையின் உதவி கொண்டு
காடுகளிலிருந்து விறகை எடுத்து வந்து நியாய விலைகளில்
ல்சன்னை நகரில் விற்க ஒரு திட்டம் வகுகக உணவுத் துறை
முனைப்பாக செயல்பட்டு வருகிறது. இத் திட்டத்தை இம்மாத
இறுதிக்குள் தொடக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



இரயில்வே துறையுடன் ஒருங்கிணைப்பு:

இரயில்வே சரக்குப் பெட்டிகள் போதிய அளவு உரிய காலத்
தில் கிடைக்காதது விலைவாசிகளின் உயர்வுக்கு ஒரு காரண
மாகும். இச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கு பல்வேறு துறைகளின்
சிரமங்களையும் அறிந்து இரயில்வே தலைமை அதிகாரிகளுடன்
கூடிப் பேசி கூடியவரை சிக்கல்களை தீர்க்கும் பொறுப்பு உணவுத்
துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பாட நூல் நிறுவனத்
திற்கு வரவேண்டிய காகிதத்தை எடுத்துவரவும், நிலக்கரி, உப்பு
ஆகியவற்றின் போக்குவரத்துக்குத் தேவைப்படும் சரக்குப்பெட்டி
கள் ஒழுங்காகக் கிடைப்பதற்கும் இந்த பேச்சு வார்த்தைகள்
பெருமளவு பயன்பட்டுள்ளன. ஆனால் நிலக்கரியைப் பொறுத்த
வரையில் சரக்குப் பெட்டிகள் முக்கியமாக கல்கத்தாவிலிருந்து
வரவேண்டியுள்ளதால் இப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு
காண இயலவில்லை. இரயில்வேக்களுக்கு வேண்டிய நிலக்கரி
கிடைப்பதிலேயே பல சிரமங்கள் ஏற்பட்டுள்ளன என்று அத்
துறையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருந்தபோதிலும்
பல்வேறு துறைகளிலும் உள்ள பிரச்சினைகளையும் இரயில்வே
அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்து அவற்றிற்கான
தீர்வு காணும் முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்
படுகின்றன.

உணவு விடுதிகளில் பண்டங்களின் விலை.

உணவு விடுதிகளில் உணவுப் பண்டங்களின் விலைகள் மிக
உயர்ந்துள்ளது. அரசுக்குக் கவலை அளிப்பதாக இருக்கின்றது.
இவ் விலைகளைக் குறைக்கும் பொருட்டு மீண்டும் ஒரு முறை
மாவட்ட உணவு விடுதிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் பேச்சு
வார்த்தைகள் நடத்தி ஓர் உடன்பாடு காண இயலுமா என்பதைப்
பரிசீலிக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்
டுள்ளனர். இப் பேச்சு வார்த்தைகளினால் பலன் கிடைக்கின்
றதா என்ற நிலைமை தெளிவான பின்பு மாநில அளவில்
இப்பிரச்சனை பரிசீலிக்கப்படும். உணவு விடுதி அதிபர்கள்
விலைகளைக் குறைக்கத் தாமாக முன்வந்து பொதுமக்கள் நல
னுக்கு உகந்த முறையில் செயல்படும் சூழ்நிலையை உருவாக்க
வேண்டும் என்பதில் அரசு மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. அவ்
வாறு விலைகளைக் குறைக்க அவர்கள் தாமாக முன்வரவில்லை
எனில், இட்டிலி, தோசை, காபி, தேனீர், ஜனதா சாப்பாடு ஆகிய
முக்கிய பண்டங்களின் விலைகளையாவது நியாயமான அளவில்
நிர்ணயிக்க சட்டபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பது குறித்து
இம்மாமன்றத்திலுள்ள பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகளையும்
கலந்துகொண்டு நடவடிக்கை எடுக்க அரசு உறுதிகொண்டுள்ளது.

VII. உணவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை.

உணவுப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறை 1964-ல் நிறுவப்
பட்டது. இத் துறைக்கு ஒரு துணை இன்ஸ்பெக்டர்-ஜெனரல்
தலைமை வகிக்கிறார். 1979-ல் மாநிலத்திற்கு வெளியே

எடுத்துச் செல்லப்படும் நெல் அரிசிக்கு லெவி செலுத்த
வேண்டியதில்லை என்று முடிவு செய்த பிறகு இத் துறையில்
பணியாளர்கள் கணிசமாகக் குறைக்கப்பட்டார்கள். பதுக்கலைத்
தடுப்பதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கத் தனியாக ஒரு பிரிவு
அண்மையில் அமைக்கப்பட்டுள்ளது. உணவுப்பொருட்கள் தொடர்
பான பல்வேறு கட்டுப்பாடு ஆணைகளை அமல்படுத்துவதுடன்,
குறிப்பாக இன்றியமையாப் பண்டங்கள் இருப்பு, விலைகளை
அறிவித்தல், கணக்குகள் வைத்தல் ஆணையையும், சர்க்கரை
பருப்பு வகைகள், சமையல் எண்ணெய்கள், இருப்பு வைப்பதில்
உச்சவரம்பு ஆணைகளையும் அமலாக்குவதில் இத்துறை முனைப்
பாகப் பணியாற்றுகிறது.

1979ஆம் ஆண்டில் இத் துறை 842 குற்றங்களைப் பதிவு
செய்தது. இவற்றில் 825 இன்றியமையாப் பண்டங்களின்
சட்டத்தின்கீழும், 17 குற்றங்கள் இந்தியன் பீனல்கோடு/இன்றி
யமையாப் பண்டங்கள் சட்டம் ஆகியவற்றின் கீழும் பதிவு
செய்யப்பட்டன. 270 குற்றங்களைப் பொறுத்தவரை மாவட்ட
ஆட்சித்தலைவர்கள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய அனுமதி
அளித்தனர். 153 குற்றவாளிகள் தண்டனைபெற்றனர். 64 குற்றங்
களைப் பொறுத்தவரை கைப்பற்றப்பட்ட பண்டங்கள் பறிமுதல்
செய்யப்பட்டன. 1979 இறுதியில் 115 குற்றங்கள் நீதிமன்றங்கள்
முன்பு விசாரணையில் இருந்தன. 1980-ல் இத் துறை
மேலும் தீவிரமாகப் பணியாற்றி முதல் 5 மாதங்களில் 468 குற்றங்
களை கண்டுபிடித்தது. இவற்றில் கைப்பற்றப்பட்ட இன்றிய
மையாப் பண்டங்களின் மதிப்பு 56 இலட்சம் ரூபாயாகும்.

அண்மையில் சென்னையில் ரூ. 2.63 கோடி மதிப்புள்ள
பாமோலின் எண்ணெய் பதுக்கி வைக்கப்பட்டிருந்தது கண்டு
பிடிக்கப்பட்டது. இதுபற்றி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

## VIII. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

தமிழகஅரசு வகுக்கும் உணவுக்கொள்கைகளை நடைமுறையில்
செயல்படுத்தி, கொள்முதல், சேமிப்பு, பொது விநியோகம்
ஆகியவற்றைத் திறமையாக நடத்துவதற்கான ஆயத்தங்களை
செய்யும் பொறுப்பு இக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
நேரடி நெல் வாங்கும் நிலையங்களைத் திறந்து தமிழக அரசு
நிர்ணயிக்கும் விலைகளில் நெல்லை விவசாயிகளிடமிருந்து வாங்கி
சேமித்து வைத்து அரைவை செய்து அரிசியை பல்வேறு நியாய
விலைக் கடைகள் மூலமாக விநியோகிப்பதற்கான மொத்த,
வர்த்தகப் பொறுப்பை இக்கழகம் ஏற்றுக் கொண்டுள்ளது. பொது
விநியோக முறை எந்த நிலையிலும் முறிவடைந்து விடாமல்
பாதுகாப்பது இக்கழகத்தின் முக்கிய பணிகளில் ஒன்றாகும்.
கட்டாயக் கொள்முதலோ, ஆலைகள் மீதும் வர்த்தகர்கள்மீதும்



லெவியோ, இல்லாத இன்றைய சூழ்நிலையிலும், விவசாயிகள்
விரும்பித் தர முன் வரும் நெல்லை வாங்குவதில் இக்கழகம்
முனைந்து செயல்படுகிறது. நெல்லை அரைவை செய்யும் பதின்
மூன்று நவீன அரிசி ஆலைகளை நிர்வகித்து வருகிறது. இக்கழகம்
இந்த ஆலைகளின் நிர்வாகம் இக்கழகத்தின்பொறுப்புக்கு மாற்றப்
பட்ட பின், இவை லாபகரமாக இயங்குவதுடன், தரமான
அரிசியும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

நெல், அரிசி விநியோகம் தவிர, லெவி சர்க்கரை விநியோகத்
திற்கான மொத்தப் பொறுப்பையும் இக்கழகம் ஏற்றுக்கொண்
டுள்ளது. மத்திய அரசு லெவி சர்க்கரையைப் பல வேளைகளில்
பல்வேறு மாநிலங்களில் உள்ள சர்க்கரை ஆலைகளிடமிருந்து
ஒதுக்கீடு செய்கிறது. அந்த ஆலைகளிலிருந்து சர்க்கரையைப்
காலம் தாழ்த்தாமல் கிராம மட்டம் வரை எடுத்துச் செல்லும்
பொறுப்பை இக்கழகம் செவ்வனே ஆற்றி வருகிறது. லெவி
சர்க்கரைக்காக ஆலைகளுக்குக் கொடுக்க வேண்டிய விலையை
மத்திய அரசு நிர்ணயித்துள்ள போதிலும், ஆலை அதிபர்கள்
நீதிமன்றங்களில் தொடர்ந்துள்ள வழக்குகளை ஒட்டி சில மாநில
நீதிமன்றங்கள் இடைக்காலத்திற்குக் கூடுதலான விலையை ஆலை
களுக்குத் தரவேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்துள்ளன.
இந்தக் கூடுதல் விலைகளைத் தருவதினால் ஏற்படும் இழப்பை
மத்திய அரசு ஈடு செய்ய வேண்டும். ஆயினும், நடைமுறையில்
மத்திய அரசு இந்த இழப்புகளை இதுவரையில் ஈடு செய்ய
வில்லை. இதற்கிடையில் சர்க்கரை விநியோகம் சீர்குலைந்து
போகக்கூடாது என்ற காரணத்தைதால் இக்கழகம் தன் சொந்த
நிதிப் பொறுப்பிலேயே இக்கூடுதல் விலையைத் தந்து ஆலைகள
லிருந்து சர்க்கரை பெற்று வருகின்றது. சர்க்கரை விநியோகத்தி
நமக்கு ஈடு செய்ய வேண்டிய ஏறக்குறைய பத்து கோடி ரூபாயை
மத்திய அரசு விரைவில் நமக்குத் தரவேண்டும் என்று மாநி
அரசு வற்புறுத்தியுள்ளது.

சர்க்கரையைத் தவிர சிமிட்டி, மண்ணெண்ணெய், பாமே
லின் முதலியவற்றையும் விற்பனை செய்யும் வகையில் இக்கழக
தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கியுள்ளது
இன்றியமையாப் பொருட்கள் பலவற்றை நியாயவிலையில் வழ
குவதற்கு இக்கழகம், சென்னை நகரில் 151 நியாய விலைக்கடை
களையும், 26 அமுதம் சிறப்பு அங்காடிகளையும், மாநிலத்தி
மற்ற பகுதிகளில் 4,044 நியாய விலைக்கடைகளைக் கிராம
களிலும், 562 நியாய விலைக்கடைகளை நகரப் பகுதிகளிலு
24 அமுதம் சிறப்பு அங்காடிகளையும் நடத்தி வருகின்றது
பருப்பு, பயறு வகைகள், உப்பு, புளி, மிளகாய் போன்ற மற்
இன்றியமையாப் பொருட்களையும் உற்பத்தி இடங்களிலிருந்தே
வாங்கிச் சேமித்து வைத்துக் கழகத்தின் கிராம நியாய விலைக்
கடைகள் மூலமாகவும், அமுதம் கடைகள் மூலமாகவும் இந்தக்
கழகம் விநியோகித்து வருகின்றது.

1972-73ஆம் ஆண்டு கழகம் தோன்றிய பொழுது உணவுப்
பொருள் வழங்கு துறையினிடம் இருந்து சுமார் 13,450 மெட்ரிக்
டன் கொள்ளளவு கொண்ட 5 கிட்டங்கிகளையும் நவீன அரிசி

ஆலைகளுடன் 16,950 மெட்ரிக்டன் கொள்ளளவு கொண்ட
12 கிட்டங்கிகளையும் தன் கைவசம் எடுத்துக் கொண்டது.
இன்றைய தினம் 1.56 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு
கொண்ட கிட்டங்கிகளையும் சுமார்303.50 இலட்சரூபாய்செலவில்
34 இடங்களில் இக்கழகம் கட்டிமுடித்துள்ளது. ஆக, இக்கழகத்
திற்குச் சொந்தமான கிட்டங்கிகளின் கொள்ளளவு1.86இலட்சம்
மெட்ரிக் டன்களாக உயர்ந்துள்ளது. மேலும் 21 இடங்களில்
55,400 மெட்ரிக் டன்கள் அளவிற்குக் கொள்ளளவு கொண்ட
கிட்டங்கள் சுமார் ரூபாய் 153.82 இலட்சம் செலவில்
அமைக்கும் பணி நடந்து வருகிறது. பொது விநியோக முறையில்
தடங்கல் ஏதுமின்றிப் பொருள்களை வழங்க, தமிழகம் எங்கும்
மாவட்டங்கள் தோறும், கழகம் சொந்த கிட்டங்கிகளை நிறுவும்
பணியில் தீவிர முன்னேற்றம் கண்டுள்ளது. இம் முயற்சியில்
வெளி உதவி இன்றியே தனது சொந்த நிதிவசதிகளைக் கொண்டே
கழகம் செயல் புரிந்து வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

1972ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்தக் கழகம் முதல் ஆண்டு
தவிர அடுத்த ஐந்து ஆண்டுகளில் லாபகரமாகவே நடந்துவந்தது.
அரசின் ஆணைப்படி விவசாயிகளுக்குக் கூடுதலான நெல் விலை
தரவேண்டியிருப்பதாலும் அரசு நிர்ணயித்துள்ள விலைகளி
லேயே அரிசியைச் சில்லரை விற்பனை செய்வதாலும், சென்ற
இரண்டு ஆண்டுகளாக இக்கழகத்திற்கு இழப்பு ஏற்பட்டுள்ளது.
தன்னுடைய வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்கிஅதன் மூலம்
எந்த அளவிற்கு இந்த இழப்பை ஈடு செய்ய முடியுமோ, அந்த
வகையில் கழகம் தன் பொறுப்புகளைத் திறமையோடும் சிக்கன
மாகவும் நிர்வகித்து வருகின்றது. அரசுக் கொள்கைகளின் அடிப்
படையான சமுதாய நோக்கை நிறைவேற்றும் வகையிலும், அதே
சமயத்தில் வாணிப ரீதியாகத் திறமையாகச் செயலாற்றும்வகை
யிலும் இக்கழகம் இயங்கி வருகின்றது.

சென்ற ஆண்டு 50,000 டன்கள் பச்சரிசியையும் 5,000
டன்கள் குறுணையையும், தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து
பல்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்த இக்கழகம் 'சர்வதேச
வர்த்தக வட்டாரங்களில் மிகச்சிறப்பான பெயரை ஈட்டியுள்ளது.

## IX. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்.

தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் 52 மையங்களில்
சேமிப்புக் கிடங்குகளைப் பராமரித்து வருகிறது. சொந்தமாகக்
கட்டப்பட்ட கிடங்குகளின் கொள்ளளவு 1.62 இலட்சம் டன்களா
கும். வாடகைக்கு அமர்த்தப்பட்ட கிடங்குகளின் கொள்ளளவு
70,000 டன்கள் ஆகும்.

1980ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31ஆம் நாளில் இந்த
நிறுவனத்தின் மொத்த மூலதனம் 291 இலட்சங்கள், இதில்
சரிபாதி தமிழக அரசின் பங்கும் மறு பாதி மத்திய சேமிப்புக்
கிடங்கு நிறுவனத்தின் பங்கும் ஆகும். 1979-80ல் நான்கு மையங்
களில் முந்தைய ஆண்டு முடிவுபெறாத கிடங்குகளைக் கட்டி



முடித்ததுடன் புதிதாக 8 மையங்களில் 16 கிடங்குகளை கட்ட
இக்கழகம் முற்பட்டது. இவற்றில் 6 கிடங்குகள் தூத்துக்குடியில்
அமைந்துள்ளன. 1980-81ஆம் ஆண்டில் 76 இலட்ச ரூபாய்ச்
செலவில் கிடங்குகளைக் கட்டி முடிக்கத் திட்டமிட்டுள்ளது.
மத்திய சேமிப்புக்கிடங்கு நிறுவனத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட
மூலதனப் பங்கீடான ரூபாய் 30 இலட்சத்திற்கு மாறாக
ரூ. 10 இலட்சமே கிடைக்குமென்று இப்பொழுது தெரிவதால்,
1980-81ல் புதிய கிடங்குகளை மேற்கொள்ள இயலாத நிலையில்
இக்கழகம் உள்ளது. கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென
இக்கழகம் மத்திய சேமிப்புக் கிடங்கு நிறுவனத்திடம் வற்புறுத்தி
வருகிறது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு
நிறுவனம் இலாபத்தில் இயங்குகிறது என்பது கீழ்க்கண்ட
விவரங்களிலிருந்து தெரியவரும்:—

| ஆண்டு | நிகர இலாபம் (ரூபாய் இலட்சத்தில்). |
|---|---|
| 1975-76 | 28.85 |
| 1976-77 | 18.52 |
| 1977-78 | 42.59 |
| 1978-79 | 38.63 |
| 1979-80 | 28.90 (உத்தேச மதிப்பீடு). |

1978-79 வரை கணக்குகளின் தணிக்கை முடிந்து விட்டது.
1979-80ஆம் ஆண்டுக் கணக்கு தணிக்கையில் உள்ளது.
விஞ்ஞான முறைக்கேற்ப பொருட்களைச் சேமித்து வைத்து
விரயம் ஏற்படாமல் தடுப்பதில் இக்கழகம் பயனான
தொண்டினை ஆற்றி வருகிறது.

## X. பொது.

பொது விநியோகப் பொறுப்பை மேற்கொண்டுள்ள
நுகர்வோர் கூட்டுறவு பண்டகசாலைகள் இதுவரை கூட்டுறவுத்
துறையின் பராமரிப்பில் இருந்தன. பொது விநியோகத் துறையில்
இவற்றிற்கு முக்கிய பங்கு இருப்பதாலும், கூட்டுறவு நுகர்வோர்
பண்டகசாலைகள், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
ஆகிய இரு பிரிவுகள் மூலம் நடக்கும் பொவு விநியோக முறையை
ஒரு சீராக ஒரே துறையில் கண்காணிப்பது நலம் என்று [illegible] அரசு
கருதியதாலும், நுகர்வோர் கூட்டுறவு பண்டக [illegible]
அவற்றின் மூலம் நடக்கும் பொது விநியோகப் பொறுப்பு ஆகிய
இரண்டு அலுவல் இனங்களையும் தலைமைச் செயலகத்தில்
கூட்டுறவுத் துறையிடமிருந்து உணவுத் [illegible] மாற்றி இந்
அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

தலைமைச் செயலகத்திலுள்ள உணவுத் துறையின் பெயரும்
உணவு சிவில் சப்ளைஸ் துறை என்று மாற்றப்பட்டுள்ளது.